T
6580

T. 6580

உ

சிவமயம்.

# சாதகாலங்காரம்.

சோதிஷசார்வபௌமராகிய

கீரனூர்

நடராசரருளிச்செய்தது.

இஃது

களத்தூர்த்தமிழ்ப்புலவர்

**வேதகிரிமுதலியார்**

குமாரர்

**ஆறுமுகமுதலியாரால்**

பரிசோதித்து

எட்டா

**குப்புசாமிநாயகரவர்களால்**

பால்குரிகி

**குமாரையரவர்களது**

களாநிதிஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

உ

சிவமயம்.

இந்நூல்
அச்சுப்
பிரதிகளினும் ஏட்டுப் பிரதிகளினும்
ஒன்றற்கொன்றொவ்வாது சிதைவுற்
றும் சிலசெய்யுட்கள் விடுப
ட்டுமிருப்பதைநோ
க்கிச் சீர்தூக்கித்
துகள்களைநீக்கிச் சுத்த
பாடமாக்கிப் பதிப்பித்தேன்
இதனைப் பெரும்பாலுநல்லோர்
கொள்ளுவர் புல்லோர்எள்ளுவர்

இங்ஙனம்.
பொற்களந்தைப்புலவர்
வேதகிரிமுதலியார்குமாரர்
ஆறுமுகமுதலியார்.

சாதகாலங்கார

# பொருளடக்கஅகராதி.


| பொருள். | பக்கம். |
|---|---|
| அங்கவீனம் | ௭௦ |
| அங்கிசபலன் | ௩௭ |
| அட்டகவர்க்கம் | ௧௬௪ |
| அலிபலன் | ௧௦௩ |
| ஆண்பெண்ணறிய | ௧௧ |
| ஆதாயபலன் | ௧௨௭ |
| ஆயுதவிரணமறிய | ௧௪௪ |
| ஆயுர்ப்பலன் | ௧௧௦ |
| ஆறாம்பாவம் | ௧௦௧ |
| இரண்டாம்பாவம் | ௭௭ |
| இராகுதிசாபுத்திபலன் | ௧௫௫ |
| இராசிகளிற்சந்திரனின்றபலன் | ௩௦ |
| இராசிகளிற்சனிநின்றபலன் | ௩௩ |
| இராசிகுணகாரம் | ௧௬௮ |
| ௧௨-ராசிக்கும் சுபாசுபகிரக [மாரகபலன் | ௧௧௭ |
| இராசிமானசங்கை | ௧௩ |
| இராசிவடிவுமுதலியன | ௧௨ |
| இராசிவிழிப்பு | ௧௩ |
| இலக்கினபாவம் | ௭௧ |
| இலக்கினத்தியாச்சியம் | ௧௪ |
| இலக்கினத்திற்கிரகங்கள்நின் [றபலன் | ௪௧ |
| இலக்கினநிச்சயம் | ௧௨ |
| இலக்கினபலன் | ௩௭ |
| இலங்கைராசிமானசங்கை | ௧௪௫ |
| உச்சபலன் | ௪௭ |
| உள்சித்திரம்பிரிக்கவகை | ௯௫௧ |
| எட்டாம்பாவம் | ௧௧௦ |
| ஏழாம்பாவம் | ௧௦௪ |
| ஐந்தாம்பாவம் | ௯௬ |
| ஒன்பதாம்பாவம் | ௧௨௧ |
| கரணபலன் | ௪௨ |
| கர்ணபூஷணபலன் | ௮௭ |
| கர்ப்பத்தானமறிய | ௧௩௦ |
| களத்திரபலன் | ௧௦௪ |
| கன்மபலன் | ௧௨௫ |
| காரககிரகங்கள்... | ௬ |
| காலசக்கரம் | ௧௬௯ |
| காலவோரை | ௪௪ |
| கிரகசமம் | ௮ |
| கிரகங்களின்சாதிநிறமுதலியன | ௧௩ |
| கிரகசுபாசுபகணக்கு | ௮ |
| கிரகதிசையறிய | ௧௫௦ |
| கிரகதேவதை | ௬ |
| கிரகநட்பு | ௮ |
| கிரகதிசாவருடமறிய | ௧௫௦ |
| கிரகபகை | ௮ |
| கிரகமாலிகாயோகபலன் | ௪௯ |
| கிரகவலி | ௭ |
| கிரகரசம் | ௮௫ |
| கிரககுணகாரம் | ௧௬௮ |
| குருதிசாபுத்திபலன் | ௧௫௬ |
| குளிகன் | ௧௦ |
| கேதுதிசாபுத்தி | ௧௫௯ |
| கேந்திரபலன் | ௧௪௭ |
| கோசாரபலன் | ௧௬௩ |
| கோசாரவேதை | ௧௬௪ |
| கோசாரநற்பலஸ்தானம் | ,, |
| சகடயோகபலன் | ௫௦ |
| சகோதரபலன் ... ... ... | ...௮௬ |
| சனிதிசாபுத்திபலன் | ௧௫௭ |
| சத்துருபலன் | ௧௦௧ |
| சந்திரதிசாபுத்திபலன் | ௧௫௩ |

| பொருள். | பக்கம். |
|---|---|
| சந்திரனைக்கிரகங்கள்பார்த்த [பலன் | ௩௪ |
| சந்திரலக்கினபலன் | ௪௧ |
| சந்திரலக்கினம்பார்க்கும்வகை | ௪௨ |
| சந்யாசியோகம் | ௧௨௬ |
| சயனபலன் | ௧௨௮ |
| சரபிண்டத்துருவம் | ௧௪௫ |
| சித்திரம்பிரிக்கவகை | ௧௫௧ |
| சீவனம் | ௧௪௫ |
| சுக்கிரதிசாபுத்தி | ௧௬௧ |
| சூரியதிசாபுத்தி | ௧௯௨ |
| செவ்வாய்திசாபுத்தி | ,, |
| க்ஷேத்திரபலன் | ௯௪ |
| தரித்திரயோகம் | ௬௮ |
| தனபலன் | ௮௧ |
| திசாபுத்திபலனறிய | ௧௫௨ |
| திதித்தியாச்சியம் | ௪௫ |
| திரிங்கிசாங்கிசம் | ௪௭ |
| திரேக்காணம் | ௪௬ |
| துர்க்குணமறிய | ௧௪௩ |
| துர்ப்பிட்சகாலம் | ௧௪௯ |
| துவாதசபாவபலன்கள் | ௭௧ |
| துவாதசாங்கிசம் | ௪௭ |
| நக்ஷத்திரபலன் | ௨0 |
| நட்சத்திரபாதபலன் | ௨௪ |
| நக்ஷத்திரத்தியாச்சியம் | ௪௫ |
| நட்பாட்சியுச்சம்பகைநீசம் | ...௯ |
| நவக்கிரகதேசம் | ௧0 |
| நவாங்கிசலக்கினமறிய | ௪௭ |
| நாட்கண்டம் | ௪௯ |
| நாய்கடியறிய | ௧௪௩ |
| நான்காம்பாவம் | ௮௮ |
| நித்தியபலன் | ௭௧ |
| நெய்பிற்கையிடுகை | ௧௪௩ |
| நேத்திரபலன் | ௭௭ |
| பஞ்சபூதக்கிரகம் | ௧௩ |
| பதினோராம்பாவம் | ௧௨௭ |
| பத்தாம்பாவம் | ௧௨௫ |
| பலன்சொல்லும்விபரம் | ௧௯. |
| பரவிஷயம் | ௯௫ |
| பன்னிரண்டாம்பாவம் | ௧௨௮ |
| பாக்கியபலன் | ௧௨௩ |
| பாம்புகடியறிய | ௧௪௩ |
| பாயிரம் | ௧ |
| பாலாரிஷ்டம் | ௧௯ |
| பாவகவிபரம் | ௫ |
| பிதுர்ப்பலன் | ௧௨௧ |
| பிரசவவீடுமுதலியனவறிய | ௧௪ |
| பிறந்தநக்ஷத்திரவாரதுர்ப்பலம் | ௧௭ |
| புத்திசாபுத்திபலன் | ௧௫௮ |
| புத்திரபலன் | ௯௬ |
| புத்திபிரிக்கவகை | ௧௫0 |
| பெண்கள்சாதகம் | ௧௩௧ |
| பொதுலக்ஷணம் | ௫ |
| போசனபாத்திரபலன் | ௮௮ |
| போதகன்வேதகன்முதலியன | ௧௫௧ |
| மகாதிசைபலன் | ௧௬௨ |
| மறுமையிலடையுமிடம் | ௧௫0 |
| மாதங்கலப்தம் | ௧௬௮ |
| மாதுருபலன் | ௯௧ |
| மாதுராரிட்டம் | ௯௯ |
| மாரகதிசையறிய | ௧௫0 |
| முக்குணவேளையறிய | ௪௪ |
| முதலாம்பாவம் | ௭0 |
| மூலதிரிகோணம் | ௧0 |
| மூன்றாம்பாவம் | ௮௯ |
| யோகபலன் | ,, |
| ரோகபலன் | ௫0 |
| வாகனபலன் | ௮௮ |
| வாக்குப்பலன் | ௭௯ |
| வாரத்தியாச்சியம் | ௪௫ |
| வித்தியாபலன் | ௭௯ |
| வியாதியறியும்படி | ௧௩௮ |
| வியாதிதோன்றுமிடம் | ௧௪0 |
| விழுச்சாயை | ௧௪௫ |
| விறையபலன் | ௧௨௮ |
| வேதைஸ்தானம் | ௧௯௪ |

சாதகாலங்கார பொருளடக்கஅகராதி

முற்றியது.

# சோதிஷபரிலேகநம்.

அசுவனி நட்சத்திரமுதல் ஆயிலியம்வரையில் இந்த ஒன்பது நட்சத்திரமும் ஒன்றற்கொன்று சம்பந்தமாகையால் இதற்குண்டான மேஷம் - ருஷபம் - மிதுநம் - கடகம் - இந்த நான்கும் ஒன்றற்கொன்று சம்பந்தம், இந்த ராசியுள்ளவர்களுக்கு நவாம்ஸம் சுவாம்ஸமாயிருந்தால் சுபபலத்தைக்கொடுக்கும்.

மகமுதல் கேட்டைவரையில் இவ்வொன்பது நட்சத்திரமும் ஒன்றற்கொன்று சம்பந்தமாகையால் இதற்குண்டான சிங்கம் - கந்நி - துலாம் - விருச்சிகம் - இந்தநான்கு ராசியும் ஒன்றற்கொன்று சம்பந்தம், இந்த ஜென்மராசியுள்ளவர்களுக்கு துவாதஸாம்ஸம் சுவாம்ஸமாயிருந்தால் சுபபலத்தைக் கொடுக்கும்.

மூலமுதல் ரேவதிவரையில் இவ்வொன்பது நட்சத்திரமும் ஒன்றற்கொன்று சம்பந்தமாகையால் இதற்குண்டான தனுசு- மகரம் - கும்பம் - மீநம் - இந்நான்குராசியும் ஒன்றற்கொன்றுசம்பந்தம், இந்த ஜென்மராசியுள்ளவர்களுக்கு திரிம்ஸாம்ஸம் சுவாம்ஸமாயிருந்தால் சுபபலத்தைக்கொடுக்கும்.

சுக்கிலபட்சத்தில் சந்திரனிருக்கிற ராசிமுதல் (சு) இராசிவரையில் ஜெநித்தவர்களுக்கு சந்திரன் சுபசட்வர்க்கமாயிருந்தாலும் சந்திரஹோரையாயிருந்தாலும் சுபபலத்தைக்கொடுக்கும், கிருஷ்ணபட்சத்தில் சூரியனிருக்கிறராசிமுதல் ஆறுராசிவரையில் ஜெநித்தவர்களுக்கு சூரியன் சுபசட்வர்க்கமாயிருந்தாலும் அல்லது சூரியஹோரையாயிருந்தாலும் சுபபலத்தைக்கொடுக்கும்.

உபய சதுர்த்தசி-உபயபர்வங்கள்-இதுகளில் ஜெனித்தவர்கள் சூரியன்முதல் சநிவரையில் சத்தகிரகங்களுக்கும் சுபசட்வர்க்க பாபசட்வர்க்கச் சகிதராயிருந்தபோதிலும் சுபபலனைக்கொடுப்பார்கள்.

திசாபுத்தி-அந்தரம் - அந்தராந்தரம்-சூட்சுமம் - இவைகளையும், பிந்துசோதனை-சர்வாட்டகவர்க்கு-ஸாக்ர-ஸொப்பந-சுழுத்தி-பால-யௌவந-கௌமார-வார்த்திக-சமய - துவாதஸ பாவசந்தி - உச்சநீச்சபலம்-பஞ்சவர்க்கபலம்-ஸர்வதோபத்ர-சக்ரஸாரபலம்-இஷ்டகஷ்டசாதனை-யோககுண்டலி-சஷ்டியம்ஸம்-திக்பலம்-காலபலம்-சுபேட்சாபலம்-அயநபலம்-இவைமுதலிய பலன்களையறிந்து கிரந்தபரிசோதனைசெய்து ஆயுர்தாயமறிந்து வருஷதிசை-மாசதிசை-திநதிசை-நட்சத்திரதிசை-காலசக்ரதிசை-இவைகளையறிந்து பலன்கள்சொல்லவேண்டியது.

சோதிஷபரிலேகநம் முற்றிற்று.


சூரியன்
*சந்திரன்-அங்காரகன்*
*புதன்-குரு*

உ

சிவமயம்.

# சாதகாலங்காரம்.

## பாயிரம்.

### காப்பு.

நீருலவு புவியினரர் சனனகா லையினில்
  நின்றநவக் கிரகத்தா னிசழ்த்துபலன் புகலும்
ஏருலவும் வடமொழியைச் செந்தமிழ்ச்சா தகநூல்
  எனத்தமியே னுரைசெய்ய வெழில்வேத முனிவன்
பாருலகிற் குருகுலபா ரதக்கதையை வழுத்தப்
  பயிலும்வட கிரிமிசையிற் பரிந்துமருப் பதனல்
சீருலவ வரைந்தருளுந் தெய்வதவா ரணத்தின்
  செழுங்கமலத் தாளிணையைச் சிரந்தனில்வைத் திடுவாம். (க)

வைத்தபல பூதபே தங்களெழு வகையின்
  மன்னுமுயிர்க் குயிராகி மணியொளிக ளிலங்கு
பைத்தலைவா ளரவரசன் வியாக்கிரமா முனியும்
  பணியநடம் புரிபரமன் பங்கயத்தா டொழுதே
கைத்திகிரி நெடுமாலோ விரிஞ்சன்டலர் மகவான்
  கருணையுற வணங்குசிவ காமசௌந் தரியின்
சத்திகண பதியமர ருறுசிறைமீட் டருளும்
  சண்முகன்பொற் கமலமலர் தலைக்கணிவோ மன்பாய். (உ)

### திருத்தொண்டர் துதி.

அன்புருவாந் திருநாவுக் கரயர்வெண்ணெய் நல்லூர்
  ஆதிசைவ குலதிலக ராகியவன் றொண்டர்
என்புருவாக் கியஞான சம்பந்த ரெழில்சேர்
  ஏதமறு வேதமதை யின்றமிழா லுரைத்த
இன்புருவா கியவாத வூரரறு பாதே
  டியன்மூவர் முண்டகத்தா ளென்றலைமேற் கொண்டே
முன்புபெரி யோர்வகுத்த சாதகசா கரத்தில்
  மொழிபொருளைச் சுருக்கிமுறை யேபுகலு வாமே. (ங)

## ஆசிரிய வணக்கம்.

வாமமுதற் பலசமய வகைநூலா சமங்கள்
மன்னுசிவ சமயசாஸ் திரவுண்மை பலவும்
தாமுமிக வுணர்ந்தடியார் பரிபாக மறிந்து
தயவுடனே திருநோக்காற் சஞ்சிதங்க ளகற்றி
ஓமவிதி யுஞ்சமய பேதமுத லுரைத்தே
ஓரெழுத்தி லைந்தெழுத்தி னுண்மையுமெய் யுயிர்க்குப்
பூமலித சேவடியுங் காட்டியருள் வழங்கும்
புகழ்ஞானப் பிரகாசன் பொன்னடியைப் பணிவாம். (ச)

## நூல்வரலாறு.

ஆதவன்புங் கவன்வேத வியாசன் பராசரனும்
அத்திரிரோ மசன்வசிட்ட னணிமரிசி தானும்
போதபௌ லகன்யவனன் சௌனன்மனு பிருகு
புகழ்சனக னங்கிரன் காசிபன்கார்க் கியனும்
ஓதியநா ரதன்முதலீ ரொன்பதின்மர் கூடி
உரைசெய்த நான்கிலக்கத் தைம்பதினா யிரமாம்
நீதிபெறுஞ் சோதிடத்திற் றெரிந்தெடுத்த வுண்மை
நிறைந்தபொரு டனைக்கருத்தி னினைந்துமிகத் தானே. (ரு)

தானசபதபசீல லோகிதகோத்திரத்தான்
தழைவதிட்டைக்குடிமேவுஞ் சாமசமுத்திரமாம்
மானபரன்றிருமலையங் கார்துணைவன்மேவும்
மறைமுனியாராவமுதின் வரமெனுநாரணையன்
தேனுலவுபொழில்வெதிரி வனப்பரமாநந்தன்
திருவருள்பெற்றிடுஞ் சிதாநந்தசிவயோகி
ஞானபரன்றருவேதன் கீழமுத்தூர்மேவும்
நாரணையரிவர்மூவர் நவின்றவடமொழியும். (சா)

மொழிசுருதியாகம சாஸ்திரங்களுஞ்சோதிடத்தின்
முறைகணிதபலபாக முழுவதுங்காவியமும்
ஒழியாதசமயசாஸ் திரதருக்கவிதியும்
உணருமத்தியார்ச்சுனவே தியனுமுரைத்தருளும்
பழியாதமலபாகஞ் சாதகதீபிகையும்
பயிலட்டநவநீதம் பகர்நாதர்சிகமும்
அழியாதவட்டவயிச் சுவரியவிதிப்படியே
அலங்காரசாதகத்தி னடைவுமிகவோர்ந்தே. (எ)

ஓராசாரஞ்சாரா வளிபாராசரியம்
உயருஞ்சந்தானதீபம்ப்ரகசாதகமும்
சீராருஞ்சருவார்த்தம் பெறுசிந்தாமணியும்
செப்பியகேரளஞ் சம்பூர்ணமுதற்றெரிந்தே
பேராரும்பாவகங்க டொறும்பலனைப்பிரித்துப்
பிறைகதிர்செவ்வாய்புந்தி பிருகுசனியரசன்
கூராரும்வாளரவு முதலோரைத்தொழுதே
கூறுகின்றேனவரருளைக் கொண்டுமிகத்தானே. (௮)

கொண்டுதமிழ்ச் சாதகாலங்காரமெனப்பேர்
குறித்தரிட்டஞ் சுபம்ராஜயோகமுமங்கிசையும்
மண்டியநட்பாட்சியுச்சம் பகைநீசம்பலங்கள்
மருவுகிரைக்காணமுடன் மூலதிரிகோணம்
கண்டிடும்வேளைக்குணங்களோரைமகாதெசையும்
காலசக்கரமுதலாவங்கிசையாஞ்சக்கரமும்
மிண்டியலக்கினமுதலாப் பன்னிருபாவகத்தில்
விரித்தபலனிவைதெரிந்து விளம்பலுற்றவாறே. (௯)

## அவையடக்கம்.

உற்றதொகைநான்கிலக்கத் தைம்பதினாயிரமென்
றுரைத்தவடமொழிவெற்பி னெருகடுகினளவிற்
பெற்றிடுமங்கிசநூற்றி லொருபங்கின்பொருளைப்
பேருலகிற்சாதகா லங்காரமென்றே
வெற்றிசெறிசெந்தமிழை யுணர்ந்தருளும்பெரியோர்
வீற்றிருக்குஞ்சபைதனில்யான் விளம்பியபுன்மொழியிற்
குற்றமுறையர்கருணை புரிவரறியாத
குதலைமொழிக்குழவியின்சொற் குறித்தறிவார்போல. (௧௦)

குறித்திடுசாதகமென்ப தவரவர்தம்வினையின்
குணங்களறிந்தயன்விதித்த கொள்கையுளதன்றோ
மறித்துமவ்வரவர்தமக்கு வரும்பலபாவகத்தின்
வகையறிந்துபெரியோர்கள் வழுத்தியசொல்லதனைப்
பிறித்தறிந்துசுகம்வருமென் றுளமகிழ்ச்சிபொங்கப்
பின்னசுகம்வருமதற்குப் பிரீதியென்கொலென்று
நெறித்தருமசாஸ்திரத்தின்விதி சாந்திசெய்தேபின்னும்
நிறைந்தசுகம்பெறுவதற்கே நிகழ்த்தினர்சாதகமே. (௧௧)

சாதகநற்பலன்வழுத்து முறைமையைக்கேண்மடவார்
　தமக்குமணப்பொருத்தமதைத் தான்பார்க்குமந்தப்
போதுதசப்பொருத்தம்பார்ப் பதற்குமுன்னரச்சுப்
　பொருத்தம்பார்ப்பதுபோலு முகூர்த்தங்கட்மக்கே
ஓதியசக்கரந்தீட்டி பிராணனெடுவேளை
　உணர்வதற்குமுன்விதித்த வுடுவுணர்தல்போலும்
நீதியுடன்பலபாகம் பார்ப்பதற்குமுன்னே
　நிறைசிவன்றனையறிந்து நிகழ்த்துகசாதகமே. (கஉ)

சாதகவாரிதியதனிற் சிறுதிவலையளவுஞ்
　சாற்றுபலபாகமுறுந் தமிழ்ப்பனுவலதனில்
ஓதியநற்பலனறிந்து பகர்வதற்கேயுரிய
　உத்தமசற்குணம் பொறுமையறிவுமனுநீதி
ஈதல்பலகலைதெரிவோன் பெரியோர்கடம்மை
　எதிர்த்துவாதுரையாம லிணக்கமுடையனுமாய்ச்
சீதநிறைமதிபோலு மமுதமிருவார்த்தை
　செறிந்திடுமாணுக்கனுக்கே செப்புவதுகுணமே. (கங)

செப்பியதோர்பலபாகம் பகர்வதற்கேயிரவி
　தேசதேசத்தின்விழுச் சாயைதெரிந்தெண்ணித்
தப்பறவேகண்டருளுஞ் சரபிண்டத்தொகையின்
　தகைமைபெறமருவியலக் கினங்கடமையறிந்தே
ஒப்புடன்லக்கினசந்து கண்டாலக்காலை
　உயர்கடிகாலக்கினசுத் திகளுணர்ந்துகண்டு
விப்பிரர்சோதிடவல்லோர் சரணமதைப்போற்றி
　விளம்பினர்க்குப்பலபாகம் விளங்குமிகத்தானே. (கச)

## ஆக்கியோன் பெயர்.

விளங்கியதோர்சகாத்தமாயிரத்தைந்நூற்றின்மேல்
　மேலெண்பத்தேழுவிசுவாவசுவாமர்ண்டில்
களங்கமிலாவடமொழியைத்தான்றெளிந்துகண்டு
　காசினியிற்சாதகாலங்காரமெனவே
வளங்குலவும்புகழ்பெறுநற்கிரனூர்வாழும்
　வள்ளல்சேவடிநாதன்வரவுருவாய்வந்தோன்
உளங்களிகூர்ந்தருள்ஞானயோகநடராசன்
　உரைத்தனனிப்பொருளுணர்ந்தோர்க்குண்மைதருந்தானே.

பாயிரமுற்றியது.

உ

சிவமயம்.

# பொருலட்சணம்.

## பாவகவிபரம்.

சீர்பெருஞ்சன்மலக்கினத்ததிபர்சேர்ந்தினிதிருந்திடுமந்தப்
பேர்தருபலன்கண்மெய்ந்நிறஞ்சொரூபம்பெருநிதியுதரமத்தகமும்
ஏர்பெறுமுபாங்கஞ்சிந்திதங்கிலேசமிலக்கணங்கீர்த்திமூர்த்திகளும்
யார்தருஞ்சுபசந்தோஷமும்வயதும்பகர்தனுத் தானமென்றுரைக்கும்.

உரைத்திடுஞ்சவுபாக்கியந்தனங்குடும்ப மொளிசெறிநேத்திரம்வித்தை
தருப்பெருஞ்செல்வமுடன்புகல்வாக்குசாத்திரக்கேள்விகண்முற்றும்
விரைத்தெழுகமனமனமுமுத்தேசமேம்படவிரும்புசெம்பொன்னும்
நிரைத்திடுநவரத்தினமிரண்டிடத்தினிலைமைகண்டுரைசெய்வர்நின்றே.

நின்றிடுமூன்றுமிடத்தினினிற்குநிருபராலுரைசெயும்பலன்கள்
வென்றிகொள்போகமடிமையாள்ககானம்வீரியஞ்சத்துவந்துணைவர்
பொன்றிடாதணியகாதுநோய்கன்னபூடணம்புசித்திடுங்கலன்கள்
துன்றுவிக்கிரமஞ்சேவகாவிருத்திசூழ்தயிரியங்களுஞ்சொல்வர் (௩)

சொல்லியவித்தைவாகனஞ்சுபங்கள்சூழும்வியாபாரமுமனையும்
வெல்லுமேம்பாடுஞ்சவுக்கியமன்னைவிரும்புநல்லுறவினராகும்
நல்லநிட்சேபம்பரவிஷயங்கணறைகமழ்பாற்பசுக்கன்று
வல்லதோர்தேவதானமிப்பலனைவழுத்துநான்காமிடங்கொண்டே. (௪)

கொண்டதோர்மாமன்பிதாப்பெறும்புதல்வர் குலவுபூருவஞ்செய்புண்
தண்டமிழ்வாணர்புகல்பிரபந்தந்தரித்திடுங்கற்பமந்திரங்கள் [ணியமும்
மிண்டியவித்தைவிதரணம்புத்திவிரும்புமிப்பலனெலாமறிந்தே
கண்டுரைத்திடுவரைந்தாமிடங்கொண்டே கற்றுணர்ந்தருளுமாதவரே.

மாதுகேள்வியாதிசத்துருபீடைமற்றுமாயுதங்களாபரணம்
ஓதியஞாதியால்வருதுன்பம்யுத்தமெய்வாதைபொன்கண்டம்
பேதமாங்கள்வர்புனல்மடந்தையரால்பெருகுபாம்பாலுநோயுளது
நீதிசேர்பிரதானிக்கமுஞ்சிறையினிலைமையாறுமிடங்குறித்தே. (௬)

குறித்திடுங்கமனமணமடந்தையர்க்குங்குமரர்சடமக்குநல்லின்பம்
நிறுத்திடுவிபகாரந்தமர்கூட்டநேமியோருதவுசன்மானம்
பிறித்தறிவியாபாரம்மணம்புரிநாள்பின்மனையாள்வியம்பெறுதல்
மறிக்கயல்விழியாயேழிடங்கொண்டு வழுத்துவர்மறைமொழிப்புலவர்.

புலவுறும்படையால்வாதைசேர்யுத்தம்பொருப்பின்மேலேறிவிழ்ந்திடு
நிலைபெறும்வியாதிவிக்கினங்கிலேசநீள்பலதுன்பமோடிரணம் [தல்
சிலவினானட்டமாம்விழுக்காடுசெறிபகைமரணமித்தனையும் [வே·
உலகினிலுயர்ந்தோரட்டமபலன்கண்டுளாசெய்வாருண்மை பெற்றிட

பெற்றிடுந்தந்தைமகப்பயிர்தருமம்பெருமைசேர்பாக்கியமடங்கள்
உற்றதோர்பரமபுண்ணியங்குளமுமுயர்திருப்பணியுபதேசம்
வெற்றிசேர்நீர்க்காவணம்புகழ்கூபம்விரும்பியசெல்வமீதெல்லாம்
கற்றறிந்தோர்களொன்பதாமிடத்தாற்கருணையும்பெறமொழிந்திடுவார்.

மொழிந்திடும்பலபுண்ணியம்புவியாள்வனமுயன்றுபட்டணஞ்சடாபித்தல்
பொழிந்திடுங்கருமமிரக்கமெஞ்ஞானபூசனைமனைபிதாப்பவங்கள்
ஒழிந்திடுமினியதேவதாபத்தியுயர்சவுரியம்பிரதாபம்
இழிந்திடுமிரவுகருப்பமூண்புடைவையிவைபத்தாமிடப்பெயரொன்னே

என்னுமுத்தவர்சேவித்திடும்போர்களிளங்கொடிமனைவிபொன்வித்தை
மின்னியலாபம்பயிர்பரிவேழம்விளங்குநல்லறிவுதண்டிகையும்
முன்னியமனத்திற்றுக்கமுந்தீருமுத்தரீயஞ்செறிவகையும்
பன்னியபதினோராமிடங்கொண்டுபரிந்தருள்புரிவர்பாவலரே. (௧௧)

பாவமங்கியதேசத்திலுத்யோகம்பனைச்சிலவுடனுறும்போகம்
மேவியசயனசவுக்கியம்விவாதம்விளைந்திடுந்தொழில்புரிகன்மம்
ஆவதோர்தானம்புண்ணியந்தியாகமருண்மகஞ்சர்வதோவிருத்தி
சேவலங்கொடியோனருளினாற்பெரியோர்செப்புவர்துவாதசபலனே.

காரககிரகங்கள்·

சாற்றியபிதுர்காரகன்பகற்கிரவிசனிபிதுர்காரகனிசிக்குப்
போற்றியவன்னைகாரகன்பகற்குப்புகர்நிசிக்கிந்துகாரகனாம்
எற்றமாந்துணைவர்காரகன்செவ்வாயெழிற்சுதகாரகனரசன்
ஆற்றியவாயுட்காரகன்சனியில்லாடனக்கேபுகராமே. (௧௩)

ஆனதோர்சரீரகாரகன்வெய்யோனங்கனைவாகனவகைக்கும்
தானுமேபிருகுகாரகன்கன்மந்தனக்கெழிற்காரகனரசன்
சானமும்வித்தியாகாரகன்புந்திகனதனகாரகன்வேந்தன்
தேனமர்மொழியாயிலக்கனாதியைப்போற்றெரிந்துகாரகர்பலன்செப்பே.

கிரகதேவதை-வேறு.

ஆனவெள்ளிகுருவயனாகுமே
வானவிந்தும்புதனுநன்மாயனும்
பானுஞ்சேயுஞ்சிவனெனப்பன்னுவர்
மாகவங்கியதேவதைமந்தனே. (௧௫)

கிரகவலி-வேறு.

அடறக்கணுயனத்திலசுபர்க்கேபலமதாகும்
வடதிக்கிற்பலனல்லோர்க்குவளர்பக்கந்தனக்குமீதே
திடமுறுமமரபக்கந்தீயோர்க்கேபலமதாகும்
பட்டவரவல்குன்மாதேபலபாகம்விளம்புங்காலே. (கசு)

வேறு.

பொன்னும்புதனுமுதயத்திற்பொருந்தில்வலியரோயாவர்
மன்னுசனியுங்கரும்பாம்பும்வலியரத்தமனமாகில்
விண்ணுங்கதிருங்குசனுச்சமேவில்வலியர்விளம்புங்கால்
துன்னுமதிசுக்கிரனீர்க்கீழ்ச்சூழ்ந்தால்வலியராவாரே. (கஎ)

செய்யும்புந்திதனக்கதிகஞ்செவ்வாய்வலிதுசெவ்வாயில்
வெய்யசனியும்வலிததனைவிடவேயரசன்மிகவலியன்
துய்யவரசன்றனில்வெள்ளிவலியனவனிற்சோமன்மிகும்
பையசசிக்குக்கதிர்வலிதுபானுவிற்பாம்பேவலிதே. (கஅ)

வேறு.

உச்சமுச்சாங்கிசைநல்லோருடனுநல்லோருடன்வீட்டும்
மெச்சுமுறவோருடனுமவர்வீட்டுமித்திராங்கிசையில்
அச்சமறவேயவரவருக்கனுசமானவங்கிசையில்
இச்சையுடனேயுறிற்பலனுமிதனிற்பிழைத்தாலிலைப்பலனே. (கசு)

வேறு.

உச்சமொன்றுடன்காலொன்றுகேந்திரம்
அச்சமுக்காலதிபதியோர்பலம்
மெச்சுநட்புக்கரைப்பலமிக்ககால்
துச்சநீசர்பலனெனச்சொல்லுமே. (உ௦)

ஏந்துசெவ்வாய்சனியிந்திராப்பலன்
வேந்தனுதவன்வெள்ளிபக்ஷபலன்
போந்தபுந்திக்கெப்போதும்பலன்களாங்
கூந்தல்வேளிபக்குங்குமக்கொங்கையாய். (உக)

ஆயவோரைக்கதிபர்க்கதிற்பலன்
தூயவாரத்ததிபர்க்கதிற்பலன்
ஏயதிங்கட்கதிபர்க்கதிற்பலன்
காயும்வில்லிற்கதிர்ச்சுபனுவ்வனே. (உஉ)

ஆனபுந்திசுபரோடடுத்திடில்
தானுநற்சுபனகுவன்முழ்வுறும்

ஊனதீயருடனிருந்தால்விழி
யானனுயவன்மன்னுவன்றியனாய். (உ௩)

கிரகசுபாசுபக்கணக்கு-வேறு.

நிறைமதியுந்தமனியனும்நிறைந்தசுபக்கிரகம்
நீள்சுங்கனூர்முக்காற்சுபக்கிரகம்புதனே
குறையுமறைச்சுபன்றேய்ந்தமதியுங்காற்சுபனும்
கூறுசனிபாம்புமுழுப்பாவிகளேசெவ்வாய்
அறையுமுக்காற்பாவியனைப்பாவிகதிரவனு
மணிபாபருடன்கூடும்புதன்பிறைகாற்பாவி
இறைசனிபாம்புடன்கூடிற்சனிபோலப்பாவி
யிந்தமவாசியிற்புதனேடிருக்கமுக்காற்சுபனே. (உ௪)

கிரகநட்பு.

ஆதவனுக்குறவுதிங்கள்செவ்வாயும்பொன்னும்
அம்புலிக்குப்புதனுஞ்செங்கதிரிருவர்நேசம்
நீதிசெறிசேய்க்குறவுகுருதிங்கள்வெய்யோன்
நின்றபுதன்றனக்குச்சுக்கிரனிரவிநேசம்
ஓதியபொன்றனக்குறவாங்கதிர்திங்கள்செவ்வாய்
உயர்வெள்ளிக்குறவுசனியுடன்புந்தியிருவர்
பூதலமேற்சவுரிக்கேபுதனுஞ்சுக்கிரனும்
பொருந்தியநல்லுறவென்றேபோற்றிடுவர்புலவர். (உ௫)

கிரகசமம்.

போற்றியசெங்கதிர்தனக்குச்சமன்புந்திபொருவன்
புனிதமதிக்கிணைசெவ்வாய்குருசனிசுக்கிரனே
ஏற்றசெவ்வாய்க்கிணைசனிசுக்கிரரிருவர்தாமே
யினியபுதற்குச்சமனுஞ்சனிசெவ்வரயரசன்
நாற்றிசையெண்ணரசனுக்கேசமன்சவுரியொருவன்
நலந்திகழ்சுக்கிரற்கிணைபொன்னவிலசெவ்வாயிருவர்
தோற்றியிடுஞ்சனிதனக்கேசமனதாகவுமே
துய்யவியாழந்தனையேசொல்வர்மிகத்தானே. (உ௬)

கிரகபகை.

சொல்லிரவிக்குறுபகைசுக்கிரன்சனியோடிருவர்
சோமனுக்குப்பகையில்லைச்சொல்லவுமெக்காலே
அல்லலறுஞ்செவ்வாய்க்குப்பகைபுந்தியொருவன்
ஆனபுந்திக்குற்றபகையம்புலியொன்றாகும்

நல்லவியாழந்தனக்குப்புதன்வெள்ளிபகையாம்
நாடியசுக்கிரற்கிரவிமதிதிங்கள்பகையே
வல்லசனிதனக்கிரவிதிங்களுடன்செவ்வாய்
மட்டுமேபகையென்றுவழுத்துவரெக்காலும். (உஎ)

நட்பாட்சி-யுச்சம்-பகை-நீசம்-வேறு.

வெள்ளியும்புதனுநட்புவிளங்கியசெவ்வாயாட்சி
ஒள்ளியகதிரோனுச்சமுயர்சனிநீசமாகும்
தெள்ளியமதியோன்பொன்னன்சீறியராகுகேது
உள்ளுறும்பகையாமென்றேயோதினர்மேடத்தோற்கே. (உஅ)
சேய்சனிபுதன்பொன்னட்புச்சீரியபுகரோனாட்சி
தூயதோர்மதியேயுச்சந்துயர்தரும்பாம்புநீசம்
காய்கதிர்பகையேயாகுங்கண்டனரிடபந்தன்னில்
ஓதியபொருள்களெல்லாமுண்மையாயுணாக்கலாமே. (உகூ)
சந்திரன்சனியேசுங்கன்றருங்குருசெவ்வாய்பாம்பு
மூந்தியநட்பதாகுமுனிவிலாப்புதனேயாட்சி
உந்தியபரிவேடந்தானுச்சமாம்வில்லுநீசம்
தந்திடுங்கதிரோன்மாற்றான்றாழ்விலாமிதுனத்தோற்கே, (௩௦)
மேதையேநட்புதிங்கள்விளங்கியவாட்சியாகும்
சீதையேபொன்னேனுச்சஞ் சிறந்திடும்செவ்வாய்நீசம்
ஓதியகதிரோன்சுங்கனோங்கியராகுமந்தன்
போதவேபகையாமென்றுபோற்றினார்கடகத்தோற்கே. (௩௧)
அந்தணனுறவதாகுமருங்கதிராட்சியாகும்
முந்தியதூமனுச்சமுனிவிலாநீசநட்பம்
மந்தனேபுகரோனுதிவ்ணிகனேயாவேதிங்கள்
தந்திடும்பகையேசிங்கந்தனக்கெனச்சாற்றினாரே. (௩௨)
திங்களோடரவுசெவ்வாய்செம்பொன்னேமந்தனின்னோர்
தங்கியவுறவதாகுஞ்சாற்றியபுதனேயாட்சி
பொங்கியபுதனேயுச்சம்புகரவனீசமாகும்
செங்கதிர்பகையேயாகுந்தெரிவையற்கென்றுசெப்பே. (௩௩)
பண்டிதன்பொன்னனங்கி பாம்புடனிவர்கட்டாழும்
தண்டிடாவுறவாமாட்சி தரும்புகருச்சங்காரி
வண்டமிழ்க்கதிரோனீசம் வாழ்மதிபகையதென்று
கொண்டதோர்துலாத்தினோற்குக் கூறலாங்கோதைமாதே. (௩௪)
பணிமகன்சுங்கனட்புப் பார்மகனாட்சிபாம்பு
முனிவிலாவுச்சமாகு முழுமதிநீசமாகும்
இனியனேயருக்கன்பொன்னு நீலனும்பகையதன்றே
முனிவிலாத்தேளினோற்கே முறைமையாய்மொழிவர்மாதே. (௩௫)

பகலவன்புக்லோன்காரி பாம்புநற்புதனேயிந்து
இகலிலாவுறவதாகு மிறைவனேயாட்சியாகும்
நலமிகுசிலையேயுச்ச நாட்டியவட்டமீசம்
நிலமகன்பகையேயாகு நெடியதோர்தனுவினுற்கே. (௩௬)

பண்டிதனேடுசுங்கன் பாம்புடனுறவதாகும்
மண்டியசனியேயாட்சி மங்களனுச்சனுகும்
கொண்டதோர்குருவேநீசங் கூரியகதிரோன்றிங்கள்
கண்டநற்பகையேயாகுங் காட்டியமகரத்தோற்கே. (௩௭)

என்றாழாய்புதனும்வெள்ளி யிறைவனேயுறவதாகும்
திண்டிறற்சனியேயாட்சி செப்பியநுட்பமுச்சம்
கண்டதோர்தூமனீசங் கலைமதிபுவிசேய்பாம்பு
கொண்டநற்பகையேயாகுங் குறித்திடுங்கும்பத்தோற்கே. (௩௮)

அரவொடுசனியேதிங்க ளருக்கனேயுறவதாகும்
பரவியேகுருவேயாட்சி பார்க்கவனுச்சனுகும்
தராமகிழ்புதனேநீசன் றராமகன்பகையதாகும்
கரவிலாக்கயலினுற்கே கனங்குழைமடந்தைகேண்மோ. (௩௯)

குளிகன் - வேறு.

களிப்பான குளிகன்வகை பார்த்திடுவாய் மின்னே
கதிரவனுக் கிருபத்தாறு மிரவிற்பத்தாம்
மிளிர்திங்களிருபத் திரண்டிரவிலாறும்
மேற்செவ்வாய் பதினெட்டா நிசியினிரண்டாம்
ஒளிர்புதனுக் கீரேழா மிரவிருபத்தாறும்
ஓதுகுருபத்திரவி லுயிரிருபான் றெண்டாம்
குளிர்வெள்ளிக் கிருமூன்று மாலைபதினெட்டாம்
கூறுசனிக்கோரிரண்டா மேழிரண்டாநிசிக்கே. (௪௦)

நவக்கிரகதேசம்.

பாரொலாஞ்சசிகதிரோ னிருவர்க்குமாகும்
பனிவரைகேகயத்தினடு பாம்புசநிநாட்டாம்
ஏருலவுங்கேகயந்தொட் டெழில்விந்தமட்டும்
இந்துசுதன்பூமியென்றே யியம்புவர்நல்லோர்கள்
கார்செறியும்விந்தமுதற் கௌதமைமட்டாகக்
கனகனுக்காங்கிருஷ்ணைவரைக் காப்பியனுடாமே
சீருலவுகிருஷ்ணைமுத லிலங்கைவரையந்தச்
செவ்வாயின்றேயமென்றே செப்புவர்நல்லோரே. (௪௧)

மூலதிரிகோணம் - வேறு.

குலவியமூலத்திரிகோணந்தானே கூறிடிற்சிங்கமேரவிக்காம்
நிலவினுக்கிடபமாடுசேய்க்கென்ப நிகழ்த்திடுங்கன்னியேபுதற்காம்

விலகியவில்லேபொன்னினுக்காகும் வெள்ளிக்குக்கோலெனவிளம்பும்
நலமறுசனிக்கேமகரமதாகு நறுமணங்கமழ்குழன்மாதே. (சஉ)

ஆண்பெண்ணறிய - வேறு.

பாரின்மந்தன் பரிந்தொற்றைராசியில்
சேரனிற்கிலாண் பிள்ளைசெனித்திடும்
சீருலாவிய செவ்வாயிரட்டையில்
பேரவாவொடு நிற்கிற்பெண்பிள்ளையே. (சங)

வேறு.

பிள்ளைமதிவெள்ளிசன்மத் திருக்கிலந்தவீடு
பெண்ணாகும்ராசியெனிற் பெண்ணாகப்பிறக்கும்
தெள்ளுமொற்றைராசிபின்னும் ரெட்டைராசிமுன்னும்
திங்களோனாயினிற்பெண்ணே செனித்திடுமேரெட்டை
உள்ளராசிகளொற்றை யங்கிசம்பெண்ணாகும்
உயர்பெண்ணாங்கிரகங்க ளுறுசன்மத்திருக்க
வெள்ளிமுதற்பெண்கிரகம் பார்க்கிற்பெண்பிறக்கும்
மேவிரவிகுசன்புந்தி யிரட்டையுறின்மின்னும். (சச)

மின்னுகலைநிறைந்தமதி மேவிலாண்பிறக்கும்
விரவுமொற்றைமுற்பாதி யிரட்டையும்பிற்பாதி
என்னிலாண்பிள்ளையொற்றை ராசிதனிலிரட்டை
ஏற்றநவாங்கிசஞ்சனன மென்றிடலாமாணே
மன்னவன்சூரியனொற்றை ராசியுறிலாணும்
வரும்புருடராசிதனிற் புருஷக்கோண்மருவ
பின்னுமதுசன்மமதாய்ப் புருஷக்கோணோக்கப்
பிறந்திடுவதாண்பிள்ளையெனப் பேசலாமே. (சரு)

பேசும்பெண்புருஷக்கோளிரண்டுஞ்சன்மம்
பெற்றிருக்கத்தானபலன்பிரித்துப்பார்த்து
நேசமுடனுறைகிரகப்பலனும்பார்த்து
நிச்சயித்தாண்பெண்ணென்றேநிகழ்த்தவேண்டும்
தேசுபெறுபுருஷலக்கினத்தாலாணே
சேயிழையிற்பெண்ணாகுந்திங்கள்வெய்யோன்
பாசமுடன்பெண்வீட்டிலிருக்கிற்பெண்ணும்
பார்த்திபனும்புருஷமனைபற்றிநிற்கில். (சசா)

நிற்கின்றவைந்தேழுக்கதிபர்சுபராகி
நேர்ந்தசுபரொடுகூடிநெடியசுபர்நோக்க
விற்கொண்டநுதலாய்கேந்திரத்திருக்கவவர்கள்
மேவுதிசைதனிலிரட்டைப்பிள்ளைசெனித்திடுமால்
தற்கொன்றுமாட்சியுறிற்பிள்ளைரெட்டையாகா
சந்திரலக்கினத்ததிபன்மூன்றிடத்தோன்கூடி.

அற்கொண்டவரவுறினுநோக்கினுமேயிரட்டை
யாமிவர்களாண்பெண்ணென்றறிந்துரைப்பர்பெரியோர்.

வேறு.

பெரிதுளகிழமைபெண்ணுணறிந்து
பரிதியுதயம்பார்க்குங்கடிகையைத்
துரிதமாயைங்காற்றொகையினிற்போக்கி
வருகுவதாண்பெண்ணெனவகுத்திடுவாய். (௪அ)
வகுத்திடும்வாரமதிபுகர்பெண்ணும்
தொகுத்தசேய்மந்தன்சூரியன்பொன்னும்
பகுத்திடுமாணும்பகர்புதனமிசம்
நிகழ்த்திலொன்றாண்பெண்ணுகிடுமிரண்டே. (௪௯)

இலக்கினநிச்சயம்.

உதயாதிகடிகதனைமூன்றன்கிலீந்தே
யுற்றசேடந்தன்னையாடாதியெண்ணிச்
சிதையாமற்பார்க்கிலக்கினமாகுமந்தத்
திரிகோணமாறுலுமாகுமேயின்னம்
முதற்காணும்லக்கினத்துக்கேழாகுந்தானம்
முதற்கொண்டுதிரிகோணமானுலுமாகும்
மதயானையிருமருப்புக்கனகவெற்பும்வாச
வனசமுகைபோலுமுலைவஞ்சியரோகேளாய். (ரு௦)

வேறு.

வஞ்சியேயொற்றைலக்கினமுற்பாதி
மார்த்தாண்டனேரைபிற்பாதிமதியோரை
மிஞ்சுகின்றவொட்டைக்குமுன்றிங்களோரை
மீந்திடும்பிற்பாதிக்கோவெய்யோனோரையதாம்
செஞ்சொன்மதியோரையதேகாணுமாயின்னே
சேயிழையேபிறக்குமெனச்செப்பலாகுநற்
கஞ்சமலர்நண்பிரவியோரையதேயாகிற்
காளையேபிறக்குமெனவேசாருதல்வேண்டும். (ருக)

இராசிவடிவுமுதலியன:-வேறு.

செப்பியராசிவ்டிவுகண்டுரைக்கிற்சிவந்திடுந்தகருருமேடம்
தெரிந்திடுதவளப்பெற்றமேயிடபஞ்செயம் பெறுமிதுனமென்பது
ஒப்பொடுவீணைகைமயிலுடனேயோதுதண்டாயுதம்பச்சை [வும்
ஒளிருருவாண்பெண்கடகஞெண்டுருவமுறைத்தபாதிரிமலர்நிறமாம்
வெற்படர்சிங்கம்புகைநிறமடங்கன்மின்கனியோடமேநட்தும் [த்தில்
மெல்லியலமுக்குமெவள்ளைபொன்னிறத்தாள்விரிதுலாம்புருடனுங்கர
தப்பிலாத் துலைக்கோலைவ்வணநிறைகற் றூன்பயில் வலக்கையிற்பிடிப்
தங்கியவிருச்சிகங்கருந்தேளாந்தக்கதேஞெண்டிவைபுமுவே[போல்

வேறு.

வேய்த்தனுபுருடன்குதிரைபோலனாக்கீழ் மின்னிருதாணிறம்பொன்
ஆயமீன்மகரங்காலுநல்வதனமானுமாமழுக்குவெண்ணிறமாம் [னும்
மேயதோர்கும்பம்புருடனுஞ்சிரத்திலெடுப்பதுங்குடங்கருநிறத்தோன்
பாய்தலைக்கெண்டையிரண்டுமீன்புழுவ்ாம்பகர்நிறமழுக்குறஞ்சிவப்பே.

இராசிவிழிப்பு. வேறு.

சொல்லுமேடந்தனுமகரந்துலங்குஞெண்டுந்தண்டிடபம்
வெல்லுமின்வைசந்திரற்குறவாய்விழிப்பாங்கங்குல்விடியளவும்
சொல்லுங்கும்பங்கோன்மீனஞ்சிங்கம்பெண்டேளாறுக்கும்
எல்லிற்பொழுதேவிழிதெரியுமிரவிக்குறவாயினிதாக. (௫௪)
இனியசிங்கமெருதாடோடிரவியுதிக்கிற்குருடாகும்
கனியுந்தண்டுஞெண்டுக்குங்கங்குற்பொழுதிற்கண்ணில்லை
தனுவுமகரமிராச்செவிடாந்தராசுந்தேளும்பகற்செவிடாம்
மனிதன்கும்பம்பகன்மூடமாமருவுமீனமிராமூடமாம். (௫௫)

கிரகங்களின்சாதிநிறமுதலியன - வேறு.

ஆதவன்பவளநிறம்புருடக்கோளரசனுங்கிரணமைந்துடையோன்
அம்புலிதவளநிறம்வசியப்பெண்ணணிகிரணம்மெழுமூன்றும்
ஓதியசேயாண்செந்நிறமரசனுற்றநற்கிரணமேழுளனும்
ஓங்கியபச்சைநிறம்புதன்வசியனுயர்வலியொன்பதுகிரணன்
பீதகன்புருடன்குங்குமநிறத்தோன்பிராமணன்றசகிரணத்தோன்
பிருகுபெண்வெண்மையந்தணனீரொண் பெற்றநற்கிரணமே யுடை
சூதனுங்காரிமைவணநபுஞ்சன்சூத்திரன்சுருதியாங்கிரணன் [யோன்
சூழ்கரும்பாம்புசெம்பாம்பிருகோளுஞ்சொல்வரீனக்குலமென்றே.
சொல்லியரவிக்குச்சிரசுமத்தியினிற்றுலங்குகூரிலாமன்மேனுக்குந்
துய்யகொம்புளதாம்வெண்பிறைதனக்கேசொற்றனர்சொம்பிலையென்
வல்லசெவ்வாய்க்குச்சிரநடுமேலாய்வளர்ந்தெழுகூரியகொம்பாம் [றே
மாலவன்றனக்கேசிரத்தொருபுறத்தின்மருவியகொம்புளதாகும்
நல்லபீதகற்கேசென்னிமத்தியினுடிடுகொம்பெனநவில்வர்
நாடுசுக்கிரற்குச்சென்னியின்பக்கநலமுடன்செறிந்திடுகொம்பாம்
அல்லல்சேர்காரியிருவகைப்பாம்புமாகிடுமூவர்கடமக்கும்
அறுத்திடமறுப்பட்டிருந்துகீழ்நோக்குமாகியகொம்புளதாமால். ()

பஞ்சபூதக்கிரகம்-வேறு.

கண்டபஞ்சபூதமாய்நின்றவாறுகருதுவாய்செவ்வாயேபிருதிவாகும்
மிண்டியசுக்கிரன்றுனப்பானபூதம்மேலானவக்கினியேகுருவதாகும்
கொண்டிருந்தவாயுவேபுந்தியாகுங்குலவியகன்னுதன்மாதேகூறக்கேணீ
கொண்டவுறுமாகாயமானபூதங்கோதற்றசனியென்றேகுறித்தார்மேலோர்

இராசிமானசங்கை.

வேண்டியமேடந்காலேகாலென்றேதும்
மேன்மையிலங்கைக்ககசாமிருஞ்சோனுட்டில்

ஈண்டியதோர்சர்பையொண்டுங்கூட்டிக்கண்ட
விலக்கமாமதுரையெழிற்காஞ்சிகாசி
நீண்டதிக்கும்பெங்களூர்தனக்குஞ்சாயை
நின்றதுபார்த்தாற்குறைந்துநிற்குமேடம்
மாண்டகைசேர்விழுச்சாயைகண்டாற்சன்ம
மாகுமனேலக்கினசுத்தியறிந்துசெப்பாய். (௫௯)

இலக்கினத்தியாச்சியம்-வேறு.

செப்பிடுமேடம்மிடபங்கன்னியுநற்றனுவும்
திகழவேமுற்பாகத்தனைக்கடிகைதானும்
ஒப்பறுசிங்கங்கும்பங்கோன்மிதுனநான்கும்
உரைப்பரிடைப்பாகத்திலனைக்கடிகையென்றே
தப்பறுதேண்மகரமுடன்கயல்கடகந்தனக்கே
சாற்றுவர்பிற்பாகத்திலனைக்கடிகையென்றே
மைப்பொருகண்ணிபமருப்புக்கொங்கைநல்லாயிதனை
வயங்குவிடகாலமெனமறையுணர்ந்தமேலோர். (௬௦)

பிரசவவீடுமுதவியனவறிய.

சேயுதிக்குமனையிருக்குந்திசைமகரஞ்சிங்கம்
சென்மலக்கினமாயினுந்தெற்குமூலை
ஆயசிங்கங்கன்னிதனுசேன்மிதுனம்வடக்காம்
அன்புடனேயிடபமேற்காகுமதன்மேலே
வேயுதிக்குந்தோளணங்கேகும்பம்விரிச்சிகங்கோல்
விளங்கமரர்வேந்தனுர்திசையெனவேவிளம்பாய்
தேய்பிறைக்குநெய்தீபத்தில்லைவளர்பிறைக்கே
செப்பிடுவாய்நெய்விளக்கின்னிறையுமெனத்தேர்ந்தே.()
நிறைந்தபெண்ணும்லக்கினத்தினுதியேயாயின்
நீண்டிருக்குங்குறைந்திருக்குமேலந்தமாயின்
பிறந்தருளும்லக்கினமேசரமாயிற்றீபம்
புறம்பாகுமுபயமெனிற்பேரிருளாமென்ப
அறைந்தசனியங்கிசவீடாகிலதிற்காரி
யம்புலியைப்பார்க்கவிருளகமதேயாகும்
சிறந்தமதிக்குஞ்சேய்க்குமங்கிசவீடாயிற்
செய்யசனிபார்க்கிலோசேர்வள்புலந்தெரிவை. (௬௨)
தெரிவைக்குந்துன்பமில்லைலக்கினத்தாதிக்கே
திடமுடனேயந்தமெனிற்றேமொழிக்குத்துன்பம்
மருவியலக்கினமுதற்சந்திரனிருக்குமட்டும்
மன்னுதொகைமடவார்கண்மருவியருகிருப்பர்
சருவியநற்சுபர்காணிற்றுன்றேன்றும்விரவிற்
சனிகுசன்பார்த்திடிற்றனேசஞ்சலமுற்றிடுமே

பெருமையுடனிருந்தகோணிறங்குழவிதனக்கே
பெறுமென்றேபெரியோர்களுரைப்பர்மிகத்தானே. ௬௩

தானருகேயிருந்தமடவார்பருவங்கூறில்
சனியிருந்துசண்டக்காற்றலைநாத்தகறுப்பி
ஈனமில்லாக்குசனிருந்துகாணின்முதுவயதே
யிசையுநிறஞ்சிவப்பாகயிருப்பளமங்கலையாம்
நானிலமேற்குருவெள்ளிசசியிருந்துகண்டால்
நாரிசுமங்கலைவாலைநற்புதன்மத்திமையாம்
மாநிலமேற்பாம்பிருந்தாலனுசாரமடந்தை
மகவுநாலேதரித்துவந்திடுங்கண்டீரே. (௬௪)

கண்டுமொழிமாதாவின்றன்பருவங்காரி
கதிர்குருமூவருங்கண்டாலரம்விருத்தையாகும்
மண்டுவெள்ளிசேய்பார்க்கவயதுநடுவாகும்
மதிபுதனுங்கண்டக்காலவள்வாலையாவாள்
மிண்டுமுடவன்னிருந்தால்வீடுபுராதனஞ்சேய்
மேவில்வெந்துகட்டினதோர்வீடாகுமென்னே
பண்டுசசிபார்க்கிலகம்புதியதேயாகும்
பரிதிக்குமரந்திரண்டபதியெனச்சொல்வாரே. (௬௫)

சொல்லுபுதன்பார்த்திருந்தாற்சித்திரவீடாகும்
சுக்கிரன்பார்த்திருந்தக்காற்சுசிவீடதாகும்
வில்லரசனிருந்துகண்டாற்கெட்டியக்மாகும்
மின்னனையார்விருபுஞ்சுவைவெய்யவெனவுரைப்பாம்
நல்லமதிக்குப்பாகுஞ் சேய்துவப்பைநாடும்
நாலுவகைச்சுவைபுதனே நல்கிவிப்பனிப்பால்
வல்லலறுங்குருமதுரம் வெள்ளிபுளிப்பாகும்
மணிகாரிகசப்புலக்கினத்திசை தொட்டெண்ணே (௬௬)

திரசரராசியிற்சுங்க னிருக்கவிளக்கையும்
திங்களைப்பாவர்கள்பார்க்கிற் றீர்க்கமுறுந்தீபம்
மூனாமருவும்லக்கினத்துக் கிருபாலுநான்கு
மோதுமனைதனிலிருந்தா ருடன்கூடியிருப்பர்
இரவிபுந்திபங்குகேந் திரத்திருக்கிற்கிழக்காம்
இரணியன்கேந்திரத்தேறி யிருந்திடிலுத்தமரோ
அரவுசெவ்வாய்சன்மத்தி லுறினுந்தெற்காகும்
அணியுமனைசேர்காரிக் ககமேற்குவாசல். (௬௭)

வாசமுறுமூன்றுறிற் பதினொன்றிற்பாவர்
வந்திருக்கச்சனியத்தா மனையதனிற்சார

நீசமடைந்தையரிருந்து புரிவர்பரிகாரம்
நீண்டசனிசுபர்மனையி னேரிநல்லோர்காணில்
ஆசுறுமீனத்தொழில்செய் நாரியருகிருப்பார்
ஆமென்றேசுருதியறிந் துரைத்துநல்லோராய்ந்தே
தேசுறுநற்கலைகிறையுந் திங்கண்முகமயிலே
செப்பினரிப்பலபாகந் தெரிந்துகொளத்தானே. (கூ௮)

வேறு.

செப்பியதோர்பலபாகம் பகரவேண்டிற்
செங்கதிரோன்முதனவகோள் செறிபலங்கடெரிந்தே
ஒப்புடனேசனித்தநவக் கிரகபுடங்கண்டே
யுய்யர்துமன்முதலேவர்குளி காதிநால்வர்
தப்பறவேயெண்ணிலக் கினபுடமுமாகச்
சாற்றிடுபத்தொன்பதெனத் தகும்புடங்கள்வரைந்தே
இப்புவியிலுரைத்தவர்க்கே சித்திக்கும்பலன்கள்
எனச்சுருதிமொழிப்புலவ ரியம்பினர்கடாமே. (கூகூ)

இயம்புசன்மமனைநவாங்கி சப்கைந்ததனில்
இனிதுதிக்கினவக்கிரக மிருந்தபடிசரியே
நயம்பெறுமற்றங்கிசையி லுதித்திடினேயந்த
நவக்கிரகமிருக்குநக்ஷத் திரபதமறிந்தே
செயம்பெறவேநின்றமனை வீடடுத்தவீட்டிற்
செறிந்திருக்கும்விபரமெல்லாந் தெரிந்தெண்ணிக்கண்டே
பயன்பெறுஞ்சொற்பலபாகம் லக்கினமேமுதலாய்ப்
பன்னிரண்டுவீட்டுக்கும் பலன்களறிந்துரைப்பாய். (எ0)

வேறு.

உரைசெறிகிரகநட்பாட்சியுச்சங்க ளுறும்பகைநேசமுஞ்சமமும்
நிறைபெறுமனையும் பார்வையுந்தொழிலு நிகழ்த்துகாரகமுமாரகமும்
வரவுறுமரபு நிறமுமெய்வடிவும் வலிசெறிபலன்சுபர்ப்பலமும்
புரவுறத்தேர்ந்து கண்டிடும்புலவர் புகன்றுளபலன்கள்சித்திக்கும். (எக)

பாலாரிஷ்டம் - வேறு.

லக்கினந்தேண்மூன்றுரிற் பாவரெல்லாம்
நண்ணிலுடனேமரணம் லக்கினத்தில்
திக்கெனச்செவ்வாய்நிற்கச் சேயெட்டாறில்
சேர்ந்துசனிகூடிலோ மரணமாஞ்சன்மத்
துக்காறெட்டிற்சசிதா னிருந்துசுபர்நோக்கத்
துலங்கியநான்காண்டென்றே சொல்லிடுவர்நல்லோர்
மிக்கசெவ்வாயேழிலெட்டின் மார்த்தாண்டன்மேவ
விளம்புவரற்பாயுவென மீன்புரைகண்மாதே. (எஉ)

தேயுமதிலக்கினகேந் திரத்திலெட்டின்மேவிச்
சேய்முதற்பாவனாக்கூடின் மரிக்குஞ்சன்மத்தில்
ஏயசசிக்கிருபாலும் பாவர்நிற்கிலெட்டேழ்
நான்கிடத்திற்றிக்கோள் கணிற்கிலுற்றசேயும்
தாயுஞ்சாமெனவுரைப்பர் சுபக்கோள்பார்த்திடினே
தாயுடன்சீவிக்குமெனவே சாற்றலாகும்
மாயகதிர்பாக்கியத்திற் சுபர்நோக்கிலாமல்
மருவசசிசுபருடனேமன்னி லரிட்டமதாம். (எ௩)

பிறந்தநக்ஷத்திர வாரதர்ப்பலம்-வேறு.

ஆபசித்திரையிற்றிங்க ளணிகுசனுத்திராடம்
ஞாயிறுபரணிகேட்டை நற்குருவாரமாகும்
ஏயறுபுதனவிட்ட மிரேவதிசனியேயாகும்
தூயபூராடம்வெள்ளி யிதிற்சன்மந்துயாஞ்செய்யும். (எச)
செய்யுமட்டமத்திற்பாவர் சேர்ந்திடுளேழேயாம்
ஐயமாம்பிறைத்திருந்தா லவனுக்காங்கண் ணுக்கூனம்
மெய்யலக்கினத்திற்செவ்வாய் நிற்கினும்வியமாறெட்டில்
பையவேகாரிசெவ்வாய் பற்றின்மெய்க்கரிட்டம்பண் ணும்()

வேறு.

பண் ணுஞ்சன்மமுடனேழிற் பாவரிருக்கப்பாவர்கடாம்
அண்ணின்மதியமுடன்கூட வணியுதாகவருமரிட்டம்
எண் ணுந்தேய்ந்தபிறைவியத்திலேழிலொன்றிற்பாவர்களும்
நண்ணிலரிட்டங்கேந்திரத்தினட்போரிருக்கவுய்வாரே. ()
உய்யுமிரவிசனிசெவ்வா யுறுப்புக்குறைந்தமதிநான்கும்
மெய்யாம்வியம்பாக்கியமெட்டி லொன்றியவர்கண்மேவிடவே
பையவிந்தப்பதிகடமைப் பண்பாயர்சன்பாரானேல்
ஐயவரிட்டம்பொன்னேக்க மாறுலிருப்பனணிமயிலே. ()
அவனிமிதெட்டைந்தொன்றிலானவியத்திற்பாக்கியத்தில்
தபனன்செவ்வாய்சனிமதியந்தாமுங்கூடிநின்றாலும்
கவனமுடனேதனித்தனியேகருதுமிவற்றினின்றாலும்
எவனும்பிறக்கிலிப்பாரின்மேவுமரிட்டமெய்துவனே. (எஅ)

வேறு.

எண்ணியலக்கினத்தோன்பிரமாலக்கினத்திலேயில்
ஒண்ணியேபாவர்தானுமுற்றிடிலுரோகியாவன்
திண்ணமாயிவர்கடாமுந்திரிகோணகேந்திரத்தில்
நண்ணிடின்மூர்க்கனவன்நறைமலர்க்குழலின்மானே. (எகூ)
மானேகேள்குதிரைமூலமகமுதற்காலும்பின்னும்
ஈனரேவதியுங்கேட்டையாயில்யமிவைபிற்காலும்

ஊனநாழிகையோர்நான்குட்டாதைமூன்றாய்ரெண்டுக்கும்
ஆனநற்றுணைவர்மூன்றினான்கிற்சேய்க்குருமரிட்டம். (௮௰)
உறுஞ்சன்மலக்கினாதியுடன்சோமனுறைவீட்டாதி
பெறும்பகையென்னிலாண்டுபிறக்குஞ்சேய்பிழைத்திடாது
குறுஞ்சன்மலக்கினாதிகுளிகனுஞ்சனியுங்கூடில்
அறைந்திடாய்கள்ளராலேயடிபட்டேயிறப்பானன்றே. (௮௧)
அன்றவனுதித்தநக்ஷத்திரந்திரிராசியந்தம்
ஒன்றிடிலுடனேதுஞ்சுமுற்றபொன்னோக்கெட்டேநாள்
வென்றிகொள்வெள்ளிநோக்கவிரவுநாண்மூன்றுபொன்னை
நன்றிலாப்பாவர்நோக்கின்வந்தநாணவிந்துபோமே. (௮௨)
நலிவுசெய்யட்டமாதிலக்கினத்தாதிகூடி
வலியகேந்திரத்தினிற்கமருவியெட்டினிலாரோனும்
பொலிவுறுவொருவர்நிற்கப்பூமியிற்பிறந்தபாலன்
ஒலிகடலுலகிலெட்டாண்டுள்ளுயிர்க்கரிட்டஞ்சொல்வாய். (௮௩)
உள்ளலக்கினமேயாதியிருவர்லக்கினத்துணிற்க
மெள்ளவேயெட்டிலிந்துமேவிடக்காரிதானும்
தெள்ளுமட்டமஞ்சன்மங்களிரண்டையுஞ்செறிந்துநோக்கப்
பிள்ளைமெய்க்கரிட்டமென்றேபேசினார்பெருமையோரே. (௮௪)

வேறு.

பெருமைசெறிதேள்சென்மமதாய்ப்பெரும்பாவர்கண்மூன்றிலுற
இருமைசெறிபின்னாறினல்லோரிருக்கினரிட்டமிரவியொன்றில்
உரிமையுடனொன்பதிலிருக்கவொருவரிவரைப்பாராரேல்
அருமையுடனேயுதித்திடுஞ்சேய்க்கரிட்டமென்றேயறைவாயே. (௮௫)
அறையுந்தகர்தேள்சன்மமதாயட்டமத்திலுறைசனியும்
நிறையுஞ்சுபர்கள்பார்வையின்றிநிற்கிலரிட்டஞ்சன்மத்தில்
இறையாங்காரிபாம்பிருக்கவேழிற்சோமனிருந்திடினும்
நறையார்கதிரோன்சேய்கூடினாளீணாங்கினலிந்திறுமே. (௮௬)
இறுமாந்துறுவெண்மதிக்கொருபாவியாவரோனுமுறவொருபால்
கறைவாழரவமெதிர்த்துமதிக்கலைமேனடக்குந்தடமாக
நிறைவாஞ்சசிவாழரவிரண்டுநில்லாரன்றியந்நேரம்
அறையாலையினிற்கரும்பென்னவவிர்கத்திரியாலறுஞ்சிறுவன். (௮௭)
சிறுவனுதித்தவிலக்கினத்திற்றேய்ந்தபிறையும்பாவிகளும்
அறிவாம்வியத்திலிரண்டிலெட்டிலடைந்துபாவர்தானிருக்க
உறுகேந்திரத்தைச்சுபர்பாராதொழியிற்குழவிக்குறுமரிட்டம்
பெறுமீன்கர்க்கிதேளுமிதிற்கேழிற்பாவர்பெறிற்பிணியாம். (௮௮)
பிணியாறேழிற்பாவருமாய்ப்பெருஞ்சென்மத்திலிரவியுறத்
துணியாமெட்டாமிடத்திற்கேந்திரத்திற்பாவர்சூழ்ந்திருக்க

அணியார்குழவியுடன்றாய்க்குமரிட்டஞ்செவ்வாய்சனிகோணம்
பணியார்மதியைப்பொன்பாராதிருக்கவரிட்டம்பாலனுக்கே. (௮௯)
பாலவெள்ளைமதியமொடுபயில்சன்மத்தும்பாவருமில்
ஆலுங்குழவிக்கரிட்டமதாமிரவியாறிலதற்கேழில்
சாலச்செவ்வாய்சனிநிற்கத்தகப்பன்சிறுவனுடனிறுவர்
நாலுந்தேய்ந்தமதிபாவர்நடுவாயிற்றாய்ச்சிவனும்போம். (௯0)
போமேயாறுமிடப்பிறைக்கேழ்பொருந்திச்செவ்வாய்சனிநிற்க
ஆமேதாய்பிள்ளைக்கரிட்டமடர்சென்மத்திற்பாம்புசனி
தாமார்நான்கிற்சேயேழிற்றபனனுமிற்சாற்றும்மரணம்
கோமார்சனிசெவ்வாயேழிற்குழவிக்கரிட்டஞ்சொல்வாரே. (௯௧)
வாரார்முலையாய்சன்மமெட்டாமனைக்காறேழெட்டொடுவியத்தில்
கூரார்பாவர்தேய்பிறையைக்கூடவதற்குநான்கெட்டில்
ஓரார்பாவருமிற்குழவிக்கரிட்டம்பன்னென்றென்பதினில்
காரார்சனிசெவ்வாய்பாம்புகலந்துற்றாலுங்கடிதரிட்டம். (௯௨)
கடியசன்மந்தனிற்பிறையுங்கவின்சுக்கிரனுங்கலந்துநிற்க
நெடியவேழிற்சனிநிற்கவிஃதல்லாமனீள்சனியும்
கொடியசசியுமொருகாலிற்கூடியிருக்கச்சன்மத்தில்
படியும்பிறையைச்சுகர்நோக்காதிருக்கிற்பாலன்றாயுடன்சாம். (௯௩)
காணுங்கேதுங்கரும்பாம்புங்கருதுநான்கிலுற்றிட்டவே
மாணுங்குழவிக்குறுமரணமாகுமொன்பதாமிடத்தில்
பாணும்வியத்திக்கோளுறினும்பன்னுங்காரிக்கிருடனே
பூணும்வியத்திலுற்றிடினும்புதல்வன்றாதையுடன்மரணம். (௯௪)
மரணமைந்திற்கதிர்மதியுமந்தன்செவ்வாயுடன்கூடிக்
கிரணமுற்றேயிருந்தக்காற்கேளாய்குழவிபிதாமரணம்
முரணுமசுரகுருவெட்டின்மூன்றிற்பாவருடனிருக்கத்
திரமாம்பாவர்நோக்கமுறச்சேய்க்குமரிட்டஞ்செய்திடுமே. (௯௫)
செய்யும்பரிதிக்கெட்டதனிற் செவ்வாய்மந்தனுடன்கூடி
உய்யுஞ்சுபர்கணோக்கமிலா துற்றாற்பிதாவோவுறுமரணம்
பையமதிக்கேழெட்டினவ பண்பாமிடத்திற்பாவர்களும்
ஐயமறவேயிருந்தக்கா லாகுங்குழவிபிதாவிறுமே. (௯௬)
இறுமேபாவக்கிரகமுட னிருந்தமதியின்கிராணமெனின்
உறுமேசென்மமெட்டிற்சே யுற்றகுழவிதான்மரணம்
பெறுமேபரிதிகிராணமிதிற் பேசும்பாவருடன்கூடச்
சிறுவானெட்டிற்சனிசெவ்வாய் சேரிற்றகப்பன்றாய்மடிவர். (௯௭)

வெண்பா.

பூராடமுற்காலும் பூசத்திடையிரண்டும்
சீராகச்சித்திரையில் செல்லரையும்—ஊர்நாட

உத்திரத்துக்காலு முயிரிழப்பர் தந்தைதாய்
புத்திரனைப்பெற்றெடுத்தபோது. (௯௮)

## நக்ஷத்திரபலன்.

### அச்சுவினி.

செய்கருமம்வழுவாமற் செய்வன்மடவார்நேயன்றியாகிதீரன்
பொய்சொல்லானுபரணப் பிரியனற்பகோபிபெறும் புகழேயுள்ளான்
துய்யவிழிசிவந்திருப்பன் மார்பகலமுளன்சமர்த்தன் றூயனாகும்
ஐயமிலாநெற்றியுயர்ந்தேயிருப்பன் சாந்தனசுபதியினானே. (௯௯)

### பரணி.

அன்னைபிதாவுக்கினியன் ஞானியற்பநித்திரையனற்பகோபி
தன்மவானைச்சுவரியன்மானபுகழ்க்கோனாந் தாம்பூலநேயன்
மன்னுமுரைத்திடனுடம்பினிடப்புறத்தின்மறுவனருஞ்சமர்த்தனாகும்
பன்னியுரையிற்பிரியன் மோவாய்க்கட்டைச் சிறியன்பரணியானே. ()

### கார்த்திகை.

கொள்ளும்ரசவர்க்கத்திற் பிரியனற்பநித்திரையன்கூறுஞ்செஞ்சொல், தெள்ளியசாதுரியன்பொய் சொல்லியுமேபொருள்சேர்க்குந்திறத்தோன்புத்தி, உள்ளவுன்மன்னர்க்கினியன் சன்மானன்றேசபலமுடையகோமான், கள்ளமனனுரத்தின்மறுவழக்குரைக்குந் துணிவான்கார்த்திகையினானே. (௧௦௧)

### உரோகணி.

நீரதிகதாகமுளன்சொன்னதுகேட்பான் புலவனிருபனாகும்
பாரிலன்னமிடுஞ்சீமானிரும்புவியா பாரிநெய்பால்பக்ஷமுள்ளான்
நேருமிருவிழிபருத்துப்புருவமுஞ் சற்றேநெருங்குநேயனென்றும்
ஓரமுரையானுள்ளங்காலுரத்தன்றிடநடைரோகணியினானே. (௧௦௨)

### மிருகசிரம்.

காலைமுழுக்குப்பிரியன்விசாலவிழிமயிரழகன் கல்வியுள்ளான்
கோலியதிண்டேகன்மனவன்மம்வெளிவிடானினிய கூத்திற்பாட்டிற்
சாலவுஞ்சஞ்சாரனாந்தாம்பூலநேய னினைத்ததுமுடிப்பான்
வேலாருங்கரனெற்றியுயர்ந்திருக்குஞ்ஞானி மிருகசிரத்தினானே. ௧௦௩

### திருவாதிரை.

பொய்புரைசொல்வன்கீர்த்திமான் றரித்திரனெடியன்பொருத்துகோப
வெய்யசிலுகன்சுத்தவான்குஞ்சி யழகனிருவிழிசிவப்பன் [ன்
துய்யபலவரன்கோபியுறவுடையனுயர்ந்திருக்குந் துண்டமுள்ளான்
ஐயமறவுலகுதொழவொருமணியாய்விளங்கியவாதிரையினானே. (௧௦௪)

### பூசம்.

திருந்தியசொற்சாதுரியனகங்காரிவிசாலபுயன்சிக்கனத்தன்
வருந்திநெடுவழிநடப்பன்கடினமொழியான்கள்ளன்மலர்போற்கையன்

பரிந்தகுணபுத்திமான்பொய்சொல்லான் பித்தமுளன்பலர்க்குநேயன்
பொருந்தியவைந்தாம்வயதிற்கான்முடமாவன்புநர்பூசத்தினானே. ( )

பூசம்.

வாசியுடையன்வழக்கையுரைத்திடுகள்வன்சூத்திரவசனமுள்ளான்
நேசமுடன்மாதாவைத்தந்தையைரக்ஷித்திடுவனெடியரூபன்
தேசொர்மூக்கந்தனவான்கண்மூக்கழகன்பசிபொறுன்றிகழுஞ்சாந்தம்
பூசிமுடிக்கப்பிரியன்குணவான்பூாக்கியமுளன்பூசத்தினானே. (௧0௬)

ஆயிலியம்.

செஞ்சொற்சாதுரியன்சத்துருநேயன்மனதூக்கன்றிரிவான்காட்டில்
பஞ்சைபோற்சிறுதின்றிதின்பனன்னைபிதாக்கினியன்பத்தியுள்ளான்
வஞ்சகமில்லாதெவர்க்குமேளிதஞ்சொல்வன்சுகவான்வலிமையோருக்
கஞ்சிடான்விழிபுருவமுயர்ந்தொதுங்கியிருக்குமாயிலியத்தோனே. ( )

மகம்.

இலவுமுருக்கலர்விழிதொண்டைதூதளைபோம்செவ்விதழார்மாதே
பலதிசையிற்சஞ்சாரப்பிரியமுளன்சௌந்தரியன்பாண்மிகுந்த
புலவன்முழுக்குப்பிரியன்சுகந்தப்ரிமளப்பிரியன்பொன்னுமுள்ளான்
வலதுபுறமறுவுடையனியாயனற்பகித்திாயன்மகத்தினானே. (௧0௮)

பூரம்.

இதமானவசனமுளான்கல்விமான்சிவந்திருக்குமிருகணுளன்
நிதியதனைவருத்தமதாய்த்தேடிடுவன்வருங்கருமநினைவிற்காண்பன்
விதமானவியாபாரிகடினமொழிப்பலநினைவைவிரும்புநெஞ்சன்
பொதுமாதர்தனைவெல்வனகைதந்தவழகன்பூரத்தினானே. (௧0௯)

உத்திரம்.

கையாதவுாயன்முன்கைவலியன்வித்தையுளனழகாங்கண்வாயுள்ளான்
மையார்கண்ணார்நேயன்முன்கோபிமறுமுகமார்பதனிலுள்ளோன்
பொய்யாதசூரனீராடுவான்சிறுபசியன்பொருந்தும்பத்தி
ஒய்யாரநடைத்தருமன்ஞானவானுகுமுத்திரத்தினானே. (௧௧0)

அஸ்தம்.

வன்புறுதாமதன்கல்விமானற்பபசியன்மனுவணங்கவாழ்வோன்
இன்பமுறுங்குறிப்புடையன்சூரனழகியன்கடினனினியபுத்தி
பின்வயதிற்றனமுடையன்சிறுகன்மார்பகலன்பின் புறங்கானல்லோன்
அன்புடனீராடல்குருபத்தியுளன்றருமனத்தத்தினானே. (௧௧௧)

சித்திரை.

பலமானசரீரவான்மார்பகலனடைகடியன்பரிந்துசொல்வான்
குலவியநற்குணனடைநற்பிரியன்குமதபுத்திக்குரிசினண்பன்
நிலைமைபெறுந்திட்வசனன்முகத்துறுநன்மறுவுளநித்திாயுமற்பன்
செலவுசெயான்சவுரியவான்றுக்கமுளான்கோபிசித்திரையினானே. ( )

சோதி.

பல்லவற்கும்வசியன்போசனப்பிரியன்மறுதுடையிற்பற்றவாழ்வோன்
நல்லியல்சேர்தேவதாபத்தியுந்தன்னிச்சையுளான்ராசசேவைக்
கல்வியுளான்றாய்தந்தைக்கினியன்விஸ்வாசமுளன்கடினதேகன்
சொல்லுநெறியுளன்கரத்தாயுதம்பிடிப்பான்றியாகவான்சோதியானே.()

விசாகம் - வேறு.

சொல்முகத்தின்மறுநெடியனீதிதுயிற்பிரியன்
சுற்றமரசர்க்கினியன்சொல்லடக்குங்குணத்தன்
நல்வசனன்பொறையுடையனனநடையார்நேயன்
நாடியதோர்தலைமார்பினளையின்மறுவுளனும்
செல்வமுளன்சதுர்வேதன்குணவான்மூன்கோபி
சேவையுளான்விசாரமிலான்றெய்வபத்தியுள்ளான்
வில்வாளுமேந்துகரனுங்கயமுமாவும்
மிகநடத்துந்தியாகியாம்விசாகத்தினனே. (௧௧௪)

அனுஷம்.

ஈனமில்லாநற்குணவான்றாம்பூலப்பிரியன்
எவரெவரும்புகழ்சதுரனினியபத்தியுளனும்
நானிலமெலாந்துதிக்குநீதிமான்றூயன்
நயனங்கள்சிவந்திருக்குநராதிபர்சன்மானி
மானனையார்க்கினியன்மயிரழகன்மார்பகலன்
மாதாவைத்தந்தைதனைமகிழ்ந்துரக்ஷித்திடுவன்
ஆனைபோல்வேகமுளனற்சொல்லனல்ல
ஐச்சுவரியவான்லோபியாமனுஷத்தானே. (௧௧௫)

கேட்டை.

தாட்டிகன்துஷ்டரிணக்கன்பொய்யனுபாயன்
தகுபத்தியுளனிரவான்குரூரகோபி
நாடியவுண்மூச்சுளனிராடடவும்பிரியன்
நற்புத்தியுளநெடியன்றமயனைரக்ஷிப்பன்
வாட்டமிலாச்சிற்றுண்டிதின்பன்மன்னர்க்கினியன்
மயிர்க்கடையும்விழிசிவப்பும்வலப்பாகமறுவன்
கேட்டமொழிதிறங்கொள்ளான்பொய்யைமெய்யாக்கிடுவன்
கேள்வியுள்ன்கடினச்சொலான்கேட்டையானே. (௧௧௬)

மூலம்.

மண்டியபசித்திறைப்பிரியன்புறந்தாளுன்னதனும்
வழுவாமற்செய்கருமஞ்செய்பத்திமானும்
திண்டிறலாயுதந்தன்னாற்சீவனஞ்செய்திடுவன்
திகழ்தந்தைதாய்க்கினியன்சிறந்தசவசீலன்

கண்டசிறுதின்மிதின்னப்பிரியவான்லோபி
கண்சிறுகிச்சிவந்திருக்குங்கல்விமானாகும்
மிண்டுகளேசெய்திடுவனுறவினரைச்சேரான்
முன்கோபிகொடியனாகும்மூலத்தானே. (ககஎ)

பூராடம்.

மெய்நெடியன்சிறுநெற்றியான்வாசப்பிரியன்
விசாரமுளனரசர்நண்பன்மேற்கருமம்பார்ப்பன்
செய்யசிற்றுண்டிப்பிரியன்மாதாவுக்கினியன்
சேர்ந்தவரைரக்ஷிப்பன்சிவந்தசிறுவிழியன்
கைகாலுநீட்சியுளன்சவுந்தரியன்விசாலன்
கள்வனாம்வீரியவான்கரங்கள்புயம்வலியன்
பொய்சொல்லான்சஞ்சாரப்பிரியன்மின்னார்க்கினியன்
பொழிதானவானாகும்பூராடத்தானே. (ககஅ)

உத்திராடம் - வேறு.

தத்தைமார்க்கினியன் முகத்துறுமறுவான்சரீரமுங்கெட்டியான்பலவா
புத்திமானுயர்ந்தநாசிநல்வசனன்போசனப்பிரியனீர்க்கஞ்சான் [ன்
பத்திமானுறவுக்கினியவன்வர்ம்பிரர்பொருள்வேண்டிடாத்தூயன்
உத்தமர்க்கினியனிறைந்தசொற்றியாகியுத்திராடத்தினானே. (ககசு)

திருவோணம்.

தக்கதோர்கல்விமானொருபோக்கன்சற்றினிற்கோபமாறிடுவன்
பக்கமுமுன்பின்பார்த்துமேநடப்பன்பதிவுளங்காலுயர்ந்திருக்கும்
மைக்கணார்க்கினியன்பரிமளப்பிரியன்மயிர்முடியழகனுற்சாகன்
சிக்கனவானுமேற்பவர்க்கீயான்மிகழ்திருவோணநாளானே. (கஉ0)

அவிட்டம்.

நெறிபெருங்கருமந்தன்சொன்மேலானோனின்றவர்க்கஞ்சிடான்றியாகி,உறுபுறவடிநாசியுமுயர்ந்திருப்பனொருவர்சொற்பொறானலூண்பிரியன்,பெறுமவர்க்கினியன்மடந்தையர்க்கன்பன்பெரும்பொருடேடுவனழகன், அறிவுடனடங்கிப்பிறர்பொருள்வவ்வானவிட்டநக்ஷத்திரத்தானே. (கஉக)

சதயம்.

பத்தியில்லாமல்வெகுண்டசொற்பொறாதான் பழுதிலாரோகவானினியன்,புத்திமான்கைகால்வலியன்வாயழகன்பொய்பொறான்மன்னவர்க்கினியன்,வித்துவான்சூரன்மாதருக்கன்பன்மிகுந்துநீராடவும்பிரியன் சத்துருசயன்பொன்னுளன்வழக்குரைப்பன்சதயநக்ஷத்திரத்தானே.()

பூரட்டாதி - வேறு.

பூரட்டர்திபொறான்பிறர்பொத்துச்சொல்
நேரிட்டார்வழக்கான்பானெய்க்கன்பினான்
வாரிட்டார்முலைமாதருக்கீவிலான்
ஓரிட்டார்கல்விமானாசியுன்னதன். (கஉ௩)

உத்திரட்டாதி - வேறு.

நித்தநீராடிதமருளன்கோளனீதிபொன்பிறர்க்குபகாரி
வித்தைதாம்பூலப்பிரியன்சஞ்சாரன்விரிவுளகாதுமார்புடையன் [வான்
புத்திமான்மாதர்க்கினியன்சாதுரியன் யொய்யன்மற்றவர்தொழில்புரி
உத்தமர்க்கினியன்வழக்கினிற்பலவானுத்திரட்டாதிநாளானே. (கஉ௪)

ரேவதி-

மெல்லியரிட்டத்திற்சாலவேபிரியன்மிகுசெல்வம்பாதிநாள்விளங்கும்
நல்லவன்பிறர்சொற்கேட்பனற்குணவானயனசிங்காரசீமானும்
சொல்லுரையிற்சாதுரியனந்தணரைத்தொழும்பக்தியுள்ளபுத்தியினன்
இல்லையென்றுரையான்பழிக்கிடங்கொடாதவியல்பினனிரேவதியானே

## நட்சத்திரபாதபலன்.

அச்சுவினி.

சீர்பெறுகோளன்சஞ்சலன்பாவிசெறிந்திடும்ரூபமேயில்லான்
செப்பியபிலுக்கனந்நியர்க்கன்புசெய்குவனசுபதிமுதற்கால்
தார்செறிபிறரின்குணத்தினையறிவான்சவுந்தரவானலம்புரிவான்
சாத்திரமுரைக்குஞ்ஞானத்திற்பார்வைதருமிருகாலினிற்சனித்தோ
ஏர்பெறுகணிதவித்தையிற்பிரியனினிதுளபுத்தியேபுகல்வன் [ன்
இசைந்திடுமூலரோகிநற்கருமமெண்ணுவன்மூன்றதாங்காலான்
போர்செறியுடம்புவளைவதாமதிகபுத்திமான்சோதிடமறிவான்
புரந்தரன்காமிசத்தியவானும்புகழுநாற்காலினிலுதித்தோன். (கஉ௬)

பரணி.

காலமாஞ்சிவப்பன்மிகுபராக்கிரமன்கனபலனீதியுமுள்ளான்
கருதலர்சிங்கஞ்செந்நிறமயிரான்காணுமேபரணியின்முதற்கால்
கோலமாமானிநிபுணனலசியன்குணமுளன்புத்திமான்காமி
கூரியதருமன்சாத்திரமுரைப்பன்குலவியபரணிகாலிரண்டான்
சால்வுங்கோபியுருட்சியாங்கண்ணனன்றன்னியன்மானிசந்தோஷி
சற்குணனெடியோனருமூன்றுங்கால் சாற்றியபரணியாமதன்மேல்
தூலதேகத்தின்கோபியாமரசர்துன்னுசேவகத்துவமுள்ளன்
துர்ச்சனன்கருவியாகுமேபரணிதோன்றுநாற்காலினற்சொல்லே.

கார்த்திகை.

சொல்லுமாசாரன்வித்துவான்பிரபுதோன்றியவிலாபமுள்ளவனும்
சூரனநேசன்புத்திமான்ரோகிதோன்றிடுமாரலின்முதற்கால்
வெல்லுமாசாரவீனன்மானிடர்கள்வெறுத்திடுகோபமுள்ளவனும்
வெற்றிசேர்பிறரைச்சேர்ப்பனூறன்னைவிரும்பிடான்கார்த்திகையிரு
புல்லுவன்றட்டமடந்தையர்தன்னைப்புத்தியிலான்மிகுசூரன் [கால்
பொருந்திடாக்கோபிகருவிபொல்லாங்கைப்புரிகுவனுமொருமூன்றி
ல், அல்லுறுமிடியன்கலைபலவறியானுமனத்தாபமேயுள்ளான், அடைந்
திலான்பொறுமைதுக்கவான்ரோகியாகுநாற்காலதன்பொருளே. ()

உரோகணி.

பொருளழகுள்ளனலச்சலான்காமிபுறத்தியார்க்கியற்றுவன்றுன்பம்
பொறையிலான்வர்ம்மிரோஷவான்ரோகி பொருந்துரோகணிமுதற்
அருளுயர்சாந்தகுணமுளான்ரோகியாசாரன்சத்தியவாக்கி [காலான்
அமர்ந்ததோர்பெண்ணை மணப்பன்வாய்ச்சாலனன்புளனுமிருகாலா
குருவருட்கணிதவித்தைசங்கீதன்கூறியமந்திரன்சுகவான் [ன்
குலவியபஞ்சகாவியமறியாக்கொள்கையானுநுமூன்றுங்கால்
இருளிலாத்தத்துவனங்மியருடமைக்கிச்சைசெய்புத்தியானினிய
ஏந்திழைலோலன்ரோகணிநாற்காலினில்வருவோன்பலமுணாக்கில்.

மிருகசிரம்.

உரைத்திடுதனவான்சத்துருசங்காரனுறுதூலதேசனுங்கோபி
உண்மையாசாரவீனராக்ஷதனுமோங்குமான்றலைமுதற்காலான்
தரைக்குநல்வழக்கேயுரைப்பனுத்தேசிசாதுமனோகரம்பெற்றோன்
சத்தியவாக்கியரிவையர்லோலன்சாற்றிடுமிரண்டதாங்காலன்
உரைக்குநல்லுதாரகுணமுளனல்லனுத்தமன்சாதுசந்தோஷி
உசிதவாசாரன்புத்திமான்சிமானுற்றமூன்றும்பதத்துதித்தோன்
விரைத்துறுபுத்திசத்தியன்சாதுமேவியதருமனற்காமி
வீரியன்கோபிவஞ்சகனென்றேவிளம்புநாற்பாதமாமினியே. (கரு௦)

திருவாதிரை.

இனியநல்வசனகுணமுளான்மகாத்துமா யௌவனநாரியர்க்கினியன்
இயலுறுநல்லவாதிரைமுதற்காலினில்வருங்குணத்தினனென்ப
தனியுரைவாய்ச்சாலகனுநிட்டூரன்றருக்கியகர்வ்விதீக்ஷையிலான்
தகுதியாய்மடவாருடன்புணர்ந்திடுவன்சாற்றியபாதமோரிரண்டில்
குனியுநல்வாதரோகமுமுள்ளோன்கோபிதன்கிருபையுமில்லான்
கோளனுமஞ்சுநாரியர்தனக்கேகுணமிலான்காலொருமூன்றில்
துணியுநல்வேகிவுறவினர்ப்பகையான்றோன்றியவீனமாமனத்தன்
துர்ப்புத்தியூத்தையுடம்புளான்பொல்லாத் துர்ச்சனனுகுநான்கென் [றே.

புநர்பூசம்.

என்றுமெய்தூலப்பிலுக்கனற்போகியிசைந்திடுசெவிடனுங்காமி
ஏனமாமயிரனினிபுனர்பூசமாமுதற்காலினிலிசைந்தோன்
துன்றியபித்தனுட்டினதேகிசோம்பலாசாரமுமில்லான்
துக்கமேமித்தம்பொருந்துவனிருகாறோன்றியநாட்பலன்மிகவே
அன்றிறுங்குட்டரோகியாஞ்சாதாமலைச்சலான்காவியமறிவான்
மந்துறுதந்தரோகவான்றீர்க்கவயதுளான்பாதமூன்றதனில்
நன்றினிற்பிரியமுள்ளவன்குள்ளனல்லவனழகுளானென்றே
நாடியபார்வைலக்ஷணமறிவனுற்பதமறிந்துரைதனக்கே. (கரு௨)

பூசம்.

தனக்கொடிமாதேசூலைநிட்டூரன்றருமவான்கோபிபுத்தியுளான்
தாழ்வறுந்தீர்க்கவாயுளான்றீயன்றருமினிப்பூசநாண்முதற்கால்

தினத்தினிற்பிரபுசர்வ்வவிக்கினனுஞ்செனங்களைத்தாபரித்திடுவான்
செப்பியநிதானியங்கியர்சிநேகிசேர்ந்திடுமிரண்டதாம்பதத்தில்
இனத்தினிற்கினியன்புத்திமான்ஞானியினியசந்தோஷியாநேசன்
இனத்தினனல்லகாரியமுடிப்பனெழில்பெறுமூன்றதாங்காலன்
மனக்குறுசண்டையுடையவன்கோபிவாஞ்சையானாரியர்தனக்கே
மகிழ்ந்திடுகமனன்பூசநன்னாற்கால்வரும்பலனறிந்துணர்மின்னே. ()

ஆயிலியம்.

மின்னியதனமும்பெண்வடிவுள்ளான்மேன்புத்தியுடையன்சந்தோஷி
மிகுநலநாநாதொழில்புரிந்திடுவன்வேண்டுமாயிலியத்தின்முதற்கால்
அன்னியரோவற்றொழில்புரிந்திடுவனழகுளனேக்கமுமுள்ளான்
ஆசாரன்றீயநடையன்றுர்ப்புத்தியுடையனாங்காலிரண்டற்கே
நன்னியற்கோபிநாரியைவதைப்பன்ஞானியாலசியனுநிபுணன்
நலமிலாவார்த்தைபற்றவேயுரைப்பனயமிகுபாதமூன்றதற்கே
பொன்கொலைநாசம்புரிபவள்சுபன்பொல்லாங்குசெய்பவர்க்கினியன்
புலைச்சியர்சங்கம்பண்ணுவனேயைப்புணர்ந்திடுநான்கதாங்காலே. ()

மகம்.

காலனைப்போலப்பயமுளசிவந்தகண்ணன்பேராசையான்யூகி
கருதிடுசிவந்தமெய்யினன்சேர்ந்தகுஞ்சியான்மகமுதற்காலன்
போலியான்புத்தியனல்வடிவுடையோன் பொருட்செலவானசந்தோஷி
பொன்னிறக்கண்ணன்காதினேயுடையோன்பொருந்தியகாலிரண்டதற்
சாலவும்பலவான்மிக்கநோயுள்ளான்சாதுபொல்லாதவன்கடினன் [வே
தாமிகவாசையுடையவன்றாயன்றகுநிகான்மூன்றினிலுதித்தோன்
சீலனாநாரிபேச்சினைகேட்பன்சிரங்குட்டனையுமுற்றிடுவன்
சிந்தைநோயுடையோன்மதுரவாசகனாந்தெளிந்துணாநாற்பதாமாமே.

பூரம்.

ஆமெனுந்திரனின்சொலன்கோபியாசாரன்சவுரியன்சிறவீ
டாக்கமில்லாதான்வியாபாரஞ்செய்வானனபூரம்முதற்காலான்
தாமெனுமுழவுத்தொழில்புரிகுடிஞன்றுகமுங்கிலேசமுமுள்ளோன்
தானுறுசகாயம்பிரபலனில்லாதவனென்பவிரண்டதாங்காற்கே
நாமனுங்குணவானாகுமேன்பாட்டானல்லதோர்கீர்த்திமானாகும்
நாடியமூன்றும்பதமெனும்பொருளைநாட்டினிலுரைப்பர்நல்லோரே
தோமுறுந்துக்கங்குருவடிவுள்ளான்சொற்றிடுநிந்தையேபுரிவன்[றுதே
சோர்வறுமறையோர்தேவதுஷணத்தைச் சொல்லுவன்னான் கெனக்க

உத்திரம்.

கண்டனமிருதுவசனனுங்கீர்த்திகண்ணியன்றீரனிங்கிதனும்
கருதியகிளைஞர்மேன்விருப்புடையான்காணுமுத்திரமுதற்காலோன்
கொண்டிடுங்காமிதரித்திரனூணன்கோதுறுசஞ்சலசித்தன்
கூறியநித்தயாசகனகுங்குலவியவிருபதத்துதித்தோன்

அண்டிடும்பிலுக்கன்பழுதிலாவுளாயானுக்களேமேய்த்திடுமவனும்
ஆனவாசாரவானதாமூன்றிலாகியபிறப்புடையவனே
வண்டனுநன்றிமறந்திடான்பிறரைமதித்திடான்றூஷணமறைவன்
வாலிபந்தன்னிற்றுய்மரித்திடுவள்வழங்குவர்நான்கெனப்பெரியோர்

அஸ்தம்.

பெரியதோர்கலகம்பண்ணுவித்திடுவன்பேசியபொய்யனுங்கர்வ்வி
மன்னவன்கதிரோன்றன்னகத்திருக்கமருவுநல்லரசயோகமதாம்
ஏகமாமதிக்காறேழுடனெட்டிலெழிற்புதன்பொன்பிருகிருக்க [ல்
இராசயோகமுதாம்பாம்பலாதெழுவரினியதன்னகத்துறின்முன்போ
மோகமால்வெள்ளியுச்சமாய்த்தனுசின்முனிவிலாச்சசிகுருவிருக்க
முந்துதேளிடத்தங்காரகனிருக்கமுறையிறையோகமென்றுரைப்பார் ()
உரைசெறிகுருவம்புலிகதிருச்சமுயர்குசன்புந்தியேழிடத்தில்
உரைந்திடச்சனியுஞ்சுறுவுறராஜயோகமுச்சங்கதிர்பெறவும்
அரசனுந்தனுசிலுறினுமேஷத்திலம்புலிபொன்புகரிருக்க
அரசயோகமதாமேறிலக்கினமாயம்புலிநிறையுநண்டேறப்
பரவியவாறுகோளுமம்மதியைப்பார்க்கவந்தியத்தின்மன்னவனும்
பாக்கியதனலாபாதிசந்திரனும்பண்பொடுங்கேந்திரத்திருக்கப்

பிருகுலாபத்திலாட்சியாயிருக்கப்பிரபலராஜயோகமதாம்
பெருகுமால்வெள்ளிசனியுமேகூடிற்பெறுமுகசவுந்தரமுளனும் ()
உள்ளதோர்கடலக்கினமாகவுயர்குசன்குருவிருவருமாய்
உற்றதோர்மேஷநண்டிடத்தேனு மூன்றைந்திடப்பாவராயொழித்துத்
தெள்ளிறையாகவுறைந்திடிற்றீர்க்கசீவியாந்துரகாதிபதியாம்
செய்யலக்கினமாறேழுடனெட்டுஞ்செப்புமித்தலங்கணான்கினிலும்
கள்ளமாய்ப்பாவரன்றிநல்லோர்கள்காதலிற்றிடைவிடாதிருக்கில்
கருதியநாபியோகமாமிதற்குக்கனபலன்மந்திரியாகி
வள்ளலாய்ச்சேனைத்தலைவராய்க்கலவிமாதர்கள்பலர்க்குநாயகனாய்
வாலிபமுதலாய்வெகுதனம்படைத்துவாழ்வனென்றுரைப்பர்மாதவ
மாதுகேண்மாலாயோகம்மம்புவிக்குமன்னியபத்தினிற்குருவும் [ோ
வந்துதானிருக்கிற்றனபதியாகிமருவுசேனைக்கதிபனுமாம்
ஓதியவிரண்டிலிருவருமைந்திலுபயருங்கூடியேயிருக்கில்
உரைப்பர்கத்திரியோகம்பலன்கருமமொன்றையுமாகவொட்டாது
தீதறவொன்றினான்குபத்தேழிற்சேரவொன்பதின்மருமிருக்கில்
செப்பிடுமரசகேந்திரயோகந்தெரிபலன்மகம்புரிந்திடுவன்
நீதியாய்த்தனங்கடேடிவாழ்ந்திருப்பனேமியிற்றமர்முதற்பலரும்
நேயமாய்த்துதிக்கத்தனிமனுஷனுமாய் நிருபர்கொண்டாடவேயிரு
இருமைசேர்பத்தினான்கினிற்கிரகமிருந்திடில்விக்கயோகமதாம் [ப்பன்
கிரயலன்றாதுநடந்துதான்பிரிந்தேயின்னலாற்கலகமிட்டிடுவன் *
ஒருமைசேர்சன்மந்தன்னிலேபாவரோரேழிலுத்தமரிருக்க
ஓதிடுமவையோகங்கள்பொய்யுரைப்பனுறுசிறைவெகுதினமிருப்பன்
பருமைசேருச்சகேந்திரந்தன்னிற்பாவர்கண்மேவியேயிருக்கில்
பாவியாங்குரூரமன்னவனாகிப்பார்தனக்கரசனாயிருப்பன்
அருமைசேரொன்றைந்தொன்பதிற்கிரகமணுகிற்சிங்கடாட்சியோகம்
மதன்பலன்றீர்க்கவாயுளுண்டாகி யம்புவிதன்னிலுற்றிடுவான் ()
உற்றமெய்லாபமதிற்கிரகங்களுறிலிலையோகமாமுழவன்
ஒருமைநல்லோரொன்றேழினிலிருக்கவுண்மைசேர்வச்சிரயோக
மற்றநற்பலன்றீர்க்காயுளுங்கீர்த்திமன்னியகிருபையுள்ளவனாம்
மன்னவன்சனிசெவ்வாய்கதிர்நால்வர்மருவிமூன்றுமிடத்திருக்கப்
பெற்றிடிலுச்சாங்கிசஞ்சுயாங்கிசங்கள்பெறின்மகராஜயோகந்தான்
பெருமையிந்நால்வர்சென்மமீதிருக்கப்பிறைதனதகத்துறிற்புவியில்
குற்றமில்லாதமகராஜன்மெய்யிற்குறைவறநிறைமதியிருக்க
கோளொருநால்வர்மதிதனைக்காணக்கொற்றவனாமெனக்கூறுய். ௩௰௩
கூறிமதிசேயுச்சமாய்ச்சென்மங்குலவுவின்மிதுனமேற்பாரில்
கொற்றவன்சென்மத்திந்தொடுசனியுங்குசனுமேகூட வில்லதனில்

ஏறிடக்கதிர்மேஷத்தாமன்னுமிசைந்தமூன்புராதனபூமி
இழந்துபோய்விடுவனிடபலக்கினமாயிதிற்பிறைசனிகுருவெய்யோன்
பேறுடனிருக்கில்ராஜயோகமதாம் பின்னுமேகன்னிலக்கினமாய்ப்
பிறைமகனுச்சமாகநாவிடத்திற்பிருகுசந்திரன்குருவிருக்க
வீறுடனைந்தாமிடத்தினிற்சனிசேய் மேவியேயிருவருமிருக்க
வெற்றிநற்குணங்களுள்ளமன்னவனுமேதினிநீதியாய்ப்புரப்பன்.

புரக்குமேகன்னிலக்கினமதனிற்புந்தியும்பத்தினிற்புகரும்
பொன்பிறைமூவர்கூடியேயிருக்கப்பூபதியாகியுமிருப்பன்
பரக்குமெச்சிங்கமாயதிற்செவ்வாய்பரிந்துறவேழிடந்தன்னில்
பனிமதியர்சனிருக்கவேதனுசிற் பானுவின்புத்திரன்மேவ
இரக்கமாய்மைந்தர்தானுமில்லாமலிப்புவிபுரக்குமன்னவனும்
எண்ணியபத்திற்சசிபதியொன்றிலெழிற்சனிலக்கினத்தரசன்
வருக்கமாயிரண்டிற்புதன்குஜனிருக்கவாகனந்திரவியமருவ
மாநிலம்புரக்குநரேந்திரனுவன்வாளயில்போல்விழியாளே. (௫௧௬)

வேறு.

நாடியகேந்திரத்தானத்ததிபனு,தேடியமூலத்திரிகோணத்ததிபனும்
கூடியகேந்திரமீக்கொளநின்றிடில், ஊடியதுரகத்தரசனென்றோதே. ()

உரைத்திடுலாபமொன்பதுபத்தும்
விரித்திடுமந்தவீட்டினிற்கதிபனைப்
பொருத்தியதுகைப்படிபொருந்துமவ்வீட்டோன்
வருத்தமில்கேந்திரம்வந்துறின்மன்னும். (௫௧௭)

மன்னியலக்கினம்வருதேள்சிங்கம், பன்னியலாபமாமைந்தொன்பதில்
அன்னியமூவரிலாரேனுமிந்து,மின்னியகேந்திரமேவிடிலரசே (௫௧௮)

மேவுமேழொன்பதாம்வீட்டினல்லதிபன்,ஏவுமேழொன்பான்வீட்டினி
லிருக்கத்,தாவியசுங்கன்றானுறுநன்மனை,ஆவலாய்நாலேழாண்டினிலரசே.

ஆண்டினிற்கேந்திரமானதினல்லோன்
ஊண்டிடுபாவர்களொன்றுவிட்டொன்றுறில்
தாண்டியசக்கரயோகத்தனபதி
நீண்டியலபராவயதினிச்சயமே (௫௨0)

வேறு.

நிச்சயக்கிரகநான்மனையுற்றுநின்றிடிற்கேதாரயோகம்
இச்சையன்பைங்கூழ்வழிநடைக்கஞ்சானெழிலுபகாரமேசெய்வன்
மெச்சுமோரைந்துவீட்டினிற்கோள்கண்மேவிடிற்பாசகயோகம்
விச்சைசேர்சவுக்கியன்றனபதியழகன்வெகுஜனமுள்ளவனாமே.

வேறு.

ஆமேகிரகமேழுமனையமர்ந்தால்வீணையோகமினித்
தாமேநிபுணனெழிலுடையன்சப்தகீதப்பிரியமுளன்
தோமின்றுலேழொன்றிலுறச்சொல்லுமதிகயோகபலன்
மாமேவரசன்பிரதாபிவங்தேயாண்டுநூறிருப்பன். (௩௨௨)

இருந்தபத்தினன்கிற்கோளிருக்கப்பக்ஷியோகபலன்
பொருந்துந்தேசசஞ்சாரம்புகலுஞ்ஞானிகலகமுளன்
வருந்துசசியினிருபுறமும்வரவேநல்லோர்துரியோகம்
திருந்துயோகனயிச்சுவரியன்றேசஜனத்துக்கதிபதியே. (௩௨௩)

என்றுலொன்றேழ்சுபரிருக்கவினினலபத்திற்பாவர்களும்
அன்றேயுறில்வச்சிரயோகமாதியந்தத்தயிச்சுவரியம்
நின்றேசூரதத்துவமுநிகழும்வயதிற்றனபதியாம்
நன்றேமாறிக்கோள்வரினுநாடுமினியவவயோகம். (௩௨௪)

யோகஞ்சுபமாம்லக்கினத்துக்கொன்றேநல்லோர்முன்னிருக்கப்
போகன்றனவான்வாழரசன்பொருந்தும்பின்னேகிரகமுறில்
ஆகுமஸ்வயோகமதாமணிசன்மத்தினிருபுறமும்
தாகமுடனேசுபரிருக்கிற்றுனுமரசனெனவருமே. (௩௨௫)

வருமேசென்மலக்கினதிவந்துமித்திரன்றன்வீடும்
பொருமேயுச்சமனையிரண்டிற்புகருங்கூடிற்றனவானும்
தருவேசென்மஞ்சிங்கமதுதன்னிற்பரிதிதானிருக்க
அரிவைமனையிற்புதனிருந்தானுனீசவரசனுமாம். (௩௨௬)

அரசேமூன்றிலீனாந்திலாறிலிருக்கச்சென்மாதி
சிரசாய்நல்லோர்தனைப்பார்க்கச்செகத்துக்கதிபனகுமிவன்
சரமாந்துலாத்திற்புகர்மேஷந்தன்னிற்செவ்வாய்கடககுரு
பொரவேநிற்கத்தனபதியாய்ப்பொருந்துமரசன்கண்டீரே. (௩௨௭)

கண்டரிஷபஞ்சென்மமதாய்க்காணுமதியந்தானிருக்கக்
கொண்டுபரிதிசிங்கத்திற்கூறுந்தேளிற்குருவிருக்க
மண்டுகும்பச்சனிவரினும்வந்தால்ராஜயோகபலன்
பண்டேயுள்ளபூபதியாய்ப்பாருக்கரசாயிருந்திடுவன். (௩௨௮)

திடமாஞ்சென்மமகரமதாய்ச்செப்புங்காரிதானிருக்க
அடைவேசெவ்வாய்மதிகூடியானகடகந்தானுறவே
தொடர்சேர்பரிதிசிங்கத்திற்சொல்லுமிதுனம்புந்தியுற
வடிவார்கோலிற்புகரிருக்கவாழுந்தூர்க்கத்தரசனிவன். (௩௨௯)

இவனேசன்மநான்கொன்பதெல்லாக்கிரகமிருந்திடவே
அவனேசாங்கியாயோகனதற்குப்பலன்கள்சவுரியவான்

தவமெய்ஞ்ஞானிபாக்கியவான்றன்னிற்குணவானுமென்றே
நவமாயுரைத்தார்சோதிடத்தோர்நறைமென்கமலமுகத்திருவே. ()

திருவேயிரண்டாம்வீடுமுதற்செறியுமனைக்கொன்றென்றெழிந்து
வரவேகிரகந்தானிருக்கவாழுஞ்சமுத்திரயோகபலன்
பொரவேசேனைக்கதிபதியாய்ப்பொருந்தும்பாரியநேகருளன்
தருபொன்கீர்த்திக்கதிகாரிதனவானரசன்வெகுபிள்ளை. (௩௩௧)

பிள்ளையனுஷமசுபதியின்பின்பாமவிட்டந்தனிற்சேயும்
துள்ளுஞ்சென்மமொருபத்திற்சூழ்ந்தேபரிதியுறவதனைத்
தெள்ளுமதியங்குருநோக்கிற்செறிமூன்றைந்திற்கிரகமிலா
தள்ளியிருக்கிற்குபேரனைப்போற்றனத்துக்கதிபனெனச்சொல்லாய். ()

சொல்லுஞ்சென்மமைந்ததனிற்றொடர்ந்தேபரிதிதானிருக்க
வெல்லுநான்கேழ்பத்ததனில்விரும்பிச்செவ்வாய்மேவிடினும்
ஒல்லும்லாபம்பன்னிரண்டிலுடனேபலனுய்ப்புகர்மேவ
நல்லவிந்திரயோகமெனநவில்வர்தமிழுக்கினியோர்கள். (௩௩௩)

இனியமகரஞ்சென்மமதாயிருக்கச்செவ்வாயதனிலுச்சம்
தனிலேநவத்தின்பன்னிரண்டிற்றனித்தேபுகருந்தானிருக்க
இனமாமிந்துகதிர்கூடியேழினிற்கப்பிரபலமாய்த்
தனமேதிரளாயார்ச்சித்துச் * சம்பானடத்துமானபரன். (௩௩௪)

ஆனபரிதிசோமனிவரமர்ந்துசுபரங்கிசமேயித்
தானேபலவானுகியிவர்தக்கவியத்திலடையாமல்
ஆனவுச்சவாங்கிசையிலமர்ந்தேசனியையமிகநோக்கில்
ஈனமறவேதிக்குபலவியைந்தின்புறுவன்சன்னியாசி. (௩௩௫)

சீலலக்கினுதிபதிசெறியுஞ்சுக்கிரன்றனுகி
நாலிற்காரிநின்றமனைநாடிச்சுக்கிரன்றனேக்க
வாலசன்னியாசியெனமகிழ்ந்தேவிதேசசஞ்சாரம்
கோலுங்கொண்டேதிரிவனெனக்கூறுங்கணிதவல்லோரே. (௩௩௬)

வல்லோர்சென்மச்செம்பாம்புவரவேபதற்கேழ்சோமனுற
வெல்லுஞ்சோமற்கெட்டதனில்வெய்யோன்சுமத்திரயோகபலன்
சொல்லுங்கிராமபுரந்தரனுந்துரையாம்பந்துரக்ஷகனும்
நல்லவருஷமிருபதின்மேனடக்கும்யோகமிருமூன்றே (௩௩௭)

நடத்தும்பத்துக்கதிபதியுநான்கிலிருக்கநான்காதி
எடுத்தபத்திலுடனிற்கலக்கினுதியுச்சமுறில்
அடுத்தசரபயோகபலனநேகஞ்சேனைக்கதிபதியாம்
கொடுத்தநாலாறதன்மீதிற்கூறும்யோகமேழாண்டே (௩௩௮)

* சம்பான் — கப்பல்.

ஆண்டுமூவேழதன்மீதிலானசக்ரயோகபலன்
நீண்டசீவனுள்ளளவுநிறைந்தேபத்திற்கருநாகம்
பூண்டபத்தாமிடத்ததிபன் பொருந்துஞ்சன்மந்தனிலிருக்க
வேண்டுஞ்சென்மபாக்கியத்தில் விளங்கிற்றேசாபதியாவன் (௩௩௯)

ஆவன்பத்தாதிபனிருந்தவங்கிசாதிசென்மத்தோன்
மேவும்பத்தையிருவோரும் விரும்பநாகயோகபலன்
கோவாம்வித்தைதனவானுங்கூறின்வயதுபதினறின்
பூவுக்கரசாய்மூவாண்டுபொருந்திநடக்குந்தானிதுவே. (௩௪௦)

இதுவேகுருவுமொன்பதினிலிருக்கவொன்பானதிபதி
துதிசேரேழிலிருந்திடவே சோமன்சுபரோடெங்குறினும்
கதிசேர்நாகயோகபலன் கண்டவயதுபதினறின்
புதிதாய்மூன்றுண்டளவுமிகப்பொன்னேநூறாதேடுவனே. (௩௪௧)

தேடும்லாபன்றனபாவத்திறல்சேரதிபனுச்சனெனின்
நாடுமைந்தாம்வீட்டாதிநண்ணுந்தனத்தைப்பார்த்திடவே
கூடும்பேரியோகபலன் குதிரையானைநரர்தேரும்
ஊடுமாறுறதன்மேலேயோங்கும்வருஷகாலளவே. (௩௪௨)

அளவேயொன்பான்றனிற்புகருமமர்ந்தேயொன்பானதிபதி
வளமாமதிக்கேயொன்பதினில்வந்தாற்பதுமயோகபலன்
தளமோடரசர்புடைசூழத்தானும் பாராண்டகத்திலிருந்
துளவாந்தானமைம்பதின்மேலோங்கும்வருஷமைந்தளவே (௩௪௩)

ஓங்கும்லக்கினதிபதியுற்றவீட்டிற்கதிபதிதான்
பாங்காய்க்கேந்திரந்திரிகோணம்பற்றிமூலத்திரிகோணம்
தாங்குமுச்சனனலுந்தக்கபுரத்துக்கதிகாரம்
வீங்கும்பர்வ்வதமேழைந்தின்மேலொன்பானுமாண்டுளதே. (௩௪௪)

உளதேலக்கினதிபதியுற்றவீட்டுக்குடையோனும்
அளவாமதிவீட்டதிபனுச்சனகிச்சோமனலேழிற்
களவேகேந்திரமேறிவரக்காகளயோகந்திரவியவான்
வளவுனருகாலேழ்மேல்வயதுள்ளளவும்ரசவாதி. (௩௪௫)

வாதிரண்டாமைந்தாதிவருமேபாக்கியாதிபனும்
ஓதுஞ்சன்மந்தனிலுற்றேயோங்குமரசன்பார்வையுறில்
ஈதுதாங்கிரியோகபலனிவனேவெகுதேசாதிபதி
நீதிநடத்தும்பன்னிருமேனேரும்வயதோராறளவே (௩௪௬)

வாபதாறெட்டுமேன்மூன்றுவருஷமிருதங்கயோகபலன்
சுயலாபாதியந்துச்சன்சுங்கன்கூடியிருந்தமனே
நயவீட்டுடையோன்பத்தேழிறைன்கிலொன்பானமர்ந்திடவே
செயமாயரசர்க்கதிபதியாஞ்செப்புஞானிதனவானே. (௩௪௭)

செப்பும்லக்கினவர்க்கேற்றசெறிந்தேயிருக்கச்சென்மாதி
ஒப்புஞ்சுபர்களுடன்கூடியுறுஞ்சன்மாதிசன்மத்தைத்
தப்பாமுழுநோக்காகவிதுசக்கிரயோகஞ்சவுக்கியவான்
அப்பாவம்பானேந்தின்மேலானவருஷநான்கினிதே (௩௪௮)
இனிதாங்கன்னிசென்மமதாயிரண்டோடொன்பானதிபதி
தனியேசுங்கன்னிருந்தங்கிசத்தோனுமரசனுடன்கூடி
மனுவாந்தனபாவத்திருக்கவயதுபதினறதன்மேலே
நனியார்சீவனுள்ளளவுநடக்கும்சாம்பிராச்சியயோகம். (௩௪௯)
யோகமாதியந்தமெனுமுயராதிருந்தங்கிசாதிபதி
பாகஞ்சென்மந்திரிகோணம்பத்திலிருக்கச்சேயுச்சம்
வாகுபெறவேபத்தாதிவந்தேழிருக்கத்துர்க்காதி
போகமுடனேவனங்களுக்குந்தனியேயரசாய்ப்பொருந்திடுவன். ()
பொருந்திவெய்யோன்பாக்கியத்திற்புகத்தன்னுட்னைகாதிபதி
திருந்தியிருக்கப்பத்தாதிசேர்ந்தோரிரண்டிலேழிலுற
வருந்தாத்துர்க்கத்ததிபதியாய்வையமுழுதுமரசாளத்
தெரிந்தேயோகபலனென்றுசெப்புங்கணிதமாதவனே (௩௫௧)
மாதேநான்காமாதிபதிவந்தேயிரண்டாமாதியுடன்
மீதேகூடிப்பாக்கியத்தில் விரைந்தேயிருக்கபத்தாதி
போதுமிரண்டிற்பலவானய்ப்பொருந்தியிருக்கலாபாதி
ஓதும்லக்கினதிபதியுச்சங்கோடி.லயிஸ்வரியன் (௩௫௨)
சுரவேசென்மந்திரமாகச்சுங்கனிருக்கச்சென்மாதி
வரவேதிரிகோணத்துற்முன்மன்னனகுஞ்சிலபூமிக்
குரவோன்சேனைக்கதிபதியாமொருமைஞானிதுரகாதி
இரப்போர்தமக்கும்வேதியர்க்குமீவான்சீவன்பரியந்தம். (௩௫௩)
அந்தநான்காமிடந்தனக்குமதிபனுச்சனவ்வீட்டோன்
வந்துமைந்தாமதிபனுடன்மகிழ்வாய்க்கூடப்பாக்கியாதி
மூந்துஞ்சாமரயோகமெனமொழியும்பலன்கள்சேனதி
சொந்தவருஷமைம்பதின்மேற்றுலங்குமரசனவானே. (௩௫௪)
ஆவாரைந்தாமதிபதியுமன்யாம்லாபத்தாதிபனும்
போவாரொன்பான்றனிலிருக்கப்பொருந்தும்பத்தாமதிபனேந்தில்
கோவேயாகுஞ்சிவயோகங்குதிரையானைநரர்தேரும்
மேவும்வெகுதேசாதிபதிவிளங்குபரமாயுள்ளவனும். (௩௫௫)
உள்ளபத்தாமதிபதியுமொன்பானங்கிசந்தானேறி
மெள்ளவிரண்டாமிடத்திலுறவிரும்பியொன்பான்றனஞ்சேரில்
கள்ளவிஷ்ணுயோகபலன்கதித்தவரசாடிதெழுவே
கொள்ளும்லக்ஷம்பொன்றேடிக்குலாவியிருப்பனிரோழ்மேல். (௩௫௬)

மேலாம்பாக்கியகேந்திரத்தின்மேவிக்குருவும்லாபத்திற்
கேலுங்கேந்திரச்சுக்கிரனுங்கிட்டியிருவர்மனைமாறிச்
சாலவிருக்கவபன்யோகந்தனவான்கீர்த்திப்பிரதாபன்
மாலாய்வளரொன்பதின்மேலும்வயதுள்ளளவுமன்னவனும். (௩௱௫௭)

மன்னுபத்தாதிபனிருந்தவங்கிசாதிபதிபத்தில்
மின்னுமுச்சமாயிருக்கவிலக்கினாதியுடன்கூடச்
சொன்னகவுரியோகபலன்றனையாங்கீர்த்தியுதாரகுணன்
பொன்னுமணியுமாறுமிற்பொருந்துமாண்டுபன்னிரண்டே (௩௱௫௮)

ஏயபாக்கியாதிபதியிருந்தவங்கிசையோனென்ப
தூயவுச்சனைந்தாதிதொடர்ந்தேகூடிபுறநோக்கக்
காயலக்ஷ்மியோகபலன்கனத்ததுணையாய்த்தனவானாய்ப்
பாயும்பரியும்நாற்பதின்மேற்படைப்பன்பத்தாண்டிவன்பாரில். (௩௱௫௯)

பாரிலாபாதிபனிருந்தவங்கிசாதிலாபத்தில்
ஊருங்கோளுமுச்சமதாய்ப்பாக்கியாதியுடன்கூடப்
பேரும்பாரதியோகபலன்பெரியகண்ணன்சிற்றாணன்
நாரிவெகுவாமறுநான்மேனும்வயதெட்டினில்யோகம். (௩௱௬0)

யோகமூன்றிலாபாதியொருமித்தேழுறவேழாதி
வாகுபன்னிரண்டினிற்கவரசன்பனிரண்டாதியிவர்
ஏகபாக்கியந்தன்னிலுறவிதுவேகாலாங்கியோகபலன்
போகியரசன்மதிமந்திரிபொருந்தும்பதினெட்டுளதே. (௩௱௬௧)

உள்ளசன்மாதிலாபத்திலுறவேயந்தலாபாதி
தள்ளுஞ்சன்மந்தனிலிருக்கத்தனத்தானத்தான்பத்திலுறக்
கொள்ளுபத்தோரிரண்டுறவேகொண்டசன்மந்திரமாக
வள்ளவிந்திரயோகமெனவழுத்துபயன்களினிதுரைப்பாம் (௩௱௬௨)

உரைப்பாமதுரநல்வசனமுயர்ந்ததுர்க்கத்திபதியாய்ப்
பரப்புநிரைந்தவெகுபூமிபதியிற்கரசாய்ப்பேரிகையும்
இரைக்குமல்லரிவாத்தியமுமினியதனவான்ஸ்திரிலோலன்
நரைக்குமுன்னேயாறினல்கும்வருஷமெட்டாமே. (௩௱௬௩)

ஆமேதேளுமிலக்கினமாயரசன்சுங்கனிருவருறத்
தாமேலாபப்புதனுச்சந்திரிக்குமதனயோகபலன்
காமர்வனிதையிச்சிக்குங்கருணையுள்ளசவுந்தரியன்
தோமின்மனோகரமந்திரியாத்துலங்குமிருபான்மேலெட்டே. (௩௱௬௪)

எட்டுவருஷம்பதினைந்தினிதன்மேல்யோகங்கலாநிதியாம்
மட்டேசன்மஞ்சராங்கிசத்தில்வரவேயொன்பான்சென்மமுறத்
தொட்டநான்கோனரசனுடன்றுலங்கவைந்திற்பத்தாதி
கிட்டியிருக்கலாபத்திலோங்குமரசன்வெகுதேசம். (௩௱௬௫)

தேசக்குருவுக்கொருமூன்றிற்செறிந்தேசுங்கன்றனிருக்க
வாசஞ்சுங்கற்கொன்பதினின்மதிதானுறவேபத்தாதி
நேசநான்கிலுறத்தனவானிருபனுகிமூவொன்பான்
போசனெனமேன்மூவாண்டுபொருந்துநகரநாட்டரசே. (௩௬௬)
அரசேலாபமிரண்டொன்பானுதியவரவர்தம்மனையிற்
சிரசாயிருக்கமால்யோகஞ்சேனைக்கதிபன்பூபாலன்
பொரவேகீர்த்திக்கதிபதியும்பூமிக்கரசனமைச்சனுமாய்த்
தரைசேர்முப்பத்தாறின்மேலெட்டுவருஷந்தனஞ்சயனே. (௩௬௭)
செயமேமேஷஞ்சென்மமதாய்ச்செங்கதிருறவேசனிபத்தில்
தயவாயிருக்கவொன்பதனிற்குருவுமதியுந்தானுறவே
நயமேவிசுவாவசுயோகநடக்குந்தனவான்றேசாதி
கயமூநடத்தும்பதினன்மேற்கண்டவருஷம்பதினைஞ்சே. (௩௬௮)
அஞ்சேபாக்கியாதிபதியிருந்தவங்கிசாதிபதி
துஞ்சாதுச்சமவனுடனேசொல்லும்லக்கினதியுற
விஞ்சாநாளயோகபலனெல்லார்க்கரசன்ஸ்திரிலோலன்
வஞ்சமறவேகுருபத்தில்வழுத்துமாறேழ்பதினெண்ணே. (௩௬௯)
எண்ணும்லக்கினங்கிசையில்பத்தாமிடத்ததிபனிருக்க
ஒண்ணும்பத்தாமங்கிசையிலுறச்சன்மாதியரசனுடன்
நண்ணுமிவரையவர்பார்க்கநாடுங்கார்முகயோகபலன்
பண்ணுஞ்ஞானிமூவொன்பான்பாரிலெட்டுவித்தையுளன். (௩௭௦)
வித்தைலர்பத்ததிபனைந்தின்மேவவைந்தாமாதிபதி
பத்திலாபத்திருந்திட்டவேபுகருநான்கோன்மதியுடனே
பத்தியிருக்கமகபதிபோற்பாரைமுழுதுமரசாள்வன்
உத்தபோகியேழாறில்யோகநடக்கும்பதினறே. (௩௭௧)
பதியாமரசன்மதிபுகரும்பரிந்துமூவர்தனத்துறவே
விதியாம்பாக்கியாதிபதிவிரும்புநோக்கமுற்றிடவே
கதிர்சேர்யோகங்கேதாரிகாணும்பதாதியானைபரி
துதிசேரைம்பானிரண்டாண்டுதொடங்கியேழும்பிரபலமே. (௩௭௨)
பலமாம்பத்திற்கருநாகம்பத்தாமாதிசனியிருவர்
வலமாய்மூன்றிலுற்றிடவேபகருஞ்சண்டமாருதமாம்
தலமேதோறுந்தன்மங்கடானஞ்செய்யுஞ்சாத்திரவான்
உலவியுண்பான்பராக்கிரமன்யோகம்பதினைந்ததன்மேலே. (௩௭௩)
மேலேபாக்கியாதிபதிமேவுமங்கிசநாதன்றன்
ஏலவெந்தாங்கிசையேறியிருந்தவங்கிசத்தோனேனும்
தூலமந்தவங்கிசையிற்றுலங்குமுச்சனானாலும்
சாலக்கினதிகேந்திரத்திற்சுங்கனுடனேதானுறவே. (௩௭௪)

வேறு

தானுறும்பலன்கள்பாரிசாதமாந்தனவான்யோகம்
மானனையார்க்குநேயன்மன்னவர்கப்பங்கட்டும்
தேனுவன்கொடையான்காத்திரிசேயுளனல்லூண்கீர்த்தி
ஆனதோரிருபதின்மேலாயுளின்பரியந்தந்தான். (௩எரு)

வேறு.

அந்தலாபனூற்றமனைக்கொன்பானதிபன்சோமனுடன்
வந்தேலாபந்தனிலிருக்கவருஞ்சன்மாதிநோக்கமுற
விந்தகேதாரயோகபலன்மேவும்பேரிமல்லாரி
சொந்தக்கரிமாவிருபதுமூன்றுடன்மேல்வருடமிருபதுமே. (௩எசு)

துலங்கும்பாக்கியாதிபதிசூழ்ந்தங்கிசாதிபதியுச்சம்
இலங்கியிரண்டிலுற்றிடவேயிரண்டாமாதிபாக்கியத்தில்
பலங்கள்கொடுக்குஞ்சுபயோகம்படிப்பனீதியரசாள்வன்
குலங்கள்போற்றுமையொன்பான்கூறுமிருபத்தோராண்டே. (௩எஎ)

ஒன்றேயேழாமாதிபதியொன்பானிருக்கவொன்பஃதோன்
நன்றேயேழிற்றுரகையின்றுசிக்கதிபனிவர்களுடன்
ஒன்றியிருக்கச்சரிதாமயோகமரசாஞ்சேனையுளன்
என்றேநீதிமுப்பதின்மேலியங்கும்வயதோவையாறே. (௩எஅ)

ஐயாவிரண்டிற்குருவிருக்கவமர்ந்தேநான்கிற்சுங்கனுறப்
பொய்யாதேழிற்சேய்மதியும்பொருசன்மாதிசுபருடனே
நையாதிருக்கவிதன்பலன்கணுடுங்காம்யயோகமதாம்
வையம்புகுந்தீர்பத்திரண்டுவருஷமாறுஞ்சவுக்கியமே. (௩எகூ)

மேயவைந்தாமதிபனேன்பான்வீட்டிலிருக்கலாபத்தோன்
தூயமதியுமிரண்டிலுறச்சோடசதானம்பண்ணுவனே
ஆயவரசர்சன்மானமதிகம்பெறுவனளயோகம்
காயபலன்களையொன்பானதன்மேன்மூன்றுண்டாங்காணே. (௩அ0)

காணும்லாபாதித்துச்சன்கண்டசுங்கனுடன்கூடி
வேணுஞ்சன்மாதிகேந்திரத்தின்மேவியிவர்களிருந்திடவே
நாணும்பிரபையோகபலனடத்துந்தியாகிவெகுபோகி
தாணுவரசன்சேனாதிதனிமூவைந்தினெட்டாண்டே. (௩அக)

ஆண்டமதியுங்குருவிருவரமர்ந்தேயொன்றிலுற்றிடவே
பூண்டவிரண்டோன்லாபத்திற்பொருந்தியிருக்கச்சன்மாதி
நீண்டசுபர்களுடன்கூடிநிற்கச்சுபாயோகபலன்
வேண்டும்வருஷநாற்பான்மேல்விளம்புமூன்றுந்தேசாதி (௩அஉ)
சாதிலக்கினதிபதியிருந்தங்கிசையோனுடன்சசியும்
ஓதுமிவனைப்பத்திடத்தோனேங்கும்பார்வைநோக்குறவே

வாதயூபயோகபலன்மந்திரிமண்டலாதிபதி
நீதிநடத்தும்பதினென்றின்னேரும்வருஷமூன்றினுமே. (௩அ௩)
இனிதாம்லக்கினத்ததிபனிருந்தசங்கிசாதிதரிகோணம்
மனுவாயுற்றேகுருசுங்கன்வரவேயிவர்கடாமிருக்க
நனியார்பத்திற்சனியுச்சமாகிற்றாமயோகபலன்
தனியேபத்தோன்பான்மேலேதரணியாள்வனெண்டொன்பான். ௩அ௪
ஆளுமைந்தாமதிபதிதானைந்தேழொன்பானமர்ந்திடவே
தாளுமரசன்சன்மாதிதானுங்கூடியங்குறினும்
நீளுஞ்சோமனென்பதினினிற்கக்கதிரோனுச்சமெனக்
கேளுங்காந்தர்வயோகமெனக்கிடைக்கும்பலன்களுரைத்திடுமே. ()
உரைக்கும்பலவான்பிரசித்தனேங்கும்புத்தியுள்ளவனும்
தரைக்குமரசனுபரணந்தானும்வெகுவாய்ப்பூண்டிடுவன்
துரைக்கும்புத்திசொல்லிடுவன்சுகந்தகீதப்பிரியனென
விரைக்குமறுபத்தாறதன்மேல்விளங்கும்வருடமெட்டுளதே. (௩அ௬)
உளதேபத்தாமதிபதிதானுற்றவங்கிசத்தோன்பத்தில்
அளவேசுங்கனுடன்கூடவானராசிக்கதிபதிதான்
களவாயிருந்தங்கிசநாதன்காணுமுச்சம்பிரத்திமமாம்
இளகாவரசன்பூபாலனீரொட்டதன்மேலேழென்ப. (௩அஎ)
பதிசேர்பாக்கியாதிபதியிருந்தங்கிசாதிபதிநான்கில்
துதிசேர்நிற்கநான்காதிதுலங்குகேந்திரமுச்சத்தில்
விதியாநிற்கின்மூதியோகம்விளங்குமரசர்சன்மானன்
கதிசேர்சுகவான்பாக்கியவான்காணுமிருபான்கொற்றவன்மேல். ()
தவமாஞ்சன்மத்துச்சனுறத்தாணிசுதனுமுழுநோக்க
நவமாமிடத்தோன்காரியுடனண்ணப்புலவனிதன்பெயரோ
கவனசண்டயோகபலன்கருணையரசர்மதிமந்திரி
இவனன்வயதுபன்னிரண்டாமிதன்மேன்மூன்றுந்தனபதியே. (௩அ௯)
பதிசேரொன்பானுதிபதிபண்பாய்மூன்றிலிருந்திடவே
துதிசேரரசன்முழுநோக்கச்சொல்லுங்கானயோகபலன்
அதிசேருபன்முகத்தழகனுடைபணிதியுள்ளவனும்
கதிசேர்வயதுபதினாறிற்காணுமூன்றின்முகவசியம். (௩௯௦)
வசியமைந்திற்குருவிருக்கவைந்தாமாதிசுபரிருவர்
நசையாய்க்கூடித்தானிருக்கநாடும்பத்திற்சனியுறவே
பொசியுமகிழ்ச்சியோகபலன்புட்டிவனத்துக்கதிபதியாம்
முசியும்வருஷமுப்பதின்மேன்மூன்றுமெட்டுமேயரசாம். (௩௯௧)

வேறு.

பனிரெண்டுராசியென்னும்பரிலக்கினமாகக்கொண்டு
இனியதாய்தந்தைபுத்திரரிசைமனையுடன்வந்தோர்கள்

தனியுமாயுருத்தாயங்கடனலாபவாகனங்கள்
முனியும்பாக்கியகர்ம்மங்கண்முதற்பலன்மொழிந்திடுமே. (௩௯௨)
பாக்கியத்திறையுங்கர்ம்மத்தாதியும்லக்னத்தோனும்
தாக்கியேகூடினாலுந்தயவுடனென்றிற்கொன்று
நோக்கியகண்ணுற்றாலுநுண்ணியவறிவுகேள்வி
வாக்குகள்செலுத்துங்கோவாய்மண்ணினில்வாழ்வன்கண்டீர். (௩௯௩)
ஒன்பதற்கொன்பதேனுமொருபத்திற்குப்பத்தேனும்
தன்பதியைந்துமேழுந்தானந்தவீட்டோன்றன்னோ
டன்புடன்லக்கினாதியனுங்கூடவலதுநோக்கத்
துன்பமற்றன்றிச்செல்வஞ்சூழ்மன்னனாவன்சொல்லே. (௩௯௪)
ஆறுடனேழாமாதியவருடன்லக்கினாதி
பேறுடன்கூடினாலும்பெருமையாய்க்கண்ணுற்றாலும்
வீறுடன்மிக்கசெல்வமேன்மையாம்பாக்கியங்கள்
சேறுசெய்திருந்துவாழ்வன்செகத்துக்குமன்னனாவன். (௩௯௫)
கேந்திரத்தானத்தாதிதிருகோணத்தோனுங்கூடிச்
சேர்ந்திடவலதொன்றுக்கொன்றிசழவேநோக்கினாலும்
பேர்ந்தவர்திசைகடன்னிற்பூணுமந்திரியோகங்கள்
சார்ந்திடுஞ்சித்தமாகச்சகலபாக்கியமென்றோதே. (௩௯௬)
வாகனாதியுங்கோணத்தினாதியுங்கூடமற்றும்
தாகமாயொன்றுக்கொன்றுசார்ந்துடன்பார்ப்பராயின்
ஏகமாய்ப்பதுமத்துற்றவிலக்குமியோகமென்பர்
போகவான்சகலபாக்கியம்பூணும்பூபாலன்கண்டீர். (௩௯௭)
தனபதிபாக்கியத்தோன்லாபத்தோன்சந்திரகேந்திரம்
தனின்மிகவிவர்களாரேசார்ந்திடப்பன்னொன்றைந்தும்
வினவியகுருவினாட்சிவீடெனிற்செல்வமுள்ளன்
புனையிழையாளேலட்சுமியோகமாய்ப்புகலுவாயே. (௩௯௮)
ரண்டினிற்கதிபன்பாக்கியந்தன்னிலும்லாபந்தன்னில்
தண்டிடாப்பாக்கியாதிதானுமில்லாபத்தாதி
ஒண்டொடியுடனின்றாலும்மயராஜயோகமூன்று
கொண்டநற்கிரகஞ்சொந்தக்கிரகமுற்றிருக்கின்மன்னாம். (௩௯௯)

## தரித்திரயோகம்.

வேறு.

கண்டசன்மலக்கினங்கள்காரிமனையாயதிற்சோமன்
மண்டியிருக்கவவன்றனக்குவளர்பன்னொன்றிலராசனுறக்
கொண்டதாரித்திரங்கடகங்குறிலக்கினமாயதிற்காரி
மிண்டியிருக்கப்பன்னொன்றில்வேந்தனிருக்கத்தரித்திரமே. (௪௦௦)

மேவுங்குடும்பந்தனிற்பாவர்வெகுவாய்ப்பலன்களன்றியுறப்
பாவக்கிரகந்தான்பார்க்கப்பரவுஞ்சன்மங்குடும்பத்தின்
கோவும்பலன்களற்றிருக்கக்குறைவேபடைத்துத்தானுண்ணத்
துவுமன்னங்கிடையாமற்சோம்பித்திரிப்பன்சுகமில்லான். (௪௦௧)

தரிக்குஞ்சன்மலக்கினத்துஞ்சசிதானிருந்தலக்கினத்தும்
பரிக்குமுபயபாரிசத்தும்பாவரிருக்கத்தரித்திரமாம்
விரிக்குமுன்னோர்பாரிசத்தின்மேஷினுடனேதரித்திரமாம்
தெரிக்கும்பின்னேயுறில்பரவயதிற்றரித்திரஞ்சேரும் (௪௦௨)

சேருஞ்சன்மகேந்திரத்திற்றிரிகோணத்திற்குடும்பத்தில்
மேருவியத்திற்பாவர்நிற்கின்மிகவுந்தாரித்திரயோகம்
வாருஞ்சன்மலக்கினத்தின்மதியுஞ்சனியுமருவுகினும்,
நேருஞ்சன்மந்தனிற்பாவர்நிற்கிற்றரித்திரநிறையும். (௪௦௩)

நிறையுமிரண்டாமிடத்திற்கோணீங்கமூன்றதாமிடத்தில்
உறையுங்கிரகமுண்டாயினேதுங்கேமுத்திரயோகம் [ன்
குறையும்பலனைவையங்கைக்கொண்டேயுண்ணுங் குறைவுடையோ
நறைசேர்குழலாயிரண்டிற்கோணணிவில்லேநல்குரவே (௪௦௪)

குரவார்மதிக்குமுன்பின்னுங்குணமாநல்லோர்குறுகாரேல்
வரவான்மதியின்கேந்திரத்தின்மருவினுமிருபுறமும்
உரவோர்தாமில்லாதிருந்தாலுண்டாங்கேமுத்திரயோகம்
திரவேற்கண்ணாய்வெகுபாவஞ்செய்தார்க்கிந்தச்செயலாமே. (௪௦௫)

செயலாறுடலேச்சனிநோக்கத்திகழ்மேஷத்திற்சேய்மதியும்
இயலாயிருக்கப்பிறந்தவனுமிரந்தேயுண்பனெந்நாளும்
பயிலார்சன்மமெட்டிடத்தைப்பங்குபாதன்பார்த்திடினும்
கயலார்விழியாய்சீர்கேடன்காணுமெனவேகருதிடுமே. (௪௦௬)

மேலாங்கிரகமெட்டுமொருவீட்டிலொன்றியிருந்திடவே
சாலுங்கோள்கள்யோகமிது சாற்றுஞானிதரித்திரனும்
மாலாயிரண்டுவீட்டிலுறவருமேதானைகயோகங்கள்
நீலாய்மந்தனிட்டேரனில்லாதவனேலச்சையிலான். (௪௦௭)

ஆறன்மூன்றிராசிதனிலனுகிக்கிரகமிருந்திடவே
தானேசூலயோகமதாஞ்சரீரந்தன்னிற்காயவடு
மானேகுலத்திற்பாதகந்தான்வருமேயிவன்றன்கரமதனால்
ஊனம்படுத்துந்தரித்திரவானுதவான்றமருக்கின்வசனம். (௪௦௮)

வசமேயெட்டொன்பதுபத்தின்மருவியிருக்கிற்றிரியோகம்
நிசமாயீனத்தொழில்புரிவன்சோம்பனீசநடையுடையன்
தசமேலாபமொன்றுவியந்தன்னிற்கிரகந்தாமுமவே
வசையாயீனத்தொழில்புரிந்துமன்னுசெலவுகொஞ்சமதாம். (௪௦௯)

தாமேசன்மஞ்சசியுறவேதானுங்கேந்திரங்காரியுமில்
ஆமேவியத்திற்குருவிருக்கிலையமெடுப்பனெனப்புகல்வர்
தோமேவியமாறெட்டதனிற்றொடர்சன்மாதிதானிருக்கத்
தீமைபுரியுங்கோள்கூடத்தேசமெல்லாநடந்திடுவன் (௪௧௦)

நடக்குந்தனபாக்கியமெட்டைந்தெனுநால்வீட்டிற்பாவருறக்
கொடுக்கும்வெகுவாய்த்தரித்திரங்கள்கூறுமூன்றுமனையாயின்
கொடுக்குமுக்காலிரண்டிலனாகுலவுமொன்றிற்காலாகும்
விடுக்குமிதனிலுறப்பாவர்விரவியிருக்கிற்றரித்திரமே (௪௧௧)

மேவுமொன்பானதிபதியைவிடவொட்டாதிபலவானாய்த்
தாவியிருக்கத்தரித்திரமேதபனனீசாங்கிசந்தன்னில்
மேவியிருக்கலாபாதிவிரவத்தாரித்திரயோகம்
ஏவும்விழியாய்சோதிடத்தோரியம்பும்பலன்களிவையாமே. (௪௧௨)

## அங்கவீனம்.

வேறு.

கண்டபன்னிரண்டாம்வீட்டோன்கனத்திரிகோணமேறிக்
கொண்டகேந்திரத்தினிற்கவவனெடுகூடிராகு
அண்டியேநிற்கப்பாவரவர்களைப்பார்த்திருக்க
எண்டிசையுலகிலங்க வீனனாயிருப்பனென்னே. (௪௧௩)

வேறு.

சோமனுமிற்பன்னிரண்டிற்றொடர்ந்தேநிற்கவோரிரண்டில்
ஆமேசெவ்வாய்தானுறவேயவனைப்பாவர்மிகநோக்கப்
போமாமங்கவீனமெனப்புகல்சேர்நல்லோர்பார்வையுறில்
தீமையில்லைத்தீர்க்காங்கஞ்செப்பாய்பலனீசிந்தித்தே. (௪௧௪)

சிந்தைகாரிகுருபரிதிசெவ்வாய்ராகுகேந்திரத்தில்
அந்தமுடனேதிரிகோணத்தனுகாதிருக்கப்பலனில்லார்
வந்தாலங்கவீனமுறுமருவும் விதேசசஞ்சாரம்
நொந்தேபுதல்வர்நாசமுறுநொய்யன்மிடியன்கண்டீரோ. (௪௧௫)

வேறு

இந்துவோடசுபர்கூடியீரிரண்டெய்திற்கள்ளன்
மூந்திரண்டிற்சேய்மாந்திமுழுப்பாவருமிற்றீநோயன்
அந்தமிற்பொய்யன்பெண்டிர்வியபிசாரியாண்மையில்லான்
சிந்தனைவியபிசாரத்தனிசமிலான்றீயவூணன். (௪௧௬)

வேறு.

விடுமிலக்கினமீதிற்குசனுற,உடனிரண்டிடத்தோனுமாறுதிபன் [ம்
திடமுடனிவர்சேர்ந்திடிற்காதரும்,கொடியபாம்பிவரோடுறிற்கொய்யடி

வேறு.

செங்கதிருறுநக்ஷத்திரமுதலாய்த்திங்கணக்ஷத்திரமட்டுஞ் [தலாய்ப்
சேரவேயெண்ணியிரண்டினிற்பெருக்கித்தெரிந்தவன்சன்மநாண்மு
பொங்கமாயற்றைநக்ஷத்திரமளவும்பொருந்தியதொகையுடன்வாரம்
போதமூவகையுங்கூட்டியொன்பதினிற்பொற்புடன்கழித்தசேடங்கள்
இங்கிதஞ்செறியுமிரவிசந்திரன்சேயிராகுபொன்சனிபுதன்கேது
இனியசுக்கிரனுமகாதிசைப்படியேஇசைதொகைபாதிநாழிகையாம்
அங்கதுநித்தியபலனெனச்சொல்வரவைதனில்வரும்பலபாவம்
அருண்மகாதிசையின்பலனதுபோலவறிந்துநித்தியபலனுரைமின்.

வேறு.

இரவிராகுபுகரொருமூன்றதாம்,குருமதிநவமாங்குசன்பன்னிரண்[டே
டொருபுதனைந்துறுஞ்சனிகேதுமெட், டுருதிசைக்குறுநாழிகையோதி

# துவாதசபாவபலன்கள்.

## முதலாம்பாவம்.

### இலக்கினபலன்.

ஆடரியேறில்வையோனமர்ந்திடின்மற்றக்கோள்கள்
நாடியேயுபயலக்கினத்திலும்பலமாய்நண்ணில்
கூடியகுழவிரண்டாங்குசனேழிற்கதிரோனெட்டில்
நீடிடிற்சரத்தின்மற்றோர்நின்றிடிற்பலன்களில்லை. (சஉ0)

சந்திரன்பாவராசிதனிற்குசன்றிரயக்காணத்
துந்திடிற்சசிக்கிரண்டிலுறுபன்னிரண்டினல்லோர்
வந்துதானிருக்கிற்பெற்றமகவுடன்பிறக்கும்பாம்பு
செந்திருமாதேபாம்பாய்ச்செனிக்கினுஞ்செனிக்குந்தானே. (சஉக)

நாலிடத்ததிபன்பாக்கியாதிபனிலக்கினத்தில்
சாலவேநல்லோர்பார்க்கத்தானுறில்ராசபூச்சியன்
கோலியசனியொன்றேழிற்குசனுறச்சுங்கனிந்து
மாலிவன்வியத்துணிற்கமருவுவன்றகப்பனூரில். (சஉஉ)

பண்ணுமிலக்கினத்தையிந்துபாராமலிருக்கவிந்து
நண்ணியராசிலக்கினஞ்சரராசியாக
ஒண்ணியசுதன்சராங்கிசம்பெறவுதித்தானாகில்
திண்ணமாய்த்தகப்பன்றேசாந்திரத்தினிற்பிரிவன்றானே. (சஉங)

பரிதிக்கோரிரண்டிற்பாவக்கிரகங்கள்பாவராசி
மருவிடிற்றந்தைதேசாந்திரத்துறுமற்றும்பாவர்
உரிமையாம்பாவராசியுறிற்கதிர்க்கைந்தேழொன்பான்
பெரும்பாவர்நிற்கத்தந்தைசிறையுளான்பரதேயத்தில். (௩௨௪)

சேய்க்குப்பன்னொன்றிலிந்துசேர்கிலோகுழவிக்கீனம்
ஆக்கியநல்லோர்காணிலவனைமற்றோர்வளர்ப்பர்
வீக்கியபாவர்காணில்விபமதாங்குழவியேகும்
பாக்கியரிந்தைக்காணிற்றகப்பன்வாழ்பதியிற்சென்மம். (௩௨௫)

நீசத்தானத்தினல்லோர்நின்றுசந்திரனைக்காணில்
பேசுவர்மரத்தின்கீழேபிறந்திடும்பிள்ளையென்றே
பூசல்செய்பாயர்நீசம்பொருந்தியேசசியைக்காணில்
ஏசுறுநீசர்வீட்டிற்பிறந்தசேயெனச்சொல்வாரே. (௩௨௬)

இந்துநல்லோரேகராசியிலிருக்கிற்காண்கில்
பந்தமாமனிதரில்லாப்பதியிலுற்சவிக்கப்பண்ணும்
சந்திரற்கேழிற்காரிதபனனுக்கேழிற்சேயும்
வந்திடத்தந்தைதாய்க்குவருத்தமுமரிட்டமாமே. (௩௨௭)

சவுரிக்கேழிடத்திற்செவ்வாய்தானுறிற்குழவிக்கீனம்
பவுரிகொளிலக்கினாதிபாவுரோடிசைந்தாறெட்டில்
உவமிகுபன்னிரண்டிலுற்றிடில்ரோகவானும்
நுவல்சென்மலக்கினாதிபலமிலாதிருக்கினோயாம். (௩௨௮)

ஆறுடனிரண்டிடத்தினதிபனுங்குசனுமூன்றில்
வீறுடனிலக்கினத்தின்மேவிற்காதறுமறுதேல்
சீழியசெவியில்ரோகஞ்சேருநற்கணக்கன்வீட்டில்
பேறுடன்காரிநிற்கினபுஞ்சனாய்ப்பிறப்பன்காணே. (௩௨௯)

புந்திவீட்டினிற்பிறக்கப்புதனொடுமிடத்தினிற்க
அந்தவாறுமிடத்தினதிபன்லக்கினத்தினிற்க
நிந்தையாமலியுமவனிலவுசன்மாதியோடும்
மந்தனும்புதனுங்கூடில்வடிவினிற்குள்ளனாவான். (௩௩௦)

வடிவுளதகரிற்றேளின்மங்கலனிருக்கவேதான்
முடவன்லக்கினத்திலிற்கமூன்றினிற்பிருகுமேவ
உடல்சிறுகுள்ளனாவனுயர்குசனோனாயாகில்
அடல்சனிதிரயக்காணமாகிடிற்சிறையிலொன்றும். (௩௩௧)

வேறு.

ஒன்றேழெட்டொடுவியத்திற்சசிபாவருடனே
உத்தமர்நோக்கறநிற்கிலுயருங்கேந்திரத்தில்

நன்றியவின்றிப்பிறக்குஞ்சேய்குருடுதானே
நவில்வியமெட்டாறுதிபாபர்களேயாயின்
வென்றியோடெங்கிருக்கிலவன்றுர்ப்பலனேயாவன்
மேவியசன்மாதிபதிதான்பாவனுகிக்
கொன்றைமுடியோனருளாலேவியமாறெட்டிற்
கூடினன்மையென்றென்றேகூறுவர்பாவலரே. (௬௨)

பாவர்கள்சன்மத்திலினுஞ்சன்மத்தாதி
பலமின்றிப்பயிலநோய்கேந்திரகோணத்
தீவர்களுற்றுற்கோபியாவன்சன்மத்
திறைநின்றவீட்டோனெட்டாறீராறில்
மேவிறுர்ப்பலன்சன்மகன்மனெட்டோன்
மிகைச்சனியிந்நால்வர்திசையெய்தும்போது
மேவிடுந்துர்ப்பலர்திசைக்குட்சனிசஞ்சார
மெய்திடிலோவரிட்டமெனவிளம்புமாறே. (௬௩)

ஆறிற்செங்கதிரதற்கேழ்சனிசெவ்வாய்விற்கில்
அரிட்டமாகுங்காரியரவொடுசென்மத்தும்
வீறுசெவ்வாய்நான்கிற்செங்கதிரோனேழின்
மேவியநாட்டனிலுடனேவியமதேயாகும்
கூறுசசிக்கிருபாலுந்தீயோரோகிற்கில்
குழவியொடன்னைக்கரிட்டமேகூறலாகும்
சீறுகர்க்கிலக்கினமாய்மூன்றுறிற்றீயோர்
செம்மையோபன்னிரண்டிற்றீதென்பாருளோர். (௬௪)

வேறு.

அருள்சென்மலக்கினதிபாவனல்வியமாறெட்டில்
மருவின்மெய்தனக்குநன்மைவருஞ்சவுக்கியமுமுண்டாம்
உருவமாமிலக்கினதியுத்தமத்ததிபனுகிப்
பெருமைசேராங்தொன்பாரிற்பலனெனவிரவிற்சொல்வாம். (௬௫)

வேறு.

விரவியதோர்சரீரகாரகனும்வெய்யோன்
வியமாறெட்டிற்சனிதன்வீட்டிலுற்றுல்
உருவுகுறைந்திடுமெங்கத்தானமாகும்
ஒன்பதுபன்னொன்றிரண்டினுற்றிட்டாலும்
பரவியதோரரிமேஷத்துறினும்மெய்யிற்
பழுதறவேசவுந்தரியபரனுமாவன்
வரியுலவுங்குழற்கொவ்வைமதுரச்செவ்வாய்
மட்டுலவுஞ்செங்கமலமலரின்மானே. (௬௬)

வேறு.

இட்டபமேட்டண்டிம்மூன்றிராசியும், அட்டும்லக்கினமாகவதனுளே
தொட்டருமாவிட்டராகுறச்சூழ்ந்திடப், பட்டருமுத்தமமென்றுபகர்வரே.()
பகருலக்கினமன்பத்திலொண்டினும், வகையினிற்கவலதுலாபாதியும்
இகலிற்பத்திலிரண்டிலிருந்திடத், துகளிலைந்திற்ளேன்றுஞ்சுகமதே.

வேறு.

சுகந்தருஞ்சன்மலக்கினஞ்சரமாய்த்தோன்றிலாபத்தினதிபனும்
மிகுந்திடுந்திரமேற்பாக்கியாதிபனும்விரும்பியவுபயலக்கினமேல்
உகந்திடுமேழாமதிபதிமூவருறுதிசைவாதைசெய்விக்கும்
பகர்ந்திமூவடுர்பதியுமிம்மூவர்பற்றியவிடங்களுந்தீதே. (௪௩௯)

தீதறுஞ்சென்மகாலையிலெட்டிற்செங்கதிர்நிற்கிலோசுரமாம்
கோதறுதிங்களுநிற்சலகண்டங்குசனுறிலாயுதபீடை
சோதிசேர்புந்திவியாதிபொன்மிருத்தியுசுக்கிரனுறிற்றரித்திரமாம்
ஓதியசனிதாயர்க்குறுந்தோஷமொருவருநிற்கவொண்ணதே. (௪௪0)

தேவர்களமுதசந்திரன்முதலாய்ச்செங்கதிரளவுமட்டெண்ணி
மேவியதொகையைமூன்றினிற்கழித்துமீந்ததொன்றுக்கவன்பிதாவில்
ஏவியதாழ்ச்சியிரண்டதேயாயினினியதாதைக்கினையோகம்
பூவின்மூன்ருயிற்பிதாவினுக்கதிகம்புத்திரற்கென்றறிந்திடுமே. (௪௪௧)

வேறு.

அறிந்தலக்கினத்தாதிபனுச்சமே, செறிந்துகேந்திரஞ்சேர்ந்துநல்லோ
ருட்டன், உறைந்துதூயருறைமனையுற்றிட், நிறைந்தசீவன்பெறுவதுநிச்
சயம். (௪௪௨)

வேறு.

நிச்சயமாஞ்சன்மாதிபதிதிரலக்கினத்தும்
நீடுதிரவங்கிசத்துமவைதான்கேந்திரமாய்
இச்சையுட்டனிருக்கிலவனிருந்ததலந்தன்னில்
இனியவெகுபலன்பெறுவனவைசுபரங்கிசமாய்
அச்சமறநிற்கிலவன்சீவபரியந்தம்
ஆபரணத்துடன்கூடியம்புவியில்வாழ்வன்
மெச்சியசன்மாதிபலமறைக்கேந்திரத்தின்
மேவிற்கோபியுமாகிவியாதியுமுற்றிடுவன். (௪௪௩)
உத்திடுஞ்சென்மத்தாதியீனாங்கிலிருக்க
உண்மையுடன்பத்தாதியுறுபலவீனனுமாய்ப்
பற்றிவியமாறெட்டிற்சுபர்நோக்கநிற்கில்
பயில்தத்துபுத்திரனும்பகருவெகுவயதே
வெற்றிகொளும்லக்கினத்தின்மிகுபாவரிருக்க
மேவியசன்மாதிபதிமிகுபலவானகக்

குற்றமுறும்பிணிகொள்வன்சுபர்சன்மங்கண்டால்
 குணமாமப்பிணிவேறுகொடுமையுஞ்செய்யாதே. (௪௪௪)
செய்யபுதன்பாவராங்கிசையினின்றாலும்
 செறிந்தந்தவுபயவங்கிசத்திலானாலும்
ஐயமறவேனிற்கிற்பிள்ளையிரட்டையதாம்
 ஆந்தனுவேலக்னமாய்ப்பிறபாதியாகில்
பையவதினின்றவர்சிங்காங்கிசத்திற்றானே
 பரிந்துநிற்கப்புதன்சனியப்பதியதனைப்பார்க்கத்
துய்யகருக்கொண்டிருந்தபையுடனேகூடத்
 தோன்றவேசிறுகுழவிதான்றோன்றுந்தானே. (௪௪௫)

வேறு.

தோன்றுஞ்சன்மத்திரவிபுதன்வெள்ளியரசன்
 தொடர்ந்தேயுற்றிடில்வலப்பக்கத்தின்மருச்சொல்லே
ஊன்றுசெவ்வாய்திங்கள்சனிக்குலவுமிடப்பக்கத்
 துறையுமறுவென்றன்றேயுரைப்பரதைக்கேண்மின்
ஏன்றசுடர்க்கதிபனுற்றால்வயிற்றின்மதிசிரத்தில்
 இயல்செவ்வாய்க்கிருப்பிடத்திலெழிற்புதன்பக்கத்தில்
ஆன்றமருவாசனுக்குமுகத்தில்வெள்ளிதுடையில்
 அருஞ்சனிக்குக்காலிடத்திலாமறுவாமென்னே. (௪௪௬)
மறுவிலாச்செங்கதிர்நின்றிடத்தனுவிற்பிறந்தான்
 வார்த்தைப்பிரசண்டனதிசூரனுமாயிருப்பன்
உறுகலையினன்றனமுமில்லான்சிங்கத்தில்
 உதித்தவனிராக்கணிலான்மேடத்திரவிநிற்கப்
பிறந்தவன்கண்டத்திமிராய்த்தனந்திரளார்ச்சிப்பன்
 பிறைவீடேலக்கினமாய்க்கதிரிருக்கப்பிறந்த
சிறுவன்விழியுன்னதவான்றிரவியவான்கோலே
 சென்மமாய்க்கதிர்நிற்கத்திரவியங்கண்ணிலனே. (௪௪௭)

வேறு.

கண்ணுரிடபந்தகர்சிங்கங்கண்டசன்மலக்கினமாய்ப்
பண்ணுர்சனிசெவ்வாய்கூடிப்பார்க்கிற்கொடிரண்டுளதாகும்
தண்ணுர்செவ்வாய்கண்பார்வைதான்செங்கொடியொன்றேசுற்றும்
எண்ணுர்சவுரிபார்வைக்கேயிருக்குங்கரியகொடியொன்றே. (௪௪௮)
கொடியபாம்பினுடனிரவிகூடியிருக்கிற்சொடிதலையாம்
நெடியசன்மமெட்டாதிநெருங்கில்ரோகசரீரனுமாம்
படியிற்செவ்வாய்சனிசன்மம்பற்றியிருக்கிற்கல்லெரிப்பாம்
உடனேயவன்றன்விழிதனக்கேயுறக்கமிகுதியுண்டாமே. (௪௪௯)

உண்டாஞ்சன்மந்திரமாயினதிவேசன்மத்தோனுமுறப்
பண்டேசனித்தகிராமத்தின்பதியாயிருப்பனட்டமந்தான்
மிண்டார்திரமாகிச்சனித்தவீட்டின்மரிப்பன்சன்மசரம்
கண்டால்விதேசசஞ்சாரங்காணுமென்றேகருதிடுமே. (௬௫௦)
கருதுஞ்சன்மமுபயமதாய்க்கண்டாற்சிலநாள்விதேசத்தில்
பரிதிசன்மாதிபனாகிற்பரவுங்கிரியிற்சஞ்சாரம்
சிரரோகஞ்சற்றுண்டென்பர்செவ்வாய்சன்மாதிபனாகில்
உருவாயுதத்தாலக்கினியாலுறுநோய்காட்டுமுண்மையிதே. (௬௫௧)
உண்மைப்புதன்சன்மாதிபனேனுளதுவித்தைகணிதமுடன்
வண்மையாபாரத்தொழிலேவரும்பொன்வெள்ளிமனையானால்
பண்மைசுருதியுணர்தனவான்பாங்கிற்சனித்தபதிநீங்கான்
தண்மைபகாரச்சுபகர்ம்மத்தலைவனென்றேசாற்றிடுமே. (௬௫௨)
சாற்றுமதிசன்மாதிபனேசரீரகாந்தியுளன்சுகவான்
நேர்த்திச்சரக்கைவிற்றுண்பனிலவுசன்மத்தைப்பார்க்கில்
போற்றுந்தந்தையருகிருக்கச்சனித்தானென்றேபுகல்வார்கள்
ஆற்றுஞ்சரத்தின்மதியிருக்கவந்தான்றந்தையென்றெனவே. (௬௫௩)
எனவும்வெள்ளிபுதனுபயிலிந்துவிருக்கவந்தருகே
வினவிற்றந்தையிருந்திடுவன்வெய்யோன்சரத்தின்மதிபத்தில்
தனதாயிருக்கப்பிதாவிருக்குந்தலத்திற்சனித்தான்றானென்பர்
சினமார்சனிசன்மத்தேழிற்செவ்வாயேனும்பிதாதேசம். (௬௫௪)
தேசார் * மனிதலக்கினமாய்ச்செவ்வாய்பார்க்கச்சனித்தவனும்
மாசாரீமக்களையென்றேவழுத்தலாகுஞ்சனிசெவ்வாய்
நேசார்திரிகோணத்தின்மதிநிற்கப்பிறந்தசேயனையே
கூசாளன்னையெறிவளிந்தைக்குருநோக்கிற்கைக்கொள்வாளே. (௬௫௫)
கொள்ளும்பாவமதிசன்மங்குறுகச்செவ்வாய்சனியேழில்
மெள்ளவிருக்கிற்குருநோக்கவிரும்பியெடுத்தார்வளர்க்கவுய்வன்
தெள்ளும்புதன்பாம்பரசன்மதிசேர்ந்துசன்மத்திருந்திடவே
பிள்ளைபிறக்கில்வம்சத்தைக்கெடுப்பனெனவும்பேசுவரே. (௬௫௬)
பேசுமலக்கினஞ்சரலக்கினம்பிறங்கத்தூமனிருந்திடவே
வீசும்வாணாள்குறையும்விதிபாதனிருக்கிற்புகழ்நாசம்
மாசில்பரிவேடன்றங்கமதிபோஞ்சக்கிரசாபனுமின்
மேசின்குலங்கணசிக்குந்துசன்மேவிற்றனம்போமெனப்பேசே. ௬௫௭

வேறு.

பேசும்லக்கினமீனண்டிற்பிறந்தவர்தங்கட்கெல்லாம்
பாசமாய்மகாதிசையின்பலன்களைப்பார்க்கும்போது

* மனிதலக்கினம்—மிதுனம்-கன்னி-துலாம்-கும்பம்.

தேசுறுகரியபாம்பின்றிசைவரிற்பாக்கியங்கள்
தூசுபொன்சோபனநற்சுபபலன்பெறுவர்தாமே. (சுரு௮)
தார்செறிமகரங்கன்னிதனிற்பிறந்தோர்கட்கெல்லாம்
பார்செறிமகாதிசையின்பலன்களைப்பார்க்கும்போது
சீர்பெறுகேதுவானதிசைவரும்போதுசெல்வம்
ஊர்திசாரரசராற்சன்மானமுண்டாங்கண்டீரே. (சுருகூ)

வேறு.

பேசுஞ்சன்மஞ்சரராசிபிரியாச்சரத்திலாதிமனும்
பாசஞ்சரத்திலுறத்தோன்றிற்பார்க்கிற்றூலசரீரனுமாய்
வீசுலக்கினஞ்சரமாயவ்வீட்டுக்குடையோன்சரத்திருக்க
தேசம்விடுத்தேசஞ்சாரந்திகழத்திரீவனெனச்சொல்லாய். (சுசு0)

முதலாம்பாவம் - முற்றியது.

ஆ விருத்தம்-சுருள.

# இரண்டாம்பாவம்.

## நேத்திரப்லன்.

எழிற்கண்ணுதிபன்றீக்கோளாயெட்டினிற்சனியோடிந்தும்
பழிகொளாறுமிடத்திற்பானுவேற்பூனைக்கண்ணும்
விழிகள்கோன்பாவனுய்லக்கினுதியைமேவியாறெட்
டொழிவியத்துறிலோகர்ப்பத்துறுங்குருட்டாகத்தானே. (சுசுக)
சுக்கிரனேத்திராதிபதியெனத்தோன்றியெட்டில்
நிற்கவோராறில்வெய்யோனிற்கிற்கண்ணேய்பிற்காலம்
தக்கவேறரிமேஷத்திற்சனிகுசன்றுனுற்றுலும்
மிக்கதாழதரத்தூனமெழிற்கொடிசுற்றித்தோன்றும். (சுசுஉ)
லக்கினத்ததிபனேடிரண்டிடத்ததிபன்சுங்கன்
திக்கெனக்கூடமூன்றிற்செங்கதிர்நிற்குமாயின்
ஒக்கவேகண்ணில்லாமலுதிப்பனுதித்தனல்லால்
மைக்கணுய்மதியமுற்றுன்மாலைக்கண்ணுகுமென்றே. (சுசுங)
குறைவினேத்திராதிசுங்கன்லக்கினத்தோனுங்கூடி
நிறையுமூன்றுமிடத்தினிற்கினேத்திரநோயாகும்
நறைகுழலக்கினுதியிரண்டிடத்ததிபன்வெள்ளி
அறையவோரிடத்தினிற்கிலந்தகனுவன்கண்டீர் (சுசுச)

வேறு

நேத்திரத்தான்தாதிசுங்கனுகினிற்சன்மாதியைக்கூடி மூன்றினின்றால்
நேத்திரரோகம்மந்தநேத்திராதிநிலவாஇப்புகருடனேயிரண்டினின்றால்

நேத்திரந்தானிசிகடோறுமொளிகொடாதுநின்றகடகந்தனி லுற்பவித்ததுபோதும், நேத்திரத்தான்மதிசுங்கன்கூடிநின்றால் நிகழ்பிறவிக்குருடனுமாகிற்பன்றானே. (சுசுரு)

சிங்கமேநேத்திரத்தானந்தானாகிச்
செங்கதிர்சுங்கன்கூடிச்சிங்கத்தேற
அங்கவரோடெந்தத்தானதிபதியேனு
மவரவர்தங்காரகராயினும்வந்துற்றாலும்
தங்கியபேர்குரியர்தமக்கெய்துநேத்திரநோய்
தனதுபதியாகிலுச்சந்தானுநின்மை
துங்கமதிவியத்துறிலோவிழியொன்றேயூனம்
சூரியனுங்கூடில்விழியோவிரண்டும்போமே. (சுசுசு)

வேறு.

சோதிலக்கினத்திற்குசன்சூழ்ந்திட,ஓதுமட்டமத்தோன்கேந்திரத்தறப்
போதவட்டமத்திற்பாவர்போந்திட,ஏதநேத்திர நோயும்வந்தெய்துமே.

வேறு.

சேருஞ்சுங்கன்சன்மாதிதிங்கள்கூடியாறெட்டில்
நேரும்வியத்திற்பலமற்றேநிற்கின்மாலேக்கண்ணுகும்
ஏருங்கதிரோன்சன்மாதி யிரண்டாமாதிவெள்ளியொன்றாய்த்
தீரும்வியமாறெட்டிலுறச்செப்பும்பிறவிக்குருடனுமாம் (சுசுஅ)
ஆமேயிரவிசுக்கிரன்றெண்டாதிசென்மத்தாதியிவர்
தாமேகூடியவரவர்கனானந்தனக்காறெட்டுவியத்
தாமேயிருக்கிலவரவர்கடிட்டிக்கூனஞ்சார்ந்திடுமே
நாமேசொல்வம்பலபார்வைநயனபல்ன்கண்டெனுஞ்சொல்லாய் சுசுகூ
சொல்லும்பலனேத்திரத்தானஞ்சூழ்ந்தாரதிபராற்பலன்கள்
எல்லோன்செவ்வாய்மேனோக்கமிந்துங்குருவுஞ்சமபார்வை
வெல்லும்புதற்கும்வெள்ளிக்கும் விழிபக்கத்தேநோக்கியிடும்
நல்லாராகுசனிதனக்கேநயனங்கீழ்நோக்காயிடுமே. (சஎ0)
இடுஞ்சென்மாதிதனைச்சனிகண்டிடக்கண்ணேயாமிரண்டாதி
உடன்சூரியனுங்கூடிநிற்கமற்றுங்குளிகனுடன்சனிதான்
அடைந்தேநோக்கக்கண்ணேயாமவ்வீடேசலராசியெனில்
தொடர்ந்தேகாணினீர்பரவித்துளிக்குமவன்றன்விழிதனிலே. (சஎக)
சோதிரவியும்பாவருடன்சூழ்ந்துபலமற்றேவியத்தின்
மீதிலிருக்கவலக்கண்போம்விரவுஞ்செவ்வாய்பலனற்றே
ஏதவியத்திலுறைந்திடிலோவிடக்கண் ணூனமிவரிருவர்
தீதாம்வியத்திற்கூடிநிற்கத்தெரியாதிரண்டுதிட்டியுமே. (சஎஉ)
திட்டமுடனேசனிசெவ்வாய்சேர்ந்திரண்டிற்பனிரண்டில்
கிட்டியிருக்கில்விழிக்கூனங்கிரணர்விசந்திரன்வியத்தில்

ஒட்டியிருக்கில்விழிநோயுமுற்றந்தகனுப்பிறக்கும்வகை
துட்டரவிசேய்மதிய்ரசன்சுங்கனேவரெங்குறினும். (சஎங)

எங்கோனிரவிவெள்ளிபலனில்லாதிருக்கவவருடனே
பொங்குஞ்சன்மாதிபன்கூடிற்பொருந்திற்பிறவியந்தகனும்
தங்குமைந்தாமாறுதிதானுஞ்சன்மந்தனிலிருக்கச்
சுங்கனிரண்டாதியைக்கூடிற்சொல்கண்பிடுங்கப்படுங்கண்டீர். (சஎச)

காணுநேத்திரரோகமினிக்கதிர்சேர்மதியுங்காரியிவர்
வேணுமிரண்டிலாறெட்டில் வியத்தினிற்கரோகமிகத்
தோணுமிரண்டிற்பன்னிரண்டிற்சோமன்பரிதிகூடுகினும்
பூணுமெட்டிலிரண்டதனிற்பொல்லாரிருக்கக்கண்ணேயே. (சஎரு)

வேறு.

வேல்விழிமாதேவிளம்புவலக்கண்,சாலவிரண்டாமிடங்கொண்டும்
ஏலுமிடக்கண்ணீராறும், சீலசுபாசுபங்களைத்தேர்ந்தே. (சஎசு)

## வாக்குபலன் - வேறு.

குடும்பத்தானதியோடு குலவியபுதனுங்கூடி
உடன்படவாறுந்தானத் துற்றிடிலூமையாகும்
இடும்புறுமூன்றுமாதி லக்கினத்ததிபன்றனும்
திடம்பெறக்கூடிலூமை யாகியேதிரிவன்றனே. (சஎஎ)

வேறு.

வாக்குத்தானதியொடுபுதனுங்கூடி வருஞ்சன்ம மூன்றுமின் மறுவிலூமை,ஆக்குமவருடனெந்தத்தானத்தாதியவரவர்தங்காரகராகிலும்வந்து ஊக்கமுறவவரவருமூமையாவருற்றவர்தம்பதியாகிலுச்சமாகில் [ற்றல் வாக்கூனமறமொழிவன்கண்டீர்கண்டும் வளமுறுமுக்கனியுமென வழு

வேறு. [த்துமாதே.(சஎஅ)

* மாதுலமன்னனேடுவாக்குத்தானதிகூடிக்
கோதுறுவியமாறெட்டிற்கூடினூலூமையாவன்
ஓதியதந்தைதாய்மற்றேர்தானந்தனக்கவ்வாறு
நீதியாயிருக்கிலூமைநிச்சயமன்றுகூறே (சஎகூ)

கூறியலக்கினதிசுக்கிரன்கூடியாறெட்
டேறியவியத்தினிற்கவூமையாமிரண்டாமாகி
பேறுடனவனைக்கூடிலூமையாம்பின்மற்றேரும்
சீறிடாதவனைக்கூடிலூமையாய்த்திரிவன்றனே. (சஅ0)

வேறு - வித்தியாபலன்.

சனியலாதறுவர்தானுமேகூடிப்.புனிதராயிருக்கப்புலவனுய்க்கவிதை இனிதெனவுரைத்தேயெண்டிசையெங்கும், மனுவுடனீதிமன்னனுகுவனே. (சஅக)

---

* மாதுலமன்னன் - புதன்.

வேறு.

பொன்புதனிரண்டின்கோவும்பொருந்தியகேந்திரத்தில்
பின்றிரிகோணமேறிற்பெற்றிடும்வித்தைலாபம்
இன்பமாயிவரொட்டாறிலிருந்திடிலில்லைவித்தை
அன்புசேர்கணக்கனுச்சமாதினல்வித்தைகூறே. (சஅ௨)

கூறியபுதனுமேழாமதிபனுங்குருவுங்கூடிப்
பேறுடன்றிரிகோணங்கள் கேந்திரம்பிடித்திட்டாலும்
வீறியபுதனதுவீட்டும்விரும்பியவிரண்டாம்வீட்டும்
சீறிடாதிருந்தபோது திடவித்துவானுமாமே (சஅ௩)

ஆனகேந்திரத்திற்புந்தியிருக்கரெண்டாம்வீட்டாதி
தானுமேயுச்சமாகத்தகும்புகருபயமேவ
ஊனமின்மூன்றினல்லோருறவெள்ளியுச்சமாக
மானிலத்துதித்தகாளைசோதிடம்வழுத்தவல்லான். (சஅச)

வேறு

வல்லரெண்டிடத்தோன்குருசுக்கிரன், செல்லுமூலத்திரிகோணமுச்ச
அல்லபாவரணுகநோக்காவிடில்,நல்லதர்க்கம்படிப்பனவம்பெற, [மாய்
நலஞ்சிறந்தரெண்டாம்வீட்டதிபனுங்,குலஞ்செறிந்தகுருவும்பலமதா
ய்ப், பலஞ்செயிந்தபுகர்பார்க்கினிறிடில்,பிலஞ்செறிந்தவிலக்கணம்பே
சுவான். (சஅ௬)

வேறு.

பிரக்கினைசேர்திரிகோணகேந்திரத்தும்
 பிரியமுடன்புதனிற்கிற்றமிழ்வித்தைபெருகும்
திருக்குமிலாதுயர்செவ்வாயொன்றிருந்தகாலைத்
 தெலுங்குவித்துவானவன்கருங்கோளேகிற்கில்
நிரக்கவேதுருக்காரியர்பாஷைதமக்கு
 நிபுணவித்துவானவன்வெள்ளிகுருமேவில்
திரக்கனமாஞ்சாஸ்திரங்கடமக்குமதிவல்ல
 திடவித்துவானென்றேசெப்பிடவுமாகும். (சஅஎ)

ஆகுமிரண்டாதிபனும்புதனுமுச்ச
 மாயிருக்கச்சன்மத்திலரசனிற்க
ஏகனுய்ச்சனியெட்டிலுறக்கணிதவித்தை
 இவனுக்கோபுராங்கிசைத்தின்மந்தனிருக்க
வாகுடனங்காரகனங்கிசத்தரசனிற்க
 மறையோதுவானிரண்டாமாதிகதிராகத்
தாகமுடன்செங்கதிரைத்தமனியனுங்காணத்
 தர்க்கசாஸ்திரம்படிக்குந்தாஷ்டிகனுங்கண்டீர். (சஅஅ)

கண்டசன்மலக்கினத்திற்சுக்கிரன்பொன்னிருவர்
கலந்துநிற்கவேந்தனுநற்கதிரோன்மூனும்மே
மண்டியசிங்காங்கிசத்திலேறிநிற்கவந்த
மற்றுஞ்சுக்கிரன்கடகவாங்கிசத்தின்மன்ன
அண்டியிந்தப்படியிருக்கச்சனித்தான்முனல்ல
அவனியிற்சாத்திரமாறுமறிந்திடுவானென்றே
எண்டிசையெங்கும்பரவுங்கீர்த்திமானுகி
இருப்பனெனக்கலைவல்லோரியம்பிடுவர்தாமே. (சஅகூ)

வேறு.

வாரேறுமுலைபாய்கேள்சன்மந்தன்னின்
மதிமகன்சூரியன்குருவுமகிழ்ந்துநிற்கில்
சீரோறுதனம்படைத்துப்புலவனுவன்
செங்கதிர்சுக்கிரன்புந்திதிங்கள்சுன்னும்
பாரார்பொன்னிவர்களொருவீட்டிற்கூடில்
பரிமளிக்கும்வித்தைப்பிரபலனுமாகித்
தாரேறுபுயவலியன்றனவானுவன்
சாந்தகுணவானுமாய்த்தரையில்வாழ்வன். (சகூ0)

தனபலன்.

சென்மாதிபதிக்கிரண்டாமிடத்தினல்லோர்
திறன்மூன்றுமிடந்தீயோர்நான்கினல்லோர்
நன்மார்க்கருடனிருந்தாற்றனவான்சன்ம
லக்கினத்தோனுபயத்தினண்ணினும்பொன்னுளனும்
சன்மார்க்கருடனந்தத்தனபாவத்தில்
தகும்பாக்கியலாபாதிதரிக்கிற்பார்க்கில்
துன்மார்க்கமறவளகைக்குபேரன்போலத்
தொலைவிலாத்தனம்படைப்பனெனச்சொல்வர்சால.(சகூக)

சாதகன்லக்கினமுதலாய்லக்கினதி
தானிருந்தவீடளவுமெண்ணிக்கண்ட
ஓதுதொகைலக்கினதிபனைத்தொட்டே
உடனெண்ணிக்கண்டமனைபாவர்வீடேல்
ஏதமுறுந்தரித்திரயோகங்களாகும்
இனிமையுள்ளோர்வீடாயிற்றனவானுவன்
போதுசன்மந்தனக்கைந்தீராறிரண்டும்
புனிதர்மனையாகிற்பொன்னுளனேயாவன். (சகூஉ)

வேறு

ஆவன்சன்மத்திற்சனியுமடுத்தநான்கிலம்புலியும்
மேவுமேழிற்செவ்வாயும்விளங்குபத்தில்வெய்யோனும்

கோவும்புதன்சுக்கிரன்றானுங்கூடியொருவீட்டினிலிருக்கப்
பூவுக்கரசாய்த்தனவானாய்ப்பொருந்திவாழ்வன்கண்டீரே. (௪௯௩)

கண்டுமொழியாயெட்டாறிற்கருதுமூன்றில்பன்னொன்றில்
மிண்டிருந்துலக்கினத்தைப்பாராதிருக்கின்மிகுசெல்வம்
கொண்டுவாழ்தற்கனுசாரிகுலவியிற்நால்வருநீசம்
அண்டியிருக்கினீசர்மனையணுகிற்றனவானவானே. (௪௯௪)

ஆவரிந்துலக்கினத்துக்கதிபனுச்சராசியினும்
மே[illegible]ல்துநீசர்மனைவிரும்பியிருக்கிற்றனவானும்
தேவர்தொழுஞ்சந்திரனுடனேயுச்சநற்கோள்சேர்ந்திடினும்
தாவுங்குடும்பனுச்சமனைதக்கோர்நிற்கத்தருஞ்செல்வம். (௪௯௫)

வேறு

செல்வந்தருபத்தாமதிபதிசென்மாதிபனும்
வல்வந்தகுடும்பாதிபனும்வளரங்கிசைமன்னும்
செல்வந்திகழுங்கேந்திரமதனிற்சுபர்காணில்
நல்வஞ்சிறுவயதிற்றனபதியாகவுநண்ணும். (௪௯௬)

நண்ணுஞ்சென்மத்தாதிபனவின்மூன்றாதிபனும்
ஒண்ணிப்பலமாகப்புருஷக்கோளுறநோக்க
வண்ணந்தருமூன்றாதிபன்மருவப்பதிகாண
அண்ணன்சிறுவன்றாய்பரமாமன்பொனும்வருமே. (௪௯௭)

வருஞ்சென்மலக்கினத்துமாமதியிருந்தவீட்டும்
இருபுறந்தன்னினல்லோரிருந்திடிற்றனவானவன்
ஒருமனைதன்னிலுற்றாலோதியபலனிற்பாதி
தருமொருபுறத்தினிற்கிற்றனமுங்காற்பங்கதாமே. (௪௯௮)

வேறு.

பாங்கதாகுமூன்றாமிடப்பார்த்திபன், ஓங்குமொன்பதாமாதியுட்னுற
ஈங்கிவர்க்குமினியசினேகமாய்,ஆக்குறத்தமையன்பொன்னணுகுமே.

வேறு.

அணுகுநிதிசேர்வகையாதவனாற்றாதையர்பொன்
அன்னைக்கம்புலிசெவ்வாயாற்றனதுபொருளே
நணுகுபுதனாற்பகைஞர்பொருளரசன்றன்னால்
நல்லுறவோர்நிதிசுங்கனாற்குமனைவியரால்
பணமருவுங்காரியினாலடிமையுள்ளோர்பொருளும்
பண்பொடுசேவித்தவர்பொன்பாங்குடன்வந்தடையும்
குணமொடுலக்கினஞ்சோமன்றனக்குப்பத்தாகும்
குடிவீட்டுக்குடையோனைக்கொண்டுபலன்கூறே. (௫௦௦)

கூறியலாபாதியொன்பதாமதிபனுடனே
கூடினற்பழையதனங்குறுகவந்துசேரும்
பேறுடன்பத்தாமாதிபாக்கியத்துற்றிடினும்
பெருமைசெறிபத்தாதிபிரபலநற்கோளாய்
வீறுடனுத்தமர்மனையிலுறத்தருமத்துடனே
விரவுபிரயாசமறவேநிதியம்படைப்பன்
ஈறில்குருதனஞ்சேரும்பத்தாதிமெலிந்தே
இருக்கிலொருவரைச்சேவித்தெய்துபொருளற்பம். (௫௰௧)

பொருள்செறிபத்தாமதிபன்பிரபலவுத்தமனாய்ப்
பொருந்திப்பத்தினிலிருக்கயாகாதிகருமம்
அருளுடனேபுரிந்துதனந்தேடியினிதிருப்பன்
அமர்மூன்றாமாதிபலமாகச்சென்மத்தோன்
மருளுந்துர்ப்பலனாகலாபாதிமூன்றில்
மருவிலுடன்பிறந்தவர்தன்பொருள்வந்துசேரும்
தெருள்சன்மஞ்சந்திரலக்கினத்திருந்தார்வகையில்
சேர்ந்தவராரோவவர்பொன்சேருமிவன்றனக்கே. (௫௰௨)

தனஞ்சேரும்வகையொன்பதாமதிபன்றிசையில்
தகும்பத்தாதிபன்புசிப்பிலப்போகோசரத்தில்
இனஞ்சேர்நான்காதிபன்பத்தாமிடத்திலிருக்க
இயல்பத்தாமதிபனுக்குநாலாம்ராசியினும்
கனஞ்சேருங்குசனுடையகேந்திரத்திலேனும்
கலந்துநிற்கப்புராதனமாங்காணிமனையதனில்
முனஞ்சேர்பத்தாமதிபன்றிக்கினினிட்சேபம்
மூதற்கொண்டுவாழ்வனெனமொழிந்திடுவர்தக்கோர். ()

தக்கரிஷபத்தின்மதிவிரிச்சிகத்திலரசன்
தானிருக்கிற்றனவானுஞ்சுக்கிரன்வீட்டரசன்
மிக்கசுறாவிற்குசனுமிருக்கவளர்பிறையும்
வேந்தனுடனேகூடப்புதனரசன்கூடி
நிற்கலக்கினந்தனிற்சுக்கிரனுமிருக்க
நிறைந்ததனவான்கல்விநிபுணனுமாயிருப்பன்
சுக்கிரனுச்சம்பெறலக்கினத்தரசனிறைந்த
சோமனைப்பாவர்கள்காணிற்றுலங்குதனம்படைப்பன். ()

படைத்தவொன்பதாமதிபனுறினின்றிடவே
பண்புடையமாதுலன்றன்பொன்பரிந்துசேரும்
எடுத்தவொன்பதாமதிபன்பொன்னாகியாறில்
இருந்தக்காலம்மாமிக்கிசைந்தபொருள்சேரும்

தொடுத்தவைந்தாமதிபதியுஞ்சுபனுய்ப்பாக்கியத்தில்
சூழ்ந்திருக்கிற்புத்திரிக்குத்துலங்குமணஞ்சூட்டி
அடுத்திருக்குமருமகன்றேடியதனங்களெல்லாம்
அடைந்துசுகவானுகியம்புவியில்வாழ்வன். (ருoரு)

அம்புவியிற்குருவும்பத்தாமாதிபதியும்
அன்புறுநற்சுபனுமாய்லக்கினத்ததிக்கு
இம்புவியின்மித்துருவாயிவருடன்வெய்யோனும்
இசைந்திருக்கிற்பிதாவிதியமெய்துமிவன்றனக்கே
விம்பமதியங்கூடிலன்னைசெம்பொன்மேவும்
மேதினிமைந்தன்கூடில்மேவலர்பொன்சேரும்
நம்பியமால்கூடின்மித்துருதனமாமரசன்
நண்ணியுறிற்பிராதாபொன்றுனையந்துசேரும். (ருoசு)

வேறு.

சேருஞ்சுக்கிரன்கூடிற்றெரிவையர், ஆருமாஞ்சனியிற்கடுத்தோர்பொருள், கூரும்பாம்புகள்கூடிலீனத்தொழில், சாரவேபுரிவார்தனஞ்சாருமால்

வேறு.

சாரும்பத்தாமதிபன்சுபக்கோளாகத்
தக்கோர்வீட்டிற்பிறையுமரசந்தானன்றிச்
சேரும்பொன்னவனீசமத்தமனமாகித்
தீயோர்வீட்டினிலிருக்கத்திரவியங்களில்லான்
நேரும்பத்தாமதிபன்ஞன்கிட்டத்திலிருக்க
நிட்சேபங்கண்டெடுப்பனிறைந்தகல்வியாலும்
பாரின்மேவியதமோரார்தங்களாலும்
பரிவுடன்பொன்சேருமெனவேபரிந்துகூறே. (ருoஅ)

வேறு.

கூறும்மொண்டாமிடக்கேந்திரத்தினில், வீறுமன்னவன்மேவவொண்டாதிபன், ஊறுமாறெட்டொடுவியத்துற்றிடில், ஏறுந்தந்தைதனஞ்சற்றுமில்லையே. (ருoகூ)

வேறு.

சாலமதிதனக்கிரண்டிற்சனிதானிற்கில்
சந்திரனுர்தனக்குநான்காம்வீட்டாதி
மேலவர்களுடன்கூடிக்கேந்திரங்கள்
மீதிருந்தாற்றந்தைபொருள்வேற்றோர்கொள்வர்
பாலருக்குச்சேராதுபாலன்றானும்
பாக்கியவானுகிவெகுபணங்கடேடி
ஞாலமதிற்கீர்த்தியாதிபனும்பூமி
ராசனைச்சேவித்திருப்பனலமாய்த்தாமே. (ருகo)

வேறு.

மேதகுநான்காமாதிவிரவுகேந்திரங்கட்டன்னில்
ஆகவனிருக்கவேதானந்நான்காமிடத்தில்
ஓதியநல்லோர்மேவிலுறுபிதாதனத்திற்காசு
பாதியுமிவனுக்கில்லைபரதேசத்திடையிற்செல்வன். (௫கக)

வேறு.

ரண்டமாதிதான்மிகவேயிருந்துகேந்திரமேறிமிகக்
கொண்டேதனத்துக்காரகனுங்குலவியுச்சமாகியிவர்
மிண்டாயிருக்கத்தனபதியாய்விளங்கியிருப்பனறிவுள்ளோன்
பண்டேசகத்திரப்பொன்றேடிப்பதியிலிருப்பனெனச்சொல்லும். ()

சொல்லுமிரண்டாமாதிபதிசூழ்ந்துலாபத்தினிலிருக்க
வெல்லும்லாபம்பாக்கியாதிவிரும்பியிரண்டினுற்றிடவே
நல்லகுணமுந்தருமனுமாய்நான்குலட்சம்பொன்றேடி
அல்லலறவேவாழ்ந்துண்டேயவனிதன்னிலிருந்திடுவான். (௫கஙு)

இருந்தவில்லேலக்கினமாயிதிலேகுருவுந்தானுறவே
பொருந்துந்துலாத்திற்சனியுச்சம்புகலாபாதிநான்கிடத்தில்
திருந்தியிருக்கத்தனந்தேடித்திகழ்வனீதிதவறாமல்
தெரிந்தேபலரைரக்ஷித்துச்செம்பொன்கோடிதேடுவனே. (௫கச)

வருமேதனுசுகுடமீனம்வாழுங்கன்னிரிஷபமுடன்
புரமேய்நவகோளிந்தமனைபுகுந்தாற்றேவர்க்கரிதாய
திரமேயேகநவகோடிசெம்பொன்றேடிராச்சியங்கள்
உகமேயாள்வன்லக்கினமுமோங்குந்தனுசிற்பிறந்திடவே. (௫க௫)

வேறு.

ஏயதிரேக்காணத்திறைபுகர்கூடிட
தூயலாபாதிசுபர்வர்க்கமேற்றிட
ஆயவுலகிலரும்பொருள்கோடிதான்
நேயமாய்த்தேடுவனென்றுமொழிந்திடே. (௫கசு)

கிரகரசம்-வேறு.

இலகுமிரண்டின்மூன்றிடத்திலிரவியுறிற்கார்ப்புடன்சுடுகை
நிலவுக்குச்சீதளந்துவர்ப்புநீடுகுசற்குக்குளிர்மைகைப்பே
அலகுபுதற்குச்சகலமுமேயாம்பொன்னுக்குமதுரமழல்
கலகச்சனிக்கேகஷாயந்தண்கமழ்சுக்கிரற்குப்புளிகுளிர்ச்சி. (௫கஎ)

இரண்டாம்பாவமுற்றியது.

ஆ, விருத்தம்-௫ஙுஉ.

# மூன்றாம்பாவம்.

## சகோதரபலன்.

வேறு.

துலங்குமூன்றாமிடந்தன்னுற்றுணைவர்பலனைச்சொல்லுங்கால்
இலங்குமூன்றாமதிபதியுமிருந்தார்கண்டார்தமைக்கொண்டு
நலங்கொளுச்சம்பகைநீசநட்புமறிந்தேயுரைசெய்யப்
பலன்கொள்பெண்ணுண்கிரகங்கள்பார்த்துத்துணைவர்பலன்சொல்லே.
சொல்லுங்குசன்மூன்றாமிடத்திலிருக்கிற்பார்க்கிற்றுணைவரற்பம்
வெல்லும்பதினொன்றிற்குசனுமேவின்மூத்தோர்மிகவுண்டாம்
வல்லவிரண்டாமிடத்திற்சேய்மருவவுடனேவருந்துணைவர்
நல்லமும்மூன்றாய்ப்பார்த்துநாரியாணித்தனையென்னே. (௫௧௯)

வேறு.

உன்னுமூன்றாமிடத்ததிபன்குசன், நன்னர்நான்காமதிபனுங்கூடினும்,
தன்னமூவருநான்குறத்தந்துணை, அன்னர்பங்குமனைவந்துசேருமே.( )

வேறு.

சேருஞ்செவ்வாய்புடத்தைவைத்துக்கொண்டு
செய்யகருங்கோள்புடத்தையெடுக்கிலப்போ
நேருமந்தராசியிற்பொன்மருவும்போது
நிற்குமிளையோர்க்கரிஷ்டங்கருங்கோடன்னைப்
பாருமந்தப்புடத்திலங்காரகனைவாங்கிப்
பண்பொடுநின்றிடுராசிதனிலரசன்வந்தால்
ஊருமுற்றாரும்மறியச்சேட்டன்பார்விட்டே
உயர்பரமபதியணுகுமெனவுரைசெய்வாயே. (௫௨௧)

உரைசெறிமூன்றாமதிலாபாதிபதிக்கே
உறவாகமூன்றாதியுயர்ந்தபிரபலனாய்
வரவுடன்மித்திரருடனேகூடியேலாப
மதிலிருக்கவவருடனேவந்துதான்கூடித்
திரமுடனேயிருந்ததொகைப்படித்துணைவருண்டாந்
திரிபூமானெனக்கிரகச்செயலறிந்துபகர்மின்
கரிக்குழன்மதிவதனக்காவியங்கண்ணினிய
கனியமுதம்போலுமொழியாங்கன்னியாரே. (௫௨௨)

ஆர்கடகந்தேண்மீனலக்கினத்தைக்கண்டே
அன்புடனேநவபாகம்பண்ணியைந்தாம்பங்கில்
பாரிலுதித்தான்பின்னேபிறந்தகன்னிக்குப்
பக்குவமெப்படியென்னிலக்கடகமாயின்

நாரிவெகுதுலகாயம்முடையளாவள்
நவிறேளாகிற்பேய்போற்கால்குறுகிப்பருத்துச்
சேரவுருக்குலைந்திருப்பளாமீனமாகில்
செய்யகான்முடமாகித்திருந்திடுவளென்னே. (ருஉ௬)

வேறு.

என்னுமூன்றுமதிபதிபுட்த்திலேற்றிடுசெவ்வாய்புடத்தையுங்கூட்டி
துன்னிடுராசிகுருவருங்காலந்துணையுறுமிப்புடங்கூட்டி
மின்னியராசியங்கிசமட்டாய்மேஷமேமுதலவாயெண்ண
மன்னியதுணைவர்தொகைவரும்பாவர்மருவிடிலழிந்திடுமென்னே. ()

வேறு.

ஆறுமிடத்திலர்யகருங்கோள், வீறுயிருக்கமேவுமவன்றிசை
பேறுய்வரினும்பெலமுள்ளசகோதரம், நீறுயுயிர்விடுமேமியோரறிய.

வேறு.

அறிதாதையொன்பானுக்கொன்பானும்
அன்னைக்கோநான்கினுக்குநான்கினும்
செறிகனிட்டற்கொருமூன்றின்மூன்றினும்
சேட்டனுக்குப்பன்னொன்றின்பன்னொன்றும்
உறுமாமன்றனக்கும்புத்திரற்குமைந்திற்
கோரைந்திலுமுயர்சகோதரங்கள்
நறுங்குழலங்கிசராசியாண்பெண்ணோர்ந்தே
நவிலுவாயத்தொகையினளவேயென்று. (ருஉ௬)

கர்ணபூஷணபலன்-வேறு.

மூன்றுமிடத்திற்சுபக்கிரகமுற்றுப்பலமாயுறநோக்க
மூன்றுமாதிபலவானுயிருக்கமூன்றிலுச்சருறத்
தோன்றுகர்ணபூஷணங்கள்சூடியிருப்பன்சுகமாக
ஆன்றகர்ணபரணத்தையளிப்பாரிவரொன்றறைவாரே. (ருஉஎ)
அறையும்மூன்றிற்சுக்கிரனேயமர்ந்தான்முத்துக்கடுக்கனுறும்
இறைவனிருக்கிலபரஞ்சியிரவிசெவ்வாய்க்கிரத்தினங்கள்
அறையும்புதற்குச்சாமவன்னமணியுஞ்சேருமிதுவல்லால்
நிறையுமதியுற்றிடிச்சகலாபரணம்பெறுவர்நிச்சயமே. (ருஉஅ)

வேறு.

நிச்சயமாங்காரியுறிற்றிருமேனிக்கடுக்கன்
நீள்கருங்கோணீலஞ்செம்மாம்புக்குச்சிவப்பாம்
அச்சமறமூன்றுதிபிருக்கின்றவீட்டிற்
காதிபலனுயிருந்தாலணிசெவிப்பூணுளதாம்
உச்சிதமாயிவையெல்லாமிடக்காதுக்கென்ப
உயரும்லாபாதிபதியுறைந்தருளும்வீட்டோன்

இச்சையுடன்கேந்திரத்தினல்லோர்கண்டிடவே
இருக்கில்வலச்செவிவளம்பூணியம்பவும்பூண்டிடுமால்.()

போசனபாத்திரபலன்.

எண்ணியவொண்டாமாதிலாபமூன்றாதி
இதமிலாப்பாவியர்கண்டிடத்தனியேநின்றால்
உண்ணவுநற்கலமில்லானுகந்தரெண்டாம்வீட்டில்
உயருஞ்செங்கதிரோன்பெற்றலகிலுள்ளோர்காண
நண்ணியதோர்சனிமேவவொண்டாம்வீட்டாதி
நண்பொடுமூன்றாம்வீட்டினயந்துநிற்கத்தானும்
பண்ணுடனேசுபர்பார்க்கில்வரும்வெள்ளிக்கலமே
பாவக்கோள்விழிநோக்கப்படைப்பதுவெண்கலமே. ()

மூன்றாம்பாவம்-மூற்றியது.

ஆ விருத்தம்-ருசச.

# நான்காம்பாவம்.

## வாகனபலன்.

சசிவாகனாதிசன்மத்தாதியிம்மூவர்கூடில்
அசுவவாகனமுண்டாகுமவருடன்வெள்ளிகூடி
வசையி * லாந்தோளியுண்டாம்வாகனத்தானத்தாதி
ஒசிவின்றிவியத்திலின்றியுற்றிடிற்சிவிகையுண்டே. (ருகக)
பரிவுடன்பாக்கியாதிபதிவாகனத்தானத்தில்
குருசுக்கிரனேடுகூடியிருந்திடிலலதுநோக்கில்
கருதியகனகதண்டிகைவருமிவரோடிந்து
பிரியமாய்நிற்கிற்பூச்சக்கரக்குடைபெறுவர்தாமே. (ருகஉ)
பூசக்கரக்குடைதந்தானைப்பொருந்தியேழதிபனிற்கில்
வீசுசாமரையுண்டாகுமிகுபாக்கியத்தோனுன்கோன்
பாசமாம்பத்தினிற்கப்பத்தாதிபதிசன்மத்தில்
நேசமாய்நிற்கிற்சிங்காதனமுளனிருபன்பாரில். (ருகங)

வேறு.

பரவுவாகனாதிபதிபாக்கியத்தினிற்கப்
பாக்கியத்தானாதிபதிகேந்திரத்தைப்பற்ற
இருவர்நிற்குமனைநல்லோரிருக்குமனையாயின்
இனியசுபக்கிரகத்தோடிசைந்துமிகக்கூட
விரவுலக்கினாதிபதிவாகனகேந்திரத்தில்
மேவுகினுங்கனகதண்டிகையுமிகுதனமும்

* ஆந்தோளி - தண்டிகை.

மருவுமதயானைவாகனங்களுமுண்டாக
  வரங்கொடுப்பன்வாகனகாரகனுஞ்சுக்கிரனே. (௫௯௪)
சுக்கிரனுன்காதியுடனேகூடினாலும்
  துலங்குமிவரிருவர்கேந்திரத்தினிலுற்றாலும்
திக்கெனநான்காதிசசியுடன்லாபத்துறினும்
  திறல்பலவாகனமுண்டுதீதகலநான்கில்
தக்ககுருவிருந்திடவேவாகனத்தானத்தான்
  தன்னுடன்சுக்கிரன்கூடிற்றண்டிகையுண்டாகும்
மிக்கசுங்கன்றான்வாகனாதியேயாகி
  மேவுசன்மாதியைக்கூடில்வெறுஞ்சஞ்சாரமேயாம். ()

சாரமுறுஞ்சோமனுக்குமூன்றிற்சுக்கிரனுந்
  தானிருக்கச்சுக்கிரனூர்தமக்குமேமூன்றில்
வீரமுறுமதியிருக்கவன்றியேபின்னும்
  வினவியொருவனையொருவர்பார்த்துமேநிற்கப்
பாரமுறுங்குடும்பத்தானத்தைநல்லோர்நோக்கிப்
  பார்த்தாலுமிலக்கினத்தைப்பார்க்கினும்வாகனங்கள்
சேருமிகவென்றென்றேநல்லோர்கள்சொன்னார்
  சிலைப்புருவக்கயலொத்தவிழித்தெரிவைகேளாய். ௫௯௬

வேறு.

நாலிடத்ததிபன்றானுமிலக்கினத்துறபல்லக்கின்
மேலுறுஞ்செல்வமெய்திமேதினிதன்னில்வாழ்வன்
கோலியலக்கினத்திற்குருவுறவவனைநல்லோர்
சாலவும்பார்க்கமேலாந்தண்டிகைமருவும்வாகாய்

வேறு.

வாகனாதிமருவுமனைதனக், காகவீனாந்தகத்துக்கதிபனும்,
ஏகவீட்டுக்கிறைவனைக்கூடிடில், போகவான்வெகுபூமிக்கரசனே.

வேறு.

அரசேகேள்வாகனத்தானாதிநின்றராசி
  அன்பொடுநல்லோர்வீடாய்ப்பணபரகேந்திரமாய்
உரைசெறியச்சனித்தசிறுகுடிசையுமாடரங்காம்
  உகந்தருள்ன்னைக்கின்பமுண்டாம்வாகனத்தோன்
வரிசையாய்ச்சனிகுருவேன்மதகயந்தண்டிகையாம்
  வளர்கலைமாமதியாகிற்பூச்சக்கரக்குடையாம்
விரைசெறிசுக்கிரனாகிற்பல்லக்குண்டிரவி
  மேவிலெருதாம்புகற்குவிசித்தபல்லக்காமே. (௫௯௭)

வேறு.

பலன்றருவாகனுதிபண்புறுபுட்த்திஞேடு
கலந்துசுக்கிரன்புடத்தைக்கூட்டியேகண்டராசி
தலந்தனிலரசன்வந்துதான்செறிகேந்திரத்தும்
நலந்திரிகோணமீதுநண்ணில்வாகனமுண்டென்பர்.(ருஙக)

வேறு.

பலர்புகழுஞ்சுக்கிரற்குமூன்றிலேழில்
பண்புடன்சந்திரனிருக்கச்சசிக்சேழ்மூன்றில்
நலமருவுஞ்சுக்கிரன்முனிருக்கவேதான்
நண்பொடுவாகனமுண்டுநான்காமாதி
நிலவுநல்லோருடன்கூடிச்சந்திரகேந்திரத்தில்
நிற்கில்வாகனமுண்டுநிதியுமிகத்தேடி
உலகினெடுநாளரசன்போலவேவாழ்வன்
உணர்புத்திமானென்றேயுரைத்தனர்நல்லோரே. (ருச௦)

உரைத்திடுநான்காமதிலக்கினுதி
யுடன்கூடத்தீயோர்களுடனுங்கூடி
நிரைத்தொருவீட்டினிலிருக்கவந்தவீடு
நீடுசன்மத்தாதிக்கோருச்சமனேயாயின்
நரைத்தபரிவாகனங்களுளன்புத்திமானும்
நண்புடனேமன்னரையெங்நாளுஞ்சேவிப்பன்
இரைத்திடுசன்மாதிபதிநான்காதிநல்லோர்
இவர்மூவர்கேந்திரத்திலிருக்கிலின்பமுண்டாம். (ருசக)

வேறு.

ஆமிரவிமதிநல்லோர்மூவரொன்ருய்க்கூடி
அன்பொடுகேந்திரத்திருக்கின்மதயானேசேரும்
நேமமொடுசென்மாதிபத்தாமாதிபனும்
நிறைந்தசுபருடன்கூடிக்கேந்திரத்தினிற்கில்
வாமமுறுமதகரிவாகனஞ்சேரும்பருவ
மானசவுந்தரமனேயாண்மருவுமறிவினனும்
தீமையிலாச்சன்மாதிலாபாதிநல்லோர்
சேர்ந்துகேந்திரத்திருக்கிற்சிந்துரமுண்டாமே. (ருச௨)

உண்டாம்விப்பிரதுரையாலதிகதனமுடையன்
உறுசன்மத்திற்பத்திலுத்தமர்களிருக்க
மீண்டாஞ்சன்மாதிபன்பத்தாமதிபனேடும்
விரும்பியேநல்லோர்தாமும்மேவிநிற்க
வண்டாருங்குழலின்மடவாயரசராலும்
மாணிக்கவகைசேருமன்னரைச்சேவித்தே

கொண்டாடுசத்திரசாமனாகண்மிகவுள்ள
கோமானுகுவனென்றேகூறுவர்மேலோரே. (௫௪௩)

கூறுஞ்சன்மாதிபன்பத்தாமிடத்திலிருக்கக்
குலவுபத்தாதிபனுன்காமிடத்திற்கூட
வீறுடனுன்காமாதிபதியுச்சமாகில்
வேந்தனுகுவன்சுகவான்வெகுலீலாவிநோதன்
பேறுடன்பத்தாமாதிபதினுன்கினிற்கப்
பெருமையுடனுன்காதிபதிபத்தினிற்கத்
தேறுசன்மாதிபதியுச்சமாய்மேவத்
திரசகலவாகனங்கள்சேருமன்னுமே. (௫௪௪)

மன்னியவொண்டாமதிபன்லாபத்திலிருக்க
மற்றுமந்தலாபாதிவந்துவொண்டின்மேவ
உன்னியநான்காமாதிபதியுச்சமாக
உயர்சகலவாகனங்களுளவேந்தனுவன்
சொன்னவிரண்டாமதிபன்லாபாதியிருவர்
தொடர்ந்திரண்டாமிடத்திருக்கச்சூழ்பத்தாமதிபன்
பின்னுமுச்சனுயிருக்கவாங்தோளியுண்டாய்ப்
பேருலகில்வாழ்வனெனப்பேசுவர்நூல்வல்லோர். (௫௪௫)

மாதருபலன்-வேறு.

அன்னைதன்முனத்தாதியதியட்டமத்திற்காரி
தன்னுடன்கூடிற்பின்கோசரமன்னைக்கைந்தொன்பானின்
மன்னியகாரிமேவின்மாதாவுக்கரிட்டஞ்சொல்லும்
மின்னியநற்கோளுச்சமெய்திடினன்காநல்லாய். (௫௪௬)

நாலிரண்டேழிடத்தினதிபராய்நண்ணுமூவர்
நாலிரண்டேழிடத்திற்சனிகுசனுடனேநண்ணில்
நாலிரண்டேழிற்செவ்வாய்நண்ணிடிற்காரிபார்க்கில்
சாலவன்னைக்கரிட்டஞ்சாற்றுவர்சனியைக்கொண்டே. (௫௪௭)

சனிகுசர்க்கைந்தேழொன்பான்றனிற்சசியுமிற்றுய்நில்லாள்
இனியபொன்பார்க்கினிற்பளிலக்கினத்திந்துநிற்க
முனிபவரிந்தைநோக்கமுந்துமேழிடத்திற்செவ்வாய்
தனியுறவந்தபிள்ளைதனைப்பிறர்வளர்ப்பர்காணுய். (௫௪௮)

சதிரவற்கிரண்டிற்பன்னிரொண்டினிற்காரிநிற்க
மதிதனக்கிரண்டிற்பன்னிரொண்டினின்மந்தனிற்கக்
கதிர்குசன்கூடிமற்றுங்காரிசந்திரனுங்கூட
அதிபனுந்தந்தைதாய்க்குமரிட்டமென்றுரைகள்பன்னே. (௫௪௯)

வேறு.

பன்னிரண்டிவிரண்டினிற்சன்மத்திலிந்து
பாவருடன்கூடிநிற்கப்பயந்தவன்னைக்கரிட்டம்
அன்னையதிபன்றிசையின்மாதுருத்தானத்துக்
கைந்தொன்பானிற்சாரியனுகிலரிட்டமதாம்
மன்னியமாதுருத்தானந்தனக்கட்டமத்தில்
மந்தனுன்காதிபனுமருவியுறிலரிட்டம்
என்னுநான்கதிபனுடனேசெவ்வாயேனும்
இரவியதாகிலுங்கூடிவிடர்நோய்புக்தியினில். (௫௫௦)

புந்தியுநான்காதிபனுந்தீயோர்வீட்டிற்
புகழ்க்கோணேக்கறவருநாளரிட்டமாகும்
சிந்தையுடனுள்காதியுடன்றனுதி
சேர்ந்தெங்கேநிற்கிலும்பொன்சேதமன்னைக்
கந்தநான்காதியுடன்காரிசெவ்வா
யனுகிலவர்திசையிலன்னைக்கரிட்டமாகும்
வந்துசெவ்வாய்நான்கிலுறிற்சனியுமிந்து
மருவியெங்கேநின்றாலுமரணமற்றங்கதமே. (௫௫௧)

வேறு.

அத்தங்கதமாய்மாதுருத்தானுதிவியத்திலுறநான்கில்
மெய்த்துங்கலெவெண்மதியிருக்கவதற்கேழ்காரிமேவுகினும்
புத்திசெறிசு●கிரற்கேழிற்பூமிசுதனும்பொருந்திநிற்கில்
சித்தமன்னைதனக்கரிட்டஞ்சேருநற்கோள்செறியினன்றாம். (௫௫௨)

செறியுமிரவியுடன்காரிசேர்ந்துகுடும்பந்தனிலிருந்தே
அறியுமூன்றுமதிபனையுமன்னைபதிநான்காமிடமும்
பிறியமறவேசனிபார்க்கப்பெலமற்றிந்தோட்ரவிருக்க
மறநீக்கோனுன்காதியுச்சமானுலும்போமாதாவே. (௫௫௩)

மாதாபதியிற்சசிவெள்ளிமாநாகம்மூன்றுறவதற்கேள்
மீதானேந்திற்காரியுறவெய்யோனுடன்மூன்றுதியைந்தில்
தீதாயிருக்கச்சனியவனைத்தெரிந்துபார்க்கக்குடும்பத்தை
ஏதானங்காரகன்பார்க்கவின்றாட்கரிட்டமெனச்சொல்லே. (௫௫௪)

சொல்லார்மேடலக்கினத்துக்கன்னைபதியிற்சுங்கர்புதன்
உல்லாசங்கள்பெறநிற்கவதற்கேழரசனுறச்சசிக்குப்
பொல்லாவேழிற்சனியிருக்கவன்னைக்கன்னைபோமுச்சம்
நல்லமதியுநல்லோருமன்னைக்கரிட்டநல்காரோ. (௫௫௫)

நல்கார்சனிசெவ்வாயிரண்டுநான்காமிடந்தன்னைப்பார்க்கில்
ஒல்காதிருக்கிற்காரகனுமொசிவாய்விரையமுற்றிடவே

சொல்லாளன்னைதனக்குறுநோய்சினத்தேயரவஞ்சேர்ந்துற்றால்
நில்லாளன்னைபொன்றேக்கினிற்பள்சிலநாணீணிலத்தே. (௫௫௬)

நிலத்தினான்காமிடந்தனக்கோரிரண்டாமிடத்திலிருந்தவர்கள்
பலத்தைக்குடும்பாதிபன்பலத்தைப்பெற்றதாயும்பலன்பெறுவள்
நலத்தநான்காமதிபனுச்சநண்ணியாணங்கிசத்திருந்தால்
குலத்துக்கொழுநன்றண்டிப்புக்குள்ளாகாளக்கொடிதானே. (௫௫௭)

கொடியகதிராதவன்புடத்துக்குள்ளம்புலியைத்தான்வாங்கிப்
படியுமிராசிதனிலரசன்பற்றுங்காலநிரியாணம்
கடியமதியின்புடத்துக்குள்காரிபுடத்தைத்தான்வாங்கி
நெடியராசிதனிற்காரிவருநாளன்னைநிரியாணம். (௫௫௮)

ஆணிமதியந்தனக்கேழிற்செவ்வாயுறிலன்னைக்கரிட்டம்
காணியாமாதுருத்தானங்கடகமாகப்பிறைநிற்கில்
பூணும்வயதுபூரணமாம்பொல்லாரிரண்டுபுறமிருக்க
ஏனுமதியநடுவிருக்கவன்னைக்கரிட்டமிசைந்திடுமே. (௫௫௯)

இசைந்தவன்னைபிதாத்தானத்திறைவரிரவியுடன்கூடி
அசைந்திடாதெட்டாறுவியத்துறினுநீசமாகவுமே
நிசந்தானுறவேயிருக்கிற்றாய்தின்றதந்தையிருவருக்கும்
கசந்தேபிரியமில்லாதகடினமைந்தனுங்கண்டீர். (௫௬0)

கண்டவன்னைபிதாத்தானக்கடவுளிசைந்தெங்கேயுறினும்
மண்டுமிரவிமதிகூடிமாதாதந்தைதானத்தில்
அண்டியிருக்கிற்பிதாவுட்னேயன்னைக்கெய்துமனுமரணம்
பண்டுநான்கொன்பதற்கிறைவர்பலத்தாற்பாலன்பரிவுசொல்வாம். ()

சொல்லுநான்கொன்பதுக்கிறைவர்தொடர்ந்துதனபாக்கியலாபத்
தல்லலறவேயிருந்தாலுமடைவேயுச்சகேந்திரத்தும்
வெல்லுந்திரிகோணங்களினுமேவிற்றந்தை தாய்மைந்தர்
எல்லையில்லாச்சந்தோஷமெய்தியிருப்பாரென்பாரே. (௫௬௨)

என்பாரொன்பானதிபதியினியபலமாய்ச்சன்மாதி
முன்பாநான்காமதிபதிமூவர்பலன்களற்றிருக்க
அன்பாயீன்றதாயுதரத்தனுகுங்கர்ப்பத்தங்காளில்
வன்பாய்வருந்திமரிப்பனெனவகுத்தார்சுருதிவல்லோரே (௫௬௩)

இந்துசேயாறுமாதியிவர்களுங்கூடிநான்கில்
வந்துதானிருக்கிலீன்றமாதாவுஞ்சோரம்போவள்
அந்தநான்கொன்பதொன்றிற்கதிபர்கள்கூடிக்கோணம்
நந்துகேந்திரத்தின்மேவத்தாயுடன்கட்டைநண்ணும். (௫௬௪)

## க்ஷேத்திரபலன்.

பத்துநான்கதிபன்செவ்வாயாறெட்டிற்பன்னிரண்டில்
உற்றநீசத்தானத்திலுமிற்பங்குமனையுமில்லை
மற்றிவர்பலமுற்றுக்கான்மனைபங்குலாபமுண்டாம்
பெற்றநான்கதிபனுச்சம்பெறின்மாடகூடமுண்டாம். (ருகூரு)

கூடமாளிகைசிங்காரங்கொடுப்பனான்கதிபனன்கில்
நீடிவாழ்ந்திடவன்றேனைநெருங்கிநின்றவர்கடாமே
நாடுநல்லோர்களாயினன்மனைபாவராயின்
ஊடியேவீடுபாழாய்க்கிடக்குமென்றுரைவழங்கும். (ருகூகூ)

வழங்குநான்காமதிபதியும்வளர்சத்துருநீசத்திலுற
ஒழுங்கும்வியத்தாதிபன்றனத்திலுறச்சன்மாதிசெங்கதிரும்
முழங்குநான்காதிபன்கூடநல்லோர்நோக்கமுமுறிருக்கத்
தழங்கும்பங்குமனையெல்லாந்தானும்பறிபோந்தப்பாதே. (ருகூஎ)

தப்பாதாறுமதிபதியுந்தான்பத்தேழிலிருந்திடவே
ஒப்பாஞ்சன்மந்தனிற்செவ்வாயுறையைச்சுபக்கோளுறப்பார்க்க
இப்பார்தன்னிற்சத்துருவாயிருப்பர்மனைபங்குள்ளதெல்லாம்
செப்பார்மூலையாயிவன்றனக்குச்சேருந்திண்ணந்திறனுலே. (ருகூஅ)

நாலாமிடத்தினதிபனும்லக்கினதியுடன்கூடி
மேலாய்நாலினுமிலொருவன்வீட்டிலிருந்துமிகவாழ்வான்
சேலாநாலாமதிபனுடன்சேரும்பாவரொத்தனையோ
மாலாய்க்கேளத்தனைவீடுகட்டிச்சேதம்வழங்குவனே. (ருகூகூ)

வேறு.

வழங்கும்லக்கினமன்பலனின்றியே, முழங்குமாறின்மூன்நாலினுறைந்திடில், தழங்குஞ்சன்மந்தனைப்பாவர்கண்டிடில், பழங்கணுமனைப்பங்கு மில்லானென்னே. (ருஎ0)

வேறு.

பங்கமில்வியத்தின்மன்னன்பரிந்திரண்டாமிடத்தில்
தங்கநல்வீடுகட்டிச்சகலபாக்கியமுஞ்சேர்ப்பன்
இங்கிதவியத்தோன்றன்றேடெத்தனைகிரகங்கூடும்
சங்கையத்தனையாம்வீடுகட்டிடுசமர்த்தன்றானே. (ருஎக)

தானமாஞ்சன்மவீடுசரமெனிற்பரதேசத்தில்
ஆனதோர்திரங்களாயின்மருவுவன்சுதேசந்தன்னில்
ஈனமிலுபயமாயின்பரதேசத்திடையிற்பாதி
ஊனமில்சுதேசந்தன்னிற்பாதிநாளுறைவன்கண்டீர். (ருஎஉ)

கண்டபன்னிரண்டாம்வீடுகருதுநல்லோர்வீடாயின்
திண்டிறனகரந்தன்னைச்சேர்ந்தருகுறவிருப்பன்

பண்டுசூத்திரர்தம்வீடாய் லாபாதிக்குறவுமாயின்
மண்டுசூத்திரரிருக்குமனைக்கருகிருந்துவாழ்வன். (௫௭௩)

இருந்தபன்னிரண்டாமாதியீன்றதாய்துணைவர்தந்தை
பொருந்தியமனைவிமக்கடானத்திற்போய்நின்றாலும்
திருந்துமத்தானத்தாதிதன்னுடன்சேர்ந்துற்றாலும்
அருந்துணையானவீடுமெவரவர்தமக்கேயாகும். (௫௭௪)

பரவிஷயம்.

மாலாய்நாலாமிடந்தன்னைமருவிப்பாவரினிதிருக்க
மேலாய்நோக்கச்சன்மாதிமீண்டும்பலன்களற்றிருக்க
ஏலாம்பாவருடன்கூடியிருக்கநல்லோர்பார்வையறப்
பாலோன்விஷயம்வேறென்றேபண்பினுணாப்பர்பாரோரே. * (௫௭௫)

வேறு,

பாரிலுறுஞ்சன்மாதிநான்காமாதிபாக்கியத்தானுதியிவர்மூன்றுபேருஞ்
சேரவேயாறிடத்துமலதாறுதிசெறிந்தருளுமங்கிசத்துந் திடமாய்நிற்க
வீரியநாலாதிபதியுடன்பாம்பேனுமிக்கசனிதன்னுடனேமேவினாலும்
தேரிலிதுபரவிஷயமென்றுசொல்வர்சிலைப்புருவக்கயற் கண்ணுறுந்
[தெரிவையாரே

வேறு.

ஆறனுலாமிடத்ததிபனவடன்குமரன்சன்மத்தில்
சேரவிருக்கவவனுடனேதிகழும்பாம்புசெறிந்திருக்கப்
பாரிலறியச்சனித்தவனும்பரவுங்குலபுத்திரனல்லன்
ஏருங்கடைசிக்குலத்துள்ளான்என்பான்தந்தையென்றிலகும். (௫௭௭)

வேறு.

இலகியமூன்றாமிடத்திற்குசன்கருங்கோள்கூடில்
எழிற்பகினிசங்கமமாறுதிபனானுஞ்
சலமலியெட்டாதிபனுகிலுஞ்செவ்வாயுடனுஞ்
சசியுட்னுங்கூடிலவள்சங்கமமேயாகும்
நலமலியுமிவருடனேகரும்பாம்புநீசன்
நவில்சனிசூத்திரன்வெள்ளிநண்ணிடில்வைசியனுமாம்
குலவியசூரியன்கூடின்மறையவனாமென்றே
கூறினரிப்படித்தெரிந்துகொண்டறியவேண்டும். (௫௭௮)

வேண்டிநாலாமாதியாறுமாதிபனும்
மெய்யிற்றுப்பலராகவிணைந்துடன்கூடிடினும்
நீண்டபிறையும்பிருகுந்துர்ப்பலரேயாக
நின்றிடுநான்காமிடத்தைப்பாவர்கணோக்கிடினும்
பூண்டநாலாதிசசியொடுகருங்கோள்கூடப்
பொருந்தியசன்மாதிநான்காறென்பாநதிபன்

ஈண்டியவேழாமிடத்திலிவர்நால்வர்கூடி
இருந்தக்காற்பரவிஷயமெனப்புகலுவாரே. (ருஎகூ)

வேறு.

சிறந்தமதியையுஞ்சன்மமனையுஞ், அறிந்தபார்வைகளாசனேக்காவிடில், உறைந்தகதிர்மதியொன்பதிலுற்றிடில்,பிறந்த சேய்பரசாதகம்போற்றுமே. (ருஅ0)

போற்றும்லக்கினம்பொருந்துங்கதிர்மதி, தோற்றியிருக்கத்துணைகுழாசனும், சாற்றியநீசன்சனிநவாங்கிசையில், ஏற்றியிருக்கவிதுபராசாதகம். (ருஅக)

பரிதியின்கீழ்மைபண்புறுசோதி,அருகியதுதிகையமர்ந்திடிலேனும்
பெருகியபுதனும்பெறுநாளிரோவதி,உருகியசத்தமியுறும்பராசாதகம்.

உறுஞ்சனிக்கிழமையுற்றபின்னவிட்டம்,நறுந்துவாதசிநாளினிற்பிறந்தோன், அறிந்திடுமிதுபராசாதகமென்றே, சிறந்தநூலறிந்தோர்செப்புவர்தாமே. (ருஅங)

மாதுரரிட்டம்.

செங்கதிரிருக்குஞ்செவ்வாயங்கிசையில், தங்கியுங்கிசைபோன்றன்மனைலக்கின, மங்குறிற்சன்மமதைச்சேய்பார்த்திடில்,பொங்கியசிசுபொடிபடுவாரே. (ருஅச)

வெண்பா.

மூன்றுமதிபதியுமூரிச்சனியுடனே
தோன்றியைந்தாமிடத்திற்சூழ்ந்திடினும் - ஆன்றகதிர்
ஆறஞ்சுநாலிட்டத்துற்றாலவன்றாய்போமென்றே
கூறஞ்சாமாண்டிற்குறித்து. (ருஅரு)

குறித்ததாய்தந்தைகுலவுமனைக்கதிபர்
மறுத்தவர்கண்மாறிமனையுறினும் - சிறுத்தேநல்
அத்தமனமாயிடினுமன்னையனுமரணம்
சித்தமெனச்சொற்றிடுநீதேர்ந்து. (ருஅசு)

நான்காம்பாவம் முற்றியது.

# ஐந்தாம்பாவம்.

## புத்திரபலன்.

அஞ்சிற்கஞ்சிகாரிமதியங்காரகனேடிரவியுமில்
துஞ்சுமாமன்சுபர்நோக்கிற்றுன்பமில்லைப்பூசத்தில்
விஞ்சுபாதநடுவிரண்டேலன்னைக்கன்னைவியமாகும்
வஞ்சிபிழைக்கினேயரிட்டமாமன்றனக்கேவருங்கண்டீர். (ருஅஎ)

மருவுஞ்சன்மலக்கினத்தில்வாழுஞ்சன்மாதிபனேடும்
அருளுமைந்தாமிடத்ததிபனனுகிற்பார்க்கிலன்புடனே
ஒருவர்தமதுபதியினின்மற்றொருவர்மாறுகவுநிற்கிற்
பெருமைப்புதல்வர்பிறந்திடுவர்பிறந்தானமனுக்கஞ்சாரே. (ரு அ௭)

வேறு.

அஞ்சாகுமிடத்திலுறுமவராற்றோஷம்
அணுகும்வகைசனிகுழவிக்கருக்கன்றந்தைக்கே
துஞ்சாதமதிக்கன்னேபுதனுலன்னே
சுற்றமதற்கரசனுற்றந்தைசுற்றமாகும்
நஞ்சாருங்கரியகோள்சுதற்குச்செவ்வாய்
நண்ணிடிலம்மானுக்குத்தோஷமதேயாகும்
மஞ்சாருங்குழன்மடவாய்யரச்னேந்தின்மேவ
வந்திடிற்சந்தானமத்திபமுதித்தருனே. (ரு அஅ)

வேறு.

உதித்தவொன்றைந்தாமாகியுற்றவொன்றைந்துறுமல்
மதித்ததோர்நோக்கமின்றின்மகவில்லேச்சுபாங்கிசத்தில்
பதித்துமிலாயினுண்டாம்பயிலேந்தாமதிபன்மூன்றில்
விதித்திடும்படியேநிற்கின்மேவுபுத்திரர்தாமறபம். (ரு அகூ)
புத்திரத்தானத்ததியேகனுப்புதன்வீட்டேறில்
புத்திரரில்லேநல்லோர்கூடிடிற்பிறந்துசாவர்
ஒத்திடுபாபர்சேரின்மகவில்லேயெருதுகும்பம்
வித்தகயோனையார்க்குமகவில்லேவிளம்புங்காலே. (ரு கூ௦)
விளம்புமேழாமிடத்தோன்மேவுச்சநீசமின்றிக்
களங்கமில்லாதிருக்கிற்கருதுமூத்தாளுக்கில்லே
இளங்கொடியாளுக்குண்டாமேழுளோனுச்சநீசம்
வளம்பெறுமங்கிசத்தின்மருவிடின்மகவுண்டாமே. (ரு கூக)

வேறு.

அஞ்சாமிடத்திற்செங்கதிரோடரவுங்கூடித்தானிருக்கின்
மஞ்சார்குழலாய்தந்தைக்கும்மைந்தன்தனக்கும்வரும்பகையே
செஞ்சாலிகளுந்திரவியமுஞ்சேதமுண்டாந்திறமையுடன்
துஞ்சாதிருந்ததலங்கள்விட்டுத்தூரப்போவதிலக்கணமே. (ரு கூ௨)

வேறு.

லக்கினதிபதிக்குநாலாதிபன், ஒக்கநல்லுறவாகவுந்தானுமில்
தக்கதந்தைதனக்குப்பின்மைந்தர்கள், மிக்கபூமியில்மேவுவர்காணுமே.

வேறு.

காணும்லக்கினத்திற்செவ்வாய்தனக்கேழிற்காரிபின்னும்
கோணுமூன்நான்கில்வெய்யோனிப்படிக்குலவிநின்றால்
ஆணுடன்யெண்ணுமில்லேயஞ்சாதிபாவனுயேழில்
பூணேழோன்பாவனுயைந்துற்றிடிற்புதல்வரில்லே. (ரு கூ௩)

புத்திரத்தானத்ததிபொருந்துமங்கிசையைத்தொட்டு
மெய்த்துலக்கினமெட்டெண்ணிமேவியேகண்டிலக்கம்
எத்தனையோதானந்தத்தொகைப்படியினியமைந்தர்
சித்தமாய்ப்பெறுவரென்றுதெரிந்தவருரைசெய்வாரே. (௫௯௫)
உரைசெறியலியோகங்களொண்மதிக்கேழில்வெய்யோன்
பரவியேதானின்றாலும்பயில்சனிக்கேழிற்புத்தி
திரமுடனின்றபோதுந்தீதாமிரட்டைராசி
இரவிமேவிடச்செவ்வாய்பார்த்திடலலியோகமூன்றும். (௫௯௬)
மூன்றும்பின்னுதயராசிமுதலொற்றையாயதற்குள்
நான்றயிந்துற்றபோதுமிரட்டையொற்றையிலுமிந்து
தோன்றிடச்செவ்வாய்புந்திபார்க்கினுஞ்சோமன்காரி
ஆன்றவங்கிசமும்லக்கினமாயிடனலியுமாமே. (௫௯௭)
அலியட்டமாதியைந்தாமிடத்தினிலிருக்கவைந்தாம்
வலியவீட்டதிபனெட்டின்மருவவேசுபர்நோக்கின்றி
நலியபுத்திரருமில்லைவிலைந்தாமதிபன்றானும்
மெலிவதாய்வியமாறெட்டின்மேவினுமில்லைமைந்தர். (௫௯௮)
மைந்தர்தானங்கள்காரிபுந்திதன்மனையதாக
அந்தவீடதனைக்காரிகுளிகனோடமரிற்பார்க்கில்
சுந்தரத்தத்தனுண்டாஞ்சுபர்பலமுடனேயைந்தில்
வந்திடவைந்தோனோக்கமற்றிடிற்றத்தாய்வாழ்வன். (௫௯௯)
வாழ்மீனலக்கினத்துக்கைந்தினின்மன்னனுச்சந்
தாழ்விலாதிருக்கிற்பெண்கடன்னையேபெறுவனைந்தோன்
நீள்குசனுருமாதிமூவரைநேயமில்லார்
சூழவேபார்க்கிற்சத்துருக்களாற்சுதர்க்குப்பீடை. (௬௦௦)

வேறு.

பீடிலைந்தாமதிபனுமைந்தினில், நீடுபாவருடன்கூடிநின்றிடில்
நாடிநோக்குறநல்லகுழவியும், வாடுந்தேவதைவஞ்சனையாலுமே. ()

வேறு.

வஞ்சனைநாவினிலன்பிலர்வந்திடவைந்தினின்மன்னனும்
விஞ்சியகாரியோடங்குறவியமதிலன்பிலர்மிண்டியும்
தஞ்சமெனுஞ்சிறுமைந்தனுந்தாய்கரந்தன்னிலிறந்திடும்
அஞ்சினவந்தனில்வந்துறுமையர்வெகுண்டிடவுங்கெடும். (௬௦௨)
கேட்றுபுத்திரநாதனுங்கிளர்மதிசுக்கிரன்மூவருங்
கூடிமடந்தையிராசியிற்கோதையரங்கிசமீதினில்
நீடியிருந்திடுவோர்களைநேயமிலார்விழிநோக்குறில்
நாடியபெண்பிள்ளையேபெறுநாவலர்கண்டறிவார்களே. (௬௦௩)
வார்சடையார்முடிமேலுறுமாமதிமேவுமனைக்குமே
ஏர்பெறுசன்மமனைக்குமேயெண்ணியோரைந்துதலத்தையும்

பாரினிலுத்தமரானவர்பார்வைபுறிற்சிறுபாலராம்
காரிமுதற்கொடும்பாவரேகாணிலிலைச்சிறுபாலனே. (௬0௪)
பாலர்பிறந்திறுமைந்திலேபாரொருகேதுபரிந்துறில்
பாலர்பிறந்திறுமைந்திலேபாழ்கருநாகமமர்ந்துறில்
சிலசன்மாதியைந்தாமிடஞ்சேரவைந்தாதிதிடம்பெற
வாலிபந்தன்னினின்மைந்தரும்வந்துபிறந்துவளருவார். (௬0௫)
வளருஞ்சன்மாதியுமேழுறமற்றுநாலாதியேழாதியும்
கிளரமகிழ்ந்தொருவீட்டுறக்கேடரவோரிரண்டாதியும்
தளர்வறவேசன்மமீதுறத்தான்வருமைந்தர்சமர்த்தராய்
ஊருமிரண்டிறையைந்தினிலுறமகவுண்டிறைபார்வையே. (௬0௬)
பாரினிலைந்தாமதிபதிபண்புடனின்றபுடத்தையுஞ்
சூரியதேவர்புடத்தையுந்தொகையொடுகூட்டியராசியில்
தார்புனையும்புயராசனுந்தகைமையுடன்செறிகாலமே
வீரியவானொருமைந்தனும்மேவுவனம்புவிமீதிலே. (௬0௭)
மீதிலைந்தாதிபுடத்தினிலிரவிமகன்றனைவாங்கியே
போதுறுராசியின்மன்னுறும்போதிறுமேசிறுபுத்திரன்
கோதறுமன்னன்புடத்தினிற்குளிகனைவாங்கியராசியில்
ஏதமில்சனிவருபோதிராதேகமரித்திடும்பாலரே. (௬0௮)

வேறு.

அறிந்திடும்பரிதிகேந்திரத்தன்னிலம்புலியிருந்திடப்பிதாவில்
அற்பமாம்புதல்வர்சரித்திரஞ்சசிதானனுகியேபணபரத்திருக்கில்
செறிந்திடுந்தந்தைதனக்கிணைசுதனுந்திங்களாபோக்கிலியத்தில்
சேர்ந்திடிற்பிதாவிலதிகபுத்திரனுஞ்செங்கதிரோனுறும்பதிக்கே. ()
நிறைந்தருளைந்தேழொன்பதுவியத்தினிலவுறநிலவுறுமனைதான்
நீடுநட்டாக்ஷியுச்சமாயிருக்கநிருபனுமதிதனைக்காண
உறைந்திடுந்தந்தைக்கதிகமாஞ்செல்வமுள்ளபுத்திரனெனச்சொல்லும்
உலவுமம்மதியைச்சுக்கிரன்காணிலுணர்வெகுபோகவானுமே. (௬௧0)

வேறு.

போகமாமைந்தாமதிபன்லாபாதிபொருந்தியேமித்துருவாக
வாகுசேரைந்தாமதிபதியுச்சனுமாய்வளம்பெறுசுபனுமேயாயின்
மோகமாய்லாபத்தலத்தினிலிருக்கமுறைதவிராதபுத்திரர்கள்
ஆகவேபலருண்டவருடன்கூடுமத்தனைபுதல்வருண்டாமே. (௬௧௧)
ஆமெனுமைந்தாமதிபனுதித்தனனுகிலோவெகுபிள்ளையுளதாம்
ஓமெனுமைந்தாமதிபனும்பாம்புமொக்கவேயெட்டினிற்கூடில்
தேமெனுந்தத்துபுத்திரனுவன்றிருந்துமைந்தாதிபனுடனே
தோமெனும்பாம்புமிரவியுங்கூடிற்றொடர்மிருகங்கள்போலிருப்பன். ()
இருந்திடுமிதுனலக்கினமாகயினியகோவிடத்தினிற்குசனும், பொருந்
தியேயிருக்கிலிவனிவன்முன்னோன் புகழ்பெறுதந்தைமூவருக்கும்

வருந்தியவிரோதம்விளைந்திடும்பொல்லாவஞ்சகராவர்மாநிலத்தில்
திருந்தியிப்படியல்லாமலேயிருக்கிற்றினமுறவாகிவாழ்ந்திருப்பர். ()

வேறு,

இருந்தபத்தாமிறைவனைந்தாதிபன், பொருந்திமித்துருவாய்ப்புண்ணியனுமாய்ப், பரிந்தவுத்தமர்வீட்டுறைப்பாலனும், வருந்திடான்றனந்தேடிவழங்குவான். (சூகச)

வேறு.

வழங்கியவைந்தாமாதிகுசனுங்கூடிமந்தனோக்குறவைந்தின்மருவிநிற்கில், முழங்கிடவேதத்துபுத்திரனுமாவன்முயலைந்தாமாதிகுசன்சனியம்சத்தில், தழங்குசுன்பார்க்கநிற்கிலந்நியர்கள்தமரிடத்திற்போய்வளர்வன்சனியம்சத்தில், அமுங்கிடவேயிரவிதானேறியைந்தில்யருங்குழவியிலையென்றேயறையலாமே (சூகடு)

வேறு.

நல்லதோரைந்தாமதிபதியிரவிநற்சனியங்கிசமேறி
அல்லலார்சனிகண்டிடவுமைந்திடத்திலமர்ந்திடிற்பரவிஷயத்தால்
வல்லமைப்புதல்வனுளனெனமொழிவர் மற்றுமைந்தாமிடந்தன்னில்
சொல்லியகுசனுங்காரியங்கிசத்திற்சூழ்ந்திடக்கருச்சுரோணிதமாம். ()

ஆனலக்கினத்திற்சந்திரனிருக்கவாறினிற்சுங்கனுற்றிடவும்
தானுறும்புதல்வனேகனுமிரவிசந்திரனிருவருங்கூடி
ஊனமிலினியகேந்திரத்திருக்கிலுரிமைசெய்யான்பிதாவினுக்கே
ஈனமின்மரணதகனகாலங்களிரண்டெனுமுபயராசிக்கே. (சூகஎ)

வேறு.

நல்லவர்பாராதிருக்கவைந்தாம்வீட்டில்நாடுமைந்தாமதிபனுட்னண்ணியேனும், வல்லகரும்பாம்பிருக்கநாகசாபவகையினுன் மைந்தரில்லைமறித்துநாகம், ஒல்லையுடன்பிரதிட்டைசெய்யின் மைந்தர்உண்டாகுமுயருங்கேந்திரகோணத்துள், மல்லல்சுபக்கிரகத்தின் பார்வையற்றால்மைந்தரில்லைசெபவோமவகையினுண்டாம். (சூகஅ)

உண்டாமைந்தாம்வீட்டோன்றுமாகிஉடன்கூடிநல்லோர்கண்ணுறுமனிற்க,அண்டாதசத்துருசாபத்தினாலேஆனதொருமகவில்லையைந்தாம்வீட்டில், மிண்டாகவைந்தாதிபிருக்கநல்லோர்விழிபார்வை யறத்தீயோர்மிகவுநோக்கிக், கண்டார்களெனிற்றெய்வசாபத்தாலேகாளையர்களிலையோமகன்மஞ்செய்வாய். (சூகக)

செய்யதொருநாலிடத்திற்றீயோர்நிற்கச் சேருமைந்தாமதிபனுடன்சனியுங்கூடப், பையவேபன்னிரண்டாமிடத்திற்பாவர்பற்றிநிற்கத்தாய்சாபம்பாலரில்லை, ஐயமறவோமங்கள்சபங்கடானமன்புடனேசெய்விக்குமவர்தமக்குத்,துய்யதிருமைந்தர்பலருண்டாமென்றுசுருதிகலையாகமங்கள்சொல்லுந்தானே. (சூ௨௦)

வேறு.

சொல்லுமிரண்டிற்பன்னிரண்டிற்சுபக்கோள்பாவர்மனையாயின்
வெல்லும்பாக்கியாதிபதிவியத்திலிருக்கவோனாங்கில்
நில்லும்பாவர்சன்மாதிபின்றேயத்தமனமாகி
ஒல்லிற்கூடிற்குலநாசமுண்டாம்புத்திரர்தானுமிலை. (௬௨௧)
தானுஞ்சன்மவியமெட்டிற்சனிசேய்பாவருறநிற்க
மானேபுதல்வர்தாமில்லைவளஞ்சேர்புந்திசுக்கிரனும்
ஆனபத்திலோரெட்டிலமருமைந்திலெட்டாதி
ஊனபாவர்சன்மாதியுற்றேபற்றிற்புதல்வரிலை. (௬௨௨)
புதல்வர்காரகன்புடத்திற்பொருந்துமைந்தாதிபன்புடமாம்
இதனைக்கூட்டுமிராசிதனிலேதமற்றகுருவருங்கால்
மதலைதோன்றும்புடங்கூட்டவருராசியங்கிசைமட்டும்
சிதவின்மேட்டுமுதலெண்ணச்சேய்தான்பாபர்காண்சேதம். (௬௨௩)

வேறு.

சேதமைந்திற்சிறந்தமதியுறில்,நீதிசேர்பிள்ளையொன்றுறுநேமியில்
யோதுமற்றும்பிழைப்பதுதானிலை, வேதமுற்றவரோதினரொன்பவே
ஒன்பதாம்வீட்டிக்குடையவன்குருவாய், இன்பமாய்ச்சனியெய்தியே
நோக்கிட, அன்புபுந்தியோடாதவனெங்குறில், பின்புபிள்ளையை யன்
னியர்பேணுவார். (௬௨௪)
ஐந்தின்வீட்டிற்கதிபதிபாவனாய்,வந்தாறெட்டுப்பனிரண்டின்மன்னரோ
டுந்தினுலுஞ்சுபர்திட்டியுற்றிடில். நந்தும்பன்னிரண்டாண்டிடினுசமே.

வேறு.

புத்திரனேழாமாதிபொருந்துகேந்திரகோணத்தில்
உற்றிடப்பலவானுகியோங்குமாறதிபன்மூனுஞ்
சித்தமாய்க்கூடினாலுந்தரிசினைப்பார்வையாலுஞ்
சுத்தமாய்ப்புதல்வரில்லையெனமறைசொல்லுந்தானே. (௬௨௬)

ஐந்தாம்பாவம் முற்றியது. ஆ விருத்தம்-௬௪௪.

# ஆறும்பாவம்.

## சத்துருபலன்.

கூறுமாறுமிடத்திற்குறித்திடும்பலன்களாறில்
வீறுநல்லோர்கடாமுமேவிடிற்றுயத்தார்கள்
பேறுடன்வழக்கிட்டுள்ளபெறுந்தனம்பிரித்துத்தாவென்
றேறியம்பலத்தினிற்பரெதிரிக்கேவலிமையென்னும். (௬௨௭)
என்னுமம்புவியிலுள்ளயாவர்க்கும்வலியனாவன்
துன்னியவிகாதமேதான்சொல்லுவரொவர்கண்டாலும்

மின்னியஞாதியோனாமெலியவேபண்ணுவிப்பன்
கன்னியேயாறினல்லோர்காதலிற்றிருந்தக்காலே. (௬உ௮)

காதலாறுமிடத்திற்கடினராந்தீக்கோணிற்கில்
ஓதுபொல்லார்க்குப்பொல்லாங்குரைத்துவேலவனைப்போல
ஏதிலார்தங்கட்கெல்லாமிடியென்வலியனாகிப்
பூதலத்தெவரும்வந்துபுகழ்ந்திடப்பொருந்திவாழ்வன். (௬உ௯)

பொருந்துசிங்கத்தைக்கண்டுபுடைபடுமிபமேபோல
இருந்தசத்துருக்களெல்லாமிரந்துகைகூப்பிநிற்பர்
திருந்தியகுபேரன்போலச்செல்வமுண்டாகப்பாரில்
வருந்திடாதிருப்பனாறின்மருவுதீக்கோளினாலே. (௬௩௦)

கோளினிற்கரியநாகங்கூறுமாறிடத்தினிற்கில்
தாளினிற்றளைகள்பூண்டேதடைபடுங்காவலில்லான்
நாளுமேபலரும்போற்றநண்ணிடுங்கீர்த்திமானாய்த்
தேள்முதல்விடங்கள்சற்றுந்தீண்டிடாத்திடவானுமே. (௬௩௧)

திட்டமுறுமாறுமாதிபாவனாய்க்கேந்திரத்தில்
வடிவுறுநல்லோர்காணமருவின்மந்திரியுமாகிப்
படிமிசையெவரும்போற்றப்பயில்பிரதாபனாகிக்
கொடியவர்தமக்குமிண்டேகூறுவன்குணவானாகும். (௬௩உ)

ரோகபலன்-வேறு.

ஆறுகும்வீட்டதிபன்லக்கினத்ததிபனும்
அணிகதிரோனுடன்கூடிற்சுரகண்டமாகும்
பேறுயிந்துடன்கூடிற்சலகண்டன்குசன்பால்
பெருமையுடன்கூடிலாயுதவிரணகண்டம்
தூறுறுஞ்சனிகூடினீசர்தன்னாற்கண்டம்
சோரரால்வருங்கண்டஞ்சுக்கன்கூடிடினே
வீறுகுமடவாராற்கண்டங்கண்டங்கேள்
விடவரவைகூடிலந்தவிஷப்பாம்பாலேதான். (௬௩௩)

அறந்திகழுஞ்சன்மராலாதிதாமும்
அட்டமத்தாதியைக்கூடினுலுமாறில்
உறைந்திடினுமுண்டியசிரணத்தாற்கண்டம்
உற்றிடும்லக்கினவாகனதியோடு
செறிந்தசனியுமில்விஷபட்சணத்தாற்கண்டம்
செப்பியநாலாதியுடன்சனியுஞ்சேர்ந்து
பிறந்திலக்கினத்தாதிவீட்டினிற்கப்
பெறில்விஷபட்சணகண்டம்பேசுஞ்சாதகமே. (௬௩௪)

சர்தகலக்கினத்தாதிவாகனுதி
தம்மிருவருடன்பாம்புந்தானுங்கூடில்
ஓதியபந்தனமரணநல்லோர்வீடாய்
உதித்தலக்கினத்தாதியோமேழெய்த
நீதியுடனேழதிபன்லக்கினத்துள்
நிற்கிலவன்றுதையுடனீன்றோன்றயாம்
பேதையனுமரணம்பண்ணுவடானென்று
பேசினர்சாதகநிபுணப்பெருமையோரே. (கூகடு)

பெருமைசெறியாறுகுமதிபனோடு
பெரும்பாவர்கூடிலக்கினத்திலெட்டில்
அருமையுடனுறிற்சித்தப்பிரமைகொண்டே
அங்கத்திலும்விரணமாகும்பின்னும்
உரிமையுள்ளவவரவர்தானங்களெட்டில்
உற்றிடிலிந்நோயென்றேயுரைக்கவேண்டும்
இருமைசெறிதந்தைதாய்பிராதாமைந்தர்
இவர்க்குமனைவியர்தமக்குமெனச்சொல்வாரே. (கூகசா)

சொல்லியவாறுமிடத்திற்சுயக்கிரகமேவத்
துலங்கியவாறுதிபனுங்கேந்திரத்திலிருக்க
நல்லவர்கண்டிடின்ஞாதிக்குபகாரஞ்செய்வன்
நாடுங்காலவனுக்கோர்நலிவுகளுமில்லை
அல்லலறுந்தீக்கோளேயாயினன்மையதாம்
அடைந்திடுவனெதிரிகளுக்கேவலியனுவன்
முல்லைமுகைதாளமணிவீழுறுந்துபோலும்
முறுவல்செறிகமலமலர்முகமுறுமின்னாளே. (கூகஎ)

அலிபலன்-வேறு,

இரவியுஞ்சசியுமொருவருக்கொருவரிசைந்துபார்த்திடலலியாகும்
பரவியசனியும்புதனுமேயந்தப்படிவிழிநோக்குமிலலியாம்
வரவிடுசெவ்வாயிரட்டையொற்றையினில்வந்துசூரியனுடன்மருவ
விரவியமதியாணங்கிசத்தேறவெள்ளிவீடாகவுமலியாம். (கூகஅ)

ஆகியசன்னத்தினின்மதியிருக்கவாதவன்புதன்சசிமூவர்
வாகுசேரிரட்டைராசியிலிருக்கமற்றுமிம்மூவர்கடமையும்
மோகமாயங்காரகனுமேநோக்கமுகின்முலைமாதனாயிகழ்ந்தே
ஏகமாங்குறியற்*றண்ணர்களாவவொன்பதுதிண்ணமென்றுலாக்கும். ()

ஆறும்பாவபலன் முற்றியது. ஆ விருத்தம்-கூகஎ.

* அண்ணர்-அலி.

# ஏழாம்பாவம்.

## களத்திரபலன்.

சாதமுறுங்காலையினிற்சுக்கிரன்றன்னோடு
தக்கபிரகஸ்பதிகூடில்விப்பிரர்கன்னியராம்
சோதிரவிகுசன்கூடிற்க்ஷத்திரியர்மயிலாம்
சோமனார்சுதன்கூடில்வைசியர்குலத்தோகை
பூதலமேற்சனிகூடிற்சூத்திரர்கன்னிகையாம்
பொருமிருபாம்புடன்கூடிற்புலையர்குலத்துதித்த
பேதையர்களுடன்கூடியனுராகம்புரிந்து
பிரியாமலிருப்பனெனப்பெறும்வரிசைபெறவே. (௬௪௦)

வரிசைபெறுகளத்திரத்தானதிபனைக்கூடி
வாழ்கிரகமெத்தனையுண்டத்தனைமின்மணப்பன்
உரியகளத்திரகாரகனதிபன்சுபமாய்
உற்றிடினற்கோள்காணிலுத்தமமற்றிவர்தாம்
அரியிடத்தும்வியமுறிலும்பாவர்களேகாண
அமர்ந்திடினுமத்திமாமரவுசெவ்வாயிருவர்
பிரியமுடன்களத்திரத்துற்றிடின்மடவார்க்கானி
பெருகுசுபக்கோனோக்கம்பெற்றிடிலுத்தமங்கள். (௬௪௧)

வேறு.

களத்திரலக்கினாதிகலந்துதம்மனைவினிற்கில்
கிளர்த்தியாய்ப்பலனைக்கூடிக்கிடைப்பதொன்றேவிவாகம்
களத்திரகுடும்பத்ததிகனபாவர்வெள்ளிகூடில்
வளத்தியாய்மூன்றொன்றாறின்மருவிடில்மனைவிக்கீனம். (௬௪௨)

ஈனமிலக்கினாதியேழாமாதிபனுங்கூடி
தானமாம்வியமாறெட்டிற்றானுறில்விவாகமில்லை
ஆனவேழிடங்கள்சுத்தியாயேழாமதிபனோடி
ஊனமில்பலர்கள்கூடிலொருத்தியென்றுரைவெள்ளிக்கே. (௬௪௩)

வெள்ளிசேயேழினிற்கில்விதவைமாதரைமணப்பன்
ஒள்ளியமதிசேயாறுமதிபனோடுற்றுநான்கில்
தெள்ளிதாய்நிற்கிலேனுஞ்சென்மமொன்பானிலாறும்
வள்ளலின்நால்வர்கூடின்மற்றுமோர்விஷயமுண்டாம். (௬௪௪)

ஓரேழிற்பாவர்நிற்கக்களத்திரரோகமுண்டு
சூரியனுடனேபாம்புசூழ்ந்திரண்டிடத்தினிற்கில்
நாரிக்கும்வெகுநோய்காட்டுநவிலிரண்டாமிடத்தைக்
கூரியர்பார்க்கினிற்கினோய்கொளுங்குடும்பமேழை. (௬௪௫)

வேறு.

ஏழ்வீட்டினிற்சுபிபன்சரத்தினிற்கில்
இருமனைவிதிரமதனிலிருக்கநன்றே
தாழ்விலாவுபயத்திலிருக்கின்மாதர்
சாவின்றிப்பலருளராந்தானத்தாதி
வாழிடநோக்கியகோளாற்பலன்கள்கூடும்
மற்றுமிலக்கினத்தாதிசுங்கன்வீட்டில்
சூழ்கினுஞ்சுங்கனைக்கூடச்சுங்கன்பார்க்கத்
தாயஸ்திரீலோலனெனவேசொல்லலாமே. (கூசகூ)

வேறு.

சொல்லுமேழாமிடத்திந்துசுக்கிரன், மெல்லமேவினுமிக்கசனிகுசன்
அல்லறிரவுநின்மனையாளுமே, இல்லைவந்தேவில்லைபுதல்வரோ. (கூசஎ)

வேறு.

இல்லேழுமிரண்டமாதிசுக்கிரனிவர்கண்மூவர்
பொல்லாரோடெய்தியாறிலெட்டிற்பன்னிரண்டிற்போந்து
சல்லாபமுடனின்றோர்கடம்மூடன்பாவர்கூடில்
சொல்லாருந்தொகைக்குமாலைசூட்டுவன்றேகையில்லாள். (கூசஅ)
நின்றிரண்டேழாமாதிநிறைந்தகேந்திரகோணத்தில்
ஒன்றியேயிருக்கிலேகதாரமாமுற்றவன்றோர்
வென்றிகொள்பிருகுபாவருடன்கூடிமெய்யாறெட்டிற்
குன்றிடாதிருக்கில்வேசைக்காந்தனுங்கூறுங்காலே. (கூசகூ)
கூறியவேழாமாதிகுடும்பாதிபதியின்னோர்கள்
ஏறியேதிரிகோணத்துங்கேந்திரத்தினிலுநிற்கப்
பேறுடனவர்தம்வீட்டிற்பிரியமாயிருக்கத்தானும்
வேறுமோர்தாரம்வேண்டான்விரும்புவனேகதாரம். (கூரு0)
தாரகாரகனுமேழாமதிபனுந்தனித்துங்கூடி
ஆரவேபாவர்மத்தியத்துறவேழிற்பாவர்
சேரவேயிவரைப்பாவர்செறியநோக்குறவிருந்தால்
பாரியர்தனக்கரிட்டம்பண்ணுமென்றறிந்துகொள்ளே. (கூருக)
கொள்ளுநற்காரிவெய்யோன்கூடிக்கன்னியிலேநிற்கத்
தெள்ளிதாயந்தவீடுசென்மலக்கினமேயாக
மெள்ளவேயரசன்றானுமீனத்தின்மேவினிற்கத்
துள்ளியமனைவிதானுந்துன்பமுற்றரிட்டமாவள். (கூருஉ)
ஆமிலக்கினத்துக்கேழிலம்புலிதனக்குமேழில்
பூமலிநல்லோர்பார்வைபொருந்திடிலுண்டாம்பெண்டீர்
தீமையாங்கடினபாவர்திட்டியுண்டானபோது
மாமினையார்கடம்மைமணந்திடாவஞ்சனுமே. (கூருங)

ஆமேழாமதிபன்தாரகாரகனீசமாகித்
தாமிவர்வியமாறெட்டிற்றூனுறமனைவிக்கினம்
வாமசுக்கிரன்வாழ்வீட்டின்மன்னவன்வியமாறெட்டில்
ஏமமுற்றிருக்கிற்கொண்டமனைவியர்யார்க்குமீறே. (௫௪)
ஈறிலாவேழாமாதியேதமால்பாவர்வீட்டில்
தூறதாய்நிற்கிற்பார்க்கிற்கலியாணந்தூரதேசம்
விறதாங்களத்திராதிசுபாங்கிசமேவிற்கிட்டல்
பேறுடன்றிசைகளேழாமதிபனைப்பிடித்துச்சொல்வாம். (௫௫)
வாமசூரியன்கிழக்குமன்னுசுக்கிரற்குவன்னி
பூமிசேய்தனக்குத்தெற்குப்பொரும்பாம்புநிருதியாகும்
தாமதசனிக்குமேற்குச்சசிக்குவாயுவின்றிக்காகும்
நேமமாம்வடக்குப்புந்திநிருபற்கீசானதிக்கே. (௫௬)

வேறு.

திக்கெனவேழோன்வியத்திலாறெட்டிற்செறிந்ததிபாவனுமிருக்கத்
தக்கவன்றனைப்பார்த்தவர்கலத்தனையுந்தாரமாங்களத்திராதிபனும்
ஒக்கவேபாவருடனுறவேழிலொருகரும்பாம்புறவதற்கு
மிக்ககேந்திரத்திற்பாவர்பார்த்திருக்க விரும்புவன்றனுலுகாற்பெண்ணே.
பெண்ணிசைந்திடுமேழாமிடத்ததிபன்பேரொளிக்கதிருடன்கூடில்
எண்ணிசைந்திடுமெட்டாறினில்வியத்திலிருக்கில் வாலிபத்திலேமனையா
ள்] விண்ணிசைந்திடுவள்களத்திராதிபனுமிக்கநற்கோளுடன்கூடில்
பண்ணிசைந்தருளுமனைவிதீக்கோளைப்பார்த்திடிற்பாவியாயிருப்பள்.()
பாவியாஞ்சனியேழாதிபனாகிப்பன்னிரண்டாறிருநான்கில்
மேவிடில்விதவைநாரியைச்சேர்வன்மிக்கவேழாமிடத்ததிபன்
நாவிரண்டானபாம்பொடுங்கூடிநாடியெட்டாறினில்வியத்தில்
தாவியேயுருக்கிலீனமாங்குலத்துத்தையலைச்சேர் வனென்றுரைக்கும்.
உரைக்குமேழாதிகாரிவாழ்மனையிலுற்றிடக்காரிதான்பார்க்க,இருக்க
வேழிடத்துக்கோன்பதாமதிபனெட்டிலாயினுஞ்சனிவீட்டில், பெருக்
கவேயிருக்கிலவன்குலமனையைப்பிறர்தமைச்சேர்ந்தவரவர்கள்,பொரு
ள்களைவாங்கிவரச்சொலிப்புசிக்கும்புண்ணியவானெனப்புகலும். ()
புகலுமேழாதிபிரபலனாகிப்பொருந்துமித்துருக்களைக்கூடி
இகலிலாலாபத்தலத்தினிலிருக்கயிருந்தபேர்தொகைப்படிமனைவி
திகழுடனுளதேயந்தலாபந்தான்றிரமுபயங்களேயாயின்
சுகமுடனிருப்பள்சரமெனிற்சிறிதுதோகையர்க்கரிட்டமேசொல்லும்.
சொல்லியகன்னிலக்கினமாகச்சோமனுஞ்சனியுங்கேந்திரத்தில்
மெல்லவேயிருக்கச்சதமனைவியரைமிகுமணம்புரிந்துபூபதியாய்
வல்லவனுவனேழிற்சுக்கிரனுமருவுசன்மத்தினிற்குருவும்
அல்லலற்றிருக்கின்மனைவியரநேகரவரைரட்சிக்கவுமாட்டான். (௬௨)

மாட்டினிற்கிறைச்சுக்கிரன்குசன்சோமன்மன்னவினிரவியோடைவர்
ஈட்டியோரிடத்திற்கூடிடின்மனைவியிலர்மலைபிணியனுய்த்திரிவன்
நாட்டுமிந்திரவிபுதன்சனிவெள்ளிநயந்துறின்மனைவிமக்களையும்
ஓட்டிவிட்டேதேசாந்தரந்தன்னிலுறுபிணியுடனலைந்தலைவன். (௬௬௩)

அலைவறுஞ்சன்மத்ததிபன்செறிந்தவங்கிசாதிபன்றனதகத்தில்
நிலைமையாமனைவிகுருவருங்காலநிச்சயமணம்புரிந்திடுவன்
குலமுறுஞ்சன்மந்தனக்குமோரேழாம்ராசியங்கிசத்தினிற்குருவும்
பலமுடனேவந்தணுகியபோதும்பாரியாய்க்கொள்வனற்பெண்ணை. ()

வேறு.

பெண்கொளுங்காலஞ்சந்திரனிருந்தபெரும்பதிக்கிறைவனற்புட்டும்
பிறையுறைமனைக்கேழாமிடத்ததிபன்பெற்றநற்புடத்தையுங்கூட்ட
பண்கொளுமெந்தராசியோவந்தப்பதியிலப்பதித்திரிகோணம் [ப்
பற்றியேயரசனுற்றிடுகாலம்பயின்மணம்புரிவனக்குருவும் [பாம்
எண்கொளுமுச்சாங்கிசம்பெறின்மனைவியினியளீர்க்கோதையுஞ்சிறப்
இரணியன்றனுவாங்கிசத்துறின்மனைவியிரண்டுமீனுங்கிசமேறில்
தண்கொண்மூன்றுமித்திராங்கிசத்தொருத்திசத்துருவங்கிசமேறில்
தையலேயைநீசாங்கிசத்தினிலரசன்றரிக்கிலீனங்குலக்கொடிக்கே. ()

கொடியிடையாய்கேளிரண்டிடத்ததிபன்குணகுணகாரநற்புடத்தில்
குலவிமகண்டன்புடத்தினைவாங்கிக்குறித்தராசியிற்குருவருநாள்
துடியுடைமனைவிக்கரிட்டமாமின்னுஞ்சொல்லிரண்டாதிபன்புடத்தில்
சூழ்ந்திடுங்குளிகன்புடந்தனையெடுத்துத்தோன்றியராசியிற்சனியும்
வடிவுடன்வருநாள்களத்திரந்தனக்கு வருநிரியாணமென்றுரைப்பர்
மத்தினமேழாமதிபதிபுடத்தில்வருகாலமிருத்துவையெடுக்கின்
பிடிபடும்ராசியந்தராசிக்கேபெற்றிடுமாதமந்நாளில்
பிறைநுதற்றிலதமுகமதிக்ருங்கட்பெண்ணணங்கேயெனப்பேசே. ()

பேசியவிரண்டாமிடந்தனிலிரவிபெரிதுறில்விடம்புசித்திடுவள்
பிறைகுறைந்திருக்கிற்சலத்தினாற்கண்டம்பின்குசனுறிலனல்குளிப்
பாசமாம்புந்திபாவரைக்கூடிற்பசிதனைபொறுத்தொறுத்திருப்பள்[ப்ள்
பாவரையரசன்கூடிடின்மகிழ்நனிபரிகலந்தனைவெறுத்திடுவள்
நேசமாம்பிருகுபாவரைக்கூடினின்றிடில்விடம்புசித்திடுவள்
நிறைசனியிருந்தால்வியாதியாயிருப்பணீண்டதோர்பாம்பிருவரையு
தேகூடன்கூடிம்பாசபந்தத்தாற்சீவனையொழிக்கவேதுணிவள் [ம்
தெரிந்தநல்லோர்கள்பார்வையுண்டாயின்றீர்க்கசீவன்பெருந்திருவே
திருவளர்மதிசுக்கிரனுமேழிடத்திற்செறிந்தத்தமனமதாயிருக்கில்
சலத்துயிரிறப்பனேழிடந்தன்னிற்செங்கதிரிருக்கவந்தியதாம்
மருவுசூரியனுந்தூமனுங்கூடின்மனைவியைமருவிடாவஞ்சன்
மன்னுசக்கரசாபன்னுறின்மரிப்பள்வளர்பரிவேடமுற்றிடிலோ

சருவியேசண்டைக்காரியாயிருப்பட்டக்கதோர்க்குசனுறில்வந்தி
தகைமைசேர்விதிபாதன்னுறிற்கர்ப்பந் தரித்திடாமற்கலைந்திருக்கும்
ஒருமையாய்நிறைந்தமதியுமோரேழிலுற்றிடின்மைந்தருங்குணமும்
உள்ளமெல்லியலைமணந்தினிதிருப்பனுண்மையீதெனவுணர்ந்திடுமே

உணர்ந்திடும்புந்தியேழினிலிருக்கவுருப்பெறும்புதல்வனைப்பெறுவள்
உற்றவேழாதியிரவிதூமனுமேயுடன்செறிந்தேழினிலிருக்க
மணந்திடுங்குதிமனைவியத்தனையுமரிக்குமென்றுரைப்பரேழிடத்தில்
மன்னுதூமாதியைவரிலொருவர்வந்திடிற்களத்திரக்காளி
அணைந்திடுஞ்சசிலக்கினத்தினுக்கேழுமப்படிப்பலனெனவறிக
ஆனதோர்மதிதன்னங்கிசத்தேறியன்பொடுமேழிடத்திருக்க
குணந்திகழுந்தார்ச்சுந்தரிநீசர்குளிர்மனையேழிடமாகக்
கோதறுகதிரங்கிசமதியாகிற்கொழுநரும்பலரெனக்கூறும். (௬௬௯)

வேறு.

குடும்பங்களத்திரமாறுதிகூடிப்புகரும்மாலருடன்
திடமேசன்மன்தனிலிருக்கச்சனித்தோன்கமனபரதாரம்
வடிவாஞ்சொல்லிக்கிச்சிப்பன்வாழும்பாக்கியதானத்தில்
அடவேயிவர்கடாமுற்றலையருமிப்படியாமென்பார். (௬௭௦)

ஆமேசுக்கிரனேழாதியாறுமதிப்திகூடித்
தாமேமூவரொருவீட்டிற்றங்கிற்போகந்தானில்லைத்
தீமேயிரண்டுமூன்றுதிசெறிந்தாறெட்டிற்பன்னிரண்டில்
காமேகூடியிருந்திடினுகளரோகங்கள்காட்டிடுமே. (௬௭௧)

காட்டுஞ்சன்மமேழாதிகண்டகேந்திரகோணத்தில்
கூட்டியிருக்கவவர்வீட்டோன்கொண்டலக்கினந்தான்மேவி
நீட்டும்பலவானிவனென்றேநேசமறிந்தேயவர்திசையில்
வாட்டும்புசிப்பிலிவன்பாரியுகந்தேயிவனுட்டுமரணம். (௬௭௨)

வேறு.

சத்தமவட்டமாதிதன்னுடன்பாவரேனும்
ஒத்துடனந்தத்தானத்துறுபலபாவரேனும்
சித்தமாம்வியத்தின்மன்னன்சேயுடன்கூடினாலும்
ஒத்தநல்விவாகம்ரெண்டாயுறுமணம்புரிவனென்றே. (௬௭௩)

ஏழிடமிரண்டாமாதியிருவரிலொருவரேனும்
தாழ்பலவீனராகத்தானுறிலந்தவீட்டில்
வாழ்பெரும்பாவர்நிற்கவுறுமணமிரண்டுசெய்து
வாழ்பவர்புவியிலென்றுவழுத்துவர்மறைவல்லோரே. (௬௭௪)

வல்லதிரண்டில்வெகுபாவர்வந்துற்றாலுமோரேழில்
சொல்லும்பாவர்தானுறினுஞ்சுகமாமந்தமனையினிலும்

வெல்லுமிந்தமனையோனைவிரும்பிப்பாவர்நோக்கமுற
நல்லமணங்களிரண்டென்றுநவில்வர்கணிதநாவலரே. (சுஎரு)

ஏற்றியசன்மமிரண்டிலேழினிற்பாவரேனும்
நேர்த்தியாங்களத்திராதிநீசரத்தமனமேலும்
வேற்றுசத்துருவீட்டேனும்விரும்பியேநின்றதாயில்
போற்றுவர்களத்திரங்களிரண்டெனப்புகல்வர்தாமே. (சுஎசு)

மேவியகளத்திராதிவிரும்புகேந்திரகோணத்தில்
பாவியர்க்ஷேத்திரநட்புப்பரிந்துறப்பத்தோன்கூடத்
தாவியவேழோனங்கைதரிப்பச்சொக்ஷேத்திரங்கண்டால்
தேவியுமநேகமாகத்திடமணம்புரிவன்றானே. (சுஎஎ)

ஆனதோரேழிடத்திலரசனும்பலமதாகி
ஈனமில்பளிங்குதானுமிருந்திடவலுவதாகத்
தேனிகர்குடும்பவாதிசிநேகாங்கைசையிருக்கவேதான்
தானதிருபமுள்ளதனபதிரரியென்றே. (சுஎஅ)

ஏயலாபாதியேழோனிருவரும்பலமாய்க்கூடி
தூயகோணத்திருக்கச்சுபருடைப்பார்வையாகில்
நேயமாமநேகம்பெண்கணிறைசீவனுள்ளாராக
ஆயவேமணங்கள்சூட்டியவனியிலிருப்பன்றானே, (சுஎகூ)

இருந்திடுமிரண்டேழாதில்க்கினகோபுராங்கிசைக்குள்
பரிந்துறும்பத்தாமாதிபண்புடனேழிலுற்றால்
தெரிந்தநற்களத்திரங்கடேசமெனக்கொள்வரொன்றே
புரிந்திடுங்கணிதநூலின்புண்ணியரோதினரே. (சுஅ0)

ஓதியகளத்திராதியுயர்சுபராசியேறி
மீதுமங்கிசைநல்வீடாய்மேவிடப்பளிங்குதானும்
நீதியிப்படிபோலாகநிறையும்பத்ததிபனோடும்
ஓதியபலவான்கூடமோகனப்பெண்கள்கொள்வான். (சுஅக)

கொள்ளுநற்களத்திராதிகுருவுடன்கூடினலும்
தெள்ளியபார்வையுற்றுத்திடமுளதலனுற்றாலும்
மெள்ளவேபிருகுதானும்வெகுபலமாகவுற்றால்
ஒள்ளியதானதர்மமுள்ளவன்வருவடானே. (சுஅஉ)

வந்தலக்கினந்தனுமீனம்வரவேபுதனும்பாவருடன்
இந்துநீசமத்தமனமிருந்தங்கிசைகள்சத்துருவின்
சொந்தமங்கிசையேறுகினுந்தூர்த்தர்பாவர்களத்திரத்தில்
உந்தியிருக்கவேசியராயுயர்ந்தகுலமுந்தாழ்வாமே. (சுஅங)

ஆமேகளத்திராதிபதியரசனுகிப்பாவருடன்
நிமேபாவராசியிலுஞ்சிறந்தேயிருக்கப்பாவர்களும்

தாமமேநோக்கமானாலுஞ்சனிசேயங்கிசையுற்றாலும்
போமமேசோரம்ரகசியமாய்ப்புறம்புமசையாதவள்போல. (சூ௮சு)

போகுங்களத்திராதிபதிபுகராய்ப்பாவருடன்கூடி
ஏகும்பாவர்பார்த்திருக்கயெழிலார்சத்துருவங்கிசையில்
ஆகும்பாவரங்கிசையிலமர்ந்தேயிருக்கவங்கியர்பால்
தாகமுடனேசஞ்சரித்துச்சமத்தாய்ச்சோரஞ்செய்திடுவள், (சூ௮ரு)

ஏழாமிடத்தோன்பாவருடனிரண்டிலிருக்கச்சேய்பார்க்கச்
சூழும்விபசாரத்தொழிலார்சுதனுமுண்டாமெனச்சொல்வர்
வாழுமிலக்கினத்துடையோனும்வரவாறெட்டிற்பன்னிரண்டில்
தாழ்வாயிருக்கப்பெண்ணிரண்டுதானுங்கொள்வன்தப்பாதே. (சூ௮சூ)

கொள்ளும்பலாபாகிகளத்திராதிகூடினாலும்பார்த்தாலும்
தெள்ளும்பலவானாகியிவர்திரிகோணத்திலிருந்திடினும்
உள்ளவிவாகமூன்றென்றேயுரைப்பர்கணிதவல்லோர்கள்
கள்ளவிடம்போல்விழிமருட்டுங்கருமென்குழனற்காரிகையே. (சூ௮எ)

லக்கினந்தனக்கேழ்தன்னில்வியத்தினிற்சோமன்றானும்
புக்கவேபாவரங்கிசையிற்பொருந்தியேயிருந்தகாலை
சுக்கிரன்பாவரோடுந்துலங்கவேயிருக்கநாரி
கைக்கொளும்புருடனையகணவனைக்கொல்வன்கண்டீர். (சூ௮௮)

ஏழாம்பாவம் முற்றியது. ஆ விருத்தம்-எ௦சூ.

# எட்டாம்பாவம்.

## ஆயுர்ப்பலன்.

அட்டமத்ததிபன்பாக்கியாதிபனாகிநிற்கில்
அட்டமத்ததிபன்பாவிலாகிலுமையமில்லை
அட்டமத்ததிபனுச்சமாகினுமானநற்கோள்
அட்டமத்ததிபன்றன்னைப்பார்க்கினூறாண்டிருப்பன். (சூ௮கூ)

பங்குபாதன்செவ்வாயைப்பற்றியபுசிப்பிற்காரி
தங்கியதிசையிற்செவ்வாய்தானுகந்திடுபுசிப்பில்
அங்கவனட்டமாதிதிசையினிலவன்புசிப்பில்
மங்குகோசரனன்றாயின்வருத்துநோய்மாறுந்தானே. (சூகூ௦)

வேறு.

ஆறெட்டுப்பன்னிரண்டாமதிபரோடுமலதிவர்மூவர்க்கைந்தோன்பானிலேனும், விழிட்டசனிமேவிற்சரீரபீடைமேவியவெட்டாதிபன்கேந்திரத்திலேனும், பேறிட்டசன்மாதிபதியுந்தார்ப்பலனாப் பெறினலெட்

டாண்டென்றுபேசலாகும், கூறிட்டசன்மாதிபலவானுயிற்குலவும்வெ
குவயதென்றேகூறலாகும். (௬௯௧)

வேறு.

கூறுங்கடகமுதலாறுராசிக்குள்ளேகுருவிருக்க
வீறுமகரமுதலாறுக்குள்ளேகாரிமேவுகினும்
பேறுங்கடககேந்திரத்திற்பிருகும்புதனும்பெறநிற்கில்
மாறுதுறுந்தீர்க்காயுளுடன்வையந்தன்னில்வாழ்வாரே. (௬௯௨)
வாழுமகரமுதலாறின்மந்தனிருக்கக்கடகமுதல்
சூழும்ராசியாறுக்குட்சோமனிருக்கக்கேந்திரத்தில்
வீழுமரசனுநிற்றீர்க்கவயதாமெட்டிற்குசனிருக்க
ஏழுங்கதிரோரைகளரசனேழிற்கேந்திரநூறுண்டே. (௬௯௩)
ஆண்டமிதுனமுதலாறிலரசனிருக்கத்தனுமுதலாய்த்
தீண்டுமிராசியோராறிற்றிரிகோணங்கேந்திரந்தன்னில்
நீண்டபுதனுஞ்சுக்கிரனுநிற்கிற்றீர்க்கசீவனுமாம்
பாண்டிமகராசன்கொடியைப்பழித்தகருங்கட்பைங்கொடியே. (௬௯௪)
கொடியேகுருசுக்கிரனுன்காமிடத்திற்குடிகொண்டேயிருக்க
நெடியசன்மலக்கினத்தினிலவுமிருக்கவிவர்க்குநடு
கடியசனியீச்சுரனிருக்ககண்டவயதாமொருநூறே
பிடிபுமிளம்பேட்டஞ்சமுமுன்பின்னேதொடருநடையாரே. (௬௯௫)
நடிக்குஞ்சன்மமுதனுன்காமிடத்துணடுவேநாற்கலையும்
படிக்கும்புதன்சுக்கிரனரசன்பரிந்தேயிருக்கிற்சதவருஷம்
துடிக்கும்புதனென்றேநின்றூற்றொடர்முப்பத்துமூன்றாகும்
அடுக்கும்வெள்ளிக்கறுபத்தாறரசனிருந்தானூறுமே. (௬௯௬)
ஆமட்டமத்தினதிபனுமட்டமத்திலமர்ந்திருக்கச்
சோமன்பாவருடன்கூடியிரண்டாறெட்டிற்சூழ்ந்திருக்கில்
தாமும்வயதைம்பத்தெட்டாந்தருமஞானிதானவன்
காமன்கணையைப்பழித்தயிலைக்கடிந்துமருட்டுங்கண்ணாரே (௬௯௭)
கண்ணார்கும்பலக்கினமேகண்டசன்மலக்கினமாய்ப்
பண்ணாரதற்கெட்டாங்கிசையிற்பயிலுமரசன்பரிந்துநிற்க
எண்ணார்பாவர்கேந்திரத்திலில்லாதிருக்கவிவ்வுலகில்
தண்ணார்வருஷமறுபதுக்குந்தானுற்றிடுவர்தப்பாதே. (௬௯௮)
தப்பாவில்லேலக்கினமாய்த்தன்னிற்குருவுந்தானிருக்க
இப்பார்குசனிந்தொடுகரும்பாம்பிவர்மூவோருந்தாங்கூட
மெய்ப்பாரெழுபத்தைந்தாகுமேவும்பாவர்கேந்திரத்தில்
ஒப்பார்சன்மத்ததியெட்டிலுறிலாண்டிருபத்தெட்டாமே. (௬௯௯)
எட்டாம்பாவரங்கிசையிலினியோரிருக்கக்கேந்திரத்தில்
மட்டார்பாவர்தாமிருக்கவயதுமறுபத்தாறாகும்

செட்டார்சுபரங்கிசைதன்னிற்சென்மாதிபனுந்தானிருக்க
எட்டாறில்லெட்டாதிபதியிருக்கிலேம்பதென்பாரே. (௭௦௦)
என்பாரெட்டாமதிபதியும்லக்கினத்திநதிபனும்
ஒன்பானதிற்கோளேலுயிர்போந்தந்தைக்கருகின்மைந்தர்
அன்பாயிருப்பர்சன்மத்திலரவுசதிர்சந்திரனிருக்க
வன்பாம்வியத்திற்குருவிருக்கில்வயதுமிருபத்தெட்டாமே, (௭௦௧)

வேறு,

ஆகும்லக்கினமெட்டாதிகூடியே,வாகுகேந்திரத்தெய்தமற்றெட்டினில்
தாகமோடெவராயினுந்தானறில்,ஏகுவன்பன்னிரண்டினிற்கண்டமே.

வேறு.

கண்டவேழெட்டாறிடத்திற்கதித்தநல்லோர்தாமிருக்க
அண்டின்மூன்றிற்பன்னொன்றிலசுபருறத்தீர்க்காயுளுண்டாம்
கொண்டவெட்டாதிபனுச்சங்கொளச்சென்மாதிபன்றானும்
மிண்டியினியோர்காணக்கெந்திரத்திலிருக்கவெகுவயதே. (௭௦௩)
தேரும்வயதினளவுரைப்பக்கேண்மின்சன்மாதிபன்றனக்கும்
ஊரும்பரித்தேரோன்றனக்குமுறவாகிற்றீர்க்காயுளுண்டாம்
ஏருஞ்சமமேன்மத்திமமாமெட்டெட்டாண்டேயினிதிருப்பன்
நேரும்பகையதாகிலற்பகிலத்திநலெட்டாண்டிருப்பன். (௭௦௪)
இருக்குமற்பவயதுள்ளோனிறப்பன்விடநக்ஷத்திரத்தில்
வருக்கமுடன்பூரணவயதோன்மரணவதைநக்ஷத்திரத்தில்
பெருக்கமுடன்மத்திமவயதுபிறத்தியதாரையதுதன்னில்
தருக்குமற்பவயதிலற்பஞ்சாற்றக்கேண்மின்றனைமிதே. (௭௦௫)
தருஞ்சன்மாதிபாவாங்சந்தரிக்கில்வயதற்பத்திலற்பம்
வருசன்மாதிசுபாங்கிசத்தில்வரவற்பத்தின்மத்திமமாம்
அருள்சன்மாதிதனைநல்லோர்காணவற்பத்தினிற்றீர்க்கம்
உருமத்திமந்தீர்கந்தனக்குமுளவிப்படிக்கண்டேணாமானே. (௭௦௬)
கதிரோனுதயமுதற்சனனகாலையளவுங்கடிகைதனை
எதிராவெண்ணியிரண்டாயிலீந்தாலோனாலக்கினமாம்
சதிராய்ச்சன்மவீடொற்றைதானகிற்சூரியன்முதலாம்
அதிரால்சன்மவீடிரட்டையாகிற்சன்மமுதற்சரியே. (௭௦௭)

வேறு.

சரமதனிற்சரந்தீர்க்கந்திறந்தான்மத்திமமாம்
தங்கியதோருபயங்கட்ரனற்பமாகும்
திரமதனிற்றிரமற்பஞ்சரந்தான்மத்திமமாம்
திரத்திலுபயம்பெறினுந்தீர்க்கவயதாகும்
வருமுபயந்தனிலுபயமத்திமமேயாகும்
மற்றுமதிற்சரமாகில்வயதற்பமாமே

பெருமையுடனுபயத்திற்றிரந்தீர்க்கவயதே
பெற்றிடிற்பூரணவயதுபெற்றிடுவர்தாமே. (எ௦௬)
பெறுந்திரிகோணங்களிற்கேந்திரத்தினல்லோர்நிற்கப்
பின்னுஞ்சன்மாதிபன்பொன்னுடனுன்கினிற்க
உறுவதுநாறுண்டளவுமுலகில்மிகவாழ்வர்
உற்றசன்மமோரொட்டாதிபனுமுடன்கூடி
மருவுறவாறுமிடத்திற்சனிபார்க்கனிற்கில்
வாலையிலேயரிட்டமெனவேவழுத்தலாகும்
சிறுகுழவியிலக்கினத்திற்சேயெட்டிற்றிங்கள்
செறியுமிருவரைக்காரிதெரிசிக்கிலரிட்டம். (எக௦)
மானிடருக்கயன்விதித்தவாண்டைமூன்றாக்கின்
வருமுப்பான்மூன்றாகும்ஃகற்பமென்ப
தானறுபத்தாறுமத்திமந்தீர்க்கமிதன்மேல்
தாழ்வறமுன்வகுத்திடும்பங்கொன்றினைமூன்றாக்கில்
பான்மொழியுரய்ப்பன்னொன்றும்பங்கொன்றுதனக்கே
பகர்ந்திடுவாயற்பத்திலற்பமத்தியந்தீர்க்கம்
ஆனமத்தியந்தீர்க்கத்தையிவ்வாறேபிரித்து
அறிந்திடுநீயவரவர்களாயுளினைக்கண்டே. (எகக)

வேறு

அட்டமாதிபனுங்குசனுமேகூடியாறுபன்னிரண்டிடத்திருக்கில்
துட்டராயுதத்தான்மரணமற்றினியோர்சூழ்ந்துகண்டிடப்படுங்காயம்
எட்டினதிபன்பாம்புடன்வியமெட்டாறெய்திடிற்கள்ளராலரிட்டம்
தொட்டலக்கினமெட்டாதிசேர்ந்துதகஞ்சூழ்மனையுறிற்சலகண்டம். ()
கண்டவெட்டாதிவாகனதிபனைக்கலந்துபன்னிரண்டொடாறெட்டில்
மிண்டியநீசர்சத்துருமனையில்மேவில்வாகனங்களான்மரணம்
மண்டியெட்டதிபன்காரியங்கிசத்தில்வரின்மரத்தேறிவீழ்ந்திறப்பன்
அன்றியொன்றெட்டோனீசரங்கிசம்புக்காற்சனிவாதமாஞ்சூரும். ()
சூரனுங்காலமிர்த்தியோரெட்டாந்துறைலக்கினதியுங்கூடிப்
பாரமாங்கல்லாகினுமிடியேனும்பட்டிறந்திடுவன்மற்றின்னம்
சேரவேயட்டமாதிநீசத்திற்செறிந்துபன்னிரண்டிலாறெட்டில்
வீரமாங்கருங்கோணுக்கவேகுன்மவியாதியால்வியமடைந்திடுவன். ()
அடைந்திடுஞ்சன்மத்தாதிபனேனுமட்டமத்தாதிபனேனும்
மிடைந்திடுங்குளிகன்றன்னுடன்கூடிவியமெட்டாறிடத்தினின்மேவ
நடந்தகால்கரங்கள்பின்னமேபட்டுகலிவனந்நோயினானமடிவன் [பன்
தொடர்ந்தநல்லோர்கள்பரிவுடன்காணிற் சொல்கைகாலூனமுற்றிருப்
இருந்திடுஞ்சன்மந்தனிற்சனிகுளிகனிருவருங்கூடியேநிற்க
மருவியவியமாறெட்டிலிந்திருக்கமன்னுதுன்மரணமேயாகும்

பொருந்துமாதித்தன்புடத்திமகண்டன்புடத்தையுங்கூட்டும்ராசியினில்
அருந்தவமன்னன்பொருந்தநோய்கொண்டேயவனியிற்றுன்பமுற்றிடுவன்
இடும்பையாதித்தன்புடத்துடன்குளிகனிசைந்திடுபுடத்தையுங்கூட்டி
நடந்தராசியிற்சூரியன்வருங்காலநலியதாஞ்சந்திரன்புடமும்
கடுத்திறற்குளிகன்புடத்தையுங்கூட்டிக்கண்டராசியிற்பிறைவருநாள்
அடுஞ்சுரங்கடுமாவடுவரிகுவளையயில்கயலானகண்ணாளே. (௭௧௭)
நாளினிற்சன்மலக்கினங்குளிகனவிலிமகண்டகன்முதலாம்
கோளுடன்காலமிருத்துவின்நாலுங்கூட்டியராசிலக்கினத்தில்
மாளுநாளாமிந்நால்வரைக்கூட்டும்வகையிதிற்குளிகலக்கினத்தில்
நீளமட்டளவுமசுபதிமுதலாய்நிறைந்தநக்ஷத்திரங்கண்டே. (௭௧௮)
கண்டபின்குளிகனின்றலக்கினத்தின்கடிகையிற்சென்றமட்டறிந்து
கொண்டதுநக்ஷத்திரங்களைக்கண்டுகுதிரமட்டெண்ணிமுன்னிருந்த
திண்டிறற்றொகையுங்கூட்டிதல்புடமாந் தெரிந்துமுன்சொன்னநால்வ
மண்டியிப்படியெண்ணியபுடங்கூட்டவந்திடுமரணலக்கினமே[ருக்கும்

வேறு

லக்கினந்தனக்கெட்டாதிபன்குளிகனவிலிருபத்திரண்டான
நனிதிரேயக்காணாதிபன்காரிநால்வருமிருந்தவங்கிசையோன்
தக்கதோர்பலன்களன்றியுற்றிடுவோன்றன்மகாதிசைவருநாளில்
தரித்தலக்கினம்ரண்டாமிடமெட்டாந்தானமும்வியமனைதனிலும்
திக்கெனச்சனியீச்சுரன்வருங்காலஞ்சீவனுக்கரிட்டமாமென்றே
செப்பினர்வராகமேயரேயந்நாள்செகத்திலுள்ளோர்களுமறிய
மிக்கதோர்குளிகன்சனிகருநாகம்விரவுசன்மத்தினிலிருக்க
வியத்தினிலட்டமாதிசன்மாதிமேவினேயான்மெலிந்திடுவன்.(௭௨௦)

வேறு.

இட்டமூறுஞ்சென்மத்தாதியெட்டதிபனிருவருங்கூடிலாபத்தில்
திட்டமுடன்லாபத்தாதிமூவருமாய்ச்சேர்ந்திடிலவர்கடன்னுடனே
வடிவுடனெவர்மாவாதிகளேனும்வந்துதான்கூடினல்விருத்தத்
துடனுயிர்விடும்போதருகினிலிருப்பர் சொல்லுமலாபத்திசைமரணம்.
மரணமார்கண்டமறிவதுபத்தாமதிபதிதுர்ப்பலனாக
கிரணமாரகப்பேர்வருதிசையதனிற்கிட்டியபொசிப்பவர்பலனாய்
முரணுருமிருவர்தமக்குமேவிரோதமூண்டிடுபகையதாயிருக்கில்[மால்
தரணிவிட்டண்டர்பதியினிற்செல்லுந் தகைமையென்றுணர்க்கவேண்டிடு
வேண்டிடுநான்காமதிபதியுடனுமேவுமெட்டாதிபன்றானும்
ஈண்டியேதனதுவீட்டினிலிருக்கயிறப்பதுதாதைவாழ்பதியில்
தூண்டியேவியத்திலாறினிலிருக்கிற்றூரதேசத்தினிலிறப்பன்
நீண்டுநாதளவுஞ்சென்றுகூரயிலைநிகர்த்திடுங்கருங்கணாரணங்கே. ()
ஆரணங்கேகேள்பகலுதித்தானுக்கட்டற்குளிசன்னுறைவீட்டுக்
கோணியைந்தொன்பதிற்சனிவருநாளிடுக்கணுமிரவினிலுதித்தால்

சீரணிகுளிகற்கேழிட்ந்தனக்குத்திருகோணமதிற்சனிவருநாள்
தாரணியரியக்கண்டமென்றுரைப்பர்சாதகபுணமாதவரே. (எஉச)
மாதவமேஷமுதற்கருநாகம்வாழ்மனையளவுமட்டெண்ணி
மீதிமீன்மட்டுமிருதொகைதன்னில்விளங்கவேபெருக்கிமுந்நான்கில்
போதவேகழித்துமீந்தலக்கினத்தில்புணர்திருகோணராசியினில்
ஏதமாங்காரிமருவுநாட்கண்டமிவையெலாங்கோசரந்தனக்கே. (எஉரு)
தனக்குமோரெட்டாமதிபதியுடனுந்தபனனுங்குசனுமேகூடி
எனக்கதிர்குசனுமெட்டினிலிருக்கவிருவருமெட்டிடம்பார்க்கக்
கனத்துயர்வொப்பிலேறிவீழ்ந்திருப்பன்காணிவரொடுபுகர்கூடில்
கினத்தொருவிலங்குபூண்டுகொண்டிருந்துசீவனைவிடுத்திடுவார்கள். ()
வாருறைமுலையாய்சனிமதியிருவர்மருவியட்டமத்தினிலிருக்கக்
காரிசந்திரனெட்டதிபனைக்கூடக்கண்டிடக்கிணற்றில்வீழ்ந்திறப்பன்
கூரியசெவ்வாய்சனிசசிமூவர்கூடிமுன்போலவேயிருக்கில்
பாரினிற்றன்கையாலுயிர்மாய்ப்பன்பலர்களும்பழித்திடும்படியே. ()

படிதருஞ்செவ்வாய்சனியிவரெட்டிற் பரிந்துறிலக்கினந்தன்னில், கொடியவெய்யோனிந்தெட்டினிலிருக்கக் கொடுமையாய்ச்சலத்தில்வீழ்ந்திறப்பன், முடவனுங்கதிருமெட்டினிலிருக்க மூண்டிடுமகோதரவியாதி, அடல்சனிகதிர்தேய்பிறையுமெட்டுறையிலக்கினியாயுதமரணம்.
மரணமார்வகையேழொன்பதிலிரவிமந்தனுங்கூடியேயிருக்கக்
கரணமாறெட்டிற்குசனுறவெய்திற்கமழ்சுரோணிதமெலாமூலர்ந்து
திரணமாயெலும்புக்கூடாயிறப்பன்றேய்பிறைசனிகுசனெட்டில்
தரணியோரறியப்பாசபந்தத்தாற்றன்னுயிர்மாய்ப்பனென்றுரைப்பார்.
உரைத்திடும்பாவரொன்பதிலேழிலுறைந்திட்வட்டமந்தன்னில்
நிரைநிரைபைக்காணுகிபனிருக்கீடுமிம்மூன்றுவீட்டினையும்
விரைத்திடுநல்லோர்பார்வையற்றிருக்கவிலங்குடனிருந்தவன்றனதூ
கரத்தினாற்சீவன்றனைவிடுத்திடுவன்காணெனச்சொல்வர்கண்டாய். ()
கண்டலக்கினங்கள்கன்னியாயிதனிற்கருதிடான்பாவருமிருக்க
எண்டிசைபுகழ்மீனத்தினிற்பாவ ரிருந்திடவட்டமந்தன்னில், மண்டியேபிறையுஞ்சுங்கனுமிருக்கின்மாதர்செய்வாதையான்மடிவன், செண்டையம்பயின்மாவடுவிடம்போர்கட்கிஞ்சுசம்போலுமென்மொழியாய்.
மொழிகதிர்சனிதேய்பிறைகுசனல்வர்முயர்ச்சியாய்க்கூடிலக்கினத்தில்
பொழிதிரிகோணந்தன்னிலேமேவப்புண்ணியர்கண்டிடாதிருக்கக்
கழிபடும்புகையாற்றீயினாற்கொள்ளிக்கட்டையான்மருவலர்சுடவே
அழிபடுமெய்யில்வருத்தமுற்றிறப்பனவன்றலைநாள்விதிவசமே. (எகூஉ)
வசமுடனெட்டிற்கதிர்சனிசெவ்வாய்மருவவேலக்கினந்தன்னில்
இசைபுகன்றேய்ந்தபிறைகருநாகமிருக்கின்மெய்புழுத்துடன்மடிவன்

புசபலகாரிதேய்பிறையெட்டிற்பொருந்திடலவர்தமைச்செவ்வாய்
நிசமுடன்பார்க்கிலரசர்கற்கிருமிகிறைந்திடுந்துயரினுலிறப்பன். (எகூகூ)
மருவியபத்திற்சூரியனுறின்மங்கலன்வியத்தினிற்காரி
விரவியவிரண்டிற்கரியகோளிருக்கமேவலர்சூனியகுணத்தால்
சருவியகுளிசக்கட்டினுல்வருந்திச்சஞ்சலமுற்றிருந்தவன்றன்
கருவிகள்பிரிந்தேசோபமுற்றிறப்பன்காசினிக்கன்றிடுங்காலே. (எகூசு)
காலையொரேழிற்சூரியன்செவ்வாய்கருதுமெட்டிற்சனியாறில்
சாலவேகுறைந்தபிறையுறச்சன்மந்தன்னிலேழெட்டினிற்புதனும்
சீலமாயிருக்கி லிடிபினுன்மடிவன்றிறையக்சாணுதிபர்தன்னில்
மேலிருபத்துரண்டுளாந்தனதுவீடுலக்கினமெனவிளம்பும். (எகூரு)
விளம்புமாறெட்டுப்பன்னிரெண்டதிபன்மேவியபாவிதானுகில்
உளஞ்செறியுற்பாயுள்சுபர்பார்க்கிலோதியதீர்க்கமாமென்றே
களஞ்செறிநல்லோர்பாவருமாகிக்கண்டதுமத்திமவயதே, இளம்பிறை
நுதல்வேற்பொருகயற்கண்ணுக்கிசைந்திடுவிழியினுரணங்கே. (எகூசு)
நாளெனும்வியமாறெட்டினிலதிபனன்றுகேந்திரத்தினிலிருக்கில்
வாள்விழியணங்கேயற்பவாயுத்தான்மத்திமம்பணபரத்திருக்கில்
தாள்செறியணங்கேயாபோக்கிலீயந்தானுறிலாகுநூறுண்டே
கோளினற்குளிகன்மனைவருங்காரிகுலவியநாள்களுந்தீதே. (எகூஎ)
தீதெனும்வியமாறெட்டினிலதிபன்னிவர்களிற்பலன்களுமில்லாப்
போதுறுந்தனக்கேயவன்மகாதிசையிற்பொருந்தியகண்டகாலமதாம்
ஈதினில்வியமாறெட்டினிலதிபன்மேவியதிசைகளுங்கூடி
ஏதுறுநட்க்குமவர்திசையந்தத்தியல்புடன்கண்டகாலமுமாம். (எகூஅ)
காலமாம்பரிதிலக்கினுதிகளுங்கருதுமித்துருவதேயாயின்
தூலமாந்தீர்க்கவயதெனவுரைப்பர்சொல்லியசமமதேயாயின்
மூலமாமத்திமம்பகையாயினுறுவதுமுப்பத்துமூன்றே
கோலமாம்லக்கினநவாங்கிசைபதிக்குக்கூறியசனிவரிற்றுன்பம். எகூகூ
துன்பமேயில்லாவுச்சலக்கினத்தைத்தொடர்ந்துமுப்பதுபங்கதாக்கி
வன்பொடுசூரியன்பத்தாம்பங்குமதிமூன்றுகுசனிருபத்தெட்
டின்பமாம்புதன்மூவைந்துபன்னேழாமெழிற்குருபுகரிருபத்தேழ்
மூன்புசனிவிஞ்சதிபூரணவயதேமுமூசமற்பமென்றுனையே. (எசுo)
சென்மதாரகைக்காறெட்டுநக்ஷத்திரத்திசையதாமாரகமதனுள்
வன்மமோரெட்டிற்கெட்டாறுமின்னம்வருமாயினுக்குமாறெட்டாம்
பன்மைதாரகையின்றிசையின்மாரகமாம் பார்க்கவேயிரட்டியாய்வந்தா
ல்,கின்மைகாலமுமாமவருடைபுசிப்பிற்சேதமேயாகுங்கண்டாயே. ()

வேறு.

கண்டசன்மஞ்சரராசிகருதியாருதிபன்பார்க்கக்
கொண்டசெவ்வாய்லாபத்திற்கூறுந்திரராசிக்குடையோன்

பண்டேயொன்பதினிலிருக்கப்பாக்கியாதிதிரத்திலுற
உண்டாஞ்சத்துருநாகத்தாலோமம்பண்ணவருமரணம். (எசஉ)
வருநாலிடத்திலக்கினத்தில்வளருங்கேதுகுளிகனுடன்
அருள்சேர்ந்திருக்கச்சூனியமுமபிசாரத்தாலுறுமரணம்
திரளாம்வியத்திற்கேதுவுறத்தேடிப்பாவர்மிகநோக்கப்
புரவேயம்மையான்மரணம்பொன்பார்த்திடிலோவடுவுண்டாம். எசங

## ம்உ-ராசிக்கும் சுபாசுபகிரகமாரகபலன்.

வேறு.

சாற்றியதுவாதசமாம்லக்கினந்தன்னையோர்ந்து
நேர்த்தியாய்ச்சுபரும்பாவர்நிறையோகமாரகங்கள்
போற்றியேயவர்தம்வீட்டிற்பின்பலமூனைக்குநாலின்
தேற்றமேயறிந்துகொண்டுசெறிபலனுரைப்பாய்தானே. (எசச)
தானுறுமேடத்தோற்குச்சனிபுகர்புந்திபாவர்
வானுறும்பரிதிதேவவான்குருசுபனுமென்றே
கானுறுமிவர்கள்கூடக்கடினமாம்பலன்களற்பம்
தேனுறுஞ்சுக்கிரன்றன்றிசையிம்முன்மாரகங்கள். (எசரு)

வேறு.

களமேரிஷபஞ்சன்மத்தோற்கரசன்புகர்சூரியன்மூவர்
உளவாம்பாவிகதிர்சனியுமுயர்ந்தசுபனும்யோகங்கள்
வளமார்புகருந்தான்குடும்பமாரகத்தோனும்பாவி
புளகார்திதலேயுறுங்கொங்கைபூவைக்குரலாரும்மானே. (எசசு)
மானேமிதுனலக்கினத்திற்கரசன்செவ்வாய்கதிர்பாவர்
தானேசுக்கிரன்சுபனுகும்மதியஞ்சனியுமற்பபலன்
வானோர்பாவர்திசையதனின்மன்னுமாரகம்மென்னே
தேனேயனையமதுரமொழிச்செவ்வாய்மூறுவல்சிறுநுதலாய். (எசஎ)
நுகலுங்கடகம்புந்திபுகர்நோய்செய்பாவர்குருசெவ்வாய்
இகமார்சுபனுஞ்சேயோகமிருக்கும்பருதிமாரகனும்
மூதலேசிங்கம்புகர்புந்திமோதும்பாவர்சேய்சுபனும்
மதலேயோகம்பொன்வெள்ளிமழைக்கோனுடன்மாரகன்மாலே. எசஅ
மாலேகன்னிசேய்மதிபொன்மன்னும்பாவர்புதன்சுபனும்
காலேயோகம்புந்திபுகர்கனமாரகன்சுக்கிரன்பாவி
போலாந்துலாத்திற்சேல்பரிதிகுருவும்பாவர்சனிபுதனும்
மேலாஞ்சுபர்கண்மதிபுந்தியோகமாரகன்செவ்வாயே. (எசகூ)
ஏயகேள்புதன்சேயும்பளிங்கேயியன்றபாவரிந்துசுபன்
தூயயோகமதிகதிராந்தொடர்ந்தகுருவேமாரகனும்
ஆயதனுசில்புகர்பாவியாரல்பரிதிசுபராகும்
சேயயோகம்புந்திபுகர்சீண்டசனியுமாரகனே. (எருo)

மாகஞ்சுருவிற்குருசெவ்வாய்மதியும்பாவர்புகர்புந்தி
ஆகுஞ்சுபராமாயோகமருளுஞ்சுக்கிரன்மாரகன்சுன்
பாகர்கும்பங்குருமதிசேய்பாவர்சுக்கிரசுபனுகும்
தாகார்யோகம்பளிங்குபுதன்றள்ளுமரசன்முன்பாவி· (எருக)

பாவிமீனங்காரிபுதன்பளிங்குசூரியன்பாவியரோ
மேவுஞ்செவ்வாய்மதிசுபராம்விளங்கும்யோகங்குருவாரல்
தாவுமாரகன்சேயன்றேசாற்றுந்துவாதசலக்கினத்தை
ஆவலறிந்தேசுபாசுபங்களறிந்துகூறப்பண்பாமே. (எருஉ)

பண்பாரதிபன்லக்கினதிபாவனுசிப்பலமறவே
நண்பாமேழிலுற்றிருக்கநல்லோர்காணார்மாதமிரண்
டென்பார்லக்கினதிபதிக்கெட்டின்மிக்கவேபாவர்களும்
திண்பாய்நோக்கமுற்றிடவேதிங்களுன்கில்வருமரணம். (எருங)

இவன்றன்லக்கினதிபதியிதுவேபாவன்பலமறவே
சுவனேபார்வைவர்ச்சிதமாய்ச்சொல்லுமாறுதிங்கட்னில்
தவமாறெட்டிற்பன்னிரண்டிற்றக்கபாவர்நோக்கமுற்க்
கவனமுடனேயிருநான்கிற்காணுமரணங்கண்டிடோ· (எருச)

கண்டவமரபக்கத்திற்காணுஞ்சோமனெட்டாறில்
கொண்டசன்மமிதிற்பாவர்கூடிநோக்கவீரைந்தே
மண்டுமெட்டிற்சென்மத்தில்வந்தேபாவர்தானிருக்க
மிண்டாய்நல்லோர்நோக்கமிலாமேவின்வருஷமொன்றினுமே. (எருரு)

ஒன்றேகாரிவக்கிரமாயோதும்புந்திசெவ்வாயும்
அன்றேயொருவீட்டினிலுறவேயாறைந்தெட்டுப்பன்னிரண்டில்
நின்றேசன்மமோரிரண்டினிற்கக்குசன்றுனுற்றுலும்
நன்றேசுபர்கணேக்கமிலாநாளும்வருஷமிரண்டினுமே. (எருசு)

நாளுஞ்செவ்வாய்தனக்கெட்டினண்ணிக்குருவுந்தானிருக்கக்
கோளும்பரிதிசெவ்வாயுங்கொண்டமதியைப்பார்த்திடவே
மீளுஞ்சுங்கன்கண்ணுட்டிமேவிநோக்கமில்லாத
ஆளும்வருஷமூன்றெனவேயறைவர்கணிதவல்லோரே. (எருஎ)

வல்லசன்மந்தனக்கெட்டுவாழுமதற்கோரொட்டதனை
நல்லோர்பார்க்கக்கோணத்தைநாடும்பாவரொருநான்கே
சொல்லுஞ்சன்மராசிக்குச்சுபக்கோடிருஷ்டிவர்ச்சிதமாய்
ஒல்லும்பாவர்பார்வையுறவோங்குவருஷமைந்திற்சாம். (எருஅ)

சாமேவியமாறெட்டதனிற்சனிசூழ்பரிதிராகுமதி
ஆமேயிருக்கச்சுபர்திருஷ்டியல்லால்வயதோருறுதரும்
தாமேசன்மமுன்பின்னுந்தக்கபாவரிருந்திடவே
போமேநல்லோர்பார்வையிலாப்போதுமரணமேழதனிலே. (எருகூ)

தனிலேசன்மஞ்சேயுமதிதன்னிலொருவர்நின்றாலும்
மினியநான்கிற்பாவர்களுமெட்டிற்பரிதிசேய்மதியும்
மனுசூழ்ந்திருக்கயின்னமொருமதிவிட்டரசன்சன்மாதி
சனிசூழ்பரிதியுறநல்லோர்தானும்பாராதேன்மரணம். (எ௬0)

மரணஞ்சன்மமிதுனதுலாம்வாழுமெட்டிற்குருபுகரும்
திரமாய்ப்பாவர்நோக்கமுறத்தெரிந்தவயதுமெட்டுளதாம்
பரிதிமதியுமட்டமஞ்சேர்பண்பாங்காரிபதினொன்றில்
வரவேயொன்பதிதுமரணம்வகையாயுலகீரறிந்திடுமே. (எ௬க)

அறிந்தேயெட்டிற்கதிர்புகருமரசன்பார்வைதானுமிலாச்
செறிந்தேயிருக்கவின்னமொருசெப்புநாலிற்சந்திரனை
பிறிந்துபார்க்குஞ்சேய்பரிதிபின்புநல்லோர்பாராதால்
இறந்தேயிருக்குமொன்பதினிவினையகோளின்பலனிதுவே. (எ௬உ)

இதுவேகேந்திரமேறியிவர்பிராகுகேதுயிருந்திடவே
அதிசூழ்பாவர்நோக்கமுறவானபத்திலுறமரணம்
மதிசேர்பரிதிகூடியொருமனையிலிருக்கச்சன்மத்தைத்
துதிசேர்நல்லோர்பாராக்காற்சொல்லும்பதினொன்றுறுவயதே. (எ௬௩)

வயதேசன்மங்கேதுக்கிர்மதிதானிருக்கச்சுபர்திருஷ்டி
சயமேயில்லாப்பன்னிரண்டிற்சாருங்குழவியுறுமரணம்
நயமாமொன்றிலெட்டாதிநண்ணியிருக்கவோராறில்
நியமேநான்கிற்சேயுறவேஙிற்பன்பதின்மூன்றெனச்சொல்லும். (எ௬௪)

சொல்லுமாறெட்டிற்பாவர்சூழ்ந்தேயிருக்கச்சன்மாதி
வெல்லுமர்போக்கிலியத்தின்மேவியிருந்தாற்பதினாறும்
வல்லோரதிபன்சென்மாதிவர்வேபரிதியுடன்கூட
நல்லோர்பாராக்கேந்திரத்தினண்ணும்பாவர்நாலேந்தே. (எ௬௫)

நாலேசோமற்கிருபுறமுமிராகுசெவ்வாய்சனிகேது
ஆலேயிருக்கச்சன்மாதியாயபலன்களம்றிடவே
மேலாம்பாவருடன்கூடிவேண்டியிருக்குமிப்படியே
சீலாயையைந்தினின்மரணஞ்செப்புங்கணிதமாதவரே. (எ௬௬)

மாதேகன்னிலக்கின்மாய்வந்துசனியுந்தானிருக்கப்
போதேயரசன்வியமெட்டிற்போகவிருபத்தாறுகும்
சாதிசன்மமெட்டதிபன்சரியாய்ப்புடமேதானிருந்தும்
ஓதுங்கேந்திரமுறவெட்டிலுற்றேகேதுமூவொன்பான். (எ௬எ)

பானுபுதல்வன்கேதுகரும்பாம்புசெவ்வாயொன்றெட்டில்
தேனேயிருக்கப்புகர்புந்திதேவர்குருவுங்கேந்திரமில்
லானேயுற்றுவிருபத்தெட்டாகுமெட்டிற்கதிர்மூன்றில்
ஊனேமதியுஞ்சனிபாவருடனேக்கிருபத்தொன்பானே. (எ௬அ)

ஒன்பான்றேய்பிறைசுபத்தாஎமூற்றேயட்டமாதிபதி
அன்பாய்க்கேந்திரமுறவெட்டிலானபாவர்தானிருக்கப்
பின்பாம்லக்கினதிபதிபலன்களில்லாதிருந்திடவே
துன்பமுப்பதெனவறிந்துசுகமாயுணர்த்தேன்மிகவாழும். (எசுசு)

வாழுநான்கிற்சுக்கிரனும்வந்தேயெட்டிற்பாவருறச்
சூழுநல்லோர்பார்வையறதொடர்ந்தேநிற்கவக்கினியால்
ஊழிமனையாடன்றனுமோங்கும்பாம்பின்கடியாலும்
ஆழியுலகோர்தாமறியவாகுமரணங்கண்டீரே. (எஎ௦)

கண்டவிரண்டிற்பன்னிரண்டிற்காணுஞ்செவ்வாய்சோமனுற
பண்டேயேழிலெட்டில்கரும்பாம்புமரசனுமின்முப்பான்
கொண்டவட்டமாதிபதிகேந்திரமேவில்க்கினதிபதி
மண்டுபலன்கள்வர்ச்சிதமேல்வயதுமுப்பத்திரண்டாமே. (எஎக)

ஆமேயரசன்சுக்கிரனுமனுகிக்கேந்திரந்தான்மேவத்
தாமேலக்கினதிபதிதானும்பாவருடன்கூட
தீமைசூழாபோக்கிலியந்தேய்ந்தமதியுந்தானிருக்க
தோமேமரணமாறுறிற்சொல்வர்கணிதவல்லோரே. (எஎ௨)

வல்லமிதுனலக்கினமாய்வாழும்பரிதிதானிருக்கப்
பொல்லாரிரண்டுபாரிசமும்புகவாறரசன்முப்பத்தேழ்
ஒல்லும்பாவர்கேந்திரத்திலுருச்சன்மாதிபன்னிரண்டில்
வெல்லுமெட்டோன்லக்கினத்தின்மேவின்முப்பத்தெட்டாமே. (எஎ௩)

மேலாஞ்சன்மந்திரராசிமேவுமொன்றிலெட்டாதி
சாலவிருக்கச்சுபரொட்டிற்றந்தால்வயதுமெண்ணைந்தாம்
சேலெட்டாதிகேந்திரமேசெவ்வாய்லக்கினந்தானிருக்கக்
காலவாறின்மூன்றுசனிகதிர்சூழெண்ணைந்தாம்வயதே (எஎ௪)

வயதேசோமன்லக்கினத்தில்வர்க்கோத்தமனுமிற்பாவர்
நியமேபார்க்கச்சுபர்திருஷ்டிநேசமில்லாவாறெட்டில்
பயமேசன்மனெட்டாதிபதியங்கிசையிற்பாவருடன்
சயமேநிற்கவெட்டாதிசன்மத்திருக்கிலைம்பதுவே. (எஎ௫)

வேறு.

அன்பாமுபயராசிக்கதிபதி, இன்பாய்லக்கினமியைந்தேயுற்றிட, பன்பாமதிசனிபனிரொண்டெட்டுறில், துன்பமைம்பத்திரண்டினிற்சொல்லுமே.

சொல்லுஞ்சன்மாதிசூழ்ந்தேயெட்டுற, வல்லசந்திரன்மனைபிற்கதிபதி, வெல்லுசந்திரற்கெட்டினின்மேவிடிற், புல்லர்கூடிற்போமேபதினலதே. (எஎஎ)

காலாஞ்சன்மநாடுந்தனுசில், மேலாயரசன்விரும்பியிருந்திடச், சேலார்ராகுவிஞ்செவ்வாயெட்டுறிற், காலமேழெட்டிற்சனகண்டமே. (எஎ௮)

கண்டவாறுகருதிடுமெட்டினில், கொண்டகோள்களேகூடியதுதனில், மண்டியிருக்கில்வயதைம்பத்தெட்டினில், அண்டர்மாதவரறிந்துரைத்தனரே. (எஎகூ)

உரைத்திடும்பத்திலுறுகதிரோனும், திரைத்தகாரிசென்மமேவிடிற், புரைத்தவெட்டினிற்புரவலனுற்றிட, நிரைத்தேயாண்டுநிற்பனறுபதே. அறுபதின்னமாண்டினிற்காரி,நறுமலர்ச்சன்மநாலினிற்சந்திரன்,பறுவழிற்செவ்வாய்பத்தினிற்கதிர்குரு, இருபுகர்புந்தியிவருடன்கூடிடில்.()

கூடியவெட்டாமதிபதிபாவனாய், நாடியசந்திரனண்ணிடுங்கோணத்,தாடியகேந்திரந்தன்னிற்கூடிடில், ஆடியவறுபத்தைந்தினிற்போகுமே. ()

போகிடுங்காரிபுகுமனைநீச, மாகியகேந்திரகோணமாகிடில், மேகமிலக்கினமெழின்மனைநல்லோர், ஆகியசுபருடனணுகிலெழுபதே. (எஅங)

எழுந்திடுலக்கினத்தெய்தநற்கொளுதறத், தழுந்தியகேந்திரஞ்சந்திரன்மேவிடில், அழுந்திடுகோணக்காரியமர்ந்துறி, லழுங்குபின்செல்வமோரொழுபதினுலே. (எஅச)

நாலாஞ்செவ்வாய்நாடியைந்தினில், ஏலாம்பரிதியேழிலமர்ந்திட நீலாங்காரிநீசமுற்றிடில், மாலாயெழுபத்தைந்தின்மரணம். (எஅடு)

மரணமறியும்வகைகேந்திரத்தில், குருவுடன்மதியுங்கூடியிருந்திட திரள்சுபர்நோக்கத்தேசத்தராய்ப், புவியினிலெழுபத்தொன்பதுபொருந்துமே. (எஅசு)

மேவியலக்கினவீடாறளவும்,தாவியநல்லோர்தானுறவேழ்முதல்,பாவர்களுறிலேபரதேசத்தராய், சாவதுயெண்பதிற்சாற்றிடுவாயே. ()

சாற்றிடுமின்னந்தானெண்பதனில், ஏற்றிடுலாபத்திருந்தங்கிசாபதி, போற்றுமெவ்வீட்டினிற்புகிலதற்குடையோன், நேர்த்தியகேந்திரத்துறினிச்சயமே. (எஅஅ)

நிச்சயவெட்டாறுநிலவுடன்சன்மம்,இச்சைநற்குருவும்லாபமூன்றினில், துச்சபாவர்தொடர்ந்தேயிருந்திடில், அச்சமிறெண்ணூறுண்டினிலிறுமே. (எஅகூ)

இறுஞ்சன்மாதிபிதுவேபலனாய், நறுஞ்சுபர்நோக்கநண்ணிக்கேந்திரத், துறினேலட்சுமிதொடர்ந்துபூவராசாய், தெறிந்திடுநூறெனச்செப்புமாதவனே. (எகூ0)

எட்டாம்பாவபலன்முற்றியது-ஆூ மொத்தம்-அ0அ.

---

# ஒன்பதாம்பாவபலன்.

## பிதுர்ப்பலன்.

ஓதுமைந்தொன்பானுதிபதிகதிருடனேகூட
ஓதிடுங்காரிபார்க்கவுறும்பிதாவிற்கரிட்டம்

ஓதிமைந்தோன்பானுதிபதிகதிருடனேகாரி
ஓதுசேயிவர்தாமூன்றிலுறிற்றந்தையுடனேபோமே. (எ௯௧)
உடன்சன்மலக்கினத்துக்கொன்பதிலேந்திற்பத்தில்
முடவன்சேயிரவியிந்தமூவரிலொருவர்நிற்கத்
திடமுறுபிதாவுக்கீனஞ்சன்மத்திற்செவ்வாயேழில்
அடல்கதிர்க்கையம்பொன்னோர்க்காண்டுமூன்றிருப்பன்றந்தை. (எ௯௨)

வேறு.

தந்தைபதியிற்சவுரிநிற்கச்செவ்வாய்
தானுங்கேந்திரத்துறிலரிட்டந்தைக்
கந்தவனுக்கட்டமத்துஞ்சன்மாதியுடனும்
ஆதவன்செவ்வாய்கூடியனுகிளையர்க்கரிட்டம்
பந்துசன்மத்துக்கைந்தொன்பாவனிற்பாவர்
பாம்புகேந்திரத்திலுறத்தந்தைக்கீனம்
விந்தமலர்நண்பனுக்கேழ்சனிசேய்நிற்கில்
மேலோர்நோக்கறநிற்கில்வியமொன்பானே. (எ௯௩)

வேறு,

ஒன்பானிடத்திற்சனியைந்திலிரவியுடனேயுறுபாம்பும்
அன்பாயிருக்கத்தந்தைதனக்கரிட்டமைந்தாமாதிபதி
இன்பமுச்சமாயிருக்கயில்லையரிட்டம்பிணிகாட்டும்
பொன்பார்த்தருளச்சனியிரவிநின்முர்பிணிபோங்கண்டீரே. (எ௯௪)
கண்டசனியுங்கதிரோனுங்கதித்தவொன்பானுதிபனும்
அண்டியொருவீட்டினிலிருக்கவையர்க்கரிட்டமவனைப்பொன்
மண்டிநோக்கவைந்தாதிமனேயோனுச்சமாயிருக்க
மிண்டாய்ச்சிலநாளிருந்தரிட்டமேவுமிடம்போல்விழிமானே. (எ௯௫)
மானேபிதுர்காரகனென்பான்மனையாதிபனுஞ்சனியாகித்
தானேபாவருடன்கூடித்தருமுந்நான்கெட்டாறிலுறத்
தேனேபிதுர்ஸ்தானந்தன்னின்செம்பாம்பிருக்கவம்மனையில்
ஊனேசெறியுஞ்சனிவருநாளுடனேதந்தைக்குறுமரிட்டம். (எ௯௬)
உறுஞ்சன்மத்திற்செவ்வாயுமொன்பானிடத்திற்சனியிருக்கப்
பெறுந்தந்தைக்குவருமரிட்டம்பிதாத்தானதிபதியுடனே
குறுஞ்செவ்வாயுஞ்சனிமூவர்கூடியிருக்கநல்லோர்கள்
அறிந்தெங்கேதானிருந்தாலுமையற்கரிட்டமாமென்பார். (எ௯௭)
என்பார்சன்மந்தனிற்காரியிரவிசசிமூவருமிருக்கத்
தன்பாலைந்திற்குசனிருக்கத்தந்தைக்கரிட்டந்தான்பின்னும்
அன்பார்குசன்செம்பாம்பிரவியாகமூவருடன்கூடிப்
பின்பாராமன்மூன்றுண்டிற்பிதாவுக்கரிட்டம்பேசுவரே. (எ௯௮)
பேசுமெட்டொன்பதுபத்திற்பெரியபாவருறவொன்பான்
நேசமெட்டாறுவியத்தினிற்கப்பலன்கணீங்கியுற

ஓசையொன்பதிற்குசனேயுலவுங்கதிரோனுற்றிடினும்
வீசுமொன்பதினிற்பாவர்மேவப்பிதாமெய்யுயிர்பிறியும். (எ௯௯)

வேறு.

பிறியமுடனொன்பதாமிடத்ததிபன்பூடத்தில்
பெறுங்குளிகன்றனைவாங்கிப்பெற்றிடுராசியிலே
நெறிபயிலந்தமனியினுர்தாமருவுங்காலம்
நிரியாணமந்தவருடத்தில்வருமவர்தம்
குறிகாணும்படிவெய்யோன்புடத்தைவைத்துக்கொண்டு
குலவுமொன்பதாமிடத்தோன்புடமதனைவாங்கிச்
செறியுமந்தராசியேமாதங்களாகத்
தெளிந்துபிதாநிரியாணந்தனையருளுவீரே. (அ௦௦)

வேறு.

அருளுந்தந்தைகாரகனையறிந்தேபலன்களுரைசெய்ய
பரிதிக்கிருபுறமாறேனும்பாவரிருக்கப்பாவர்களும்
துரிதாய்நோக்கமிருந்தகனற்சொல்லுங்குழவிகருப்பத்தில்
தெரியவிருக்கப்பிதாவரிட்டஞ்செப்புங்கணிதவல்லோரே. (அ௦க)

பாக்கியபலன்-வேறு.

உறுமொன்பதாமிடத்தோன்வெகுபலவானுகி
உற்றவிடத்ததிபதிகேந்திரத்திற்பாக்கியவான்
பெறுந்தந்தைதனிலதிகன்கீர்த்திமானரசர்
பிரியமுறச்சஞ்சரிப்பன்பிரதாபசாலி
அறிவுறுபாக்கியாதிபிதிர்காரகனேக்கூடி
ஆறிலுறப்பிதாவுரைகேட்டருள்வனென்பானதிபன்
பிரியாமலிருந்தவாங்கிசத்தாதிபதியைப்
பிதுர்காரகன்பார்க்கக்குருபத்திப்பிரியன். (அ௦உ)
பிரியமுடன்பிறைகைந்தாம்வீடுசரமாகப்
பெருகியலக்கினத்துக்கைந்தாம்வீடுசரமாய்
நிறையும்பூரணமானவயிச்சுவரியனென்பர்
நீள்சரமுந்திரமாகினிகழ்த்துபலன்பாதி
அருமைபெறுஞ்சரத்துபயமாகிற்காற்பங்காம்
அயிச்சுவரியமெனப்பகர்வரம்புலிக்கஞ்சானக்
குரிமனைகண்முதற்கொண்டுலக்கினத்துக்கைந்தைக்
குணமுடனேகண்டுபலன்கூறிடவேவேண்டும். (அ௦௩)
வேண்டியதோரொன்பதாமதிபதியுங்குருவும்
விரும்பியகேந்திரத்திரிகோணங்களிலேமேவில்
ஆண்டகைபாக்கியவானிவரிருவருடனும்
அன்புடனொன்பானிடத்திலணுகினுமிம்மூவர்

பூண்டுவருமகாதிசையிலாபாதிபுசிப்பிலேதான்
பூரணபாக்கியஞ்சேருமேழாமாதிபனைத்
தீண்டிறலாபாதியுறவாய்க்கூடினல்லோர்
செறியுமனையுறிலவர்கடிசையிற்பாக்கியமே. (அ0ச)

மேயலாபாதியுமேழாதியுமித்துருவாய்
மேலோர்கள்வீட்டிலுறச்சன்மாதிபதியும்
மாயுமிவர்மூவருமொன்ருய்க்கூடியிருக்கில்
அயிச்சுவரியஞ்சீவபரியந்தமட்டுண்டென்னும்
நேயமாட்டுனென்பதாமிடத்ததிபன்சாதி
நிசமறிந்தேயவர்மரபின்னிருவர்களினுலே
தூயசவுபாக்கியங்கள்சேருமென்றேநல்ல
சோதிடநூலுணையுணர்ந்தோர்சொல்லுவர்கண்டே. ()

கண்டிடுலாபாதிபதிபாக்கியாதிபனும்
களத்திரத்தானத்திருக்கப்பாக்கியலாபந்தான்
மிண்டியதோர்கேந்திரமாயுச்சவீடாக
மேவியமேழாமதிபன்சுபக்கிரகமாகி
மண்டியபாக்கியலாபத்தானத்திலிருக்க
வரும்பலபாக்கியமவன்றன்மனைவிக்குஞ்சுகமாம்
திண்டிறலாந்தோளியதாமிவர்களொடுஞ்சான்ருேர்
செறியும்பாவாதியற்குஞ்செல்வமிதுசேரும். (அ0சா)

சேருமொன்பானிடத்திருந்தபாக்கியவாதிபனும்
திறல்குருமூவருநீசமத்தமனஞ்செறியக்
கூரியபாவியுமாய்ச்சத்துருவீட்டிலிருக்கக்
குலவியமாறெட்டிற்கூடியுநின்ருலும்
நேரும்பாக்கியநட்டம்பாக்கியவாதிபனும்
நிருபனுநின்றிடுவீட்டோனீசமத்தமனமாப்
பாரிலிரப்பான்பாக்கியாதிகுருவுடனே
பாவிகள்கூடினும்புசிப்பன்பலிகரத்திலெடுத்தே. (அ0எ)

வேறு.

எடுத்தபத்தாமதிபதியேழிறை, கடுத்தமித்திராகிப்பலனுடன், கொடுத்தவுத்தமர்வீட்டினிற்சூழ்ந்திடப், படைத்தபாரியினல்வரும்பாக்கியம்.

வேறு.

பாக்கியஞ்சேர்வகைபிருகுமதியரசன்கூடிப்
பத்தாகுமிடத்திருக்கும்பலன்றனவானவன்
தேக்கியசத்தியவசனன்கல்விசெறிநிபுணன்
திரராசர்வெகுமானஞ்செய்யமகிழ்ந்திருப்பன்
தாக்கியபொன்சனிபுந்திமதிசெவ்வாயைவர்
தானெருவீட்டினிலிருக்கத்தனவானுமாகி

ஊக்கமுறுமுடியரசர்சன்மானஞ்செய்ய
உலகில்வெகுபாக்கியமுமுண்டாகுங்கண்டீர். (அ0சூ)

வேறு:

கண்டபத்தாமாதிபதிகருதும்ச்சர்வீட்டிலிருந்
தண்டிப்பத்தாமிடம்பார்க்கிலவன்பூமியிலுண்டாஞ்செல்வம்
மிண்டிநீசர்சத்துருக்கள்வீட்டிலிருந்தேமிகநோக்க
அண்டுந்தூரதேசத்துமந்நியராலுமுயிச்சுவரியம். (அக0)

ஒன்பதாம்பாவமுற்றியது. ஆகமொத்தம் - அஉஅ.

## பத்தாம்பாவம்.

### கன்மபலன்.

பத்தாமிடத்திலட்டமத்தோன்பாவருடனேகூடிநிற்கப்
பத்தாமாதிபலம்பெறவேபாவர்பார்க்கத்தூர்க்கன்மம்
பத்தாமதிபன்பலவானாய்ச்சுபக்கோளுடனும்பரிந்தேழில்
ஒத்தநான்கில்சன்மத்திலுறினுற்கர்மமுளனவன். (அகக)

ஆவன்ஞானிசனிநாலிலமர்ந்தாலந்தச்சனிபத்தில்
மேவிற்றீர்த்தயாத்திரையைவிரும்பித்தவமேவிரும்பிடுவன்
தாவுஞ்சன்மாதிபன்பத்திற்றரிக்கிற்கன்மமுளன்பத்தில்
கோவுங்கன்மகாரகனும்பலமேற்கன்மங்குறைவில்லான். (அகஉ)

குறைவிலொன்பதாமிடத்திற்கோவும்பலமாய்ச்சுபர்வீட்டில்
உறையச்சுபக்கோள்பார்க்கமதியுகந்துசல்ராசியிலிருக்க
நிறைந்தகங்காநதிதோய்வன்பின்னுநிலவுச்சம்பெறவே
அறையும்பத்திற்சுக்கிரனுறத்தீர்த்தம்பலவுமாடுவனே. (அகரு)

வேறு.

ஆடும்பத்தாமதிபன்சுபருடன்,கூடிமற்றிருபாலுற்றகொற்றவர்
நீடிநிற்கநிரந்தரமன்பொடும்,தேடியேசிவபூசைகள்செய்வனே.
செய்யசந்திரன்சன்மந்தனக்குமே,துய்யபத்தாமதிபதிசூழ்ந்திடும்
மெய்யிலங்கிசையோன்பலமேபெறில்,பொய்யறச்சுபகன்மம்புரிவனே
புரிகுசன்சனிபொன்மால்பளிங்குமே,பரிவுடன்றொருவீட்டினைப்ப
ற்றிட, அரியசற்குணசன்மார்க்கனாகியே, தெரியுஞானச்சிந்தைச்சிவ
யோகியாம். (அகசு)

வேறு.

ஆமெனும்பத்தாமதிபனற்கோளேயாய்த்தனலாபபாக்கியத்தில்
நீமமாயுச்சகேந்திரங்களிலுநிற்கனற்கன்மமேபுரிவன்
தோமுறும்பவனாய்நீசமத்தமனாய்ச்சொல்லுமாறெட்டினில்வியத்தில்
தாமுறினல்லோர்தம்மையும்பழித்துத்தக்கதூர்க்கன்மமேபுரிவன்

புரியுமீரைந்தாமதிபனற்கோளாய்ப்புசழ்பலவானுமாய்ப்பத்தில்
தெரியவுற்றிடல்யாகாதிகன்மங்கள்செய்வனீரைந்திடத்ததிபன்
பரிவுடன்வியத்தானுதியைக்கூடிப்பண்புறுஞ்சுபபலமுடனே
அரியதோர்வியத்திலுறத்தனபதியாயானநற்கன்மமேசெய்வன் (அகஅ)
செய்யகன்மாதிகுருவுமாயுச்சஞ்செறிந்தசுக்கிரனுடன்கூடில்
தய்யயாகாதிகன்மமேபுரிவன்சூழ்ந்தகன்மாதியைத்தானும்
பய்யவேகுருசுக்கிரனுமேபார்க்கில்புண்ணுவன்யாகமேபலவும்
மெய்யகன்மாதிகுருவுமாய்நல்லோர்வீட்டுறவிரும்புவன்மகமே.
விரும்புசுக்கிரனுங்குருவுமேபலமாய்மேவும்விட்டதிபனற்கோளாய்
இருபலவானுயிருக்கமற்றவரோரடெத்தனேசுபக்கிரகங்கள்
பெரும்பலமுடனேகூடினவிலக்கம்பெருமகம்புரிவனென்றுரைக்கும்
அரும்புகன்மாதிகுருவுமாய்ப்பலமேயாகில்வேதங்கண்மூன்றறிவன்.
அறியுங்கன்மாதிபாவனுய்யாவரகத்தினிலிருந்துகன்மத்தைக்
குறியுடன்பார்க்கிற்குத்திரகன்மங்கூசிடாப்பாவதுர்க்கன்மம்
நெறியுடன்புரிந்தீங்கிசைபெறவிருப்பனிறைந்திடுங்குறூரசாகசமும்
செறியுமவ்வினையாற்சுபபலஞ்சிறிதாந்தீங்குறுபலன்திரளாமே. அஉக
திரமுறுமொன்பானதிபதிகுருவாய்ச்செய்யவொன்பதிற்குருவுறினும்
வரமுறும்பலர்களிடத்துபதேசவசனமும்வித்தையும்பெறுவன்
உரமுடனொன்பானதிபதிமரபிலுளாயுபதேசமும்பெறுவன்
பரமுறுமிவர்களுச்சகேந்திரத்திற்பற்றிடில்ஞானமேபலிக்கும். ()

வேறு.

பலிக்குமேடமிடபமுடன்பகர்ந்தசிங்கம்பத்தாக
வலிக்குஞ்சுபக்கோணின்றிடினுமன்னுமவர்நோக்குற்றிடினும்
ஒலிக்கும்வேதமதிற்சொன்னவுத்தமத்தன்மங்கடனேச்
சலிக்கச்செய்வனெனச்சொல்வார்தக்ககணிதவல்லோராம். (அஉங)
ஆதுஞ்சன்மலக்கினத்திலணுகும்ராகுமோரேழில்
வேகமுடனேதானிருக்கவேண்டுங்கேந்திரங்காரிபுகர்
தாகமுடனேபுதன்மூவர்தானுங்கூட்ச்சண்டாள
யோகமென்வேதானுரைப்பருண்மைகன்மமநாசாரம். (அஉச)
உண்மையாக்கியாதிபனுமூற்றேசென்மத்துறுகதிரும்
வண்மைபெறவேயோரைந்தில்வந்துசுபக்கோணுேக்கமிலாத்
திண்மையாறிலொருமூன்றிற்றீயோர்வந்துதானுறைக
எண்மையுடனேயநாசாரமெய்துநீசக்கன்மியனே. (அஉரு)

சந்யாசியோகம்-வேறு.

தேசுறுபத்தாமாதிநான்கிடத்திலிருக்கச்
செப்பியநாலாதிபதிதிரிகோணத்தெய்தப்
பூசலுறும்பாம்பல்லாதொருநான்குகிரகம்
பொருந்திப்பத்தினிலிருக்கும்போதுசந்யாசியுமாம்

ஓசைகொளுன்காம்வீடுமுதற்பத்தாமனைமட்
டோரேழுவீட்டினுங்கோளொழியாமலிருக்கில்
காசினியில்வாழ்பவர்க்குத்தேசிகனேயாகிக்
கதித்திடுசன்யாசியெனவேகருதல்வேண்டும் (௮௨௬)
வேண்டிடுசெவ்வாயிரவிமதிமூவர்கூடி
விரும்புபத்தாமிடத்திருக்கமின்னார்பொன்றனக்கும்
ஈண்டியதோர்விரிவில்லாச்சன்யாசியாவன்
இனியபுதனுங்கிரோனுமுச்சமாயிருக்கத்
தாண்டுவியத்தானத்திற்சுக்கிரனெய்திடவும்
சனியொருவனுகிச்சுக்கிரன்றன்னைபார்க்கப்
பூண்டுவருஞ்சன்மமுதலாதியந்தமாகப்
புகழ்ந்திடுசன்யாசியெனப்போற்றிடவீற்றிருப்பன். (௮௨௭)

பத்தாம்பாவமுற்றியது. ஆ மொத்தம்-௮௨௭.

# பதினோராம்பாவம்.

## ஆதாயபலன்.

வியமாறெட்டாதிபன்கூடிமேவினுலுந்தனியேனும்
நயமாய்பாவத்துநிற்பாவர்நண்ணிற்பார்க்கிலாபமில்லை
சுயலாபாதிவுச்சனுமாய்ச்சுபர்மத்தியிலேதானிருக்கில்
சயலாபத்திற்சுபரிருக்கச்சாரும்லாபந்திரளாக. (௮௨௮)
திரலாபாதியுச்சத்திற்செறிந்துபாகத்தினிலிருக்க
வரவாய்ச்சென்மாதிபன்பலமாய்மருவலாயம்வருஞ்சுகிப்பன்
விரவாய்லாபாதிபனிருந்தவீட்டுக்கிறைகேந்திரமேவ
உரவோரவனைக்கூடக்கண்ணுறலாபங்களுண்டாமே. (௮௨௯)
உண்டாம்லாபாதிபனிருந்ததிக்கிற்பலன்களுரைசெய்வாம்
தண்டாமமைநண்பன்கிழக்குத்தருஞ்சுக்கிரற்கக்கினிமூலை
கண்டாய்குசன்றேற்கராமூலைகாரிமேற்குச்சசிவாயு
கொண்டேயிருக்கும்புதன்வடக்குகுருவீசானங்கொண்டுவரும் ௮௩௦

வேறு

வரும்லாபாதிபன்லாபத்தானத்திலிருந்தோன்
மதியிரவியிவர்நால்வர்மகிழ்பலமேபெற்றுப்
பெருமையுள்ளோர்வீட்டினின்றகிரகத்தோடிருக்கப்
பெறும்வீட்டுக்கதிபதியுமேபலவானுயின்
கிருஷிகணன்றுய்ப்பலிக்குமைஸ்வரியனுவான்
கிட்டியிவர்மகாதிசையிற்கிளர்தனங்கள்சேரும்
தரும்லாபாதிபனிரவியாகிமதியுடனும்
தான்கூடப்பார்க்கவெகுதனலாபமுண்டாம். (௮௩௧)

உண்டானலாபாதிபதியாகுஞ்சசியை
உம்பர்கோனனகுருவும்முகந்துநோக்க
மிண்டானசகலபாக்கியலாபஞ்சேரும்
மிக்கலாபாதியெவர்வீட்டிலிருந்தாலும்
கொண்டாடுமெவரவர்க்குவெகுலாபமுளதாம்
குறித்தசென்மாதிபன்லாபத்தானத்திற்குலவ
கண்டாய்மொழியாய்லாபாதிநின்றதிசையில்
கருதியலாபங்கள்வருங்காணுமெனப்புகல்வார். (அகஉ)

பதினோராம்பாவபலன்-முற்றியது-ஆகவிருத்தம்-அறுo.

# பன்னிரண்டாம்பாவம்.

## சயனபலன்.

கூறியவியத்திற்காரிசசிகதிர்குருசேய்வெள்ளி
ஏறிடிற்குழவியன்னைபிதாமகன்றுணைவரில்லாள்
ஆறுபேருக்கரிட்டமப்பதிசரமேற்றீதாம்
மாறிலாவவர்வீடுச்சநன்றெனவழுத்துவாரே. (அகந)

வார்மைசேர்வியத்தானத்தின்மன்னவன்சுபக்கோளாகிச்
சீர்மைசேர்கேந்திரத்துமுச்சத்துஞ்செறிந்துநிற்கில்
பார்மைசேர்வியத்தினல்லோர்பரிந்துறிற்பார்க்கில்மேலாம்
கூர்மைசேர்பரியங்கத்திற்குலவுபூச்சாங்கள்சூழ. (அகச)

சூழுஞ்செம்பட்டுமெத்தைத்தூக்கமேற்கட்டிதூயம்
தாழுஞ்சங்கிலியிற்றூங்குஞ்சப்பிரமஞ்சமீது
ஏழுநல்லிசையாழ்கொண்டேயேந்திழைமாரிசைப்ப
வாழுமன்னவனுமென்றுவழுத்துவர்மறைவல்லோரே. (அகரு)

வல்லதோர்வியத்தானதிமற்றுமெட்டாமினிற்கச்
சொல்லியசனியும்பாம்புஞ்சூழ்ந்துபன்னிரண்டினிற்க
நல்லவர்பார்வைசற்றுநயந்திடாதிருக்கிற்பாரில்
புல்லதுமெத்தையாகவிருவிழிதுயில்வன்போங்தே. (அகசு)

விரையபலன்-வேறு.

போந்தசெறிபாக்கியத்தாதிபொருந்துபன்னொன்றின்மேவ
ஏந்தும்பிதிர்லாபாதிபதியிருவர்தமக்குமுறவாக
ஆர்ந்தபிதிரின்றனம்போலவதிகந்துவிகுணம்பொன்றேடி
வேந்தனுவன்மைந்தற்குமியந்தேவிருக்கும்வெகுதனங்கள். (அகஎ)

வேறு

கோலலாபக்குரிசில்வியத்துற,மேலவியத்தனம்மேவுதனத்துற
ஆலுமேதனத்தாதிபலமறச், சாலமன்னர்தனங்கொள்வர்தண்டமாய்.()

மாய்வியத்தனும்வந்துதனத்துற, ஏய்தனுதிவியந்தனிலேயுற, நேய்செ ன்மாதிரிக்கணமன்றினெய், தூய்தனங்களெல்லாந்துரைகொள்வரோ.

வேறு.

கொள்ளுமிரண்டாமதிபதியுங்குலவுநவாங்கிசாதிபனும்
மெள்ளக்கூடிப்பலமறவுமெய்யாதிபனுந்தூர்ப்பலமாய்
உள்ளியிருக்கமவன்றேடுமுடைமைப்பொருள்களுள்ளவெல்லாம்
கள்ளரரசரக்கினியுங்கலந்துகொள்வர்கண்டாயே. (அகூகூ)

வேறு.

கண்டபன்னிரண்டாமிடக்காவலன், கொண்டலக்கினமேழிற்குடி கொள, மண்டுபொன்னணிதானியமாறிடும், கெண்டைபோல்விழிக்கு ஞ்சுகவஞ்சியே. (அசo)

வஞ்சியேபத்ததிபதிபாவனுய், விஞ்சியேபலனன்றிவியத்துறில்
அஞ்சியேயைம்பதாம்வயதாயவன், தஞ்சமானதனங்கள்வழுவுமே. ()

வேறு,

வழுத்தியபன்னிரண்டாமனைக்குமன்பாவனுகி
அழுத்தியவவனைப்பாவரணுகியும்பார்த்துநிற்க
முழுப்பொலாப்பாவசிந்தைமுயற்சியாலவன்பொன்னெல்லாம்
இழுக்குறுந்தொழிலுள்ளார்க்கேயீந்தவன்கீர்த்தியேற்பன். (அசஉ)

ஏற்கவேபன்னிரண்டிலிரணியுன்வெள்ளிதூய
தீர்க்கசந்திரன்பொல்லாரைச்சேராதபுதனிந்நால்வர்
மார்க்கமாய்க்கூடிற்றன்மவகையினுற்செலவாமென்று
ஏற்கநாற்சுருதிவல்லவேதியரோதினுரே. (அசங)

ஓதியபன்னிரண்டாமதிபனேடுற்றபாவர்
நீதியாநல்லோர்வீட்டினிற்கினல்லோரைக்கூடில்
தீதறப்பலவானுகத்திகழ்வியத்ததிபன்றொண்டில்
போதவேசெம்பொன்றேடிப்புதைப்பன்மற்றொருவற்கீயான். (அசச)

ஆனதோர்பாக்கியாதிதனுதியைந்தாமிடத்தும்
ஊனமிலேந்தாமாதியொன்பதிலிரண்டினிற்கத்
தானமிம்மூன்றுபேருமிலக்கினந்தன்னினிற்க
ஈனமிலவன்பொன்னெல்லாங்கடன்கொடுத்திழந்துபோவன். (அசரு)

வன்புறுமிரண்டாமாதிமார்த்தாண்டனுடனேகூட
இன்புறுவியத்தானுதியினியரண்டிடத்தினிற்கத்
துன்புறுமட்டமத்திலாபாதிசூழ்ந்துநிற்கப்
பொன்பலவெல்லாஞ்சேதம்போய்விடும்புகழுமில்லான். (அசகா)

வேறு.

புகழும்வெள்ளியும்பொன்னும்பிறைதனை
மகிழநோக்குறமந்தன்றுலாத்துற
நிகழும்லோபத்தனமுட்னேமியோர்
இகழவேயொருகாசொன்றுமீவிலான். (அசஎ)

ஈதலீவதேவர்க்கென்றுரைப்பது
ஓதுமொன்பதாம்வீட்டுக்குடையவன்
சாதிவர்க்கத்தவர்தமக்கேநிதி
வாதியாமன்மகிழ்ந்துவழங்குவன். (அசஅ)

வேறு.

ஓதுகதிருந்தேய்பிறையுங்கூடிவியத்திலுறத்தனத்தை
நீதியரசர்க்கைக்கொள்வர்நிலவுங்குருவும்வியத்திலுறும்
போதுதனங்கண்மிகத்தேடிப்பொருந்துந்தன்மம்புரிந்தருளி
மீதுசிறிதுதன்மிருக்கவாழ்வன்புவியில்வெகுகாலம். (அசகூ)

வேறு.

காலமாம்வியந்தன்னிலங்காரகன்
சாலநிற்கத்தனித்துங்கண்ணேக்குறில்
ஞாலமீதிற்புதைத்திடுநற்பொருள்
வாலேகேடெரியாமன்மறக்குமே. (அரு௦)

பன்னிரண்டாம்பாவம் முற்றியது - ஆக மொத்தம்-அகூஎ.

## கர்ப்பத்தானமறிய.

கர்ப்பத்தானலக்கினத்தில்கிளரும்பலன்கள்புரவலனும்
கர்ப்பத்திரிகோணத்திருக்ககருவிலுதித்ததாணுகும்
இர்ப்பச்சசிக்குஞ்சூரியற்குமேழிற்சனிசெவ்வாயிருந்தால்
பொர்ப்புநிறையும்புருடனுக்கும்பூவைதனக்குநோய்வருமே. (அருக)
வருஞ்சூரியற்குமூன்னான்கிலிரண்டின்மந்தன்செவ்வாயும்
தெரிந்தேகூடும்வேளையினிற்சேர்ந்தாற்கரிட்டஞ்செழுமதிக்கும்
பரிந்திரண்டின்முன்னான்கிற்பங்குபாதன்குசன்கூடி
இருந்தபோதுபுணர்ந்திடினேயேழைக்கரிட்டமெய்திடுமே. (அருஉ
எய்தியிளைத்தமதிதனக்குநான்கில்வியத்திலிரவிகுசன்
வைதிக்கூடியிருக்கிலந்தமாதுக்கரிட்டம்புணர்காலை
செய்திமதிக்கோரிருபுறமுந்தீயரிருக்கத்திருக்கரிட்ட
உய்துமுதயத்தாண்கிரகமாணுங்கிசையிலுறவாணும். (அருங)
ஆனமதியின்கலைக்குப்பெண்ணுகுங்கடிகையைந்துக்குள்
தானுங்குறையாதிடிற்சீவன்றன்னிற்குறையாதிருந்திடுமே
தேனின்மொழியாயிரவிகலைசெல்லிற்செல்வனப்போது
ஊனங்கடிகைசென்றபடியுயிருண்டென்பாருரவோரே. (அருச)
உயரும்பவனனெதிராகிலுபயமாகுமிருபுறமும்
பெயரப்பாவர்சுழிபுகுதப்பெற்றதலியாம்பின்னுமவர்
உயரமளவேயுருக்காணும்பயருத்ரமூறமலத்தின்
பெயருந்தகைமைதனைப்போலிப்பிள்ளைக்குணமும்பெற்றிடுமே. அருரு

# பெண்கள் சாதகம்.

வேறு.

திருவனையமடவார்களம்புவியின்மீது
  செனித்தபலசாதகத்தின்திறமைகூறும்
கருவுதயகாலலக்கினஞ்சசிலக்கினமும்
  கண்டுவடிவுடனிறமுங்கருதியிடவேண்டும்
மருவியசத்தமராசியாளவடன்குணமும்
  மகிழ்நற்குணமுந்தெரிந்துவழுத்தலுமேவேண்டும்
உருவுதயலக்கினத்திந்திருக்கிலழகுள்ளாள்
  ஓரேழிற்சசியுறப்பார்த்தாவழகுள்ளானே. (அ௬௬)

உள்ளபிறைலக்கினமுஞ்சன்மலக்கினமும்
  உறுமிரட்டையாகில்வடிவுடையமயிலாகும்
தெள்ளியவம்மனையிரண்டுநல்லோர்கள்காணில்
  திரளாகப்பணியணிவள்செகத்ததிரூபியுமாம்
கொள்ளுமிருமனையொற்றையாகிலாண்சொரூபி
  கூறுநல்லோர்கள்கண்டிடினற்குலஞ்செல்வங்குலவும்
கள்ளமுறும்பாவரந்தராசியிரண்டினிலே
  கலந்திருக்கிற்கண்டிடிற்பொல்லாப்பாவக்கன்னி. (அ௬எ)

கன்னிகேள்சன்மத்திற்பிறைசுங்கனிருக்கில்
  கமழ்பெருமையுடன்சுகியாய்க்காசினியில்வாழ்வள்
உன்னுமுதயத்திலிந்தும்புதனுமேகூடில்
  உணர்வள்பலகலைபோகியோதியநற்குணத்தாள்
இன்னஞ்சன்மந்தன்னில்புதனுஞ்சுக்கிரனும்
  இருந்தக்கான்ஞானியதிரூபியினிதுரைப்பள்
மின்னுமொருமூன்றகத்திற்சுபக்கோள்கணிற்கில்
  வெகுதனநற்குணந்தயவுவிரவுசுகமுள்ளாள். (அ௬அ)

உள்ளபலபாவரொட்டிலிருந்தக்கால்விதவை
  உளதாவதென்றென்னிலோரொட்டாமதிபன்
தெள்ளியவங்கிசைக்கிறைவனஷ்டகவர்க்கத்தில்
  சேர்வருடமெத்தனையோவத்தனையாண்டதனில்
மெள்ளவிதவையுமாவளிரண்டினினல்லோர்கள்
  மேவிலவள்கணவனைத்தான்விட்டுமுன்போய்விடுவள்
கள்ளமுறுங்கேளிடபங்கன்னியெனுமூன்றில்
  கலைமதிமேவிற்புத்திரரற்பங்காணும். (அ௬௯)

காணியாஞ்சனியுமேபலத்திருக்கவேதான்
  கணக்கன்மதிபிருகினைக்காரகத்திருக்க

ஆணியந்தராசியொற்றையாகவுமேசன்மம்
அடுக்கமற்றேரொற்றைகளிலன்புடனேயிருக்க
நீணிலத்திற்பிறந்தாடன்புருடனுக்ோரரசாய்
நிருபதியாய்ச்சுவாமியாய்நேசமுடனிருப்பள்
பேணியதோரோழிற்றீக்கோளும்மும்மூன்றிற்
பெருமையுள்ளோருறச்சந்நியாசிப்பெண்ணவள். (அகூ0)

ஆகரெட்டைராசிதனிகுருசெவ்வாய்புந்தி
அதிபலமாயிருந்தக்காலவணியின்மேற்குலமும்
வாகுடனேபலகலைகளறிந்திடுநற்குணமும்
மாதருக்குண்முக்கியமாமயிலுமாகுவளே
சேகரமாம்பரிதிமதிகூடியேநிற்கிற்
றெரிந்துபலவிதத்தொழிலேசெய்துசீவிப்பள்
மோகமுடன்கதிர்செவ்வாய்கூடியுமேநிற்கில்
முழுப்பாவியாவளென்றேமொழிந்திடுவர்பலரும். (அகூக)

வேறு.

பலரும்பணிகதிர்புந்திகண்மருவும்பொழுதெழில்சேர்
பலர்சிந்தனையறிவாள்புகழ்பரவுஞ்சுகசரீரி
அலருங்கதிர்குருவொன்றிடிலதிவஞ்சனையாண்முன்
அணுகுந்தொழிலறியாள்பிறகறிவாள்வருகருமம்
மலரம்புயவதிபன்பிருகுடன்வந்துறின்மற்போர்
வனையுங்கொடியவளாயுதவகையானிதிதேடும்
சலமுண்டிடுகதிர்மந்தனையணுகும்பொழுதுலகிற்
றகுபித்தலைசெம்போடுதராவிற்றுயிருய்வாள். (அகூ௨)

உய்யும்மெருதொடுகோலிவையுதயம்மதின்மதியும்
உறையக்குசகிரையத்திசையுறுமங்கிசையாகில்
மையுந்தியகுவலைச்செழுமலர்போலிருகண்ணுள்
வகையுந்தொகையறிவாள்சிலவழிசாலவுரைப்பாள்
எய்யுஞ்சனிதிரையத்தசவெனுமங்கிசையென்னில்
இருவோர்கணவோர்தாமுளரொன்னும்மடவார்க்கே
மெய்யஞ்சொடுமொண்டாமிருவீட்டுக்கிறையிருவர்
மிளிர்கேந்திரலாபத்துறவேவாகனமுண்டாம். (அகூ௩)

உண்டாகியவைந்தாமிறைவுச்சக்குருவாகி
உணர்வாலிபயவ்வன்னவுருவும்முளனவன்
நண்டாகியமனையுற்றிடினரிக்கிசைகணவன்
நரவாகனமுளனுகுவனவில்சுக்கிரனுகில்
மிண்டாகியவெள்ளிக்கிசைபல்லக்குளவேந்தன்
விரவுஞ்சனியாகிற்பரிவெண்சந்திரமுள்ளான்

கொண்டாடியகன்மாதிபன்குருசுக்கிரனுகில்
கூறைந்தினிமேனின்றகொழுநன்சதசீவீ. (௮௬௪)
சீவித்திடுகுருசுக்கிரனுருமனைசேரில்
தெரிவைக்கிசைகணவன்பிணிசெறிமெய்பினனுவன்
பூவைக்குமுந்நான்கிற்குருபுரிசுக்கிரன்மேவில்
போந்தேவிடுமற்பாயசுபுல்லாடன்மெய்யாவன்
பாவைக்குறுமந்தாமிறைபரிவாயினியவராய்ப்
பண்பாகியவொன்பான்மனைபற்றப்பயிலொன்பான்
ஏவுற்றமனைக்காதியிலாபத்துறினீன்றேன்
எய்தும்பொருளுண்டானவையெல்லாமிவளுக்காம். ()
ஆமெட்டதிபன்காரியொடணுகிப்பதினென்றெட்
டமரிற்சதவயதாமவரத்தங்கதமாயின்
போமற்பமதாயாயசுபொன்றும்வியமன்னன்
புரிகேந்திரலாபத்திரிகோணப்பதிபுக்கே
தர்மெத்தனைபேரோடுறிலாமத்தனைமனையாள்
தரிலற்றிடிவியநற்பதிசரமேலசலூரில்
நீமத்திரமாகிற்றமதூரத்தகமணமே
நிறைவாமுபயம்மென்னிலோநீடும்மதிதூரம். (௮௬௬)
வேறு.—தூரமுறும்பன்னிரெண்டாமதிபன்றனும்
சுபக்கோளாய்பலவானாய்ச்சுகவானாயின்
பாரமனைமேன்மெத்தைமாடங்கூடம்
பரிவுடனேயுண்டாமப்பதியினிலேவாழ்வள்
சேருமுதயந்திரமாயேழைந்தாம்வீட்டில்
சேர்ந்தவரொத்தனையுண்டத்தனைசேயுண்டாகும்
பாரறியச்சென்மம்வாமியமாகின்மூன்றும்
பதியுற்றுரொத்தனையப்பாலருளராகும். (௮௬௭)
தாகமுடனேழைந்தாமூன்றதிப்ருடனே
சனிகூடிலோகுழவிதனக்கற்பவயதாம்
ஆகமகிழொன்பதாமதிபதியாறெட்டில்
அமரிற்சூத்திரர்தமக்குற்பவித்திடுசேயாகும்
ஏகும்வியத்தினிலிருக்கில்விப்பிரர்சேயாகும்
எழிலொன்பான்மனைக்கதிபனிரவியுடன்கூடில்
பாகவியமெட்டாறைப்பற்றிலொன்பான்மனையோன்
பரிந்திருந்தவீட்டோனப்படியிருக்கில்விதவை. (௮௬௮)
வையகமெண்ணொன்பதாமாதிபனோநல்லோர்
மனையிலுறமத்திமையிலேவிதவையாவள்
செய்யவொன்பானதிபுச்சனுகிப்பாவனுமாய்த்
தெரிவைசுமங்கலியாகித்தீர்க்கவயதுள்ளாள்

துய்யசன்மமொன்பதாமாதியிவரிருவர்
தொடர்ந்துமாருகனிற்கிற்றோன்றலுடனிறப்பள்
வெய்யதோரொட்டினிற்சந்திரபகவானிருக்கில்
விதவையெனப்பேர்படைத்துமேதினியிற்றிரிவள். ()
திரிசெவ்வாயிருமனையுஞ்சனனமதாயதனில்
திங்களுறவேசெவ்வாய்திரிங்கிசாங்கிசமாய்
பரிவில்லாப்பாவிசனிதிரிங்கிசாங்கிசமாய்ப்
பாலரிலாளலதடிமைப்படுவளெனச்சொல்லும்
குருதிரிங்கிசாங்கிசமாகிற்பதிவிரதையாகும்
குளிமேதையங்கிசமாசாரமுளகோதை
விரிவெள்ளியங்கிசைக்குமெய்யதிருபியுமாய்
வெகுவயதாய்ப்பரபோகம்விரும்புமினியவளாம். ()
இனியவெள்ளியிருமனையுஞ்சென்மமதாயதனில்
இந்திருக்கச்செவ்வாயங்கிசமாயிற்கொடியாள்
சனியினங்கிசமாகிற்கணவனையும்விட்டே
சஞ்சலமாய்வேறொருவன்றனக்குப்பாரியுமாம்
நனிகுருவங்கிசமாகினற்குணமேயுள்ளாள்
நாடுபுதனங்கிசத்தினல்வகைஞானியுமாம்
கனிமொழியாள்சுக்கிரனங்கிசமாயிற்றன்சொல்
கதித்தினியாளாயிருப்பள்காசினியோர்போற்ற. (அஎக)
போற்றுபுதனிருமனையுஞ்சன்மமதாயதனில்
புனிதமதியேயிருக்கப்பூசுதனங்கிசமாய்
ஏற்றமதாய்வேலைசெய்வள்சனிதன்னங்கிசையாய்
இருப்பளலிவடிவாகக்குருவாகிலினியாள்.
நாற்றிசையெண்ணும்புதனங்கிசைதனக்கேஞானி
நாடுசுங்கனங்கிசைக்குநற்குணமுமுள்ளாள்
தேற்றுகடகஞ்சென்மமாய்த்திங்களிருக்கச்
செவ்வாயங்கிசமாகிற்சேர்வள்பலருடனும். (அஎஉ)
உடன்கடகஞ்சென்மமதாயதிலிந்துமிருக்க
உயர்சனியங்கிசையாயினுறுகணவன்றனையே
திடமுடனேகொல்வதற்குச்சினமாகியிருப்பள்
சேர்புதனங்கிசைக்கேசிற்பத்தொழில்கள்செய்வள்
அடல்குருவங்கிசையாயிற்குணமினியள்வெள்ளி
அங்கிசையாகிற்சாதுவாகியுமேயிருப்பள்
மடமயிலேகேளங்கிசையென்றுரைத்தவெல்லாம்
வருந்திரங்கிசாங்கிசையாய்மனதிற்கண்டுணர்வாய். ()
உணர்சிங்கஞ்சென்மமதாயதிலிந்துமிருக்க
உயர்செவ்வாயங்கிசையாயுனாக்கிலநாசாரி

பிணிசனிசுங்கன்னிருவரங்கிசமேயாயின்
பிறர்முகம்பார்ப்பாளரசன்பின்னுறுமங்கிசைக்குத்
தனியரசர்க்கேதேவிதானுகியிருப்பள்
தக்கபுதனங்கிசைக்கேசரீரவருத்தமுமாய்ப்
பணிபலவுஞ்செய்தொருவற்கேயடிமையாகிப்
பரதவித்தேயிருப்பளெனப்பகருவர்தக்கோரே. (அஎச)

தக்கதனுமீனமவையேசன்மமாகிச்
சந்திரனப்பதியிலுறத்தான்குருசெவ்வாயின்
மிக்கதிரிங்சாங்கிசமேயாயிடினற்குணத்தாள்
வீறுசனியங்கிசமேல்வெகுகாமியாவள்
சுக்கிரனங்கிசையாகிலரோசிகமூம்புருடன்
தோளணைவள்சோமனுர்சுதனுமங்கிசைக்குப்
பக்குவமெய்ஞ்ஞானியாயச்சுபகர்மங்கள்
பண்ணுவளென்றேயுரைப்பர்பாரினினல்லோரே. ()

நல்லசனிவீடிரண்டும்லக்கினமாயதனில்
நாடுபுதன்றந்தையுறக்குசனுரங்கிசையேல்
அல்லலுறுந்தாதியாங்காரியினங்கிசமாய்
அவனியிற்கீழ்ச்சாதியரோடணுகிமணந்திடுவள்
வல்லகுருவங்கிசைக்கேபதிவிரதையாவள்
மகிழ்வெள்ளியங்கிசைக்கேமலடியுமேயாவள்
சொல்வரிசைப்புதனுரங்கிசமாயெப்போதும்
சுகமுடனேகணவனுடன்றேயுமனப்பரிவாள். (அஎரு)

பரிவாகச்சனிபுதனேழாமிடத்தினிற்கப்
பயில்குருவுக்கேழ்வீடுபரவுசரமாயின்
திரிவனவள்பர்த்தாவெங்நாளும்வழிநடந்தே
திராசிக்கூரைவிட்டுச்செல்லாமலிருப்பன்
வருராசிவுபயமாய்ச்சிலநாளூரினிலும்
வழிநடையிற்சிலநாளும்வருந்தியுமேதிரிவன்
அரியேடாமிட்த்திருக்கப்பாவருமேபார்க்கில்
அவண்மீதிற்கொழுநனுக்கன்பன்றியிகழ்ந்திடுவன். அஎஎ

இடுசெவ்வாய்கதிர்கூடியெங்கேநின்றாலும்
இவளும்வாலிபந்தன்னிலமங்கலையேயாவள்
வடிவாகுஞ்சனிகதிரைக்கூடியுமேநிற்கில்
மன்னியதீக்கோள்பார்க்கவாலிபத்தினைக்கும்
கொடுமையுள்ளோர்பலரேழாமிடத்திருக்கிற்பார்க்கில்
கொழுநன்வாலிபத்திறப்பன்கொடியநல்லோர்கூடில்

சடுதியின்மீண்டொருவனுக்கேபாரியுமேயாகித்
தானிருக்கவேண்டுமெனவேசாற்றல்வேண்டும்.(அஎஅ)
வேண்டிடும்பாவக்கிரகம்பலன்களுமேயின்றி
விரும்புமேழிடத்திருக்கவவ்வாறையுமேநல்லோர்
ஈண்டியேதான்பார்க்கில்க்கணவன்வேண்டா
திகழ்ந்தோட்டிவிட்டிடுவனேயின்னஞ்சொல்வாம்
நீண்டகுசன்வெள்ளியுந்தன்னங்கிசத்தினிற்க
நிகழ்த்துமிவர்மாறுகினிற்கிலுமவ்வீடு
பூண்டிடுமேழாமிடமேயாகிலவள்வேறோர்
புருடனையேயிச்சித்துப்போய்விடுவளென்றார். (அஎகூ)
என்றுமேழாமிடத்திற்சனிசெவ்வாய்சோமன்
இந்தமூவருங்கூடியிருக்கிலவம்போவள்
வென்றசனிசெவ்வாயின்வீடேலக்கினமாய்
விரவிகுசனங்கிசமாகச்சென்மந்தன்னில்
துன்றுமிருளகற்றுமதிசுக்கிரனுமிருக்கச்
சூழ்ந்துதீக்கோள்பலருந்தொடர்ந்துமேநோக்க
நின்றிடிலோமலடியாமவளுவமடாயும்
நேமிதனிற்பலபேரைநேசித்தேசேர்வர். (அஅ௦)
சேருதயலக்கினவங்கிசத்துக்கோரேழிற்
செவ்வாயுஞ்சனியிருவர்சேர்ந்துமேநிற்க
நாரிபகந்தனிற்பிணிகொண்டிருந்துபரதவிப்பள்
நாடுமிவர்நல்லோர்களங்கிசையினன்றும்
பாரியதோரிடைதொடைகள்சோபனமுள்ளவளாய்ப்
பர்த்தாவினிதயத்திற்பக்ஷமுறவிருப்பள்
சாருதயந்தனக்கேழுசனிவீடதாகில்
தாலிதரிப்பவன்கிழவன்சற்குணமில்லானே. (அஅக)
சற்குணஞ்சேர்லக்கினத்துக்கேழாகும்ராசி
தனைசுதன்வீடாகிலவன்றன்னுடையங்கிசையால்
சிற்குணமாயவள்கணவன்ஸ்திரீலோலனவன்
செறிபிருகுராசியாயங்கிசமேசேரில்
நற்குணஞ்சேர்சீமானையழகுடையனவன்
நாடுபுதனங்கிசையாய்ராசியுமேயாகில்
சொற்கலைஞானியுமாவன்சோமனுமேயாகில்
தோகைபலருடன்கூடிச்சுகித்துவாழ்ந்திருப்பன். அஅஉ

வேறு.

இந்துவசுரகுருவுடனேயேழிலிருக்கக்கிழப்புருடன்
வந்தேபொல்லாரேழிலுறவிதவையாவள்வாலிபத்தில்

நொந்தேகும்பந்தேண்மேட்டுவலுஞ்சுறுமீன்லக்கினமாய்
பந்திமதியம்புகர்கூடிப்பாவர்பார்க்கில்விபசாரி. (௮௮௩)
சாரவெட்டிற்பாவர்களுந்தானுமிருக்கவிரண்டதனில்
ஊருஞ்சுபர்களிருந்திடவேயோங்குமரணஞ்சுமங்கலியாய்
நேருமேழாமிடந்தானுநிறைந்தபுகரின்மனையாயின்
பாரோரறியவனுகூலப்பாவையாகுங்கண்டீரே. (௮௮௪)
கண்டவேழாமனையுரைக்குங்கதிரோன்வீடாயிருந்திடவே
மிண்டேசொல்வானவள்கணவன்வினவும்பரிதியதிலிருந்தால்
கொண்டோனேட்டிவிடுவனெனக்கூறும்புதனின்மனையாயின்
பண்டேபுலவராவர்குருபண்பாமனையிற்குணவானே. (௮௮௫)
குணமாமேழிற்பாவர்களுங்கூடிப்பலங்களற்றிடவே
மணமார்நோக்கமுற்றதனுன்மகிழ்நனழகில்லாதவனே
இனமாரோமேசாமனையாயிருக்கவதிபன்சரத்திலுறத்
சினமேசராங்கிசையாத்திரையாந்திரமேயாகிற்றீர்க்கமுளன். (௮௮௬)
தீர்க்கமேழிற்சனிசெவ்வாய்செறிந்தால்விதவைவாலிபத்தில்
நீர்த்தவேழிற்சுபர்பாவர்நின்றால்கெமனம்பரபுருடன்
ஊர்த்தலக்கினமுப்பாகமுறைத்தாற்றிரங்கிற்சாதிபதி
ஏர்த்தபலன்கள்ஸ்திரீகளுக்குயியல்பாயறிந்தேவுரைத்திடுமே (௮௮௭)
உரைக்குங்கதிர்மதியங்கிசையாலோங்குந்தன்னில்விபசாரி
நிரைக்குஞ்செவ்வாய்தானுகினீண்டலக்கினமவ்வீடாய்
மரிக்கும்பிள்ளையுள்ளவெல்லாம்வாழும்புந்தியங்கிசையில்
நரைத்தகிழ்வியானுலுநாடுங்கமனம்பரபுருடன். (௮௮௮)
புருடக்கிரகங்குருவங்கிசையில்பிறந்தான்மகவுந்தனமுண்டாம்
குருடப்புகரினங்கிசையாற்கூறும்போகந்தனமுளதே
வருடக்காரியங்கிசையில்வளருஞ்சனிவீடிலக்கினமாய்
திருடிக்கமனம்பரபுருடன்சிந்தைநோக்கவரும்பலனே. (௮௮௯)
பலங்களுரைக்கும்ஸ்திரீகளுக்குப்பகருமெட்டாமிடம்விதவை
துலங்குமேழாமிடந்தன்னுற்சுகமுமகிழ்நன்பலமறியப்
பிலங்கொள்லக்கினமழகறிந்துபேசுமொன்பான்புத்திரரும்
தலங்களறிந்தேமிகவுரைப்பர்தாமுங்கணிதவல்லோரே. (௮௯௦)
வல்லமதியமிவள்சன்மம்வருமேஸ்திரீசள்மனையாயின்
நல்லசுபருநோக்கமுறநாடும்வடிவுமாபரணம்
சொல்லுமெவ்வீடிரண்டொற்றைதோன்றப்புருடக்கிரகமிதை
ஓல்கிப்பார்க்கப்புருடவடிவுற்றேயிருக்குமிவடனக்கே. (௮௯௧)
தனமார்குருசுக்கிரர்சென்மந்தன்னைச்சந்திரலக்கினத்தை
முனமேநோக்கவாலிபத்தின்முற்றும்போகதன்மணமும்

தனிசூழ்மதியலக்கினத்தைச்சனிசேய்பாவர்நோக்கமுற
மனமேசலிக்கத்தலைநாத்துவாழ்க்கைப்படாளிம்மாநிலத்தே. (அகூஉ)
மானேசுங்கன்செவ்வாயின்மனையிலிருக்கமதிதானும்
ஊனச்சனியன்விட்டிலுறவோங்கும்பாவர்மிகநோக்கித்
தானேயிவர்கள்லக்கினத்திற்றரித்தாலிவளும்விபசாரி
தேனேய்மொழியாய்சுரிகுழலின்சிந்தையறிந்துசொல்லுகவே. அகூங
சொல்லுநவாங்கிசைக்கேழ்மனையுந்தொடருஞ்செவ்வாய்மனையுளதாய்
வல்லசனியுமிருந்திடவேவருமேயோனிரோகமுடன்
நல்லமதியுஞ்சுக்கிரனுநயந்தேகூடிலக்கினத்தில்
அல்லலறவேயிருந்ததனாலழகுஞ்சுகமுமுண்டாமே. (அகூச)
உண்டாமதியும்புதனிருவருற்றசென்மத்திருந்திடவே
பண்டேவித்துவத்தன்மையுள்ளாளென்றும்பகர்வர்மறைவல்லோர்
கண்டேபுதனுஞ்சுக்கிரனுங்காணும்லக்கினமுற்றதனால்
கொண்டமகிழ்நன்பிரியமெனக்கூறுஞ்சௌரியமுள்ளவளே. (அகூரு)
உள்ளசுபர்கண்மூன்றுமனையுற்றசென்மமுதற்கொண்டு
மெள்ளவிருக்கத்தனலாபம்விரும்புஞ்சுகமுமழகுள்ளான்
துள்ளும்பாவரொட்டிலுறச்சூழ்ந்தேவிதவையாயிருப்பள்
கள்ளவிழியினமுதவிஷங்கருதிநோக்குங்கண்ணுளே. (அகூசு)
கண்ணுரொட்டினதிபதியுங்காணுமொருவணங்கிசத்தில்
நண்ணியிருக்கவவ்வீட்டோனயந்தேயெட்டிலிருந்ததனால்
எண்ணுஞ்சுமங்கலிமரணமெனவினிதாங்கன்னிதேளிடபம்
ஒண்ணுஞ்சிங்கமிதின்வதியுமுற்றுலற்பபுத்திரனே. (அகூஎ)

பெண்கள்சாதகமுற்றியது. ஆகமொத்தம்-கூகங.

# வியாதியறியும்படி.

பூவையேலக்கினதிபுதன்குசன்மிதுனங்கன்னி
மேவிடிற்புந்திபார்க்கில்வினைக்குமாசனத்தில்ரோகம்
ஏவுறுசசிக்குமூன்றுமதிபனேடிராவிகூடில்
பாவைபோனேஞ்சையாகிப்பலர்முலைப்பாலுங்கொள்வன். (அகூஅ)
பத்துமூன்றதிபன்றனைப்பயில்சசிபார்க்கிற்கூடி
மெத்தியவேகராசிமேவிடின்மேவுபத்தாம்
அத்தலத்திறைதிசைக்குளணுகுநீரிழிவுரோகம்
உத்தமர்சென்மமெட்டோடெட்டுறிலற்பாயுத்தான். (அகூகூ)
மூன்றுமூன்றுமதிபனேடுமொழிபுதன்குசனுங்கூடில்
தோன்றுநீர்விடுத்துநின்றதுவாரமுமிரண்டதாகும்

வேன்றிடுமிவர்களோடேசவுரியுமிசைந்துகூடில்
கான்றிடுசலத்துவாரங்கல்லடைப்பாகுமென்றே. (௩00)
மறையவன்லக்கினதிவாழ்கருங்கோளுமூன்றில்
உறையின்மூன்றதிபனோடுமுறிலண்டவாதரோகம்
நறைகமழ்குசன்சன்மத்தினண்ணிடிற்சனியும்பார்க்கில்
முறைமையாற்சிரம்பிளந்துமூந்துமங்ரோயான்மாய்வன். (௩0௧)

வேறு.

மாயுஞ்சசியுந்தீயோராமருவிப்பாவர்மத்தியத்தில்
ஏயுமிருக்கச்சென்மாதிக்கில்லைப்பலமேலெழும்பிணியர்ம்
தீயபாவர்மத்தியத்திற்திகழ்சென்மாதியுறச்சென்மம்
தாயபாவர்சசிபலமற்றமர்ந்தாற்பிணியராவாரே. (௩0௨)
வாரெட்டாதிசத்துருநீசத்திலிருக்கமகிழ்பாவத்
தோருஞ்சென்மத்துறச்சென்மமுடையோன்பாவருடன்கூடி
ஏர்சென்மாதிகுளிகனுடனிருக்கவிந்துசனிகூடிச்
சேருமாறில்வியத்தினிற்கச்சிறுவன்பிணியாலுறுமரணம். (௩0௩)
மருவெட்டாதிசென்மத்தின்மற்றுமிரண்டோனேரெட்டில்
தருஞ்சென்மாதிசனிகூடச்சசியும்பாவருடன்கூட
உருவில்வாதரோகமதாமொன்றிலெட்டிலிரவியுடன்
பெருகுஞ்சென்மத்தாதியுறிற்பித்தரோகப்பிணிகுளிப்பன். (௩0௪)
குளிகன்கருங்கோள்சென்மாதிகூடிச்சென்மத்திருந்தாலும்
குளிகன்றிரிகோணங்களினுமெட்டாமிடத்துங்குலவுகினும்
குளிகன்செவ்வாய்நான்காதியுடனேகூடியிருந்தாலும்
தெளியோர்விதையிற்சிற்றண்டந்திரண்டுதிரண்டுபெருத்திடுமே. ()
பெருக்குஞ்சன்மாதிபனுடனேபெரும்பாவக்கோளுடன்குசனும்
இருக்கப்பார்க்கக்கல்லதனுவிடியும்பட்டுவிரணமதாம்
தரிக்கும்வசூரிதன்னாலுஞ்சரீரந்தன்னில்வடுவுண்டாம்
முருக்குங்கொவ்வைக்கனியுமெனமுதிரச்சிவந்தவிதழ்மானே. (௩0௬)
மானேலக்கினதிபன்ராகுமதிசேய்புதனோடைவர்களும்
தானேலக்கினமாறெட்டிற்றரிக்கிற்காணுவிடந்தன்னில்
ஈனமாயவெண்குட்டமிரவிசேய்மால்சென்மாதி
தேனுமாரிற்சன்மமெட்டிற்சேரிற்செங்குட்டமுமாமே. (௩0௭)

வேறு.

குட்டமாஞ்சனிராகுசென்மாதியும்
எட்டிலாயிலிருந்துபலன்கெடில்
செட்டதாகியகாலிற்செழுங்கருங்
குட்டமெய்துமெனக்கண்டுகொள்கவே. (௩0௮)

## வியாதிதோன்றுமிடம்.

கொள்ளுமாங்கிரகஞ்சென்னிரவிமதிகுளிர்ந்ததிங்கள்
ஒள்ளியகண்டத்தங்காரகனிடக்கரத்திற்புந்தி
வள்ளலாம்வலக்கைமன்னன்மார்பிற்சுக்கிரன்மூழந்தாள்
தெள்ளியசனிகால்பாம்புசெறிந்ததோரிடத்திற்குட்டம். (கூ0கூ)

வேறு.

குட்டமாங்கருங்கோளுஞ்சென்மாதியும்
கிட்டிலக்கினமேழுறக்கேழிலா
எட்டினிற்சனியெய்தமுன்சொன்னநோய்
மட்டிலாமல்வருமென்றுரைக்குமால். (கூக0)

வேறு.

மாலாயரசன்பாவருடன்மருவியிரண்டாறெட்டிலுறச்
சாலவவனாலக்கினத்தைப்பாவர்நோக்கிற்சயரோகம்
சீலமுடனேதேய்ந்தபிறைசலராசியிற்பாவரைச்கூடிக்
காலாறெட்டிலொன்றிலுறக்கயரோகங்கள்காட்டிடுமே. (கூகக)
காட்டுங்குசன்சன்மத்திலுறக்கணக்கன்பாவருடன்கூடிச்
சூட்டுமிரண்டெட்டினிலிருக்கச்சுரரோகங்கள்சன்மாதி
ஈட்டும்பிருகினுடன்கூடியெட்டிலிருக்கச்சன்மாதி
மீட்டுநீசசத்துருத்தானத்திலிருக்கப்பிரமியநோய் (கூகஉ)
நோயுமாறெட்டாகிபனுநுவலுங்கருங்கோளுடன்கூடிப்
போயுமிரண்டாமிடத்திருக்கப்புகல்சன்மத்திற்குசனிருக்க
ஆயும்பாவர்சன்மத்தையடர்ந்துநோக்ககுருமூளைத்துச்
சேயும்வாதைப்படுமென்றுசொன்னார்செகத்திற்றெரிந்தோரே. (கூகங)

வேறு.

தெரிந்துகாரியுந்தேய்பிறைபாவரோ
டிருந்துலக்கினத்தெய்தவாறுகிபன்
பொருந்திரண்டாமிடத்தினிற்புக்கிட
வருந்திடக்குன்மரோகமும்வந்திடும். (கூகச)

வேறு.

வந்தவாறுமதிபதியுமருவுஞ்சன்மம்பத்தேழில்
ஐந்திலிருக்கச்சன்மமதிலங்காரகனுமமர்ந்திடவே
முந்திநல்லோர்பாராமற்கூடாதிருக்கமுதலோமம்
வந்தவாபிசாரத்தாலாகம்வருந்தும்பிணியாமே. (கூகரு)

வேறு.

பிணிகொளாறுமதிபன்சன்மாதியும்
மணிகுசனுடன்கூடிச்சன்மத்தினில்

தணியுமூவருந்தங்கியிருந்திடில்
பிணியுமாபிசாரத்தினாற்பீடையாம். (சுகசு)

வேறு.

பீடுயரும்லக்கினத்திற்கருங்கோண்மூன்றிடத்திற்
பெருகுசனியுறவண்டம்பெருக்குமவன்றனக்கே
கூடியசன்மத்திரவிகுசனுமேகூடிற்
குன்மவலியாம்பார்க்கிற்கொடுமூச்சுண்டாகும்
நீடுசென்மாதிபன்செவ்வாயிருவருமேகூட
நின்றிடுதீயோர்காணினிறைந்துமிகக்கூடில்
கேடுபடுங்கல்லெறியுந்தலையதனிற்பட்டுக்
கிளருநோயாற்றுன்பமேகிடைக்குந்தானே. (சுகஎ)

தானமெனும்லக்கினத்திற்சனிராகுநிற்கிற்
சருவியேபேய்பிடித்துசஞ்சலமுற்றிடுவன்
ஆனவமவாசிதனிற்குசன்சன்மத்திருக்க
அவனைத்தீயோர்காணிலணிவயிற்றில்வலியாம்
நானிலமெண்சனிசன்மத்திருக்கச்சூரியனும்
ராகுவுங்கூடிப்பார்க்கநலன்செறியாயுதத்தால்
ஊனமுறும்வயிற்றிலதனுனேயதாகும்
உலகினிலிப்படிப்பிணிகண்டுரைபகருவீரே. (சுகஅ)

உரைபகருங்கருங்கணுய்கருநாகந்தானும்
உறைந்தவீட்டதிபதியாருகுமதிபதியும்
பெருமையுடனிவர்மூவர்தாமுங்கூடிடிலோ
பேசியவொண்டாமாதியதிமகாதிசையில்
மருவியவன்முன்புசிக்குமந்நாடன்னில்
வலியதந்தரோகமேவருமெனவும்பகர்வர்
பரிவுடனேபுதன்கூடில்ரோகசரீரனுமாம்
பரிந்துநல்லோர்விழிநோக்கப்பரிகாரமாமே. (சுகசு)

பரிதிசனியுடன்கூடியட்டமத்திலிருக்கப்
பரவுமகோதரநோயால்பரதவித்தேயிடுவர்
கருதியசன்மமுமேநாலாமிடங்கடம்மில்
கதிரோனுங்குசனேனுங்கவ்வியுமேநிற்கத்
திருவுறைபத்தாமிடத்திற்சவுரியுமேநிற்கத்
திகழ்தனபாவந்தன்னிற்றேய்ந்தபிறையிருக்கத்
துரிதசிறுபாம்பர்திரிகோணத்திலிருக்கச்
சூலைநோயாலாவிசோருமெனச்சொல்லும். (சுஉ0)

வேறு.

துந்தலக்கினத்ததிபதிசனியுமே, இந்தவாறெட்டுப்பன்னிரண்டிசைந்திடில், அந்தவிரணஞ்சிரசினிலாமெனச், சிந்தைமாதவர்தெளிந்துகண்டாரே.

வேறு.

கண்டசன்மலக்கினமுங்காணுமைந்துமொன்பதனில்
கொண்டபரிதிமதியிருக்கக்கூறுநாலேழீரைந்தில்
திண்டாயரசன்சனியிருக்கச்செவ்வாய்மந்தன்வாரமதில்
அண்டிச்சனித்தோனுன்மத்தனகுஞ்சடவானுவானே. (கூஉஉ)
ஆவார்சன்மலக்கினத்துக்கனுகுங்கேந்திரஞ்சோமனுமில்
பாவாய்கிரகநோக்கமில்லாப்பசாசயோகமுன்மத்தம்
பூவேசன்மங்கேந்திரத்தில்புகருமதியுந்தானிருக்க
நாவோர்பாவரைந்தெட்டினண்ணில்முயலகண்டமுமாம். (கூஉந)
கண்டவேளீர்பரிவேடங்காணுஞ்சன்மந்தானுறவே
செண்டாயெட்டிலிருமூன்றிற்செவ்வாயொன்றுதானிருக்கக்
கொண்டசன்மந்திரிகோணங்குருவுமில்லாதேயிருந்தால்
பண்டேகுமரகண்டமெனப்பகர்வாய்வலிப்புந்தான்வருமே. (கூஉச)
வருமேசன்மஞ்சனிசெவ்வாய்வந்திரண்டிற்பன்னிரண்டில்
புரவேயெட்டிலக்கினதிபதிபுகவேகேந்திரத்தினியோர்கள்
உரவொரில்லாதானிருக்கவுண்டாமீனரோகமுடன்
தருமேசரீரவாதியந்தானும்பிணிகொள்சாற்றிடுமே. (கூஉரு)
சாற்றுந்தனுமீன்மகரமுடன்குறுமிந்தாராசியினும்
நேற்றியங்கிசையானுலுநின்றேபாவர்தானிருக்கப்
போற்றுமதனுளிலக்கினதிபுகவேகுட்டரோகமென
ஆற்றிலினியநாவலர்களறிந்தேயுரைப்பர்பெருமையினல். (கூஉசா)
பெருமைநன்றுவிருச்சிகமும்பேணுமேடமிடபமுடன்
ஒருமைராசியானுலுமுற்றவங்கிசந்தன்னுலும்
வருமேபாவருடன்கூடிவந்துசன்மத்தாகினும்
புரவேநிற்கிற்குட்டமெனப்புகல்வாரறிவுக்கினியோரே. (கூஉஎ)
இனியசோமன்கிராணத்திலியன்றபாவர்மிகவுறவே
தனியேயொன்பதெட்டுவியஞ்சசிதானிருக்கிலுன்மத்தம்
குனியேகலகப்பிரியனெனக்கொள்வன்கோபிதானுகி
கனியேசோம்பித்திரிவனிவனுறுங்குழற்சீர்வல்லியரே. (கூஉஅ)
வல்லியிரண்டிற்சனிராகுவந்தேயிருக்கவிரண்டாதி
சொல்லும்பலன்களற்றிருக்கச்சூழும்வீட்டிற்குடையோனும்
நல்லவிரண்டைநோக்கமுறநாடுங்காரிகருநாகம்
வெல்லுந்திசையிலிரண்டாதிமேவத்தந்தரோகமிதே. (கூஉகூ)

---

## நாய்கடியறிய.

வேறு,

தக்கரண்டாமிடத்திற்சனியுடன், ஒக்கபாவர்கள்கூடியுறைந்திட மிக்கபாவர்வெகுண்டதைப்பார்த்திட,குக்கல்கண்டுபயந்துகுலைவனே நேயரெண்டாமிடத்தினினீசனும், தூயரெண்டாமதிபனுஞ்சூழ்ந்திட, ஆயபாவரனுமிடநோக்கிட, நாயுமேகடித்திட்டிடநாணுவார். (௩௫0)

## பாம்புகடியறிய.

வேறு.

எட்டாமிடத்திற்கொடியவிடராகுவிருக்கவினியரெண்டில்
துட்டர்கூடநோக்கமுறத்தொடர்ந்துவிஷதிருஷ்டங்களுமாம்
மட்டார்சன்மாதிபனுருமன்னன்கருங்கோளிவர்மூவர்
பட்டாயொருவீட்டினிலிருக்கப்பாம்பாலரிட்டப்படுவாரே. (௩௫௧)

வேறு.

பார்செறிசசிகரும்பாம்புகூடியே, ஏர்செறியேழினிலெட்டிலுற்றி டில், சீர்செறிதமனியன்சென்மமேவினும், கார்செறிவிஷத்தினலெட் டிற்கண்டமே. (௩௫௨)

## துர்க்குணமறிய.

வேறு.

இந்துடன்பாவக்கிரகங்கூடிநான்கில்
இருந்தக்காற்றிருடனுமிரண்டாம்வீட்டில்
வந்துகுளிகன்செவ்வாய்பாவர்கூடில்
வழுத்துவன்பொய்துர்ப்பலவான்மனைவிவிபசாரி
சுந்தரவிந்தவாவினுன்றுர்வியாபாரன்
துர்ப்போசனங்களைச்சுவையுடனேபுசிப்பன்
சந்ததமுநாய்போலக்கூப்பிடுவதல்லாற்
சற்றுமிதம்பேசறியான்சினன்ரோகிதானே. (௩௫௩)

## நெய்யிற்கையிடுகை.

வேறு.

ஏருஞ்சென்மமிரண்டேழிலெட்டிலிரவிதானிருக்கப்
பாருஞ்செவ்வாயல்லாமன்மற்றையோர்கள்பார்த்தருள
நேருங்கனலிற்காய்ந்திட்டநெய்யிற்கையும்வெந்துவிடும்
சேரும்வசூரிதன்னலும்வாதையென்றுசெப்பிடுமே. (௩௫௪)

குளிகன்செவ்வாய்தன்னுடனேகூடிச்சன்மம்வியமாறில்
அளியநண்டிற்றனிருக்கவாதித்தன்கண்பார்வையுறில்
தெளிவென்றலகோர்ப்பழிசுமத்தத்தெய்வச்சபையிற்செந்தழலில்
ஒளியிற்சாய்ந்தசெய்யிற்கையிடுவன்றப்பாதுண்மையிதே. (௩௩௫)

## ஆயுதவிரணமறிய.

வேறு.

ஏயதேய்பிறையேழுறவாரிடத், தூயனும்வியத்துற்றிடப்பாவர்கள், ஆயபேர்களடர்த்துகண்ணுக்குறச், காயம்பட்டொருகைதுண்டமாய்விடும். (௩௩௬)

ஏற்றலக்கினமட்டாதியாயினும், கூற்றன்றனக்குளிகனைக்கூடியே போற்றப்பன்னிரெண்டாரெட்டிற்புக்கிடில், தோற்றங்காலிரு துண்டமதாகுமே. (௩௩௭)

எட்டினுதிசெவ்வாயிருவோர்களும், மூட்டவாறின்முன்னான்கிலுறைந்திடில், துட்டர்கையிற்சுரிகையினாலுமே, வெட்டவாவிவிடுவதுதிண்ணமே

வேறு.

திண்ணியசன்மத்திற்சனிபாம்புதெரிவ்வயிற்சுக்கிரன்றனும்
நண்ணவுமம்மாவாசையிற்பிறந்தோனடந்தகால்கரந்தறிபடுமே
எண்ணியகரும்பாம்பிரவியும்பிறையுமிசைந்தொருவீட்டினிலிருக்க
விண்ணினிலாவிசெல்லவேசென்னிவேறுபட்டவனியில்விழுமே.
விழுமியகதிர்சன்மத்துறச்செவ்வாய்மேவியட்டமத்தினிலிருக்கச்
வழுவுறத்தேய்ந்தமதிகரும்பாம்புமருவியோர்காலினிலிருக்க
செழுமையிற்பிறந்தோனுடலிருபிளவாஞ்சென்மமீதிற்சனியிருக்கத்
தழுவியசசிபாம்பிரவியுங்கூடிற்சரீரமேபிளந்திருகூறும். (௩௪0)

வேறு.

கூறும்லக்கினத்தாதியெட்டாதியும், வீறுகாலமிருத்துவுங்கூடிடில்
சீறுமேகத்திரளிடிவீழ்ந்துடல், நீறதாகவிலத்திடைமாள்வரே. (௩௪௧)

வேறு.

கூறியவிரண்டிலரசனுமிருக்கக்குலவுமூன்றினிற்சனியும்
ஆறுபன்னிரண்டிலிரவியுமிருக்கவறுபடுங்கரங்குசனரசன்
சீறுமட்டேழிலுறவுமீனைந்திற்சேய்புதன்சனியிராகுறவே
வீறுடன்கால்கடுணிபடுமென்றேவிளம்பினர்வேதவேதியரே. (௩௪௨

வேதனுங்குருசுக்கிரனுமோராறின்மேவிடக்காரியும்பார்க்க
ஓதியகரும்கோளிலக்கினத்திருக்கவுற்றசன்மாதியாறுறவும்
தீதறுசிரம்போமுட்டினிற்காரிசெறியமற்றோர்மனைதன்னில்
ஆதவன்கருங்கோள்சந்திரனிருக்கவணியுதரம்இருபிளவாம். (௩௪௩)

பிளவுபட்டிடும்பேருடல்லொண்டினில், வளமைசூரியன்மற்றும்வி யக்குசன், இளவதேய்பிறையெட்டிலுறச்சனி, களவதாய்ப்பிறைதன் னையேகண்டிடில். (கூசுசு)
கண்டதேய்பிறைசூரியன்காரிசேய்,மண்டிநால்வருநாலெட்டில்வந்துறப் பண்டுநல்லவர்பாராதிடிற்கைகால், துண்டமாகிற்றுயரின்மடிந்திடும்.

மடிந்ததேய்பிறைவந்துசன்மத்துறப், படிந்தவெட்டினிற்பானுகு சன்சனி, தொடர்ந்துமூவருங்கூடியுறத்துறை, கடிந்துவாளினாற்கண் டதுண்டஞ்செய்வன். (கூசுரு)

# இலங்கைராசிமானசங்கை.

## விழுச்சாயை, சரபிண்டத்துருவம்.

வேறு. மீனமேடங்கன்னிதுலாம்விரும்புமிருநூற்றெழுபதுடன்
ஆனவெட்டேவிடைசிங்கமாகுங்குடங்தேண்மூந்நூறில்
ஈனமொன்றுநண்டுதனுவெழில்சேர்மிதுனமகரமிவைக்
கானமூந்நூற்றிருபான்மூன்றுகுமிலங்கைவிநாடியென்ப. (கூசுஎ)
என்னுந்தேசவிழுச்சாயையியன்றமதுரைக்கொருநூறும்
மன்னுமையேழாங்காஞ்சிக்கறைவர்நூற்றேடைம்பானேழ்
பன்னுஞ்சோழநாட்டிற்கேபகர்வாய்நூற்றுநாற்பானுன்
கென்னவெங்களூர்தனக்கேயிருநூற்றெருபதெனச்செப்பே. (கூசுஅ)
வேறு.செப்பியதோர்சரபிண்டமுதலிருபானுகும்
திகழிரண்டோபதினாறுஞ்செறிமூன்றினுக்கோ
ஒப்புறுமாறேடையேவீசமாகும்
உயர்துருவமிவைமூன்றைவிழுச்சாயைதன்னால்
தப்பாமற்றனித்தனியேபெருக்கிவருந்தொகையைச்
சார்மேடம்விடைமிதுனந்தன்னின்முறையாக
இப்புவியோர்புகழிலங்கைராசிதனிற்கழிய
இயரோசராசியளவாகுமெனலாமே. (கூசுகூ)

வேறு.

ஆனபெண்ணுமரியுடனண்டிலும், வானகோலுங்தேளுந்தனுவும்மு றை, ஆனவாருடன்கூட்டிடுமீன்குடம், மானுஞ்சொன்னமுறைப்படி வாங்கிடே. (கூ௰)

# சீவனம்.

வேறு. அம்புவியோர்செய்தொழிலாற்சீவனமுண்டாகும்
அவையிலக்கினஞ்சோமனுதவன்மும்மனைக்கும்
தம்பமொடுபத்தாம்வீட்டங்கிசையிலிருந்தோர்
தம்மிலதிகப்பலமாய்த்தரித்தவராங்கிசைதான்

வெம்பிரவித்தேரோனங்கிசத்தனையன்பலமே
மேவில்புல்லைக்கோலும்விற்றுணவேகொள்வன்
செம்பொன்விற்பதுராசிப்பலனூலுக்கோணா
திக்குபலமுண்டாயிற்செய்வன்வயித்தியங்கள். (கூ௫௧)

களங்கமில்லாவெண்டிங்களங்கிசமேயாகிக்
கமழுமில்க்கினத்திரையக்காணமுதலாகில்
விளங்கியநற்பயிர்த்தொழிலேபுரிந்துணவுகொள்வன்
மேவியரெண்டாந்திரையக்காணமேயாயின்
வளங்கெழுசிந்துவிற்சம்பான்கப்பல்சோங்கோட்டி
வாழ்வன்மூன்றுந்திரையக்காணமுமேயாயின்
இளம்பிடியோதிமந்தனையும்பழித்தநடைமடவார்
இணக்கத்தாற்சீவனமுண்டென்பரினியோரே. (கூ௫௨)

இனியசெவ்வாயங்கிசத்திலக்கினமேபலமாய்
இரும்புவெள்ளிசெம்பொனும்விற்றிருப்பனவாங்கிசைதான்
கனியப்பலமாயிடிலக்கினியிலுறுதொழிலே
நடத்திடுவன்றிரிங்கிசாங்கிசம்பலமேயாயின்
தனியுறுமாயுதம்பிடித்துச்சேவிப்பனேழாம்
தானமதுபலனுயிற்றக்கதொழில்செய்வன்
கனிமொழியாயிரவிமுதல்சனிமட்டுமெண்ணிக்
கண்டதுசத்தாங்கிசமேழாம்பலன்கண்டீரே. (கூ௫௩)

கண்டபுதனங்கிசத்தின்பலனவாங்கிசையே
காவியங்கற்பன்றுவாதசாங்கிசமேயாயின்
மிண்டுசிற்பசாஸ்திரமேயறிந்துணவுகொள்வன்
மேவுந்திரிங்கிசாங்கிசமேயெழுதுந்தொழிலான்
கொண்டவறுபதிலோரையங்கிசமேற்கணிதம்
குறித்திடுவன்புதனிருந்தராசிதனைப்பிரித்து
மண்டியறுபதுபங்குசெய்யிலொற்றைப்பங்கில்
வந்துபுதனிருக்கிலெனவேவழுத்தல்வேண்டும். (கூ௫௪)

வேண்டுகுருவங்கிசத்தின்முதற்றிரையக்காணம்
விப்பிரராற்பலனிரண்டாந்திரையக்காணந்தான்
பூண்டதேவதைகளினாற்பலன்மூன்றுங்காணம்
புண்ணியத்தாற்பயனுகுஞ்சுக்கிரனங்கிசைக்குத்
தாண்டுகுரபிகளெருமைபெறுமூன்றுங்காணம்
தக்கவெள்ளிவிற்பனடுத்திரையைக்காணந்தான்
மீண்டுமுதற்றிரையக்காணம்மதுவேயாயின்
விரவுநவரத்தினமேவியாபாரஞ்செய்வன். (கூ௫௫)

செய்யசனியங்கிசத்திற்பலன்சிறுவன்றனுஞ்
செப்பியமித்திராங்கிசமேற்பிரயாசத்தொழிலாம்
வெய்யபாவக்கிரகம்லக்கினத்தைப்பார்க்கில்
மெத்தவேசுமைசுமந்துமெய்க்குணவுகொள்வன்
ஐயவிலக்கினந்தன்னைநீசருங்கண்டக்கால்
ஆகாதகாரியங்களவத்தொழிலேசெய்வன்
துய்யசனியங்கிசத்திற்சுபக்கிரகங்கூடில்
துலங்கிடவேதான்சிற்பத்தொழில்செய்துவாழ்வன். (கூடுசு)

வேறு.

ஆதவன்சசிலக்கினமிவைமூன்றுக்கதிபரிலதிகமாம்பலத்தோன்
அடைந்தவங்கிசந்தான்பரிதியங்கிசமாயம்பொன்னும்வைக்கலும்வி
நீதியாய்வயித்தியங்களுஞ்செய்வன்நீள்பிறையங்கிசமாயின் [ற்று
நீரினிற்சேர்ங்குடத்திலேயுய்வன்நிலமகனங்கிசையாயின்
ஓதுமக்கினியாவிரும்புபொன்வெள்ளியுருக்கலாயுதங்களினாலும் [கும்
உணவுகொண்டிடுவன்புந்தியங்கிசமேனுமைத்திடுகணிதமுங்கணக்
தீதறுசிற்பத்தொழில்கள்காவியத்தாற்சீவனம்வேந்தனங்கிசைக்குத்
தெய்வமாமறையோர்பெரியவராலுஞ்சீவனம்புரிந்தினிதிருப்பன்.()

வேறு.

இருந்தசுக்கிரனங்கிசமேயிலோ, தெரிந்தரத்தினம்வெள்ளியாற்சீவனம், பொருந்தசுன்னங்கிசம்புகவீனமாய், வருந்திடுந்தொழிற்செய்வன்வளமிலான். (கூடுஅ)

## கேந்திரபலன்.

வேறு.

திக்குப்பலமாவதுசேய்கதிர்பத்தில், தொக்கக்குருபுந்தியிலக்கினத்துற்றால், துக்கச்சனியேழினிற்சூழ்ந்திடின்வல்லன், சுக்கிரன்சசிநான்கினில்வலியெனச்சொல்லே. (கூடுசு)

வேறு.

பத்தாகுமதிபதியையிரவிசசிபார்க்கப்
பரிந்திவர்மூவருங்கூடப்பத்தாம்வீட்டதிபன்
மெத்திரவிசசிவீட்டிலானாலுமிருக்க
வெற்றிமுடியரசர்பக்கன்மேவியவர்தம்மைப்
புத்தியுடனேசேர்ந்துசீவனமேசெய்வன்
புகழ்பத்தாமதிபன்பூபுத்திரனைக்கூடில்
சித்தமாய்ச்சேனாதிபதிகட்மைச்சேர்ந்தே
சீவனம்பண்ணுவனென்றேதெரிந்துனாசெய்வாரே. (கூசுo)
செய்யபத்தாதிபன்புதனைச்சேர்ந்துமேநிற்கில்
ஸ்திரீகளினாற்புத்திரியாற்றெரிகணிதத்தாலும்

தூய்யகுருவுடன்கூடிற்புராணசாத்திரத்தால்
சுருதியாலமைச்சராரியர்துரைகடம்மால்
வையமெலாம்புகழ்பாக்கியத்தொடுசீவிப்பன்
மகிழுஞ்சுக்கிரனுடனேவந்துமிகக்கூடில்
பையமறைபோரமச்சர்பரிகரியாவெருமை
படைத்தும்ரத்தினக்கிரயம்பண்ணியுஞ்சீவிப்பன். (௯௪௧)

சீவிதமார்சனியும்பத்தாதிபனுங்கூடில்
சிலம்பங்கள்படிப்பித்துந்திருடியுமேதிரிந்து
பாவங்கடமையொருவர்தமக்குப்போதித்தும்
படர்வனத்திலிங்கிசைகள்பண்ணிமரம்வெட்டிப்
பூவுலகிற்சீவிப்பன்பத்தாதிசெவ்வாய்
பொருபாம்புமூவர்களுமேபொருந்திநிற்கில்
தாவுகளில்விஷப்பிரயோகங்களையேசெய்துந்
தரணியிலேதிருடியுமேசீவிப்பன்றானே. (௯௪௨)

தானமாமைந்தாகுமதிபதிபாவியுமாய்த்
த்க்கவாளெய்திற்றரவந்தன்னையுமேகூடி
ஈனமிலாதிருமூன்றிலேயிருந்தக்காலும்
எண்ணியமூன்றுமதிபன்பாவியுமேயாகி
ஊனமுறும்பாம்புடனேகூடியெங்கேயேனும்
உற்றாலுமவன்மனையாளுடனேம்மற்றோரை
மானமறக்கூட்டியவன்கைப்பொருளைவாங்கி
வயிறுவளர்ப்பானெனவேவழுத்துவர்மாதவரே. (௯௪௩)

வழுத்தியசுக்கிரன்செவ்வாய்சனிபுந்தியரசன்
மருவவினத்தொழிலால்வயிறுவளர்த்திடுவன்
செழித்தபிறைசனிவெள்ளிசெவ்வாய்புந்தியுமே
செறியுமரம்வெட்டிவிற்றேசீவனமேசெய்வன்
இழுத்தமுடவன்வெள்ளிகுருசெவ்வாய்கூடில்
ஏழைதுக்கமுளன்கணக்கெழுதியுஞ்சீவிப்பன்
பழித்தசனிகுருவெள்ளிபதங்கன்செவ்வாயும்
பரிந்துறின்மந்திரவித்தைபண்ணியினிதிருப்பன். (௯௪௪)

இருந்ததனலாபபாக்கியாதிகுச்சனுறல்
இயல்சேவகாவிருத்தியினியவர்க்குச்செய்வான்
சொரிந்தபுகலுயின்வித்தைவாகனங்களுண்டு
சொல்லரியகுருவாயின்சகலபாக்கியவான்
அருந்தவஞ்சேர்பிருகாயின்புவிலாபமேவும்
அரவுசனியாயிற்சோரங்களினேகிபிறல்

வருந்துமீனத்தொழிலேபுரிந்துசீவிப்பன்
மதிவதனத்திலதநுதல்வளர்வஞ்சியாரே. (௬௬௫)

வேறு.

வஞ்சியேசனிசெவ்வாய்மதிமகன், செஞ்சொல்சுக்கிரன்றேவர்கடன்குரு, அஞ்சுபேருமொன்றாகவமர்ந்திடில், துஞ்சுமீனத்தொழில்செய்துவாழ்வனே. (௬௬௬)

வேறு.

கண்டசன்மங்கேந்திரத்திற்காணுமைந்தெட்டொன்பதனில்
பண்டேசோமன்புகரிருக்கப்பாரிதனக்குமறுபுருடன்
கொண்டேவிடுத்துச்சீவனமாய்க்கொள்வன்கூறும்புவியோர்க்குக்
கெண்டைவிழியின்பார்வையினுற்கிட்டியணையுந்தனத்தாளே. (௬௬௭)

---

## துர்ப்பிட்சகாலம்

வேறு

மந்தனுமிருபாம்பரசனிந்நால்வர்மாறியேகூடில்விளைவும்
மழைபயிரற்பமிவரிருவர்க்குமற்றொருபத்தினிலொருவர்
இந்தவாறிருக்கின்வெட்டைகாலமதாமிடபந்தேள்கோல்சிங்கமீனம்
இனியகும்பத்திலிருக்கிலிப்புவியிலிறைமூதன்மனுஷருமடிவர்
அந்தவீடாறின்முன்சொன்னநால்வராதித்தன்குசனொடுங்கூடி
அமரவேகுடிகளிருந்தவூரெங்குமலகைநாய்நரிகுடிகொள்ளும்
தந்திரஞ்சுருதிமொழிப்படிபுரியுந்தக்கதோர்வேள்விகளெல்லாம்
தான்மறுத்திடுமம்புவிகள்காடாகுந்தானெனச்சாற்றுவர்பெரியோர்.
சாற்றியவரசனொடுசனியாதல்தனாசுதனுதல்பாம்பாதல்
தானுறக்குருவுக்கேழினின்றாலுந்தகர்க்கிறையோடுபொம்புறினும்
போற்றியகுசனேக்காரிகூடினும்புலவுமீன்தேள்கடையினிலும்
புணரிஷபத்தின்மத்தியிலேனும்பொருசிங்கத்தாதியிலேனும்
கூற்றமாஞ்சனிநின்றான்மழையின்றிக்குவலயத்துளயலவுமிரும்
கொடும்பசியாலுஞ்சமர்க்களத்தாலுங் குறுகிமாண்டிடுமெனக்கூறே
ஏற்றமீனிடபந்தேள்தனுசிங்கமிவையினிற்காரிசேயாதல்
இருந்துவக்கிரந்தானுமிமன்னர்க்கேயிடுக்கமுண்டெனவுரைத்திடுவர்
இடும்பைசேர்வெள்ளிக்கேழினிற்குருவு மிருந்திடின்மாரிபெய்யாதாம்
இரும்புதன்வெள்ளிநாப்பணினிரவியிருக்க வெய்யோற்குமுன்சனிசே
உடன்கலந்திருக்கமாரியுமறுத்தேயுலகினிற்பஞ்சமென்றுரைக்கும் [ய்
உயர்சனிதனக்குமூன்றுபன்னொன்றிலும்பர்கோன்குருவும்வந்துறைபி
நெடும்புவிதன்னினார்பகூறுதலாய்நின்றநாற்காலுயிர்தனக்கும் [ல்
நேமியாள்பவர்க்குந்துன்பமேயாகுநின்றிடுபங்குபாதற்கே
திடம்பெறவைந்தாம்வீட்டினிலரசன்சேர்ந்துறவிருந்தகாலையினில்
செகமொருமூன்றினுளபலவுயிர்க்குந்தீம்புறுமென்றுரைசெய்வர் ()

---

## மறுமையிலடையுமிடம்.

வேறு.

பன்னிரண்டாமதிபனைச்சேர்ந்தவராற்சொல்லும்
பலன்குருசுக்கிரனையிற்றெய்வலோகம்
மின்னுகதிருடன்கூடிவிராஜலோகம்
வெண்மதியமுடன்கூடிற்பிதிர்லோகந்தான்
மன்னுகுசனைக்கூடில்வீரசொர்க்கம்
மந்தன்பாம்புடன்கூடின்மறலிபதியாகும்
உன்னுபுதனுடன்கூடிலெங்செங்கேதாம்போய்
உற்பிருக்கவேண்டுமெனிலங்குறையலாமே. (கூஎக)

## மாரகதிசையறிய.

வேறு.

மாரகத்தின்றிசையறியவருநான்காந்திசைசனிபேவந்துற்றாலும்
பார்தனக்குச்சுதன்செவ்வாயைந்தாகுந்திசைதானேபரிந்துற்றாலும்
பேருதித்தவாறுகுந்திசையரசராலும்பின்புராகு
சீருதித்தவேழாகுந்திசையானுலும்மரணந்திண்ணந்தானே. (கூஎஉ)

## கிரகதிசையறிய.

வேறு.

கார்த்திகைமுதலொன்பானாள்களும்பகல்திங்கள்செவ்வாய்
கார்த்தவிராகுபொன்சுன்கவின்புந்திகேதுவெள்ளிச்
சீர்த்தவர்க்கிமுறையாகச்செப்பியதிசைகளாகும்
ஏர்த்தமற்றையநாண்மீனுமிவ்வாறேகொள்ளற்பால. (கூஎஙு)

## கிரகதிசாவருடமறிய,

சூரியன்றிசைக்காண்டாறுதிங்கட்குப்பத்துச்செவ்வாய்க்
காருமோரேழிராகுக்கறைபதினெட்டுப்பொன்னுக்
கேருறீரெட்டுமந்தற்கியம்புபத்தொன்பதாகும்
சீரில்புந்திக்கோர்பானேழ்சிசிக்கேழ்வெள்ளிக்கைந்நான்கே. (கூஎச)

## புத்திபிரிக்கவகை,

கோள்களின்றிசையிற்புத்திகுறித்திடிற்றிசையோனுண்டை
நீள்புத்திநாதனுண்டானேர்படபெருக்கிக்கண்ட
வாளமர்தொகையொன்றிற்குமருவுநாண்மூன்றதாகும்
வாள்கடல்கெண்டைவண்டுவனசமாம்விழியினளே. (கூஎரு)

## சித்திரம்பிரிக்கவகை.

அவரவரபகாரத்தினுண்டொன்றின்மூன்றுநாளும்
நவிலுமாதங்கால்நாளுநாளொன்றிற்பாதிக்கன்னல்
இவைமூன்றுதொகையுங்கோட்கடிசையாண்டாற்பெருக்கிவந்த
தவலறுதொகையைச்சேர்க்கத்தான்வருஞ்சித்திரந்தான். (௬௭௬)

---

## உள்சித்திரம்பிரிக்கவகை,

வெண்பா.

ஒருநாளுக்கோரரைநாழிகையாத்தோற்றும்
ஒருநாழிகைக்கரைவிநாழி—துருவமாம்
எந்தத்திசைக்குமிவர்வருடங்கொண்டெண்ணச்
சிந்தனைக்குட்சித்திரமாச்செப்பு. (௬௭௭)

---

## போதகன்·வேதகன்·பாசகன்·காரகனறிய,

கூறுபலனைக்கொடுவென்பான்போதகனும்
வேறுபண்ணித்தட்டுவிப்பான்வேதகனும்—தேறுபலன்
கூட்டுவிப்பான்பாசகனுங்கோலமகாதிசைக்கே
ஈட்டுபொருள்காரகனீவான். (௬௭௮)
பானுதிசைக்குமந்தன்பாசகனுஞ்சுக்கிரனே
மானேகேள்வேதகனுமன்னவனும்—தேனனையாய்
காரகனுஞ்செவ்வாயுங்காசினியோர்தாமறிய
ஏரணியும்போதகனுமே. (௬௭௯)
இந்துதிசைக்குவெள்ளியேற்றதோர்பாசகனும்
விந்தைமலர்நண்பனேவேதகனும்—மந்தனே
கங்காநதிபுடைசூழ்காசினியிற்காரகனும்
அங்காரகன்போதகன். (௬௮௦)
மங்களனார்தந்திசைக்குமார்த்தாண்டன்பாசகனும்
திங்களிரும்போதகனுஞ்சேயிழையீர்—பொங்குபுகழ்
மேயபுதன்வேதகனுமித்தரணியோரறிய
ஆயசனிகாரகனாகும். (௬௮௧)
புந்திதிசைக்குப்புரவலனேபோதகனும்
சந்திரனேபாசகனுந்தானவன்—இந்துநுதல்
மின்னனையீர்செவ்வாயும்வேதகனும்வெள்ளியோ
மன்னுபுகழ்காரகனுமாம். (௬௮௨)
வேந்தன்மகாதிசைக்குவெய்யவனேவேதகனும்
போந்துவருஞ்செவ்வாயேபோதகனும்—காந்திசெறி
சந்திரனேகாரகனுந்தையலேதாரணியில்
மந்தனேபாசகனுமே. (௬௮௩)

வெள்ளிமகாதிசைக்குவேந்தனேபோதகனும்
தெள்ளுபுதன்பாசகனுஞ்செங்கதிரும்—மெள்ளவரும்
காரகனேதானுகுங்காரியேவேதகனும்
வாரணியுங்கொங்கைமயிலே. (கூஅச)
சனியின்றிசைக்குச்சசிபோதகனும்
இனியசெவ்வாய்வேதகனென்றேத்தும்—கனிமொழியாய்
வெள்ளியேபாசகனும்வேந்தனேகாரகனும்
தெள்ளுதமிழோருரைத்தசீர். (கூஅரு)
ஒருவர்மகாதிசைக்குளுற்றபலனுண்ண
வருவர்நவக்கிரகர்மாதே—அவரவரில்
போதகனும்பாசகனும்போற்றுபொருள்காரகனும்
வேதகனுமாகிவருவார். (கூஅசா)
இந்தப்படிநால்வரெய்தியொருவர்திசைக்குள்
வந்துபலனுண்ணும்வகையறிந்தே—சிந்தித்
துரைத்தபலனெத்திருக்குமொண்டொடியேகேளாய்
தரைத்தமிழோர்தாமறியத்தாம். (கூஅஎ)

---

# திசாபுத்திபலனறிய,

## சூரியதிசாபுத்திபலன்.

வேறு.

அருக்கனிலருக்கன்புத்தியரியநாளுற்றெட்டுக்கும்
கருக்கொடுமுற்றுற்கேடுகலகமந்தணுற்பீடை
வருத்தமாந்தலைநோயுண்டாம்வலக்காதில்வலியுண்டாமே
பெருக்கநீரிழிவுமேடமாதத்திற்பீடைதானே. (கூஅஅ)
இரவியிலிந்துபுத்தியினியநூற்றெண்பதிக்கும்
அரசரான்மகிழ்ச்சிலாபமதிகவாகனமுமுண்டாம்
பரவியமணமாம்பெண்ணுற்பகையிடக்கண்ணினோயாம்
திரமெனுங்கடகத்திங்கடூவினைகாணுந்தானே. (கூஅகூ)
ஆதித்தன்றன்னிற்செவ்வாய்புத்திநூற்றிருபத்தாறும்
வாதித்தவியாதிசண்டைவழக்கனல்வறட்சிபீடை
சாதித்தவுற்றுற்கேடுதனம்பொருட்சேதமாகும்
போதித்தபொருளுஞ்சாயும்பூமியின்பலனுகாதே. (கூகூ௦)
சூரியன்றனிலோராகுசுகத்தையேசொல்லவென்றால்
ஏருற்றநாண்மூன்னூற்றேடிருபத்துநான்கதாகும்
பாரியவிடவிஷத்தாற்படைபயம்பிறந்தார்பின்னம்
வீரியமெந்தன்றேசாந்திரத்தினின்மேவுவானே. (கூகூக)

எதிருறுங்கதிரிற்பொன்னினிருநூற்றேடெண்பத்தெட்டும்
கதிபெறுமுற்றார்நட்புங்கல்வியுஞ்செல்வமுண்டாம்
மதியுறுமிராசசேவைமக்களுஞ்சுத்தமுண்டாம்
அதிகசத்துருவைவெல்லுமதிசயமிகுதியாமே. (கூகூஉ)

நன்கதிர்சனிமுந்நூற்றுநாற்பதோடிரண்டினுக்கும்
மன்பயமக்கட்பீடைமனத்துயர்பகைவருண்டாம்
தன்பொருட்சேதமுந்தியடுப்பதுசரீரபீடை
இன்பமேயில்லைமண்ணிலெவர்களும்பகைவராமே. (கூகூரு)

நற்கதிர்தன்னிற்புந்திநாளதுமுந்நூற்றாறும்
வற்கமும்பகையதாகுமனத்திகில்சரீரபீடை
கற்கருவினைசமுந்திக்கடுப்பதுவழக்குமுண்டாம்
சொற்புகழ்மன்னனாசந்துக்கமுமிகுதியாமே. (கூகூச)

ஆதித்தன்றனிலேகேதுவணுகினாற்றிருபத்தாறும்
சோதித்தநினைவுகுன்றுந்தூரதேசத்திற்போவார்
வாதித்தவிஷமுமுண்டாம்வழக்குண்டுமெனைவேறாகும்
பேதிக்குமுற்றார்கேடுபிணக்குண்டுபலன்செய்யாதே. (கூகூரு)

அருக்கனில்வெள்ளிமுந்நூற்றறுபதுநாளிலாபம்
திருக்கலியாணஞ்செல்வஞ்செம்பொன்னுமிகவுமுண்டு
வருத்தமாஞ்சரீரநோயுமலர்க்கணில்வியாதிதோன்றும்
உருக்கியபிணியுந்தீருமுண்மையாய்க்கருமநன்றே. (கூகூசா)

---

## சந்திரதிசாபுத்திபலன்.

சந்திரன்றனிலேறனக்குநாள்விருமுந்நூறும்
விந்தையாங்கன்னிசேர்வல்வீரமன்னேக்கமுண்டாம்
மூந்தியகாரியங்கணினைத்ததுமுடியுமேலும்
இந்திரன்றனைப்போன்மைந்தனினிதுடனுண்டாங்கண்டீர். (கூகஎ)

நண்புறுமதியிற்செவ்வாய்நாளிருநூற்றுப்பத்தும்
பண்பிலாவழக்குச்சண்டைபயித்தியங்களவுநோயாம்
தண்பொருள்சேதங்குட்டந்தழற்பயமேடமாதம்
திண்பெருந்தளையேபூணுமேந்திழைக்கலகஞ்சேரும். (கூகஅ)

அம்புலிதனிலேராகுவைந்நூற்றுநாற்பதுக்குள்
செம்பொனுஞ்சேதமாகுஞ்செற்றலர்பயம்வியாதி
நம்பியர்துன்பம்ராசகிஷ்டேமிகவுமாகும்
வம்பலர்குழலிநாளேமதலையர்பீடையாமே. (கூகூகூ)

நன்றிசேர்மதியிற்பொன்னனானூற்றேடெண்பதுக்கும்
வென்றிசேர்குதிரையானைமேன்பொருட்டாணியங்கள்

குன்றெனுமுலையாய்சேருங்கொற்றவனுலேயின்பம்
கன்றான்காலியுண்டாங்காளையைப்பெறுவர்தாமே. (க000)

மதிதனிற்காரிபுத்திமாதம்பத்தொன்பதுக்கும்
பதிகெடுங்கன்றுகாலிபற்றறுமனதிற்றுக்கம்
விதியுறுமனையாளோடுமெய்ப்பொருட்சேதமாகும்
சதிபெறுகருத்தோனுலேகோள்வருஞ்சாற்றினேன்கேள். (க00க)

சந்திரன்றன்னிற்புந்திதான்பதினேழுமாதம்
அந்தரக்கலகம்போகமழகியமக்கட்பேறும்
சிந்தைசேரிராசயோகஞ்சேர்ந்திடுநினைத்ததெல்லாம்
மூந்தியவித்தைலாபம்புரட்டாசிமுடிவிற்றனே. (க00உ)

நிலவினிற்கேதுவேழுமாதமுநெருப்பார்பீடை
தொலேவிலாச்சரீரம்வீங்குஞ்சுற்றஞ்சாமிடக்கண்ணேயுாம்
மலேவதுபயமுமுண்டாமதிகதண்டனையுமுண்டாம்
பலசனம்வெறுப்புவந்துநாசமாம்பகையுண்டாமே. (க00ங)

வட்டமாமதியில்வெள்ளிமாதங்களிருபதுக்கும்
திட்டமாம்வியாதியுண்டாஞ்சேர்ந்திடுவிதனங்காட்டும்
நட்டமார்த்தநாசநாளிலேவிரோதமுற்றார்
கஷ்டமாஞ்சத்துருவாலேகாரியஞ்சேதமாமே. (க00ச)

வெண்மதிதனிலேவெய்யோன்வேண்டியவாறுமாதம்
உண்மதிசுரமும்பித்தமுருவமுங்குலேந்துவேறாய்
கண்மதியங்கந்தன்னிற்கடுவலிநோயுமுண்டாம்
பண்புறுகுணத்தினுளேபலனுண்டுபலன்செய்யாதே. (க00ரு)

## செவ்வாய்திசாபுத்திபலன்.

நன்றிசெய்சேயுன்மாதநாலுநாளிருப்பத்தேழும்
கன்றிடுங்காலினுய்கள்கடித்திடுமேடமாதம்
வென்றிசேர்மன்னரச்சம்வெம்புநோய்நீசராலே
கொன்றிடுந்தேளின்மாதத்துடன்வெட்டுங்குத்துமாமே. (க00சு)

செவ்வாயில்ராகோராண்டுஞ்சேர்ந்தநாள்பதினெட்டுக்கும்
ஒவ்வாதவிஷத்தாற்றேளர்ந்திங்களிலுற்றார்நாசம்
இவ்வாறுமேகக்கட்டியிருந்திடுந்தலம்வேறாகும்
கொவ்வைவாய்மானேகுட்டங்குரூரமாம்பீடையாமே. (க00எ)

முழங்கியசேயிற்பொன்னன்மூன்றாற்றுமுப்பத்தாறும்
வழங்கிடுமர்த்தநாசமன்னராற்பகையுமுண்டு
தழங்கிடுந்திசைதொடங்கிச்சத்துருபலருமாவர்
அழங்கலிந்நாளிற்செல்வமரசராலுறவுமாமே. (க00அ)

மருவியசேயிற்காரிமாதமீராறுமொன்றும்
கருதியநாளொன்பானுங்கலகமாம்வழக்குச்சண்டை
பொருபடையர்த்தநாசம்பொருந்தியமெய்யிற்குட்டம்
மருவியநிலேயுங்கெட்டுமனத்தினிற்கிலேசமாமே. (க00௯)

முந்தியசேயிற்புந்திமுந்நூற்றேடைம்பத்தேழும்
செந்திருவரிவைசேர்வள்செல்வமுமிகுதியாகும்
வந்திடுநோயுந்தீருமருவியகன்னிமாதம்
நிந்தையாமரவுதீண்டுநீடியபலன்செய்யாதே. (க0க0)

செய்யவன்றனிலேகேதுசேர்ந்திடுமாதநான்கு
உய்யுநாளிருபத்தேழுமுடன்பங்கமாதராலே
மெய்யிலேவியாதிதோன்றும்விஷபயமிகுதியாகும்
தையலார்பொருட்டாநிந்தைசத்துருமிகுதியாமே. (க0கக)

நாடியசேயிற்சுங்கனற்றிங்களீரேழுக்கும்
நீடியபொருளுஞ்சேருநேரிழைவந்துசேர்வள்
தேடியதெய்வபூசைசெய்வன்மாதவர்கள்சேர்வர்
வாடியசிரங்குதேமல்வாகனம்பெறுவர்தாமே. (க0க௨)

அங்கியிற்பரிதிதிங்கணாலுநாளாறுமாகும்
மங்கியகுட்டங்கண்டவியாதியாமனதிற்றுக்கம்
செங்கனற்பயமுண்டாகுஞ்சீர்மறையவராற்றுன்பம்
இங்கிதமனேயாணேவுமெவர்களும்பகைவராமே. (க0க௩)

நலமுறுசேயிலிந்துநாடியதிங்களேழும்
பலமுறும்பூமிலாபம்பலித்திடுங்கன்றுகாலி
இலகியபொன்னுமுத்துமின்பமாமாடையுண்டாம்
தலமதுபேதம்பின்புதளர்ச்சிவந்தெய்துந்தானே. (க0க௪)

## இராகுதிசாபுத்திபலன்.

இராகுவிலிராகுமாதநாலெட்டுநாளீராறும்
வாகுறுவேந்தானுசமனத்துயர்விஷத்தாற்பீடை
ஏகமாமனேயாடுன்பமிருந்திடுந்தலபேதங்கள்
காகநேர்நிறத்தனுலேகலகமுங்கோளுண்டாமே. (க0க௫)

பாரியவிராகின்மன்னன்பரிவுடன்புசிக்குந்திங்கள்
நாரியேயிருபத்தெட்டுநாளுமூவெட்டினின்பம்
ஆரியராலேசெல்வமரசரான்மகிழ்ச்சியுண்டாம்
காரியமெல்லாங்கூடுங்காரிழைமணமுண்டாமே. (க0க௬)

வடிவுளவிராகிற்காரிமாதமுப்பத்துநான்கும்
படிமிசைநாளாறுக்கும்பகைமனத்திடர்வியாதி

முடியாதவழக்குச்சண்டை மூண்டிடும்வாதபித்தம்
இடியுறுசெங்கைசோதிசதயமுமிகுதிநோயே. (கoகஎ)

வந்திடுமிராகிற்புந்திமாதமுப்பதின்மேனாட்கள்
முந்தியமூவாறுக்குமுயற்சியாம்வாழ்வுண்டாகும்
சிந்தையிற்றெய்வபத்திசிலபொருள்வந்துசேரும்
விந்தையாமழலைசேருமேலுறுபகையுண்டாமே. (கoகஅ)

மருவியராகிற்கேதுமாதமீராறுமிக்க
கருகியநாண்மூவாறுகடிவிஷத்தாலேயையம்
தருமகவுக்குப்பீடைசரீரமேவீங்கிநோயாம்
அரிவையர்தமக்குத்துன்பமரசராலச்சமாமே. (கoகசு)

மன்னியவிராகில்வெள்ளிமாதமோமுப்பத்தாறும்
பொன்னுடன்பொருளுஞ்சேரும்பூஷணமிகுதியுண்டாம்
மன்னியமங்கைசேர்வளரசரான்மகிழ்ச்சியுண்டு
பின்னும்வஞ்சனையாற்றுன்பம்பீடைவந்தகன்றுபோமே. (கo உ o)

ராகுவிரவிமாதம்பத்துட்னாண்மூவெட்டும்
வாகுறுகுலத்தாற்சண்டைமன்னராற்றஞ்சமாகும்
சேகுறுமனையாள்பிள்ளைபிராதுருசிலுகதாகும்
ஆகமூவிதத்தாலையமிருப்பிடமகலுந்தானே. (கoஉக)

உத்திடுமிராகிவிந்துயர்திங்களீரொன்பானும்
மதித்திடும்பந்துநாசமனைவியாற்பொருளுஞ்சேதம்
கதித்திடுமத்தமோணத்திசையினிற்கால்கணேவு
விதித்திடுந்தலம்விட்டேகும்விஷத்தினாற்றுன்பமாமே. (கoஉஉ)

இன்புறுமிராகிற்செவ்வாய்மாதமீராறுமிக்க
வன்புறுநாண்மூவாறுமக்கினிபயங்கிலேசம்
மன்பகைவிஷத்தாற்பீடைமருவுசண்டாளரின்பம்
துன்பமாங்களவுசண்டைதுயர்மனைகிலேசந்தானே. (கoஉங)

## குருதிசாபுத்திபலன்.

மருவியபொன்னின்மன்னன்மாதமையைந்துநாளோ
ஒருபதினெட்டினுக்குமுயர்பிரதாபமிக்க
பொருளுடன்றுணியங்கள்பூஷணம்பூமிலாபம்
அரிவையர்சேர்த்தியின்பமரசரான்மகிழ்ச்சியாமே. (கoஉச)

பொருந்தியகுருவிற்காரிபுகழ்திங்களாகும்பத்து
வருந்தியநாளீராறும்வாகனம்பொருளும்வாய்க்கும்
திருந்தியகால்கைவாதஞ்சேயிழைதனக்குத்துன்பம்
இருந்திடம்வெற்றியில்லையிடர்வந்துநீங்குந்தானே. (கoஉரு)

மருவியகுருவிற்புத்திமாதமோவிருபத்தேழும்
அருகுறுநாளோராறுமாடலும்பாடன்ஞானம்
வருவதுபூசையாலும்வளமுளமாதர்மைந்தர்
பெருகிடுஞ்செல்வமன்றுற்பெருமையும்புகழுண்டாமே. (கoஉசு)

பரவியகுருவிற்கேதுபதிநெருமதிநாளாறும்
திரமுளமாதர்க்கேடுதிரியுமேதேசமெங்கும்
உரமுளஉற்றார்மற்றையுறவினர்பகையதாகும்,
நிரவியமனையாடன்னுனிலைவிட்டுப்போவதாமே. (கoஉஎ)

மருவியகுருவில்வெள்ளிமாதமுப்பத்திரண்டு
நிரைபரிகட்டுவர்க்கநிலைமையாம்பொருளுஞ்சேரும்
பொரையுளகன்னிமாதம்பூமியும்போகமுண்டாம்
குரைகடற்சுற்றத்தோடுகுணமுடன்வாழ்வர்தாமே. (கoஉஅ)

உலகுறுகுருவிற்பானுவொண்பதுநாண்மூவாறும்
நலமுறுமர்த்தலாபநாடியகருமங்கூடும்
பலகுறைநெருப்பிற்காற்றிற்பிணிபலர்பகையும்பீடை
கலகமாமகத்திற்பின்புகாரியநன்மையாகும். (கoஉகூ)

நின்றதோர்குருவிலிந்துநேர்பதினறுமாதம்
வென்றிநற்சிவிகைமுத்துவெண்குடைபணியுமுண்டாம்
அன்றநன்மனையாண்மைந்தரறிவுளோர்பொருளுஞ்சேரும்
என்றுநற்கருமமெல்லாந்தெய்வத்தாலெய்துந்தானே. (கoநo)

பாங்குள்ளபொன்னிற்செவ்வாய்பதினொன்றுமதிநாளாறு
தீங்குறுவினைகளுண்டாந்திருடராற்றழலாற்றுன்பம்
ஆங்குறுமுற்றார்சேதமல்லதுபிணியுமுண்டாம்
நீங்கியேநிலைவிட்டேகுநினைத்ததுமுடிந்திடாதே. (கoநக)

மாதங்கக்குருவில்ராகுமாதமோரிருபத்தெட்டும்
ஓதியநாண்மூவெட்டுமுடன்பகைசிறுவழக்குச்
சேதமாம்பொருள்விரோதஞ்சேயிழைதனக்குத்துன்பமம்
சூதுகண்மிகவுண்டாகுந்தொடர்ந்திடுஞ்செல்வம்பேர்மே. (கoநஉ)

## சனிதிசாபுத்திபலன்.

காரியிற்காரிமாதங்கருதியமுப்பத்தாறும்
வீரியமூன்றுநாளுமெய்யினில்வியாதிதோன்றும்
சீரியவடிமைமைந்தர்செல்வமுங்குறையும்பின்னும்
கூறியவுறவுதன்னுற்கொடும்பகைதானுண்டாமே. (கoநந)

பங்கினிற்புத்திமாதநாலெட்டுநாளொன்பானும்
இங்கிதகல் விஞானமெழிலுடைப்பொருளுஞ்செல்வம்

மங்கையர்மருவிக்கூடும்மைந்தருஞ்சுற்றமுண்டாம்
பொங்கமாய்மன்னராலேபுகழ்ந்துவாழ்ந்திருப்பார்தாமே. (கoரு௪)

படிமிசைசனியிற்கேதுபதின்மூன்றுமதிநாளொன்பான்
கடியதோர்வலக்கால்வாதங்காணுமேபித்தரோகம்
மிடியதுமைந்தனாலேவிஷபயமர்த்தநாசம்
கொடியிடையவராற்றுன்பங்கோளினாற்கலகமாமே. (கoருரு)

முனிவுறுசனியில்வெள்ளிமாதமோமுப்பத்தெட்டு
இனியதோர்பணிநல்லார்தம்மின்பமும்வெற்றியுண்டாம்
வனிதையர்சேர்வர்லாபமக்களுஞ்சுற்றமுண்டாம்
தனியொருபகையுமுண்டாந்தன்னையும்வெல்லலாமே. (கoருசு)

பரவியசனியிற்பானுபதினொன்றுநாளீராறும்
உரமுளரத்தமேகமுதரத்திற்சூலைகண்ணோய்
திரமுளமனையாண்மக்கள்சிறுத்திடுநோயினாலே
கரமதுவெரிவாங்காலுங்கடுவலிவாதமாமே. (கoருஎ)

மதமுறுசனியிலிந்துமாதம்பத்தொன்பதுக்கும்
விதமதாங்கலகம்பீடைவீட்டினில்வழக்குச்சண்டை
பதனமாம்பணிபூணாரம்பல்வளம்பொருளுஞ்சேதம்
அதனமாந்தலங்கள்விட்டேயவதியான்மீள்வர்தாமே. (கoருஅ)

பலனிலாச்சனியிற்செவ்வாய்பதின்மூன்றுநாளொன்பானும்
குலங்களிலீனமிக்ககொடும்பகைபழியுங்காட்டும்
அலைந்திடுந்தேசமெங்குமனைவரும்விரோதமாவர்
தலங்களிற்பொன்னாற்சோரந்தலம்விட்டுப்புரியுந்தானே. (கoருகூ)

முன்னமேசனியில்ராகுமுப்பதுமதிநாளாறும்
சொன்னமுஞ்சேதமாகும்விஷமதுதுரத்தித்தீண்டும்
இன்னமுஞ்சரீரமெங்குமேருதவியாதியுண்டாம்
அந்நியர்பகையதாகுமல்லலுமிகுதியாமே. (கoசுo)

முன்புறுசனியின்மன்னன்முப்பதுநாளீராறும்
அன்புறுமடியார்சேர்வராடையாபரணமுண்டாம்
இன்பமாமரசராலேயெண்ணியகருமமாகும்
மின்கொடியுடனேசுற்றமிகுதியாம்பலனுண்டாமே. (கoசுக)

## புத்திசாபுத்திபலன்.

வலம்புரிபுதனிற்புந்திமாதமோரிருபத்தெட்டும்
துலங்குநாண்மூவொன்பானுஞ்சுற்றமுந்துணையுமுண்டாம்
பலந்தருமர்த்தலாபம்பாக்கியமிகவுமுண்டு
நலம்பெறுஞானங்கல்விநாடியகருமமாமே. (கoசுஉ)

பரிந்திடும்புதனிற்கேதுபதினொருமாதம்பின்னும்
வருந்துநாண்மூவொன்பானுமாதலந்தனைவிட்டேகும்
பொருந்திடும்வியாதிபீடைபொருட்சேதமுற்றார்க்கேடு
மருந்திடுகுணத்தாற்றுன்பமனமதுகிலேசந்தானே. (௧௦௪௩)

வாசமாம்புதனில்வெள்ளிமாதமுப்பதுமேனான்கு
நேசமாமக்கட்பேறுநேரிழையுடனேயின்பம்
பாசமாஞ்சுற்றம்வித்தைபலவணிமற்றுமுண்டாம்
தேசமேபோனார்மீள்வர்சேயிழைமனமுமாமே. (௧௦௪௪)

நேருற்றபுதனிற்பானுநீடியமாதம்பத்தும்
சீருற்றநாட்களாறுஞ்செந்தழற்பயங்கிலேசம்
பாருற்றமனையாள்பீடைபகைவருமிடையூறுண்டாம்
வாருற்றகொங்கையாளேமன்னராற்றுன்பமாமே. (௧௦௪௫)

வாரணப்புதனிற்சோமன்மாதமேபதினேழுக்கும்
பூரணமானசோகைகண்டபின்புறங்கால்வீங்கும்
காரணக்கலகம்பெண்ணாற்கனபீடைசிலுதுமுண்டு
தாரணிதன்னின்மாந்தர்தமக்கெலாம்பகையதாமே. (௧௦௪௬)

பன்னியபுதனிற்செவ்வாய்பதினொன்றுநாண்மூவொன்பான்
தன்னிலேபித்தரோகங்காமாலைதலைநோய்க்காடு
வன்னியர்பகைவிரோதமாயுதத்தாலேபீடை
முன்னொருபகையுமுண்டுமுடியவேகலகந்தானே. (௧௦௪௭)

நற்புதன்றனிலேராகுமுப்பதுநாண்மூவாறும்
நிற்பதோர்நிலைவிட்டேகுநீசரால்விஷத்தாலையம்
மற்பொருபூசலுண்டாமனத்திடரார்த்தவானி
சொற்பனந்தலைநோய்பித்தஞ்சூட்சமாமன்னர்ந்தானே. (௧௦௪௮)

புந்தியிற்பொன்னன்மாதம்புகழ்பெறவிருபத்தேழும்
வந்தநாளாறுமின்பமன்னரான்மகிழ்ச்சியாகும்
சிந்தையிற்கிலேசமில்லைசிறுவருஞ்சுற்றமுண்டாம்
பைந்தொடிமணமதாகும்பாக்கியமிகவுண்டாமே. (௧௦௪௯)

நன்றிசேர்புதனிற்காரிநாலெட்டுமெதிநாளொன்பான்
இன்றிடுநன்மைநாலுமெதிர்த்திடும்பகையுமுண்டாம்
சென்றிடும்வலக்காணேவாந்திசையுத்திராடந்துன்பம்
மன்றிடுமுற்றார்க்கேடுமனமதிற்கிலேசமாமே. (௧௦௫௦)

## கேதுதிசாபுத்திபலன்.

ஈண்டியகேதிற்கேதுநாலுநாளிருபத்தேழும்
வேண்டியமனையான்மக்கட்சகோதரவெறுப்புண்டாகும்

பூண்டிடும்விலங்குகாலில்புரட்டாதியுள்ளேதேறும்
ஆண்டதுவருஷத்தார்க்குத்திசையதுவவதிதானே. (கoருக)

பூரியகேதில்வெள்ளிபுத்தியீரேழுமாதம்
பாரியுமக்கட்பேறுபலித்திடுங்கன்றுகாலி
காரியமெல்லாங்கூடுங்கடைசியிற்பீடையுண்டு
வீரியமனையாளுயாமீளவுமகன்றுபோமே. (கoருஉ)

அந்தமாங்கேதிற்பானுநாற்றிங்களாறுநாளும்
சிந்திடும்பூமிவிட்டுத்தேசம்போய்வருவன்பின்பு
சுந்தரமேனியெங்குஞ்சுரந்தலைநோயுண்டாகும்
மந்தரமுலையினாளேமனமதிற்கிலேசந்தானே. (கoருங)

சாதககேதிலிந்துதன்புத்தியேழுமாதம்
மாதரால்வழக்குச்சண்டைமைந்தர்க்குப்பீடையுண்டாம்
போதவேகன்றுகாலிபொன்னுமாபரணமுண்டாம்
சீதளமுகத்தினாளேதீங்குவந்தகன்றுபோமே. (கoருச)

கடையரவதனிற்செவ்வாய்கலந்திடுமாதநாலு
இடையுறுமிருபானேழ்நாளிடர்பயமர்த்தவானி
படையுறுவழக்குச்சண்டைபலபலவிரோதமாகும்
தடையுறும்பெண்ணாற்கேடுத்தழல்பயமிகவுண்டாமே. (கoருரு)

கேதுவில்லிராகுபுத்திகேள்பன்னிரண்டுமாதம்
மீதியீரொன்பானாளும்விஷபயம்வந்துதீரும்
மாதர்கடமக்குப்பீடைமன்னவனுசமாவன்
போதவேயர்த்தநாசம்புகழ்நிலைநின்றிடாதே. (கoருசா)

பரிவுளகேதுவுக்குள்பாங்குள்ளமன்னன்புத்தி
ஒருபதினொன்றுநாட்களோராறுமர்த்தலாபம்
மருவியமன்னர்சேர்த்திவிஷபயம்வந்துதீரும்
திருவெனமனையாள்சேர்வள்செல்வமுமிகுதியாமே. (கoருஎ)

சதியுறுகேதுவுக்குட்சனிபுத்தியானமாதம்
பதின்மூன்றுநாளொன்பானும்பலபொருட்சேதமாகும்
மதிதலம்பேதமாகுமங்கத்திற்சொறிசிரங்கு
மதிமுகத்தரிவைபீடைமனமதுகிலேசமாமே. (கoருஅ)

குலமுளகேதிற்புந்திகுறித்திடும்புத்திமாதம்
நலமுறுபத்துமொன்றுநாளிருபத்தேழுக்கும்
தலமதுவிட்டுப்போகுந்தமரினாற்பயமுண்டாகும்
நிலைமையாய்ப்புத்திரசோபனினைத்ததுமுடிந்திடாதே. (கoருகூ)

வண்மையாம்புகரில்வெள்ளிமாதங்கணூற்பதுக்கும்
உண்மையாம்பணிகண்முத்துமுயர்குடைபுரவியானை
தண்மையாம்புன்மைநீங்கிநாளிலேதனமுஞ்சேரும்
எண்மையங்கிசத்திற்றுக்கமெய்துமைப்பசியிற்முனே. (௧௦௬௦)

சிறந்திடும்புகரிற்பானுதிங்களீராருந்துன்பம்
குறைந்திடுந்தனமூநாளிற்கொடும்பகையரசராலே
பறந்திடுமனையாண்மக்கள்பலருடன்வழக்காமென்க
உறைந்திடுதெய்வமுள்ளுமுறவதுபகையதாமே. (௧௦௬௧)

மருவியபுகரிற்சோமன்மாதமோரிருபதுக்கும்
கருதியகருமநாளில்வந்துகைகூடுமென்க
உருகுறுமனையாளாலேயடர்பகைவந்துதீரும்
சருவியவின்பமாதர்தம்மொடுமிணக்கமாமே. (௧௦௬௨)

புண்ணியபுகரிற்செவ்வாய்புகரிங்களீரேழுக்கும்
நண்ணியபூமியுண்டாகாரியாற்கருமநாசம்
எண்ணியதேவர்சேவையிருவராற்பகையுண்டென்னும்
கண்ணினோய்மெய்யிற்குட்டங்கண்டதுதீருந்தானே. (௧௦௬௩)

திருந்தியபுகரில்ராகுதிங்களோர்முப்பத்தாறும்
பொருந்தியமுனியைப்போலேபூமியிற்றபசுசெய்வன்
வருந்தியேமைந்தராலேவருங்கலகங்கண்மெத்த
அருந்தியமருந்தினாலேவிஷமதாயலேவன்முனே. (௧௦௬௪)

முன்புறுபுகரின்மன்னன்முப்பத்திரண்டுமாதம்
இன்புறுதானியங்களெய்துமேயர்த்தலாபம்
அன்புறுமறையோராலேயதிசயமிகவுமுண்டாம்
மண்புகழ்தோணிவிட்டத்திசையினிலவருத்தமாமே. (௧௦௬௫)

சாலவேவெள்ளிதன்னிற்சனிமாதமுப்பத்தெட்டும்
மூலமாநோயினாலேமுயங்கியேமீளுங்கைகால்
வேலெனும்விழியாய்துன்பமெய்யினில்ரோகமுண்டு
ஆலமாம்விஷம்போலன்னமரோசிகமாகுந்தானே (௧௦௬௬)

வெள்ளியிற்புந்திமாதம்விரும்புமுப்பத்துநான்கும்
தெள்ளியமனையாண்மக்கள்சீருடன்பொருளுண்டாகும்
வள்ளியகல்விஞானம்வாக்கினாற்பாடலாகும்
நள்ளியசிவப்பினாலேநன்மைகள்பலவுண்டாமே. (௧௦௬௭)

இட்டமாம்வெள்ளிதன்னிற்கேதுவீரேழுமாதம்
துட்டமாமிருகத்தாலேதுன்பமுமிகவுண்டாகும்

அட்டமாமனையாட்ன்னினனுபோகத்தாலேநோயாம்
திட்டமாய்விஷந்தான்வீட்டிற்றீண்டியேமீளுந்தானே. (க௦சுஅ)
புத்தியின்பலன்கட்ம்மைப்பொதுமையாயுரைத்தாரேனும்
சித்தமாய்க்கோள்கணின்றதிரிகோணங்கேந்திரமுச்சம்
தத்தியவியமாறெட்டுப்பகைசேர்ந்தான்சேரம்சம்
ஒத்தநல்லாதிபத்தியம்வர்க்கமோடவஸ்தைவக்கிரம். (க௦சுகூ)
பாவத்திற்கண்டயோகமவயோகந்தன்னைப்பார்த்துப்
பூவருமானேநல்லபலன்களைப்புகலவேண்டும்
தாவறுசித்திரமுட்சித்திரத்திற்கும்புத்திபோல
ஓவறப்பலன்கள்சொல்வருயர்மதிவல்லோர்தாமே. (க௭௦)

## மகாதிசைபலனறிய.

வெண்பா.

சீரார்திசாபலனைத்தேர்ந்துபுன்சொல்வெண்பாவாய்
பாரோர்முன்னுயேனும்பாடவே - மோராருங்
கையாரளித்தமலர்க்கையானைக்காய்ந்தமழுக்
கையான்சுதன்முன்னேன்காப்பு. (க௦௭க)

சூரியமகாதிசைபலன்.

அக்கினியால்பீடையமைவிருத்திபொன்சேத
மிக்கபயஞ்சத்துருவால்மேவுபகை—யொக்கவே
கண்ணோய்சிரரோகங் காதற்பிதாமிருத்தி
யெண்ணுமிரவிதிசைக்கே. (க௦௭உ)

சந்திரமகாதிசைபலன்.

ஆரோக்கியங்கள்சுபமர்த்தலாபம்பிரியஞ்
சீரார்புவிலாபஞ்செல்வருண்டாம்—பாராளப்
பாக்கியமுமின்பம்பரவுவிவாகங்களுடன்
றேக்குசசியின்றிசை. (க௦௭௩)

செவ்வாய்மகாதிசைபலன்.

சித்தப்பிரமைவருஞ்செங்கோலால்சோரரால்
மெத்தபயமிருத்திவெண்குட்டம்-மத்தப்
பிரமியமாமீளப்பெருகிவருஞ்செவ்வாய்ப்
பரவுகதிர்பொசிக்கில்பார் (க௦௭௪).

இராகுமகாதிசைபலன்.

துற்சேட்டைபீடைநட்டந்துக்கந்துருவிருத்தி
கற்றயனத்தஞ்சோபமக்கினியால்-செச்சையுட்

காசுவிநாசம்பார்க்கில்தலமுறப்பாக்கியமாந்
தேசுகரும்பாம்பின்றிசை. (கoஎரு)

குருமகாதிசைபலன்.

வித்தைசெயம்புத்திரசம்பத்திமிகுமரசர்
சித்தமகிழ்சன்மானஞ்சேருமே-மெத்தும்
அபிடேகபூட்டணமுமாதிபத்தியங்கள்
பவுசாங்குருதிசைக்குப்பார். (கoஎசு)

சனிமகாதிசைபலன்.

சோகம்பயமிலங்குந்துக்கமகோதரமுண்
டாகுமபிமானமதுகெடுமே-வாகான
மாட்டுக்குஞ்சேதம்வருமுபித்தமுண்டாகுந்
திட்டுசனியின்றிசை. (கoஎஎ)

புதமகாதிசைபலன்.

பண்ணியதோர்செட்டும்பயிர்செல்வுந்தான்பொசிக்கு
நண்ணும்விரகம்பூமிலாபமாம்-எண்ணுந்
தனலாபம்பங்குகொள்ளத்தானும்வெகுலாபங்
கனமாம்புதன்றிசைக்குள்காண். (கoஎஅ)

கேதுமகாதிசைபலன்.

பித்தஞ்சயரோகம்பெண்மருந்திறைவிளைப்பன்
சுத்தந்தரித்திரமுஞ்சூனியமு-மெத்த
வருயாடுமாயுமேவாய்த்ததிறல்கேது
உருவாய்மருவுதிசைக்குள். (கoஎகூ)

சுக்கிரமகாதிசைபலன்.

மன்னர்மறையோர்தமிழோர்வாஞ்சிப்பர்வர்கனமு
முன்னுசத்திரசாமரைபொன்னுண்டாகு-மின்னும்
விவாகஞ்சுபம்பிறியமெய்தும்பிணிபோஞ்
சுவாகப்புவிலாபச்சுக்கிரன். (கoஅo)

# கோசாரபலன்

வேறு.

ஒதியகோசரந்திசைசக்கரங்கடம்மில்
உதித்தநவக்கிரகத்தாலுண்டாகும்பலன்கள்
ஆதவன்செவ்வாயிருவர்க்காதியிலேபலன்கள்
அம்புலிக்கும்புதனுக்குமனுதினமும்பலனே

பீதகன்சுக்கிரன்பலன்கண்மத்தியத்திற்றருவர்
பெருகுசனிபாம்பிரண்டும்பிற்பலனேதருவர்
சூதுமதகரிகோட்டைக்கமலமாமுகையைச்
சுந்தரப்பொற்கிரியைவென்றதுணைமுன்மாமயிலே. (க0அக)

# கோசாரவேதை.

வேறு.

இரவியைந்தின்மதியெட்டினேழிற்சேய், பரவுமூன்றிற்பொன்பார்க்கவனுறிலும், விரவுபுந்திநான்கொன்பானிராகுசன், உரவுசென்மமூறிற்கடுங்கேடுறும். (க0அஉ)

# கோசாரநற்பலஸ்தானம்.

வேறு.

கதிர்பதினொன்றுமூன்றுகருதுபத்தாறினல்லன்
மதியொன்றுமூன்றோராறுமன்னுமேழ்பதுபன்னொன்றும்
பதிபுகழ்சேய்சுன்ராகுபதினொன்றுமூன்றுமாறும்
மதிமகற்கிரண்டோராறுமன்னெட்டுப்பதுபன்னொன்றே. (க0அங)
பொன்னவன்பதினொன்றொன்பான்பொருந்துமேழைந்திரண்டாம்
துன்னுசுக்கிரற்கொன்றுதியைந்துமோரெட்டொன்பானும்
பன்னொன்றீராறுதன்னிற்பற்றிடினல்லராவர்
அன்னமேவேதைக்கோள்களுறிற்றீயராவரென்னே. (0கஅச)

# வேதைஸ்தானம்.

சூரியற்குனாத்தவீட்டிற்கேழினிற்கோணின்றாலும்
கூரியமதிக்கைந்தொன்பான்குலவுமீராறிரண்டும்
ஏர்பெறுமொருநான்கெட்டுமிராகுசன்சேய்தமக்குக்
கார்பெறுங்குழலாயைந்தீராறொன்பானெனுங்கணக்கும். (க0அரு)
புந்திக்கைந்தொன்பானென்றெட்டீராறிற்புனிதப்பொன்னுக்
கந்தமாமெட்டுப்பத்துமூன்றுநான்கீராறும்
சந்தமார்புகருக்கெட்டேழொன்றுபத்தொன்பதைந்தும்
உந்துபன்னொன்றுமூன்றோராறுமுன்முறைக்குவேதை. (க0அசா)

# அஷ்டகவர்க்கம்.

ஆதித்தன்றனக்காலெட்டாமம்புலிக்கதன்மேலொன்றும்
வாதிக்குஞ்செவ்வாய்மந்தன்றமக்குமாமுப்பத்தொன்பான்

போதிக்கும்புதற்கைம்பானேடொருநான்குபொன்னேழெட்டாம்
கோதற்றபுகர்க்கைம்பானேடிரண்டட்டவர்க்கங்கூறே. (க௦அஎ)

வேறு

கூறியவிரவிதனிலரிசேய்சுன்குலவுபொன்றிரண்டுநான்கோரேழ்
கூடிருநான்கொன்பான்பதுபன்னென்றுமதிக்கோவொருமூன்றும்
ஆறுபத்துடன்பன்னென்றதாம்புந்திக்ானமூன்றைந்துடனாறும்
அடுத்திடுமொன்பான்பத்துபன்னென்றீராறு பொன்னைந்துமோரா
வீறுறுமொன்பானேடுபன்னென்றேவிளங்கியபுகரினுக்காறு [று]
மேவுமேழீராறுகும்லக்கினமோவிரும்புமூன்றும்வருநான்கும்
ஆறுமீரைந்தும்பத்துடனென்றீராறிரண்டாகுமென்றறைவாய்
அனநடைமயிலின்சாயன்மான்விழியுமமைநிகர்தோளுடையணங்கே

மதியினிலிரவிமூன்றுடனாறேழ்வருமெட்டுப்பத்துபன்னென்றும்
மதியொன்றுமூன்றுமாறுடனேழுமன்னுபத்துடன்பதினென்றும்
துதிகுசனிரண்டுமூன்றுடனைந்தாறென்பதீரைந்துபன்னென்றும்
சொல்லுமாற்கொன்றுமூன்றுநான்கைந்துந்தொடருமேழெட்டுமீரை
ரைந்தும், பதினென்றும்பொன்னிற்கொன்றிரண்டொருநான்காகுமே
ழெட்டுபத்துடனே, பகருபன்னென்றும்புகர்க்குமூன்றொருநான்
கைந்துடனேழுமொன்பானும், அதிகமாம்பதுபன்னென்றுசுன்மூன்று
மைந்திருமூன்றுபன்னென்றும்.அமருலக்கினமூன்றாறுமீரைந்துமாம்ப
தினென்றெனவறைவாய். (க௦அகூ)

சேயினிலிரவிமூன்றைந்திருமூன்றுசெப்பியபத்துபன்னென்றும்
செழுமதியொருமூன்றாறுபன்னென்றுஞ்சேர்குசனென்றிரண்டொ
ருநான், காயவேழ்திருநான்கொருபதுபன்னென்றுகுநற்புலவன்மூவை
ந்தே, அழகுறுமிருமூன்றொருபதினென்றுமணிகொள்பொன்மூவி
ரண்டீரைந், தேயபன்னென்றீராறுசுக்கிரற்கோவியலிருமூன்றெட்டுப்ப
தினென், றேதமற்றிடுமீராறுமந்தனுக்கொன்றீரிரண்டேழ்முதலைந்
தெண், தூயலக்கினத்திற்கொன்றுமூன்றாறுசொலத்தகுபத்துபன்னெ
ன்றும்-தோடிவர்செவியைத்தாவிமீண்டிகலுந்துணைவிழிப்பணைமுலை
யிலே. (க௦கூ௦)

புந்தியிலிரவிக்கைந்திருமூன்றொன்பான்பதினென்றுபன்னிரண்டாம்
புகழ்மதியிரண்டீரிரண்டிருமூன்றெட்டொருபதுபுகல்பதினென்றும்
உந்துசேய்மந்தற்கொன்றிரண் டொருநான்கொளிருமேழாதியைந்தெ
ண்ணும், உயர்புதற்கொன்றோர்மூன்றுநல்லைந்தாறென்பஃதாதிநான்
கெண்ணும்சந்தமாபொன்னுக்காறிருநான்குசாற்றுபன்னென்றுபன்னி
ரண்டேதருபுகர்தனக்கொன்றுதிவைந்தெண்ணுந்தாவெட்டொன்பது
பதினென்றும், தந்தலக்கினத்திற்கொன்றிரண்டொருநான்காறிருநான்

குசார்புத்துத்,தகுபதினொன்றுந்தண்மலருறைபொன்றன்னேர்தா
ர்குழலாளே. (௧0௬௧)

பொன்னினிலிரவிக்கொன்றுதிநான்கெண் புகலுமேழாதியைந்தெண்
ணும்,புதுமதிக்கிரண்டேழைந்தேழொன்பான்பதினொன்றுய்ப்புகல்
செய்தனக்கொன்று, துன்னிரண்டொருநான்கேழிருநான்கீரைந்துபன்
னொன்றுபுந்திக்கோ. சொல்லுமொன்றிரண்டுநான்குநல்லைந்தோ
ராறென்பதாதிமூன்றெண்ணும், நன்னயபொன்னுக்கொன்றுதிநான்
கெண்ணவிலுமேழெட்டொருபஃது, நாட்டுபன்னொன்றும்புகர்க்கி
ரண்டைந்தாறென்பஃதாதிமூன்றெண்ணும், சுன்னினுக்கொருமூன்
றைந்திருமூன்றீராறுலக்கினத்தினுக்கொன்று,துய்யரண்டொருநா
ன்கைந்திருமூன்றேழொன்பஃதாதிமூன்றெண்ணும் (௧0௬௨)

புகரினிலிரவிக்கெட்டுபன்னொன்றீராறுதிங்கட்கொன்றுமுதலாப்
புகலுமைந்தெண்ணுமெட்டுமொன்பான்பன்னொன்றுபன்னிரண்ட
தாஞ்சேய்க்குத்,தகவுறுமூன்றுநான்கிருமூன்றொன்பான்பதினொன்றுப
ன்னிரண்டாம், சார்புதன்மூன்றைந்தாறுநல்லொன்பான்றங்குபன்
னொன்றுபொன்னவர்க்கு, இசலறுமைந்தெட்டொன்பஃதாதியேற்றமூ
ன்றெண்ணதாம்புகருக்,கியலுமொன்றுதியானவைந்தெண்ணுமெட்
டுமூன்னனநான்கெண்ணும்,நகருமந்தற்குமூன்றுநான்கைந்துநவிலுமெ
ட்டாதிநான்கெண்ணும்,காட்டுலக்கினமொன்றுதியைந்தெண்ணுநா
லிரண்டொன்பான்பன்னொன்றே. (௧0௬௩)

சனியினிலிரவிக்கொன்றிரண்டொருநான்கேழுடனெட்டுநற்பத்து
தங்குபன்னொன்றுமம்புலிமூன்றுறும்பதினொன்றுசேய்தனக்கே
இனியமூன்றைந்தாறீரைந்துபதினொன்றீராறதாகும்புந்திக்கோ
இயலுறுமாறுமெட்டாதியைந்தெண்ணிமயவர்குருவினுக்கைந்து
கனியுமோராறுபதினொன்றீராறுங்கவிக்குநல்லாறுபன்னொன்று
காட்டுமீராறுங்கனவரைவனசமாமுகைநேர்முலையாளே
புனைகருமேனிச்சனியொருமூன்றைந்தாறுபன்னொன்றெனப்புகல்வர்
போற்றும் லக்கினத்திற்கொன்று மூன்றொருநான்காறு பத்துப்பதி
னொன்றே. (௧0௬௪)

வேறு.

கோணமூன்றிற்பரல்சரியாக்குலவின்மூன்றுமெடுத்திடுக
கோணந்தனிலொன்றிற்குறையிற்குறைந்தபடியேகுறையிரண்டும்
கோணந்தனிலொன்றிற்றபரலேகூடாதிருக்கிற்சோதனையக
கோணந்தனக்குமில்லையெனக்கூறுவனசமலர்மானே (௧0௬௫)

மானேயிரண்டுமனைதனிலுமருவிக்கோள்களின்றும்
தேனேகோணின்றிடுமனையிற்பாலும்றேன்றினிலதெனினும்

வானூரிரண்டிற்கோளின்றிமன்னுமொன்றிற்பரலுறினும்
கானூர்சிங்கசடகத்திற்கனமேசோதித்திடுதலில்லை. (கOசுசு)

இல்லாதிரண்டுராசியிற்கோளியலும்பரல்கள்சரியுறினும்
வல்லாக்கோளுற்றிடுமனைபாழாகிமற்றொன் றுற்றிடினும்
வில்லாக்கோளுற்றிடும்பரற்குமேவுமெதிரிற்சமன்குறையேல்
அல்லார்குழலாயப்பரலையகற்றுமென்பாரறிவாரே. (கOசுஎ)

ஓராய்கோளோர்மனையுறமற்றொன்றிலதிகப்பரலுறினும்
சீரார்கோளின்றிப்பரல்கள்சேர்ந்தொன்றிற்கொன்றதிகமதேல்
வாரார்கொங்கைமதிவதனமானேர்விழிநன்மடமாதே
ஏரார் பரலைநேராகவிருக்கச்செய்வாயெனவுரைத்தார். (கOசுஅ)

வேறு.

உரைத்தகோள்களுறுஞ்சமுதாயமாய்
விரைத்தவார்குழலவ்வவ்விராசியில்
நிரைத்தபிந்தையொன்றுச்செறித்திட்டதே
திரைத்தநற்சருவாட்டகஞ்சேருமே. (கOசுசு)

வேறு.

இலக்கினமாதிநந்நான்குவீட்டிலிருந்திடுபரல்களைக்கூட்டி
உலப்பறுமூன்றுதொகையினின்முறையேயுயர்பரலைக் கொடுபலன்கள்
நலப்பறுவயதைமூன்றுகூறிட்டேநயம்பெறமொழிந்திடவேண்டும்
சிலைப்புருவுத்தண்மதி நுதற்கருங்கட்செய்யவாய்ப் பைங்கொடியாளே

வேறு.

இரவிக்கொன்பான்மதிக்கும்புந்திக்குமீரிரண்டாம்
குருவினுக்கைந்துசேய்க்குமூன்றுசுக்கிரனுக்கோரேழ்
வருசனிக்கிருநான்காகுமிராசியின்சமுதாயத்தை
விரவுசோத்தியத்தாற்றாக்கிமேவுமூவொன்பாற்கீந்தே. (கக0க)

வருபலன்வளர்பிறைக்கோமகிழசுபதிமூன்றாகத்
திருவறுதேய்பிறைக்கேசேரவிட்டம்மூன்றாக
விரவுடனெண்ணிக்கண்டநாள்குருமேவுங்காலம்
பரவுநற்பலன்கள்கூடிற்பகர்காரகர்க்குக்கண்டம். (கக0உ)

தான்சமுதாயமுப்பான்மேலுறிற்பூர்ணஞ்சாற்றும்
ஆனவையைந்தின்மீதிலடுத்திடின்மத்தியமந்தான்
ஈனமாமிதன்கீழற்பமாம்பலம்வியமீரைந்தில்
வான்பரல்குறைந்திலாபம்வருஞ்சன்மமுயரில்யோகம். (கக0௩)

பதினொன்றில்வியமிருந்தாற்பகர்ந்திடுசெலவுமேலாம்
துதிபெறுபத்தின்மேலாம்வியமெனிற்சகடந்தோற்றும்
வதியுமாறெட்டிராறின்மன்பரற்றொகைக்குமேலாய்
பதிபுகழிரண்டொன்பான்பன்றொன்றுறிற்பார்வர்யோகம். (கக0௪)

## இராசிகுணகாரம்.

இடபஞ்சிங்கமீரைந்தாமியன்மேடங்கோலீரேழாம்
கடகமோர்நான்குமீனங்கருதுமீராறேயாகும்
மடஞ்சேர்கன்னிசுறாவைந்தாமன்னுந்தனுவொன்பானாகும்
குடம்பன்னொன்றுமிதுனந்தேளெட்டாம்ராசிகுணகாரம். (கக0ரு)

## கிரககுணகாரம்.

வேறு.

நற்றவக்குருபத்துசேய், உற்றவெட்டுநற்சுக்கிரன்
முற்றவேழுமோரைந்துமே. மற்றையோர்குணகாரகம். (கக0சு)

## மாதங்கலப்தம்.

வேறு.

குணகாரத்தொகையிரண்டையொன்றாக்கூட்டி
குலமுந்நூற்றிருபானான்கதனிற்றாக்கும்
கணமதனைமுந்நூற்றோடறுபானைந்தில்
கழித்துவருஞ்சேடத்தைமூவொன்பானில்
உணக்கமறவேகழித்தபலனுண்டாகும்
உயர்சேடந்தனையீராறதனிற்றாக்கி
இணக்கமுடன்முன்போலவியற்றிக்கொண்ட
வீவுமதிசேடமுப்பானேயத்தாக்கே. (கக0எ)

தாக்குதொகைதனைமுன்போலீந்தபேறு
தானுளாஞ்சேடத்தையறுபான்றன்னில்
தாக்கிவருபேறுகன்னலாமிவ்வாறே
தான்காணுவாய்மற்றைவிநாடியாதி
போக்கருமவ்வவர்வருடமாதமாதி
புறம்பாகவைத்ததனையரணஞ்செய்யும்
தாக்கணங்கேவகையதனைவிரித்துச்சொல்வர்
சாதகநூலுணர்ந்தபெரியோர்கடாமே. (கக0அ)

வேறு.

ஓர்மனைதனிலிரண்டுகோள்கணின்றிடினுநீசம்
ஏறுமுத்தமானம்பகையினுங்கட்கத்தேனும்
ஆர்மதிகூடினாலுமலதுநேர்நோக்கினாலும்
தார்குழலாளேயக்கோளாயுளிற்பாதிதள்ளே. (கக0கூ)

தள்ளுநண்டிற்சுபக்கோடங்கிடின்மூன்றிலொன்று
தள்ளுநட்பதனினின்றகோளுக்குநான்கிலொன்று
தள்ளுபாபக்கோணீசம்பகையுறிலெட்டிலொன்று
தள்ளுபாபக்கோணட்புத்தானுறினான்கிலொன்றே. (கககo)

ஒன்றியகோள்கணின்றவோரைக்குவியத்திற்பாவர்
நின்றிடிலவர்கொடுத்தவாயுள்களெல்லாநீங்கும்
துன்றுபஞ்ஞான்றிற்பாதிற்சொல்பத்தினன்கிலொன்று
நன்றுபாக்கியமெட்டொன்றுநவிலெட்டிற்பதிறுமே. (ககoக)

ஆம்வகைசுபக்கோளாயின்பாபருக்கறைந்தவெண்ணில்
தாமதிற்பாதிநீங்குஞ்சார்பாபராட்சியுச்சம்
ஏழுறிலரணமில்லைவிரும்புகோளாட்சியுச்சம்
வாமமார்குழலாய்பத்தினென்றுமேற்கூட்டுவாயே. (ககoஉ)

---

## காலசக்கரம்.

வெண்பா.

சேய்க்கேழுபொன்பத்துச்சேரிரவிக்கைந்தாகும்
வாய்த்தபுகர்க்கிரொட்டாமாலுக்கோ—ஏய்த்தொன்பான்
சந்திரற்குமூவேழாஞ்சாற்றுஞ்சனிக்கொருநான்
கிந்தமுறைராசிகளுக்கெண் (ககoஙு)

கேள்சகடுமொன்றலையாழ்கேடின்மகமூன்மூன்றுங்
கீள்சுளகுதேள்கேட்டைநேரோணம்—வாளவிட்டம்
செக்குமிடவோட்டாகுஞ்சேராப்பதினைந்தும்
இக்குமொழியாய்வலவோட்டே. (ககoச)

ஏயபரியார * லெரியேதமறுசோதியர
வாயவத்தமூலமுத்திராடமுடன்—தூயகடை
நாள்புரட்டையீராங்கினன்முதற்காற்காடாதி
நீள்தனுவீறுகவருநோ். (ககoரு)

நேரிரண்டாங்காலுக்குநீண்மகரங்கும்பஞ்சேல்
சீரறுதேள்கோலரிவைதேர்கடகம்—வார்சியம்
தண்டாகுமூன்றுங்காறுனிடயமேடமீன்
கொண்டகும்பமான்றனுசுகூறு. (ககoசு)

கூறுமேடம்மிடபங்கோல்மிதுன்மாம்
வீறுநாற்காலுக்குமேலவன்—நாறுமலர்க்
கோதாய்முதலாகக்கொண்மீனராசிவரை
ஏதமறுபுத்திக்கினம். (ககoஎ)

இனமார்பரணியெழிற்பூசஞ்சித்திரையோ
டனமேநீர்நாளுத்திரட்டாதி—எனுமைந்தின்

---

* எரி-புனர்பூசம்.

முற்காறேள்கோலரிவைமுன்னுகடகஞ்சியம்
மிக்கதண்டோராடுமீனம். (௧௧௦௮)

மீயிரண்டோகும்பமான்மின்மேடங்தொட்டரிவை
ஆயாறுமூன்றிற்கோல்தொட்டாறும்—ஏயதேள்
கோலரிவையாகுங்குளிர்சியந்தண்டுமுதல்
ஏலவின்மட்டாமிடமாயிறு. (௧௧௦௯)

ஈறுமுரோணிமகமோர்சுளகோணம்மிவற்றின்
வீறுமுற்காற்குவில்லாதிதண்டும்—கூறுசிங்கம்
நண்டிரண்டாங்கால்கன்னிமற்கோறேண்மீன்கும்பம்
அண்டுசுறுவிற்றேள்கோலாம். (௧௧௧௦)

ஆமூன்றுங்காலுக்கரிவையரிநண்டுதண்டும்
வாமிடபமாடுதனுமான்குடமாம்—தேமொழிகேள்
மீனுடெருதுமினஞ்சிங்கநண்டரிவை
தானுங்கோறேள்கடைக்கால்சாற்று. (௧௧௧௧)

சாற்றுமகசிரம்யாழ்சார்பூரமுத்திரமும்
போற்றுமனுடங்கேட்டை * போரவிட்டம்—ஏற்றுமுதற்
காலுக்கிடமாக்கயலாதிஞண்டுவரை
கோலக்குவிமுலையாய். (௧௧௧௨)

கூறுதண்டுகுண்டைமறிகூன்சிலைதொட்டேறளவும்
வீறுமிருகாற்காமேலாங்காற்கு—மீறுதண்டு
அரிஞண்டுபெண்கோறேளாமீன்குடமாம்
சுரிகுழலாயாமெனவேசொல். (௧௧௧௩)

சொல்லுநாலாங்காற்குத்தூயதனுவாதியாய்
வல்லமேடம்வரையொன்பான்மனையும்-நல்லாய்
இட்வோட்டாக்கொள்வரீராறுகாலுக்கும்
விட்மார்தேளாதிவின்மட்டே. (௧௧௧௪)

மட்டாருஞ்சக்கரத்தின்வானுண்டிற்கும்புத்தி
தொட்டாருமாண்டிற்குந்தோகாய்கேள்—நட்டார்
தொகைதம்மைமாறிச்சொலுந்திசையாண்டுக்கீ
மிகைவரும்பேறேபுத்திமேல். (௧௧௧௫)

மேடனுந்தனுமீனம்விர்ச்சிகஞ்சிங்கக்கதியாம்
நாட்ரிவைநண்டுசிங்கநற்றண்டு—கூடும்

* போர் - சதயம்.

தவளைக்கதிவலநேர்தான்சர்ப்பவோட்டம்
திவளிடமேமர்க்கடமாச்செப்பு. (கககக௬)

செப்புவலவோட்டுக்குச்சேர்தொட்டலக்கினமெய்
ஒப்பரியசிவன்விடுமோனையே—தப்புமிட
ஒட்டிற்குமாறுயுளவயிற்றிலேசுபர்கள்
கூட்டமுறினற்பலனேகூறு. (கககஎ)

ஆக செய்யுள் - பாயிரமுட்பட - ககச௬.

---

சாதகாலங்காரம்-முற்றுப்பெற்றது.



T. 65